# லெனின்

## வெகுஜனங்களிடையே கட்சியின் பணி



335.43

32

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# வெகுஜனங்களிடையே கட்சியின் பணி

## கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்

REFERENCE

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

## பதிப்பாளர் முன்னுரை

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டின் ஐந்தாவது பதிப்பிலிருந்து இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

**В. И. Ленин**

О РАБОТЕ ПАРТИИ В МАССАХ

*на тамильском языке*

Л $\frac{10102-128}{014(01)-80}$ без объявл. 0101020000

MADRAS

# பொருளடக்கம்


நமது இயக்கத்தின் அவசர அவசியப் பணிகள். 5

சமூக-ஜனநாயக இயக்கத்தின் பணிகள் குறித்து . . . . . . . . . . . . 14

புதிய பணிகளும் புதிய சக்திகளும் . . 17

அரசியலை போதனு முறையுடன் குழப்புவது குறித்து . . . . . . . . . . . . 33

மாஸ்கோ எழுச்சியின் படிப்பினைகள் . . 39

டூமா தேர்தல்களில் முதலாளித்துவக் கட்சிகளின் போக்கும் தொழிலாளர் கட்சியின் போக்கும் . . . . . . . . . . . 52

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஐந்தாவது காங்கிரசுக்கான நகல் தீர்மானங்களிலிருந்து . . . . . . . . 60

4. கடுமையாகி வரும் வெகுஜன வறுமையும் பொருளாதாரப் போராட்டமும் . . . . . . . . 60

5. கட்சி சார்பில்லாத் தொழிலாளர் நிறுவனங்களும் பாட்டாளி வர்க்கத்திடையே அராஜக-சிண்டிகலிஸ்டுப் போக்கும் . . . . . . . . . . . 61

தற்போதைய நிலைமை பற்றிய மதிப்பீடு . 64

உரிய பாதையில். . . . . . . . . . . . 85

மீண்டும் கட்சி இயல்பும் கட்சிசார்பின்மையும் குறித்து . . . . . . . . . . . . . 99

நான்காவது டூமாவுக்கான தேர்தல்களின் தறுவாயில் . . . . . . . . . . 103

விவசாயிப் பிரதிநிதிகளது காங்கிரஸ் . . 111

இத்தாலிய, பிரெஞ்சு, ஜெர்மன் கம்யூனிஸ்டு களுக்கு வாழ்த்துக்கள் என்பதிலிருந்து . . 116

''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு என்னும் நூலிலிருந்து . . . 126

6. புரட்சியாளர்கள் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யலாமா? . . . . . . . . . . 126

7. முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளலாமா? . . . . . . . . 141

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசினுடைய அடிப்படைப் பணிகள் குறித்த ஆய்வுரைகள் . . . . . . . . . . . 158

1. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், சோவியத் ஆட்சியதிகாரம் இவற்றின் சாராம்சம் . . . 160

2. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய உடனடியான சர்வவியாபகமான தயாரிப்பு என்னவாய் இருக்க வேண்டும் . . . . . . . . . . . 165

3. கம்யூனிஸ்டு அகிலத்துடன் இணைவு பெற்ற அல்லது இணைவு பெற விரும்பும் கட்சிகளுடைய அரசியல் கொள்கை வழியை—ஓரளவுக்கு அவற்றின் இயைபையும்—சரி செய்தல் . . . . . . . . . . 178

கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம் குறித்து கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1920 ஜூலை 23 . . . . . . . . . . 185

தேசிய இன, காலனிப் பிரச்சினைகள் பற்றிய கமிஷனின் உரை, கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் சமர்ப்பிக்கப் பட்டது, 1920 ஜூலை 26 . . . . . . 192

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம் . . 201

1921, ஜூலை 1ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங்கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு . . . . . . . . . . 206

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . 222

பெயர்க் குறிப்பு அகராதி . . . . . . 241

# நமது இயக்கத்தின்
# அவசர அவசியப் பணிகள்

5 MAR 1985
LIBRARY
MADRAS

எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதே, அரசியல் சுதந்திரம் பெறுவதே ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கக் கட்சியினுடைய உடனடி அரசியல் பணி என்பதை ருஷ்ய சமூக-ஜனநாயகம் பன்முறை பறைசாற்றியிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பிரதிநிதிகளால், உழைப்பு விடுதலைக் குழுவின் உறுப்பினர்களால், இது தெளிவாய் எடுத்துரைக்கப்பட்டது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு 1898 வசந்தத்தில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை நிறுவிய ருஷ்ய சமூக-ஜனநாயக நிறுவனங்களது பிரதிநிதிகளால் இது வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு மீண்டும் மீண்டும் பறைசாற்றப்பட்டிருப்பினுங்கூட ருஷ்யாவில் சமூக-ஜனநாயகத்தின் அரசியல் பணிகளைப் பற்றிய பிரச்சினை திரும்பவும் இப்பொழுது முன்னிலைக்கு வந்திருக்கிறது. இப்பிரச்சினைக்கு அளிக்கப்பட்ட மேற்கண்ட பதில் சரிதானா என்று நமது இயக்கத்தின் பிரதிநிதிகள் பலர் சந்தேகப்படுகின்றனர். பொருளாதாரப் போராட்டமே முதன்மையான முக்கியத்துவமுடையது என்பதாய்ப் பேசப்படுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பணிகள் பின்னிலைக்குத் தள்ளப்பட்டும் குறுகலாக்கப்பட்டும் வரம்பிட்டுக் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன. சுயேச்சையான தொழிலாளி வர்க்கக் கட்சி ஒன்றை ருஷ்யாவில் அமைக்க வேண்டுமென்பது சொந்த சிந்தனையின்றி அயலார் பேச்சை அப்படியே திருப்பிச் சொல்வதே ஆகும், தொழிலாளர்கள்

அரசியலை மிதவாதிகளுடன் கூட்டு கொண்ட அறிவுத்துறையினரிடம் விட்டுவிட்டு பொருளாதாரப் போராட்டத்தை மட்டுமே நடத்திச் செல்லவேண்டும் என்பதாய்க்கூடப் பேசப் படுகிறது. இந்தப் புதிய நெறியின் மிக அண்மைக் காலத்திய பிரகடனம் (அபக்கியாதி பெற்ற Credo[1]) ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்கு இன்னும் வயது வந்தாகவில்லை என்பதாய்ச் சாதித்து சமூக-ஜனநாயக வேலைத்திட்டத்தை அறவே நிராகரிக்கும் அளவுக்குச் செல்கிறது. ரபோச்சயா மீசில்[2] பத்திரிகை (குறிப்பாய் அதனுடைய தனி அனுபந்தம்) அனேகமாய் இதே நிலையைத்தான் ஏற்கிறது. ருஷ்ய சமூக-ஜனநாயகம் ஊசலாட்டத்துக்கும் தன்னைத் தானே மறுப்பதற்கும் ஒப்பான சஞ்சலத்துக்குமுரிய ஒரு கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. ஒரு புறத்தில் தொழிலாளி வர்க்க இயக்கம் சோஷலிசத்திலிருந்து துண்டிக்கப்பட்டு வருகிறது: தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டம் நடத்த உதவி செய்யப்படுகிறது, ஆனால் அனைத்து இயக்கத்துக்கும் உரித்தான சோஷலிச நோக்கங்களையும் அரசியல் பணிகளையும் அவர்களுக்கு விளக்கிக் கூற எதுவும், அனேகமாய் எதுவும் செய்யப்படவில்லை. மறு புறத்தில் சோஷலிசமானது தொழிலாளர் இயக்கத்திடமிருந்து துண்டிக்கப்பட்டு வருகிறது: தொழிலாளர்கள் தம்மைப் பொருளாதாரப் போராட்டத்துக்குள் இருத்திக் கொண்டுவிடுகிறபடியால் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் முற்றிலும் அறிவுத்துறையினராலேயே நடத்தப்பட்டாக வேண்டும் என்பதாய் ருஷ்ய சோஷலிஸ்டுகள் மேலும் மேலும் பேசத் திரும்பவும் முற்படுகிறார்கள்.

வருந்தத்தக்க இந்த நிலை தோன்ற, எங்கள் கருத்துப்படி, மூன்று சூழ்நிலைமைகள் காரணமாய் இருந்துள்ளன. முதலாவதாக, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் தமது செயற்பாட்டின் ஆரம்பக் காலத்தில் வெறும் பிரசாரக் குழுக்களது வேலைக்கு அப்பால் செல்லாமல் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிட்டனர். வெகுஜனங்களிடையே நாம் கிளர்ச்சி நடத்த முற்பட்டபோது மற்றொரு கடைக்கோடி நிலைக்குப் போகாதபடி எப்பொழுதும் நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இரண்டாவதாக, நமது செயற்பாட்டின் ஆரம்பக் காலத்தில் நரோத்னயா வோல்யா[3] உறுப்

பினர்களை எதிர்த்து நமது வாழ்வின் உரிமைக்காக அடிக்கடி நாம் போராட வேண்டியிருந்தது. ''அரசியலை'' நரோத்னயா வோல்யா உறுப்பினர்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து தனிமைப்பட்ட, செயற்பாடாய்க் கருதினர், அரசியலை முற்றிலும் சதிச்செயல் போராட்டமாய்ச் சிறுமை செய்தனர். இவ்வகையான அரசியலை நிராகரிக்கையில் சமூக-ஜனநாயகவாதிகள் அரசியலையே முற்றிலும் பின்னிலைக்குத் தள்ளிவிடும் கடைக்கோடி நிலைக்குச் சென்றனர். மூன்றுவதாக, சிறுச் சிறு உள்ளூர்த் தொழிலாளர் குழுக்களில் தனிமைப் பட்டு செயல்பட்ட சமூக-ஜனநாயகவாதிகள், உள்ளூர்க் குழுக்கள் யாவற்றின் செயல்களையும் ஒன்றுபடுத்தவும் புரட்சிப் பணி சரியான வழிகளில் நடைபெற ஏற்பாடு செய்யவும் கூடியதான புரட்சிகரக் கட்சி ஒன்றை அமைப்பதன் அவசியத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை. தனிமைப்பட்ட செயற்பாட்டின் இந்த முதன்மை நிலை இயற்கையாகவே பொருளாதாரப் போராட்டத்தின் முதன்மை நிலையுடன் தொடர்புடையதே ஆகும்.

இந்த நிலைமைகளின் விளைவாய் இயக்கத்தின் ஒரு புறத்தில் மட்டும் கவனம் குவியலாயிற்று. ''பொருளாதார வாதப்'' போக்கு (இதை ஒரு போக்கு என்பதாய்க் கூறலாமெனில்) இந்தக் குறுகலான தன்மையை ஒரு தனித் தத்துவத்தின் அந்தஸ்துக்குரியதாய் உயர்த்த முயன்றுள்ளது. இதன் பொருட்டு அது புதிய மோஸ்தராகியுள்ள பெர்ன்ஷ்டைனியத்தையும்[4] ''மார்க்சியத்தின் விமர்சனம்'' என்பதாய்ச் சொல்லிப் பழைய முதலாளித்துவக் கருத்துக்களுக்குப் புதிய பெயரிட்டு விளம்பரப்படுத்தும் மோஸ்தரையும் பயன் படுத்திக் கொள்ள முயற்சி செய்துள்ளது. இம்முயற்சிகள் தான் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் அரசியல் சுதந்திரத்துக்குரிய போராட்டத்தின் முன்னணிப் படையான ருஷ்ய சமூக-ஜனநாயகத்துக்கும் இடையிலுள்ள இணைப்பு பலவீனமடைந்துவிடும் அபாயத்தை உண்டாக்கியுள்ளன. இந்த இணைப்பைப் பலப்படுத்துவதே நமது இயக்கத்தின் மிகவும் அவசர அவசியமான பணியாகும்.

தொழிலாளி வர்க்க இயக்கமும் சோஷலிசமும் ஒன்று சேர்ந்ததுதான் சமூக-ஜனநாயகம் எனப்படுவது. சமூக-ஜனநாயகத்தின் பணி செயலின்றி சும்மாயிருந்து தொழிலாளி

வர்க்க இயக்கத்தின் தனிப்பட்ட ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குச் சேவை ஆற்றுவதல்ல. இயக்கம் முழுவதன் நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதும், இந்த இயக்கத்துக்கு அதன் இறுதி நோக்கத்தையும் அதன் அரசியல் பணிகளையும் சுட்டிக்காட்டுவதும், அதன் அரசியல், சித்தாந்தச் சுயேச்சை நிலையைப் பாதுகாப்பதும்தான் சமூக-ஜனநாயகத்தின் பணி. சமூக-ஜனநாயகத்திடமிருந்து தனிமைப்படுத்தப்படுமாயின் தொழிலாளிவர்க்க இயக்கம் சிறுமையுற்றுவிடுகிறது, தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவத் தன்மையதாகிவிடுகிறது. பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் நடத்திச் செல்வதன் மூலம் தொழிலாளி வர்க்கம் தனது அரசியல் சுயேச்சை நிலையை இழந்துவிடுகிறது; பிற கட்சிகளுக்கு வால் பிடித்துச் சென்று, ''தொழிலாளர்களுடைய. விடுதலையைத் தொழிலாளர்களேதான் போராடிப் பெற்றுக் கொண்டாக வேண்டும்''[5] என்னும் மாபெரும் கோட்பாட்டுக்குத் துரோகமிழைக்கிறது. தொழிலாளி வர்க்க இயக்கம் சோஷலிசத்திலிருந்து விலகி நின்று இரண்டும் தனித் தனியே சொந்த பாதையிலே சென்ற காலகட்டம் ஒவ்வொரு நாட்டிலும் இருந்துள்ளது, சோஷலிசம், தொழிலாளி வர்க்க இயக்கம் இவை இரண்டையும் இந்தத் தனிமைப்பாடு ஒவ்வொரு நாட்டிலும் பலமிழக்கவே செய்துள்ளது. சோஷலிசமானது தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இரண்டறக் கலக்கையில் மட்டும்தான் எல்லா நாடுகளிலும் இரண்டுக்கும் நிலையான அடித்தளம் அமைக்கப்படுகிறது. சோஷலிசம், தொழிலாளி வர்க்க இயக்கம் இவை இரண்டின் இந்த இணைவானது ஒவ்வொரு நாட்டிலும் வரலாற்று வழியில், அந்தந்த நாட்டுக்குமுரிய தனி முறைகளில், காலம், இடம் ஆகிய நடப்பு நிலைமைகளுக்கு ஏற்ப உருவாயிற்று. ருஷ்யாவில் சோஷலிசத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் இணைத்திடுவதன் அவசியம் தத்துவார்த்தத்தில் நெடுங் காலத்துக்கு முன்பே பறைசாற்றப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் இவ்விணைவு இப்பொழுதுதான் உருவாக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் கடினமான ஒரு நிகழ்ச்சிப்போக்கு. ஆகவே இது நடைபெறுகையில் ஊசலாட்டங்களும் ஐயப்பாடுகளும் ஏற்படுவதில் வியப்பு ஏதுமில்லை.

கடந்த காலத்திலிருந்து பெறக்கூடிய படிப்பினை என்ன?

எதேச்சாதிகார அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதும் அரசியல் சுதந்திரம் பெறுவதுமே மிகவும் அவசர அவசியப் பணியாகிவிடும்படியான ஒரு நிலைமைக்கு ருஷ்ய சோஷலிசத்தின் வரலாறு அனைத்தும் இட்டுச் சென்றுள்ளது. நமது சோஷலிச இயக்கம் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் முழு முனைப்புடன் ஈடுபட்டது. மறு புறத்தில் ஏனைய நாடுகளைக் காட்டிலும் ருஷ்யாவில் சோஷலிச சிந்தனையானது உழைப்பாளி வர்க்கங்களிடமிருந்து பெருமளவுக்குத் தனிமைப்பட்டிருக்கிறது என்பதையும், இந்த நிலைமை நீடிக்குமாயின் ருஷ்யாவில் புரட்சி இயக்கம் நிச்சயம் திறனற்றதாகி விடும் என்பதையும் வரலாறு தெளிவுபடுத்தியுள்ளது. ருஷ்ய சமூக-ஜனநாயகம் நிறைவேற்ற வேண்டியுள்ள பணி இந்த நிலைமையிலிருந்துதான் எழுகிறது. சோஷலிசக் கருத்துக்களையும் அரசியல் உணர்வையும் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களுக்கு ஊட்டுவதும், தன்னியல்பாய் நடந்தேறும் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து பிரிக்க முடியாதவாறு அதனுடன் இணைந்தமைந்த புரட்சிகரக் கட்சியை நிறுவுவதும் தான் இந்தப் பணி. இத்திசையில் ருஷ்ய சமூக-ஜனநாயகம் எவ்வளவோ செய்திருக்கிறது, ஆயினும் இன்னும் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இயக்கத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து சமூக-ஜனநாயகவாதிகளது செயல்துறை விரிவடைந்து செல்கிறது. பணி பலதரப்பட்டதாகி வருகிறது. பிரசாரம், கிளர்ச்சி இவற்றின் அன்றாடத் தேவைகள் முன்னிலைக்குக் கொண்டுவரும் பல்வேறு தனிப்பட்ட பணிகளையும் செய்து முடிப்பதில் இயக்கத்தின் செயல் வீரர்களில் மேலும் மேலும் அதிகமானோர் தமது முயற்சிகளை ஒன்றுதிரட்டி ஈடுபடுத்த வேண்டியதாகிறது. இந்நிகழ்ச்சி இயற்கையானதுதான், தவிர்க்க முடியாததுதான். ஆனால் இது இந்த தனிப்பட்ட பணிகளும் போராட்ட முறைகளும் சுயேச்சையான தனி நோக்கங்களாகிவிடாமல் தடுப்பதிலும் தயாரிப்பு வேலைகளே பிரதானமான தனிப் பெரும் செயற்பாடாய்க் கருதப்படுவதைத் தடுப்பதிலும் நம்மைக் குறிப்பான சிரத்தை கொள்ளச் செய்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் வளர்ச்சிக்கும் அரசியல் நிறுவன ஒழுங்கமைப்புக்கும் உதவுவதும்தான் முதன்மையானதும் அடிப்படையானதுமான நமது பணி. இந்தப்

பணியைப் பின்னணிக்குத் தள்ளுகிறவர்கள், எல்லாத் தனிப்பட்ட பணிகளையும் குறிப்பிட்ட போராட்ட முறைகளையும் இதற்குக் கீழ்ப்படுத்த மறுப்பவர்கள் தவறான பாதையில் செல்கிறவர்களாவர், இயக்கத்துக்குப் பெருந் தீங்கு இழைப்பவர்களாவர். ஆம், இந்தப் பணி பின்னணிக்குத்தான் தள்ளப்படுகிறது. முதலாவதாக, தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து துண்டிக்கப்பட்டுத் தனிமைப்பட்டுள்ள சதி வேலைக் குழுக்களாகிய சக்திகளை மட்டுமே அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்று புரட்சியாளர்களுக்கு அறிவுறுத்துவோரால் இது பின்னணிக்குத் தள்ளப்படுகிறது. இரண்டாவதாக, அரசியல் பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன ஒழுங்கமைப்பு இவற்றின் உள்ளடக்கத்தையும் வீச்சையும் குறுகச் செய்துவிடுவோராலும், தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் விதிவிலக்கான சில தருணங்களில் மட்டும், விழாக் கொண்டாட்டங்களின் போது மட்டும் அவர்களுக்கு ''அரசியலைத்'' தெரியப்படுத்துவதுதான் சரியானது, பொருத்தமானதென நினைப்போராலும், எதேச்சாதிகாரத்துக்கு எதிரான அரசியல் போராட்டத்துக்குப் பதிலாய் எதேச்சாதிகாரத்திடமிருந்து தனிப்பட்ட சலுகைகள் சிலவற்றைப் பெறுவதற்கான கோரிக்கைகளைப் பரிவுடன் மேற்கொள்வோராலும், இந்தத் தனிப்பட்ட சலுகைகளுக்கான கோரிக்கைகள் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான புரட்சிகரத் தொழிலாளி வர்க்கக் கட்சிக்கான முறையான விட்டுக்கொடுக்காத போராட்டத்தின் நிலைக்கு உயரும்படி உறுதி செய்வதற்குப் போதிய தொலைவு போகாதிருப்போராலும் இப்பணி பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

''ஒழுங்கமையுங்கள்!'' என்று ரபோச்சயா மீசில் ஓயாமல் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறது. ''பொருளாதாரவாதப்'' போக்கின் ஆதரவாளர்கள் எல்லோரும் இந்தக் கூச்சலை எதிரொலித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறைகூவலுக்கு நாமும் முழு ஆதரவு அளிக்கிறோம் என்பதில் ஐயமில்லை; ஆனால் ஒழுங்கமையுங்கள், பரஸ்பர நலச் சங்கங்களிலும் வேலைநிறுத்த நிதிகளிலும் தொழிலாளர் குழுக்களிலும் மட்டுமின்றி ஓர் அரசியல் கட்சியாகவும் ஒழுங்கமையுங்கள், எதேச்சாதிகார அரசாங்கத்தையும் முதலாளித்துவ சமுதாயம் அனைத்தையும் எதிர்த்து வைராக்

கியமான போராட்டம் நடத்துவதற்காக ஒழுங்கமையுங்கள் என்பதையும் இந்த அறைகூவலுடன் சேர்த்துக் கொள்ள நாங்கள் தவறமாட்டோம். இத்தகைய ஒழுங்கமைப்பு இல்லையேல் பாட்டாளி வர்க்கத்தால் ஒருபோதும் வர்க்க உணர்வு படைத்த போராட்டம் நடத்தும் நிலைக்கு உயர முடியாது. இத்தகைய ஒழுங்கமைப்பு இல்லையேல் தொழிலாளி வர்க்க இயக்கம் செயலும் சக்தியுமற்றதாகவே இருக்க வேண்டியதாகிவிடும். தொழிலாளி வர்க்கம் தன்னையும் ருஷ்ய மக்கள் அனைவரையும் அரசியல், பொருளாதார அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெறச் செய்தாக வேண்டும்—நிதிகளையும் போதக் குழுக்களையும் பரஸ்பர நலச் சங்கங்களையும் தவிர வேறு எவற்றின் துணையும் இல்லையேல் தொழிலாளி வர்க்கத்தால் அதற்குரிய இந்த மாபெரும் வரலாற்றுப் பணியை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. வரலாற்றில் எந்த வர்க்கமும் ஓர் இயக்கத்துக்கு ஏற்பாடு செய்து அதற்குத் தலைமை தாங்கிச் செல்ல வல்ல தனது அரசியல் தலைவர்களை, தனது முக்கியப் பிரதிநிதிகளை உருவாக்காமல் ஆட்சியதிகாரம் பெற்றதில்லை. ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் இத்தகைய ஆடவரையும் பெண்டிரையும் தன்னால் உருவாக்கிக் கொள்ள முடியும் என்று ஏற்கனவே காட்டியிருக்கிறது. கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் இவ்வளவு பரவலாய் வளர்ந்துள்ள போராட்டம் தொழிலாளி வர்க்கத்திடம் உள்ளாற்றலாய் அமைந்துள்ள மாபெரும் புரட்சி சக்தியை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறது. சோஷலிசத்துக்காகவும் அரசியல் உணர்வுக்காகவும் அரசியல் போராட்டத்துக்காகவும் பாடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை ஈவிரக்கமற்ற மிகக் கொடிய அரசாங்க அடக்குமுறை குறையச் செய்துவிடவில்லை, அதிகரிக்கவே செய்கிறது என்பதை அது தெளிவுபடுத்தியுள்ளது. நமது தோழர்கள் 1898ல் நடத்திய காங்கிரஸ் நமது பணிகளைச் சரிவர வரையறுத்துக் கொடுத்தது. அது அயலார் சொற்களைத் திருப்பிச் சொல்வதுடனோ, ''அறிவுத்துறையினரது'' ஆர்வத்தை வெளியிடுவதுடனோ நின்றுவிடவில்லை.... கட்சியின் வேலைத்திட்டத்தையும் நிறுவன ஒழுங்கமைப்பையும் போர்த்தந்திரத்தையும் செயலுக்குக் கொண்டுவந்து இந்தப் பணிகளை நிறைவேற்ற நாம் வைராக்கியமாய்ப் பாடுபட வேண்டும். நமது வேலைத்திட்டத்தின்

அடிப்படைக் கூறுகள் குறித்து நமது அபிப்பிராயங்களை ஏற்கனவே எடுத்துரைத்துள்ளோம். விவரமாய் அவற்றை விரித்துரைப்பதற்கு இதுவல்ல உரிய இடம். நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிகவும் அவசரமானவற்றில் ஒன்றான நிறுவன ஒழுங்கமைப்புப் பிரச்சினை குறித்து வருகிற இதழ்களில் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதத் திட்டமிடுகிறோம். இத்துறையில் ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் பழைய பிரதிநிதிகளைக் காட்டிலும் நாம் வெகுவாய்ப் பிற்பட்ட நிலையில் உள்ளோம். இந்தக் குறைபாட்டை நாம் ஒளிவுமறைவின்றி ஒத்துக் கொண்டாக வேண்டும். நமது பணி மேலும் அதிக அளவுக்கு இரகசியமாய் நடைபெறுவதற்கான முறைகளை வகுத்துக் கொள்ளவும், சரியான வேலை முறைகளையும் அரசியல் போலீசாரை ஏமாற்றுவதற்கும் போலீஸ் கண்ணிகளில் அகப்படாது தப்புவதற்குமான தக்க முறைகளையும் நன்கு தெரியப்படுத்தவும் நாம் முழு முயற்சி எடுத்துக் கொண்டாக வேண்டும். ஓய்வு நேரமான மாலைகளை மட்டுமின்றி தம் வாழ்நாள் அனைத்தையும் புரட்சிக்காகப் பணித்துக் கொள்ளக் கூடியவர்களை நாம் பயிற்றுவித்துக் கொண்டாக வேண்டும். நமது பணியின் பல்வேறு வடிவங்களிலும் கண்டிப்பான உழைப்புப் பிரிவினையை அனுசரிக்க இடம் தரும்படியான பெரிய நிறுவனத்தை நாம் கட்டியமைத்தாக வேண்டும். முடிவில் போர்த்தந்திரப் பிரச்சினைகள் சம்பந்தமாய் பின்வருவதைக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறோம்: சமூக-ஜனநாயகம் தனது கைகளுக்கு விலங்கிட்டுக் கொள்ளவில்லை; அரசியல் போராட்டத்துக்காக முன்கூட்டியே உய்த்துணர்ந்து முடிவு செய்யப்பட்ட ஒரே திட்டம் அல்லது முறைக்குள் அது தனது செயல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை; கட்சியிடமுள்ள சக்திகளுக்குப் பொருத்தமாயும் அந்தந்த நிலைமைகளிலும் சாத்தியமான சிறந்த பலன்களை அடைய உதவுவனவாயும் இருக்கும் பட்சத்தில் எல்லாப் போராட்ட முறைகளையும் அது அங்கீகரிக்கிறது. பலம் மிக்கதாய் ஒழுங்கமைந்த ஒரு கட்சி நம்மிடம் இருக்குமாயின், தனியொரு வேலைநிறுத்தமே அரசியல் ஆர்ப்பாட்டமாய், அரசாங்கத்தின் மீதான ஓர் அரசியல் வெற்றியாய் மாறிவிடலாம். பலம் மிக்கதாய் ஒழுங்கமைந்த ஒரு கட்சி நம்மிடம் இருக்குமாயின், தனியோர் இடத்தில் ஏற்படும் எழுச்சி வெற்றிகரப் புரட்சி

யாய் வளர்ந்துவிட முடியும். தனிப்பட்ட கோரிக்கைகளுக்காக அரசாங்கத்துடன் நடைபெறும் போராட்டங்களும் நாம் வென்று கொள்ளும் குறிப்பிட்ட சில சலுகைகளும் பகைவனுடனுன சிறிய கைகலப்புகளே, இடை வழிகளில் பகைவனுடன் ஏற்படும் சந்திப்புகளே என்பதையும், முடிவான போர் இனிமேல்தான் நடைபெறப் போகிறது என்பதையும் நாம் மனதிற் கொண்டாக வேண்டும். பகைவனது கோட்டை அதன் முழு பலத்துடன் நம் எதிரே வானுற உயர்ந்து நிற்கிறது, நம்மீது குண்டும் வெடியும் பொழிந்து நமது தலைசிறந்த வீரர்களை வீழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கோட்டையை நாம் பிடித்தாக வேண்டும். விழித்தெழும் பாட்டாளி வர்க்கத்தின் எல்லா சக்திகளையும் ருஷ்யப் புரட்சியாளர்களது எல்லா சக்திகளுடனும் ஒன்றுபடச் செய்து ருஷ்யாவில் ஜீவ ஆற்றலும் நேர்மையும் கொண்ட யாவற்றையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு கட்சியாய் இணைத்திடுவோமாயின் நிச்சயம் நாம் இந்தக் கோட்டையைப் பிடித்துவிடலாம். ''கோடிக் கணக்கான தொழிலாளர்களின் திண்கரம் உயர்த்தப்படும், படையாட்களது துப்பாக்கி முனைகளால் பாதுகாக்கப்படும் எதேச்சாதிகார ஒடுக்குமுறை தகர்த்துத் தவிடு பொடியாக்கப்படும்'' என்று ருஷ்யத் தொழிலாளி-புரட்சியாளர் பியோத்தர் அலெக்சேயெவ் வருவது அறிந்து கூறிய அந்த உன்னத வாக்கு அப்பொழுது நிறைவேற்றப்படும்.

*1900 அக்டோபரிலும் நவம்பர் ஆரம்பத்திலும் எழுதப் பெற்றது*

*1900 டிசம்பரில் இஸ்க்ரா, இதழ் 1ல் வெளியானது*

நூல் திரட்டு,
தொகுதி 4,
பக்கங்கள் 371-77

# சமூக-ஜனநாயக இயக்கத்தின் பணிகள் குறித்து

வால் அல்லது அபலேன்ஸ்கி ரகத்தவரைச் சேர்ந்த வெறி பிடித்த மூர்க்கர் கும்பலின் செயல்களுடன் கூடவே, தொழி லாளி வர்க்கத்தோடும் ''சட்டபூர்வ'' எதிர்த்தரப்போடும் வஞ்சகக் குலாவுதலும் நடைபெறுவதன் அர்த்தம் என்ன? மக்களில் எத்திரள்களை, எப்பகுதிகளை அரசாங்கத்தால் நசுக்க முடியவில்லையோ அத்திரள்களையும் பகுதிகளையும் அது சீரழித்துப் பிளவுபடுத்தப் பார்க்கிறது என்பதே அதன் அர்த்தம். தனது இவ்வேலை சுலபமாகும் பொருட்டு அரசாங் கம் எண்ணிக்கையில் சொற்பமேயான புரட்சி சக்திகளை இம்மூர்க்கர் ஒவ்வொருவரையும் வேட்டையாட முற்படச் செய்து அவற்றைத் திசைதிருப்பிவிட விரும்புகிறது. அர சாங்கத்தின் இந்த அல்லது அந்தப் பிரதிநிதி பொதுவில் இதை உணருகிறாரா, எந்த அளவுக்கு உணருகிறார் என்பது முக்கியமானதல்ல. அரசாங்கம் அளவிலா அதன் அரசியல் அனுபவத்தாலும் போலீஸ் உள்ளுணர்ச்சியாலும் உந்தப் பட்டுக் கையாளும் இந்தப் போர்த்தந்திரத்தின் மெய்ப் பொருள் இதுவே என்பதுதான் முக்கியமானது. மக்க ளிடையே மெய்யான புரட்சிகர வர்க்கங்களிடத்தே புரட்சி இயக்கம் ஊடுருவிப் பரவியிருக்கும்போது, தவிரவும் அது ஆழத்திலும் விரிவிலும் வளர்ந்து வெல்லற்கரிய சக்தியாய் விரைவில் ஓங்கிவிடுமென்ற திடநம்பிக்கை அளித்து வரும் போது, அரசாங்கமானது மிகச் சிறந்த புரட்சி சக்திகளுக்கு ஆத்திரமூட்டி அவற்றை ஈனத்தனமான கொடிய வன்முறை யின் மட்டரகத் தலைவர்களை வேட்டையாடுவதிலே இறங்கச்

செய்வதால் தனக்கு அனுகூலம் உண்டென்பதைக் காண்கிறது. ஆனால் இவ்விதம் ஆத்திரமூட்டப்படுவதற்கு நாம் அனுமதிக்கலாகாது. மெய்யாகவே மக்களது புரட்சிகரமான இடிமுழக்கத்தின் முதலாவது அதிர்வுகள் கேட்டதும் நாம் மதி மயங்கி நிதானத்தை அறவே இழந்து விடலாகாது; சிந்தையையும் மனச்சாட்சியையும் நிம்மதிப்படுத்துவதற்காக ஐரோப்பாவின், ருஷ்யாவின் அனுபவம் அனைத்தையும், மற்றும் சிறிதளவேனும் திட்டவட்டமாயுள்ள சோஷலிசத் திட நம்பிக்கைகள் யாவற்றையும், கோட்பாடு வழியில் இசைவான, சாகசவாதமல்லாத போர்த்தந்திரத்துக்குரிய எல்லாப் பேச்சுக்களையும் துறந்துவிடலாகாது. சுருங்கக் கூறின் நரோத்னயாவோல்யாவாதத்துக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கும் அதன் தத்துவார்த்த, நடைமுறைத் தவறுகளைத் திரும்பவும் புரிவதற்குமான ஒரு முயற்சி ஈடேற நாம் அனுமதிக்கலாகாது. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்[6] இம்முயற்சியைத் தான் மேற்கொண்டுள்ளனர், விடாப்பிடியாய் மேலும்மேலும் மும்முரமாய் இதில் ஈடுபட்டு வருகின்றனர். வெகுஜனங்களைச் சீரழிப்பதற்காகவும், புரட்சியாளர்களுக்கு ஆத்திரமூட்டுவதற்காகவும் செய்யப்பட்டு வரும் பிரயத்தனங்களுக்கு நமது பதில் பெருந் தீங்கிழைக்கக் கூடிய பழைய தவறுகளுக்கும் புதிய சித்தாந்தச் சஞ்சலங்களுக்கும் கதவை விரியத் திறந்துவிடும் ஒரு ''வேலைத்திட்டமாகவோ'', புரட்சியாளர்கள் வெகுஜனங்களிடமிருந்து தனிமைப்பட்டிருப்பதை—நமது பலவீனத்துக்கும் வைராக்கியமான ஒரு போராட்டத்தை உடனே துவக்குவதற்கு நாம் ஆற்றலில்லாதோராய் இருப்பதற்கும் இந்தத் தனிமைப்பாடுதான் பிரதான ஆதாரமாகும்—மேலும் தீவிரமாக்கும் போக்குடைய போர்த்தந்திரமாகவோ இருக்கக் கூடாது. புரட்சியாளர்களுக்கும் வெகுஜனங்களுக்குமுள்ள தொடர்பைப் பலப்படுத்துவதன் மூலமே நாம் பதிலளிக்க வேண்டும். சமூக-ஜனநாயகத் தொழிலாளர் இயக்கத்தை வளர்த்துப் பலப்படுத்துவதன் வாயிலாய் மட்டும்தான் இக்காலத்தில் இந்தத் தொடர்பை நிறுவிக் கொள்ள முடியும். தொழிலாளி வர்க்க இயக்கம் ஒன்றுதான் மெய்யாகவே புரட்சிகரமான, முன்னேறிய வர்க்கத்தைத் துயிலெழச் செய்கிறது. இவ்வர்க்கம் நடப்பிலுள்ள அரசியல், சமுதாய அமைப்பின் வீழ்ச்சியால் எதுவும் இழக்க வேண்டி

யிராத வர்க்கம், இந்த அமைப்பின் தவிர்க்க முடியாத இறுதி விளைவான வர்க்கம், சந்தேகத்துக்கு இடமின்றி இந்த அமைப்பின் தீராப் பகையான ஒரே வர்க்கம். புரட்சிகர மார்க்சியத் தத்துவத்தையும் சர்வதேச சமூக-ஜனநாயகத்தின் அனுபவத்தையும் ஆதரமாய்க் கொண்டால்தான் நாம் நமது புரட்சி இயக்கத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் இரண்டறக் கலக்கச் செய்ய முடியும், வெல்லற்கரிய பலம் படைத்த சமூக-ஜனநாயக இயக்கத்தைத் தோற்றுவிக்க முடியும். மெய்யான தொழிலாளர் கட்சி ஒன்றின் பெயரில் செயல்பட்டால்தான் நாம் நமது திடநம்பிக்கைகளில் உறுதி தளராதிருந்து, நாட்டிலுள்ள முற்போக்குக் கூறுகள் யாவற்றையும் புரட்சிப் பணியில் சேரும்படி அழைத்திட முடியும், உழைப்பாளரும் துயருறுவோரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள் அனைவரையும் சோஷலிசத்துக்கு ஆதரவளிக்கும்படி அழைத்திட முடியும்.

*1902 நவம்பர் பிற்பகுதியில் எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
தொகுதி 7,
பக்கங்கள் 56-57

*1939ல் முதன்முதலாய்*
**புரொலெத்தார்ஸ்கயா ரெவொலுத்சியா,**
*இதழ் 1ல் வெளியானது*

# புதிய பணிகளும் புதிய சக்திகளும்

ருஷ்யாவில் சமூக-ஜனநாயகத்தின் வளர்ச்சியுடன் ஒட்டி வெகுஜனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியானது எடுப்பான மூன்று இடைக்கால கட்டங்களால் குறிக்கப்பட்டிருக்கிறது. குறுகிய பிரசாரக் குழுக்களிலிருந்து வெகுஜனங்களிடையிலான விரிவான பொருளாதாரக் கிளர்ச்சிக்கு மாறிச் சென்றது முதலாவது கட்டமாகும். பெரிய அளவிலான அரசியல் கிளர்ச்சிக்கும் தெருக்களில் பகிரங்க ஆர்ப்பாட்டங்களுக்கும் மாறிச் சென்றது இரண்டாவது கட்டமாகும். மூன்றுவது நடைமுறையிலான உள்நாட்டுப் போருக்கு, நேரடிப் புரட்சிப் போராட்டத்துக்கு, ஆயுதமேந்திய வெகுஜன எழுச்சிக்கு மாறிச் சென்றதாகும். இந்த இடைக்கால கட்டம் ஒவ்வொன்றும் ஒரு புறத்தில் பிரதானமாய் ஒரே திசையில் செயல்பட்டு வந்த சோஷலிச சிந்தனையாலும், மறு புறத்தில் தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளிலும் அதன் மனப்பாங்கு அனைத்திலும் ஏற்பட்ட ஆழ்ந்த மாறுதல்களாலும், மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மேலும் மேலும் விரிவான பகுதிகள் கூடுதலான உணர்வு படைத்த முனைப்பான போராட்டத்தில் இறங்கும்படி உந்திவிடப்பட்டு வந்த நிலைமையாலும் தயாரிக்கப்பட்டதாகும். சில நேரங்களில் இம்மாறுதல்கள் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் ஏற்பட்டு வந்தன; பாட்டாளி வர்க்கம் அமளி எதுவுமின்றி திரை மறைவில் தனது சக்திகளை ஒன்று திரட்டிக் கொண்டது. ஆகவே அறிவுத்துறையினரிடையே இந்த வெகுஜன இயக்கம் நிலையானதுதானு, ஜீவ சக்தி

கொண்டதுதானோ என்று அடிக்கடி சந்தேகம் எழுந்தது. பிறகு ஒரு மாற்றம் ஏற்படும், திடுமென நடைபெறுவதாய்த் தோன்றும்படி புரட்சி இயக்கம் முழுதும் கிளர்ந்தெழுந்து மேலும் உயர்வான ஒரு புதிய கட்டத்தை அடைந்துவிடும். பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையான சமூக-ஜனநாயகமும் புதிய நடைமுறைப் பணிகளை எதிர்நோக்க வேண்டியதாகிவிடும். இப்பணிகளை நிறைவேற்ற ஏதோ தரைக்கடியிலிருந்து வெடித்துவிட்டது போலத் தோன்றும் புதிய சக்திகள், இந்த மாற்றத்துக்குச் சற்று முன்பு வரை யாரும் நினைத்துக்கூட இருக்கமுடியாத புதிய சக்திகள் உதித்தெழும். ஆனால் இவை யாவும் திடுதிப்பென நிகழ்ந்தவையல்ல; சமூக-ஜனநாயக இயக்கத்தினுள் ஊசலாட்டங்களின்றி, போக்குகளுக்கு இடையிலான போராட்டமின்றி, நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்தொழிந்துவிட்டதாய்க் கருதப்பட்ட காலாவதியான கருத்தோட்டங்களை நோக்கி ஏற்படும் சரிவுகளின்றி நிகழ்ந்தவையல்ல.

ஊசலாட்டங்களுக்குரிய இத்தகைய ஒரு கால கட்டத்தைத்தான் ருஷ்யாவில் சமூக-ஜனநாயகம் மீண்டும் இப்பொழுது கடந்துகொண்டிருக்கிறது. சந்தர்ப்பவாதத் தத்துவங்களை உடைத்துக் கொண்டு அரசியல் கிளர்ச்சி தனக்கு வழி வகுத்துச் செல்ல வேண்டியிருந்த காலம் ஒன்று இருந்தது. புதிய பணிகளை நிறைவேற்றும் திறன் நம்மிடம் இல்லை என்பதாய் அப்பொழுது அச்சம் தெரிவிக்கப்பட்டு வந்தது. பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்குப் பின்தங்கிய நிலையில் சமூக-ஜனநாயகவாதிகள் சென்று கொண்டிருந்ததற்கு நியாயம் கற்பிப்பதற்காக அப்பொழுது ''வர்க்கம்'' எனும் உரிச்சொல் மிதமிஞ்சித் திரும்பத் திரும்ப உபயோகிக்கப்பட்டது, அல்லது வர்க்கத்தின்பால் கட்சியின் போக்கு பற்றிய வால்பிடிப்பாளரது வியாக்கியனம் பயன்படுத்தப்பட்டது. கிட்டப் பார்வையால் விளைந்த இந்த அச்சங்களையும் பிற்பட்ட கருத்தோட்டங்களையும் இயக்கத்தின் வளர்ச்சியானது தூர விலக்கித் தள்ளிவிட்டது. இப்புதிய எழுச்சியுடன் கூடவே, காலங்கடந்துவிட்ட குழுக்களுக்கும் போக்குகளுக்கும் எதிரான போராட்டமும் வேறொரு வடிவத்தில்தான் எனினும் மீண்டும் நடைபெறுகிறது. ரபோச்சியெ தியேலொ வாதிகள் புதிய-இஸ்க்ரா வாதிகளின்[7] வடிவில் திரும்பவும் உயிர் பெற்று

எழுந்துள்ளனர். புதிய பணிகளுக்கு ஏற்ப நமது போர்த் தந்திரத்தையும் நமது நிறுவன அமைப்பையும் தகவமைத்துக் கொள்வதற்காக நாம் ''உயர்ந்த வகை ஆர்ப்பாட்டம்'' (ஸெம்ஸ்த்வொ இயக்கத்துக்கான திட்டம்[8]), அல்லது ''வளர்ச்சிப் போக்காகிய ஒழுங்கமைப்பு'' என்பதான சந்தர்ப்பவாதத் தத்துவங்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது; எழுச்சிக்குக் ''காலம் நிர்ணயிப்பது'' பற்றிய பிற்போக்குவாத அச்சத்தை, அல்லது பாட்டாளி வர்க்கத்தார், விவசாயிகளது புரட்சிகர-ஜனநாயகச் சர்வாதிகாரத்தைப் பற்றிய பிற்போக்குவாத அச்சத்தை எதிர்த்துப் போராடவேண்டியிருக்கிறது. பாட்டாளிவர்க்கத்தின்அவசரத் தேவைகளுக்கு சமூக-ஜனநாயகம் பின்தங்கிச் சென்றுகொண்டிருப்பதற்கு நியாயம் கற்பிப்பதற்காக மீண்டும் ''வர்க்கம்'' என்னும் சொல் மிதமிஞ்சி (அடிக்கடி அசட்டுத்தனமாய்) திரும்பத் திரும்ப உபயோகிக்கப்படுகிறது; வர்க்கம் சம்பந்தமாய்க் கட்சிக்குள்ள பணிகள் சிறுமைப்படுத்தப்படுகின்றன. மெய்யான சமூக-ஜனநாயக சுயேச்சைச் செயற்பாட்டின் உயர் வடிவங்களே, பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான புரட்சிகர முன்முயற்சியை உதாசீனம் செய்துவிட்டு, செயற்பாட்டின் கீழ்த்தர வடிவங்களேப் பூஜிப்போர் திரும்பவும் ''தொழிலாளர்களது சுயேச்சைச் செயற்பாடு'' என்னும் கோஷத்தைத் தவருன முறையில் பயன்படுத்தி வருகிறுர்கள்.

காலங் கடந்துவிட்ட உயிரற்ற கருத்துக்களின் இந்த மீதமிச்சங்களே வளர்ந்து செல்லும் இயக்கமானது தூர விலக்கி ஒதுக்கிவிடும் என்பதில் இம்மியும் சந்தேகமில்லே. ஆனுல் இவ்வாறு விலக்கி ஒதுக்கப்படுவதானது, பழைய தவறுகளே நிராகரிப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதாய்க் குறுகலாக்கப் பட்டுவிடக் கூடாது; அதற்கு மாருய், ஒப்பிடற்கரிய அளவு முக்கியமாய், புதிய பணிகளே நடைமுறையில் நிறைவேற்றும் திசையிலான, பெரும் பெருந் திரள்களில் புரட்சி அரங்கிற்கு வந்து கொண்டிருக்கும் புதிய சக்திகளே நமது கட்சிக்குள் வரும்படிக் கவர்ந்திழுத்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் திசையிலான ஆக்க வழிப்பட்ட புரட்சி வேலேயின் வடிவத்தைப் பெற்ருக வேண்டும். ஆக்க வழிப்பட்ட புரட்சி வேலே பற்றிய இந்தப் பிரச்சினேகள்தான் வரப்போகும் மூன்ருவது காங்கிரசில் பிரதான விவாதப் பொருளாய் இருத்தல்

வேண்டும். நமது கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் தமது ஸ்தல வேலைகளிலும் பொது வேலைகளிலும் இந்தப் பிரச்சினை களில்தான் தமது கவனத்தை ஒன்றுகுவிக்க வேண்டும். நம்மை எதிர்நோக்கும் புதிய பணிகளைப் பொறுத்த வரை பொதுப்பட இவை குறித்து நாம் பன்முறை கூறியிருக்கிறோம். இவையாவன: நகர, கிராம ஏழைகளைச் சேர்ந்த புதிய பகுதி களிடையே நமது கிளர்ச்சி வேலையை விரிவாக்குதல்; மேலும் பரவலான, நெளிவுசுளுவான, வலிமை வாய்ந்த நிறுவனத் தைக் கட்டியமைத்தல்; எழுச்சிக்குத் தயாரித்தல், மக்களை ஆயுதபணியாக்குதல்; இந்நோக்கங்களுக்காகப் புரட்சிகர ஜனநாயகவாதிகளுடன் உடன்பாடு செய்து கொள்ளுதல். இந்தப் பணிகளை நிறைவேற்றப் புதிய சக்திகள் உதித்தெழுந் திருப்பதை ருஷ்யா எங்கும் நடைபெறும் பொது வேலை நிறுத்தங்களைப் பற்றிய தகவல்களும், இளைஞர்களிடத்தும் பொதுவாய் ஜனநாயக அறிவுத்துறையினரிடத்தும் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் பல் பகுதிகளிடத்துங்கூட எழும் வேலைநிறுத்தங்களையும் காணப்படும் புரட்சி மனப் பாங்கையும் பற்றிய தகவல்களும் கண்கூடாக்குகின்றன. இந்தப் பிரம்மாண்டப் புதிய சக்திகள் இருந்து வரும் உண் மையும், தொழிலாளி வர்க்கத்திடமும் விவசாயிகளிடமும் தீ பிடித்து எரியக் கூடியனவாய் ஏராளமாய் இருக்கும் பொருள்களில் ஒரு சிறு பகுதி மட்டுமே முன்பின் காணாதவாறு தற்போது ருஷ்யாவில் கிளர்ந்தெழும் கொந்தளிப்பால் இது காறும் பாதிக்கப்பட்டுள்ளன என்னும் மறுக்க முடியாத உண் மையும் இந்தப் புதிய பணிகள் தவறாமல் நிறைவேற்றப்பட முடியும் நிறைவேற்றப்படவும் செய்யும் என்பதற்குரிய நம் பகமான உத்தரவாதங்களாகும். தற்போது நம்மை எதிர் நோக்கும் நடைமுறைப் பிரச்சினை இதுவே: முதலாவதாக, இந்தப் புதிய சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதும் வழி நடத்திச் செல்வதும் ஒன்றுபடுத்துவதும் ஒழுங்கமையச் செய் வதும் எப்படி; நம் முன்னுள்ள, முதலாளித்துவச் சுரண்டல் உலகு நீடிக்கும் வரையில் தொடர்ந்து நம் முன்னிருக்கவே செய்யும், பழைய சாதாரண வகைப் பணிகளைக் கணப் பொழுதும் மறந்துவிடாமல், இந்நாளையதான புதிய உயர் வகைப் பணிகளில் சமூக-ஜனநாயகச் செயற்பாடு ஒன்று குவியும்படிச் செய்வது எப்படி.

இந்த நடைமுறைப் பிரச்சினை குறித்து அனுசரிக்கப்படும் பல வழிகளையும் சுட்டிக்காட்டும் பொருட்டு, தனிப்பட்ட ஒன்றுயினும் நமது கருத்துப்படி மிகவும் குறிப்பிடத்தக்க இயல்புடையதான ஓர் உதாரணத்திலிருந்து தொடங்குகிறோம். சிறிது காலத்துக்கு முன்பு, புரட்சி வெடித்தெழும் தறுவாயிலான ஒரு தருணத்தில், மிதவாத-முதலாளித்துவ வெளியீடான அஸ்வொபழ்தேனியெ[9] (இதழ் 63) சமூக-ஜனநாயகவாதிகளது நிறுவன ஒழுங்கமைப்பு வேலை பற்றிய பிரச்சினையைக் குறிப்பிட்டது. சமூக-ஜனநாயகத்தில் இருந்து வரும் இரு போக்குகளிடையிலும் நடைபெறும் போராட்டத்தை உன்னிப்பாய்க் கவனித்து வரும் அஸ்வொபழ்தேனியெ, ''பொருளாதாரவாதத்தை'' நோக்கி புதிய இஸ்க்ரா சரிந்து பின்செல்வதை மீண்டும் மீண்டும் தனக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பைக் கைநழுவ விடாமல் ''பொருளாதாரவாதத்தின்''பால் தனக்குள்ள கோட்பாடு வழிப்பட்ட ஆழ்ந்த அனுதாபத்தை (''ஒரு தொழிலாளியின்'' வாய்ச்சவடால் பிரசுரம் சம்பந்தமாய்) வலியுறுத்திற்று. புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் பாத்திரத்தைத் தவிர்க்க முடியாதவாறு மறுப்பதாகவே, அல்லது குறைத்துச் சிறுமைப்படுத்துவதாகவே இந்தப் பிரசுரம் அமைந்திருக்கிறது என்பதை (இப்பிரசுரம் குறித்து விபெரியோத், இதழ் 2ஐப் பார்க்கவும்) இந்த மிதவாத வெளியீடு சரியாகவே சுட்டிக்காட்டிற்று. சம்பிரதாய மார்க்சியவாதிகள் வெற்றி பெற்றது முதலாய்ப் பொருளாதாரப் போராட்டம் உதாசீனம் செய்யப்பட்டிருப்பதாய் இந்தத் ''தொழிலாளி'' முற்றிலும் தவறுனபடி அடித்துப் பேசுவது குறித்து அஸ்வொபழ்தேனியெ பின்வருமாறு எழுதுகிறது:

''இன்றைய ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் மனப் பிரமை அடங்கியிருப்பது எதில்? அறிவுப்போதப் பணி குறித்து, சட்டபூர்வமான வழிகள் குறித்து, ''பொருளாதாரவாதம்'' குறித்து, தொழிலாளர் இயக்கத்தின் அரசியலல்லாத வடிவங்கள் எனப்படுகிறவை குறித்து அதற்குள்ள அச்சத்திலும், அறிவுப்போதப் பணியாலும் சட்ட பூர்வமானவையும் அரசியலல்லாதவையுமான வடிவங்களாலும் மட்டுமே புரட்சி இயக்கம் என்று அழைக்கப்படுவதற்குரிய மெய்யான தகுதியைப் பெறுவதற்கு வலிவும் போதுமான விரிவும் கொண்ட

ஓர் அடித்தளத்தைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குப் படைத்திட முடியுமென்பதை அது புரிந்து கொள்ளத் தவறு வதிலும்தான் அதன் மனப் பிரமை அடங்கியிருக்கிறது.'' சமூக-ஜனநாயகத்தை எதிர்த்தல்ல, அதனுடன் சேர்ந்து நின்று ''தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டுவதற்கு முன் முயற்சி எடுத்துக் கொள்ளும்படி'' அஸ்வொபழ்தேனியெ தன்னைப் பின்பற்றுவோரை வலியுறுத்துகிறது. இந்தச் சூழ் நிலை முன்பு சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் செயல்பட்டபோது ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் நிலவிய சூழ்நிலைக்கு இணையானதாகும் என்று அது குறிப்பிடு கிறது.

முற்றிலும் தவருன இந்த ஒப்புமையைப் பரிசீலிப் பதற்கு இதுவல்ல தக்க இடம். யாவற்றுக்கும் முதலாய், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சட்டபூர்வமான வடிவங் கள் குறித்து சமூக-ஜனநாயகவாதிகளது போக்கு பற்றிய உண்மையை மீண்டும் இங்கு வற்புறுத்துவது அவசியமாகும். ''சோஷலிஸ்டல்லாத, அரசியலல்லாத தொழிலாளர் சங்கங் கள் ருஷ்யாவில் சட்ட வடிவம் பெறத் தொடங்கிவிட்டன'' என்று செய்ய வேண்டியது என்ன?[10] என்பதில் 1902ல் நாம் எழுதினோம். ''இனி நாம் இந்தப் போக்கைக் கவனியாது விட முடியாது.'' இதை நாம் கவனிக்க வேண்டியது எப்படி?— இந்தக் கேள்வி அங்கே எழுப்பப்பட்டு விடை கூறப்படுகிறது. ஸுபாத்தவ் தத்துவங்களை மட்டுமல்லாது ''வர்க்க ஒத் துழைப்பு'' பற்றிய இசைவான எல்லா மிதவாதப் பேச்சுக் களையும் அம்பலம் செய்வது அவசியமென்பது சுட்டிக்காட் டப்பெற்று, இந்தக் கேள்விக்கு விடை கூறப்படுகிறது. (சமூக-ஜனநாயகவாதிகளை ஒத்துழைக்கும்படி அழைப்பதன் மூலம் அஸ்வொபழ்தேனியெ முதலாவது பணியை முழுமையாய் அங்கீகரிக்கிறது, ஆனல் இரண்டாவதனை உதாசீனம் செய்து விடுகிறது.) ''தொழிலாளி வர்க்க இயக்கம் சட்ட வடிவம் பெறுதல் காலப் போக்கில் நமக்கு அனுகூலமாயிருக்குமே அன்றி ஸுபாத்தவ்களுக்கு அல்ல என்பதை மறந்துவிடுவ தாய் ஒருபோதும் இதற்கு அர்த்தமல்ல'' என்று இந்தப் பிர சுரம் மேலும் தொடர்ந்து கூறுகிறது. சட்டபூர்வமான கூட்டங்களில் ஸுபாத்தவியத்தையும் மிதவாதத்தையும் அம் பலம் செய்வதன் மூலம் நாம் பயிரிலிருந்து களையைப் பிரித்து

ஒதுக்குகிறோம். ''பயிர் என்று கூறும்போது நாம் தொழிலாளர்களில் மிகவும் பிற்பட்ட பகுதிகளும் அடங்கலாய் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையானோரின் கவனத்தை சமூக, அரசியல் பிரச்சினைகளுக்குக் கவருதலையும், புரட்சியாளர்களாகிய நாம் சாராம்சத்தில் சட்டபூர்வமான வேலைகளிலிருந்து (சட்டபூர்வமான புத்தகங்களை வினியோகித்தல், பரஸ்பர உதவி முதலானவற்றிலிருந்து) விடுவிக்கப்படுவதையும் குறிப்பிடுகிறோம். சட்டபூர்வமான வேலைகள் ஓங்குவதன் மூலம் கிளர்ச்சிக்காக நமக்கு மேன்மேலும் கூடுதலான விவரங்கள் தவிர்க்க முடியாதவாறு கிடைக்கும்.''

இயக்கத்தின் சட்டபூர்வமான வடிவங்கள் குறித்தான ''அச்சத்தைப்'' பொருத்த வரை ''மனப் பிரமையால்'' பீடிக்கப்பட்டிருப்பவர் யாரேனும் இருப்பின், அது அஸ்வொபழ்தேனியெதான் என்பது மேற்கூறியதிலிருந்து தெளிவாய்ப் பெறப்படுகிறது. புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் இவ்வடிவங்கள் குறித்து அஞ்சவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் இவற்றினுள் பயிருடன்கூட களைகளும் இருத்தலைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றனர். ஆகவே அஸ்வொபழ்தேனியெவின் வாதங்கள் புரட்சிகர சமூக-ஜனநாயகமானது மிதவாதத்தின் வர்க்கச் சாரப்பொருளை அம்பலப்படுத்திவிடுமென்று மிதவாதிகளுக்கு இருக்கும் மெய்யான (ஆதாரபூர்வமான) அச்சத்தை மூடிமறைக்கும் வாதங்களே அன்றி வேறல்ல.

ஆனால் இன்றைய பணிகளின் கண்ணோட்டத்திலிருந்து நமக்கு மிகவும் கவனத்துக்கு உரியதாய் இருப்பது புரட்சியாளர்களை அவர்களுடைய வேலைகள் சிலவற்றிலிருந்து விடுவிக்க முடியும்படியான பிரச்சினைதான். தற்போது நாம் புரட்சியின் தொடக்கத்தைக் கண்ணுற்று வருகிறோம் என்பது இப்பிரச்சினையை மிகவும் அவசியமானதாகவும் மிகவும் பரவலான முக்கியத்துவமுடையதாகவும் செய்துவிடுகிறது. ''நமது புரட்சிப் போராட்டத்தை எவ்வளவுக்கு எவ்வளவு நாம் மும்முரமாய் நடத்திச் செல்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழிற்சங்க வேலைகளில் ஒரு பகுதியைச் சட்டபூர்வமானதாக்கும்படி அரசாங்கம் கட்டாயப்படுத்தப்படும்; இவ்வழியில் நமக்குள்ள வேலைச்சுமையில் ஒரு பகுதியிலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம்'' என்று செய்ய வேண்டியது என்ன?

என்பதில் நாம் எழுதினேம். ஆனால் மும்முரமான புரட்சிப் போராட்டம் நமது ''வேலைச்சுமையில் ஒரு பகுதியிலிருந்து'' நம்மை இதன்றி வேறு பல வழிகளிலும் விடுவிக்கின்றது; தற்போதைய சூழ்நிலை முன்பு தடைவிதிக்கப்பட்டிருந்த வற்றில் பலவற்றையும் ''சட்டபூர்வமாக்கியதுடன்'' மட்டும் நின்றுவிடவில்லை. அது இயக்கத்தை விரிவுபடுத்தியும் இருக் கிறது. அரசாங்கச் சட்டங்கள் எப்படியிருப்பினும் புரட்சி யாளர்களின் கைக்கு மட்டுமே எட்டும்படியானவையாய்க் கருதப்பட்டும், உண்மையில் அப்படிப்பட்டவையாகவே இருந்தும் வந்தவை பலவும் இப்பொழுது வெகுஜனங்களது நடைமுறையின் அரங்கினுள் பிரவேசிக்கும்படியும், அவர் களுக்கு வழக்கமானவையும் எட்டக் கூடியவையும் ஆகிவிடும் படியும்,அது இயக்கத்தை அந்த அளவுக்கு விரிவுபடுத்தியிருக் கிறது. சமூக-ஜனநாயக இயக்கமானது எல்லா இடையூறு களையும் எதிர்த்து நின்று, ஜாரிஸ்டுச் சட்டங்களையும் போலீஸ் நடவடிக்கைகளையும் மீறி, தனக்குக் கூடுதலான செயல் சுதந்திரம் வென்று கொண்டுள்ளது. இது சமூக-ஜனநாயகத் தின் வரலாற்று வழியிலான வளர்ச்சிப்போக்கு அனைத்துக்கு முரிய சிறப்பியல்பாகும். புரட்சிகரப் பாட்டாளி வர்க்க மானது, தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் மற்றும் பிற வர்க்கங்களிடமிருந்தும் (இவ்வர்க்கங்கள் தொழிலாளி வர்க்க ஜனநாயகத்தின் கோரிக்கைகளில் ஒரு சிறு பகுதியை மட்டுமே ஒத்துக் கொள்கின்றன என்ருலும்) கிடைக்கும் அனுதா பத்தாலும் ஆதரவாலுமான ஒருவகைச் சூழலை, அரசாங்கத் தால் நினைக்கவும் முடியாத இந்தச் சூழலைத் தனக்கு உண் டாக்கிக் கொள்கிறது. இயக்கத்தின் ஆரம்பக் கட்டங்களில் சமூக-ஜனநாயகவாதி பெருமளவுக்கு அறிவுப்போதப் பணி யாய் அமைந்த மிகுதியான பல வேலைகளைச் செய்ய வேண்டி யிருந்தது. அல்லது அனேகமாய்ப் பொருளாதாரக் கிளர்ச்சி யில் மட்டுமே ஈடுபட வேண்டியிருந்தது. இப்பொழுது ஒவ் வொன்ருய் இந்த வேலைகள் புதிய சக்திகளின், இயக்கத்தினுள் திரட்டப்படும் முன்னிலும் விரிவான பகுதிகளின் கரங் களுக்கு உரியனவாகி வருகின்றன. புரட்சிகர நிறுவனங்கள் தம் கவனத்தை மெய்யான **அரசியல்** தலைமைக்கான வேலை யில், தொழிலாளர்களுடைய கண்டனங்களிலிருந்தும் வெகு ஜன அதிருப்தியிலிருந்தும் சமூக-ஜனநாயக முடிபுகளை வகுத்

தளிக்கும் வேலையில் மேலும் மேலும் ஒன்றுகுவியச் செய்துள்ளன. தொடக்கத்தில் நாம் தொழிலாளர்களுக்கு அரிச்சுவடிப் பாடம்—நேரடிப் பொருளிலும் உருவகப் பொருளிலும்—கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அரசியல் எழுத்தறிவின் தரம் பிரம்மாண்ட அளவுக்கு வளர்ந்துவிட்டதால், ஒழுங்கமைந்த முறையில் புரட்சிகரப் பிரவாகத்தைச் செலுத்துவதை நோக்கமாய்க் கொண்ட மேலும் நேரடியான சமூக-ஜனநாயகக் குறிக்கோள்களில் நமது முயற்சிகள் யாவற்றையும் ஒன்றுகுவித்திட முடியும், ஒன்றுகுவித்திடவும் வேண்டும். இதுகாறும் நாம் பெரிய அளவில் முயற்சி செலுத்தவேண்டியிருந்த ''தயாரிப்பு'' வேலைகளில் மிகுதியானவற்றை இப்பொழுது மிதவாதிகளும் சட்டபூர்வமான பத்திரிகைகளும் செய்து வருகின்றன. பலவீனமாக்கப்பட்டுள்ள அரசாங்கத்தால் இனி அடக்குமுறை செய்து தடுக்க முடியாததாகிவிட்ட ஜனநாயகக் கருத்துக்கள், கோரிக்கைகளின் பகிரங்கப் பிரசாரம் தற்போது அந்த அளவுக்கு மிக விரிவாய்ப் பரவிவிட்டதால் இயக்கத்தின் முற்றிலும் புதிய இந்த வீச்சுக்கு நம்மைத் தகவமைத்துக் கொள்ள நாம் கற்றுக் கொண்டாக வேண்டும். இயற்கையாகவே இந்தத் தயாரிப்பு வேலைகளில் பயிரும் மற்றும் களைகளும் உள்ளன. இயற்கையாகவே இப்பொழுது சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளர்களிடையே முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு இருந்து வரும் செல்வாக்கை எதிர்த்துப் போராடுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால் இந்த வேலையானது அரசியல் உணர்வு பெற்றிராத வெகுஜனங்களைத் தட்டியெழுப்புவதையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருந்த நமது பழைய செயற்பாட்டைக் காட்டிலும் அதிகமாய் மெய்யான சமூக-ஜனநாயக உள்ளடக்கம் கொண்டதாய் இருக்கும்.

வெகுஜன இயக்கம் பரவப் பரவ, பல்வேறு வர்க்கங்களது மெய்யான தன்மையும் மேலும் மேலும் தெளிவாய் வெளிப்படும்; நிகழ்ச்சிகளின் வாலைப் படித்துப் பின்செல்வதற்குப் பதிலாய் வர்க்கத்துக்குத் தலைமை தாங்குவதில், வர்க்கத்தின் ஒழுங்கமைப்பாளனுவதில் கட்சியின் பணி மேலும் மேலும் அவசர அவசியமானதாகிவிடும். எல்லா வகைப்பட்ட புரட்சிகர சுயேச்சைச் செயற்பாடு எங்கும் ஓங்க ஓங்க,

எல்லா வகையான கூப்பாட்டுக்காரர்களும்* அத்தனை ஆர்வத்துடன் பற்றிக் கொள்ளும் ரபோச்சியெ தியேலொவின் பொதுவான சுயேச்சைச் செயற்பாடு பற்றிய பகட்டுச் சொற்களின் போலித்தன்மையும் வெறுமையும் மேலும் மேலும் தெளிவாய் வெளிப்படும்; சமூக-ஜனநாயகச் சுயேச்சைச் செயற்பாட்டின் உட்பொருள் மேலும் மேலும் முக்கியத்துவமுடையதாகிவிடும், நமது புரட்சிகர முன்முயற்சி குறித்து நிகழ்ச்சிகள் எழுப்பும் கோரிக்கைகள் மேலும் மேலும் அதிகமாகிவிடும். சமூக இயக்கத்தின் புதிய பிரவாகங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவடைகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்தப் பிரவாகங்களுக்குப் புதிய வாய்க்கால்கள் வகுக்கவல்ல வலுவான சமூக-ஜனநாயக நிறுவனத்தினுடைய முக்கியத்துவமும் அதிகரிக்கும். நம்மை அல்லாது சுயேச்சையாய் நடத்தப்படும் ஜனநாயகப் பிரசாரமும் கிளர்ச்சியும் எவ்வளவுக்கு எவ்வளவு நமக்கு அனுகூலமாய்ச் செயல்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு முதலாளித்துவ ஜனநாயகவாதிகளிடமிருந்து தொழிலாளி வர்க்கத்தின் சுயேச்சையைப் பாதுகாப்பதற்காக சமூக-ஜனநாயகத்துக்கு ஒழுங்கமைந்த முறையில் தலைமை தாங்குவதன் முக்கியத்துவமும் அதிகரிக்கிறது.

சேனைக்கு யுத்தக் காலம் எப்படியோ அது போன்றதாகும் புரட்சிகர சகாப்தம் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு. நமது சேனையின் ஊழியர்களது எண்ணிக்கையை நாம் விரிவாக்கிச் செல்ல வேண்டும்; சமாதானக் காலத்துக்குரிய சேனையின் ஆள் பலத்திலிருந்து யுத்த காலத்துக்குரிய பலத்துக்கு அதை விரிவடையச் செய்தாக வேண்டும்; சேமப் படையாட்களைப் படைக்குத் திரட்ட வேண்டும்; விடுமுறைக்காக விடுவிக்கப்பட்டோரைத் திருப்பியழைக்க வேண்டும்; புதிய துணைப் படைப் பிரிவுகளையும் தொகுதிகளையும் சேவைத் துறைகளையும் நிறுவ வேண்டும். யுத்தத்தின்போது தவிர்க்க முடியாதவாறும் இன்றியமையாதபடியும் நாம் குறைவான பயிற்சியே பெற்ற புதிய வீரர்களையே சேனையில் சேர்க்க வேண்டியிருக்

* விபெரியோத் செய்தியேட்டில் ''எல்லா வகையான கூப்பாட்டுக்காரர்களும்'' என்பதற்குப் பதிலாய்ப் ''புதிய-இஸ்க்ராவாதிகள்'' என்னும் பெயர் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.—**பதிப்பாசிரியர்.**

கும் என்பதையும், பல சந்தர்ப்பங்களில் ஆபீசர்களுக்குப் பதிலாய் சாதாரண படையாட்களை அமர்த்த வேண்டியிருக் கும் என்பதையும், படையாட்களை ஆபீசர்களாய்ப் பதவி உயர்வு பெறச் செய்வதைத் துரிதப்படுத்தவும் சுலபமாக்க வும் வேண்டியிருக்கும் என்பதையும் நாம் மறக்கலாகாது.

உருவகமின்றிக் கூறுவோமாயின், கட்சி நிறுவனங்கள், கட்சித் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகிய யாவற்றின் உறுப்பினர் தொகையை நாம் வெகுவாய் அதிகமாக்கிக் கொண்டாக வேண்டும். அப்பொழுதுதான் நூறு மடங்கு வலிமை மிக்கதாகிவிட்ட வெகுஜனப் புரட்சி ஆற்றலின் பிரவாகத்துடன் ஓரளவு உடன் செல்ல முடியும். தளராத பயிற்சியும் மார்க்சிய உண்மைகளில் முறையான போதமும் கவனியாது விடப்பட வேண்டுமென்பதல்ல இதன் அர்த்தம் என்பது கூருமலே விளங்கும். ஆனுல் தற்போதைய தருணத் தில் பயற்சி, அறிவுபோதம் ஆகிய துறைகளில், பயிற்சியில் லாதோருக்கு குறிப்பாகவும் முற்றிலும் நம்முடைய அர்த்தத் தில் போதமளித்திடும் இராணுவச் செயல்கள் மிகவும் கூடுத லான முக்கியத்துவம் பெறுவதை நாம் நினைவில் கொண் டிருக்க வேண்டும். மார்க்சியத்திடம் நமக்குள்ள "கோட் பாட்டு நெறியிலான" விசுவாசமானது தற்போது எங்கும் வெகுஜனங்களுக்குப் பிரத்தியட்சப் படிப்பினைகள் அளித்து வீறுநடை போடும் புரட்சிகர நிகழ்ச்சிகளால் உறுதியூட்டப் படுவதையும், இந்தப் படிப்பினைகள் யாவும் குறிப்பாய் நமது கோட்பாட்டு நெறியை ஊர்ஜிதப்படுத்துவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, கோட்பாட்டு நெறி யைக் கைவிடுவதாகவோ, சிந்தனையில் தாறுமாருன அறிவுத் துறையினரிடத்தும் வறட்டுத் தனமான புரட்சியாளர்களிடத் தும் நமக்குள்ள நம்பிக்கையில்லாத, சந்தேகப் போக்கைத் தளரவிடுவதாகவோ நாம் கூறவில்லை. நேர்மாருனதையே கூறுகிருேம். கோட்பாட்டு நெறியைப் போதிப்பதற்கான புதிய முறைகள் குறித்தே இங்கு பேசுகிருேம். சமூக-ஜன நாயகவாதி இந்தப் புதிய முறைகளை மறப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். நமது பழைய, "கோட்பாட்டு நெறி யிலான" படிப்பினைகளை, உதாரணமாய் வெகுஜனங்களுடைய எழுச்சியுடன் நடைமுறையில் பயங்கரத்தை இணைத்துக் கொள்வது அவசியமாகும், அல்லது கல்வியறிவுடைய ருஷ்ய

சமூகத்தாரது மிதவாதத்துக்குப் பின்னுல் நமது முதலாளித் துவ வர்க்கத்தாரது வர்க்க நலன்கள் மறைந்திருப்பதைக் கண்டு கொள்ளும் திறனுடையோராய் இருத்தல் வேண்டும் (இப்பிரச்சினை குறித்து சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி யினருடன் நாம் நடத்திய வாக்குவாதத்தை விபெரியோத், இதழ் 3ல் காண்க) என்பதான படிப்பினைகளைக் கடந்த காலத்தில் செய்தது போல் கல்விக் குழுக்களுக்கு அல்லாமல் வெகுஜனங்களுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு இம்மா பெரும் புரட்சிகர நிகழ்ச்சிகளது பிரத்தியட்சப் படிப்பினை களை உபயோகித்துக் கொள்வது இன்று எவ்வளவு முக்கியமா கும் என்பது குறித்துப் பேசுகிறோம்.

ஆகவே நமது சமூக-ஜனநாயகக் கண்டிப்பையும் சம்பிர தாயமான நமது விட்டுக்கொடுக்காத நிலைமையும் தளர்த்தும் பிரச்சினை எழவில்லை. இரண்டையும் புதிய வழிகளில், புதிய பயிற்சி முறைகளைக் கொண்டு உறுதியாக்கும் பிரச்சினையே எழுகிறது. யுத்தக் காலத்தில் படைக்குப் புதியதாய்த் திரட் டப்பட்டோர் நேரடியாய் இராணுவச் செயல்களிலிருந்தே தமது பயிற்சிப் பாடங்களைப் பயின்று கொள்ள வேண்டும். ஆகவே தோழர்களே, புதிய பயிற்சி முறைகளை மேலும் துணி வுடன் கைக்கொள்ளுங்கள்! முன்னேறுங்கள், மேன்மேலும் அதிகமான படைக் குழுக்களை அமைத்து அவற்றைப் போருக்கு அனுப்புங்கள், மேலும் அதிகமாய் இளந் தொழிலாளர்களைப் படைக்குத் திரட்டுங்கள், கமிட்டிகளிலிருந்து ஆலைக் குழுக்கள், தொழிற்பிரிவுச் சங்கங்கள், மாணவர் குழுக்கள் வரையிலான எல்லாக் கட்சி நிறுவனங்களின் வழக்கமான கட்டுக்கோப்பை மேலும் விரிவாக்குங்கள்! இந்தப் பணியைச் செய்வதில் ஏற்படும் ஒவ்வொரு கணப்பொழுது தாமதமும் சமூக-ஜனநாயகத்தின் பகைவர்களுக்கே அனுகூலமாயிருக் கும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் புதிய பிரவாகங்கள் உடனடியான பாதையைத் தேடுகின்றன, அவற்றுக்கு சமூக-ஜனநாயக வாய்க்கால் கிடைக்காவிடில் சமூக-ஜனநாயகமல்லாத வாய்க்கால் ஒன்றில் உடனே அவை ஓடிச் செல்லும். புரட்சி இயக்கத்தில் நடைமுறைச் செயல் ஒவ்வொன்றும் படைக்குப் புதியதாய்த் திரட்டப்பட்டோ ருக்குத் தீர்மானகரமாகவும் தவிர்க்க முடியாத வழியிலும் சமூக-ஜனநாயக விஞ்ஞானத்தில் படிப்பினை கிடைக்கச் செய்

யும். ஏனெனில் இந்த விஞ்ஞானம் பல்வேறு வர்க்கங்களுடைய சக்திகளையும் போக்குகளையும் எதார்த்த வழியில் பிழையற்றவாறு மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் அமைந்தது. அதேபோதில் புரட்சி எனப்படுவதே பழைய மேற்கட்டுமானங்களின் தகர்வும், ஒவ்வொன்றும் தனக்குரிய வழியில் புதிய மேற்கட்டுமானத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ள முனையும் பல்வேறு வர்க்கங்களது சுயேச்சைச் செயற்பாடுமே அன்றி வேறல்ல. ஆனால் நமது புரட்சிகர விஞ்ஞானத்தை வெறும் ஏட்டுச் சூத்திரத்தின் நிலைக்குத் தாழ்ந்துவிடும்படி இழிவுபடுத்தாதீர்கள்; வளர்ச்சிப் போக்காய் அமைந்த போர்த்தந்திரம் என்பதும் வளர்ச்சிப் போக்காய் அமைந்த நிறுவன ஒழுங்கமைப்பு என்பதுமான கேடுகெட்ட சொல்லடுக்குகளாய், குழப்பத்துக்கும் திடசித்தமின்மையுக்கும் முன்முயற்சியில்லாமைக்கும் நியாயம் கற்பிக்க முயலும் சொல்லடுக்குகளாய் இந்த விஞ்ஞானத்தைக் கொச்சைப்படுத்தாதீர்கள். மிகப் பலவாறான கோஷ்டிகளும் குழுக்களும் மேற்கொள்ளக் கூடிய வெவ்வேறு வகைப்பட்ட முயற்சிகளுக்கும் அதிக அளவிலான வாய்ப்பு அளியுங்கள். நமது புத்திமதியை அன்னியிலும், அதைக் கருதாமலும், புரட்சிகர நிகழ்ச்சிகளது வீறுநடையின் தணியாத வேகங்கொண்ட அவசர நிலைமைகள் இக்கோஷ்டிகளையும் குழுக்களையும் சரியான பாதையில் செல்ல வைக்கும் என்பதை நினைவில் கொண்டிருங்கள். அரசியலில் பல சந்தர்ப்பங்களில் ஒருவர் பகைவனிடமிருந்து கற்றறிந்து கொள்ள வேண்டியிருக்கும் என்பது முதுமொழி. புரட்சிகரத் தருணங்களில் குறிப்பிடத்தக்கவாறு அறிவு புகட்டும்படியும் அவசர முறையிலும் பகைவன் நம்மைச் சரியான முடிவுகளை ஏற்கும்படி எப்பொழுதும் பலவந்தம் செய்கிறான்.

தொகுத்துக் கூறுவோமாயின், நாம் நூறு மடங்கு தீவிரமடைந்து வளரும் இயக்கத்தையும், வேலையின் புதிய வேகத்தையும், முன்னிலும் சுதந்திரமான சூழ்நிலையையும், முன்னிலும் விரிந்து பரந்த செயல் அரங்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். வேலைக்கு முற்றிலும் மாறான வீச்சு அளிக்கப்பட்டாக வேண்டும். பயிற்சி முறைகள் சமாதானக் கால போதனைக்கு ஏற்றதாயிருப்பதிலிருந்து மாற்றப்பட்டு இராணுவச் செயல்களுக்கு உகந்ததாக்கப்பட வேண்டும்.

இளம் போர் வீரர்கள் மேலும் துணிவாகவும் விரிவாகவும் விரைவாகவும் ஒன்றுவிடாமல் எல்லா வகையான நமது நிறுவனங்களின் அணிகளிலும் திரட்டப்பட்டாக வேண்டும். இதன் பொருட்டு நூற்றுக் கணக்கில் புதிய நிறுவனங்கள் கணமும் தாமதமின்றி அமைக்கப்பட்டாக வேண்டும். ஆம், நூற்றுக் கணக்கில் அமைக்கப்பட்டாக வேண்டும்; உயர்வு நவிற்சியாய்க் கூறப்படுவதல்ல இது. இவ்வளவு விரிவான நிறுவன ஒழுங்கமைப்பு வேலையில் இப்பொழுது இறங்க முடியாது, இதற்கு உரிய காலம் கடந்துவிட்டது என்பதாய் யாரும் சொல்ல வேண்டாம். ஒழுங்கமைப்பு செய்வதற்கு உரிய காலம் ஒருபோதும் கடந்ததாகிவிடாது. சட்டப்படி நமக்குக் கிடைத்து வரும் சுதந்திரத்தையும் சட்டத்தை மீறி நாம் பெறும் சுதந்திரத்தையும் எல்லா வகையான கட்சி நிறுவனங்களையும் பலப்படுத்துவதற்காகவும் அவற்றின் எண்ணிக்கையைப் பெருகச் செய்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புரட்சியின் போக்கு அல்லது விளைவு எப்படி இருப்பினும், எந்தவொரு சூழ்நிலையாலும் எவ்வளவு முன்னதாகவே தடைப்படுத்தப்படுவதாயினும், பாட்டாளி வர்க்கம் எந்த அளவுக்கு ஒழுங்கமைந்ததாய் இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அதன் மெய்யான ஆதாயங்கள் யாவும் உறுதியுற்று நம்பகமானதாக முடியும்.

இரண்டாவது காங்கிரசில் பெரும்பான்மையினரைச் சேர்ந்தோர் பூரணமாய் வரையறுத்து வெளியிட விரும்பிய ''நிறுவன ஒழுங்கமைப்பு செய்யுங்கள்!'' என்னும் கோஷம் இப்பொழுது உடனடியாகச் செயல்படுத்தப்பட்டாக வேண்டும். புதிய நிறுவனங்களை அமைப்பதில் துணிவான முன்முயற்சி காட்டத் தவறுவோமாயின், நாம் முன்னணிப் படையாய்ச் செயலாற்றும் எல்லா எண்ணங்களையும் ஆதாரமற்றவையாய்க் கைவிட வேண்டியதுதான். சாதிக்கப் பெற்ற எல்லைகளிலும் வடிவங்களிலும் மற்றும் கமிட்டிகள், கோஷ்டிகள், கூட்டங்கள், குழுக்கள் ஆகியவற்றின் வரம்புகளிலும் நாம் செயலற்று நின்றுவிடுவோமாயின், நமது ஆற்றலின்மையை நிரூபித்துக் கொண்டவர்களே ஆவோம். நமது உதவி இல்லாமலே, திட்டவட்டமான எந்த வேலைத்திட்டமோ குறிக்கோளோ இல்லாமலே, நிகழ்ச்சிகளது நிர்ப்பந்தத்தின் விளைவாகவே எங்கும் ஆயிரக் கணக்கில் தற்போது குழுக்கள்

உதித்தெழுகின்றன. இந்தக் குழுக்களில் சாத்தியமான அளவுக்கு அதிகமானவற்றுடன் நேரடித் தொடர்புகள் கொண்டு இத்தொடர்புகளைப் பலப்படுத்திச் செல்வதும், இக்குழுக்களுக்குத் துணை புரிவதும், தமது அறிவையும் அனுபவத்தையும் அவற்றுக்கு அளித்து உதவுவதும், தமது புரட்சிகர முன்முயற்சியைக் கொண்டு அவற்றை ஊக்குவிப்பதும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு உரிய பணியாதல் வேண்டும். இப்படிப்பட்ட குழுக்களில் சமூக-ஜனநாயகமல்லாதவை என்பதாய்ப் பறைசாற்றிக் கொள்பவற்றைத் தவிர்த்து ஏனையவை யாவும் நேரடியாய்க் கட்சியில் சேர்ந்து கொள்ளட்டும், அல்லது கட்சியுடன் தம்மை அணி சேர்த்துக் கொள்ளட்டும். பின்னது நடைபெறுகையில் நாம் அவற்றை நமது வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ, அவசியம் நம்முடன் நிறுவன உறவுகள் கொள்ள வேண்டுமென்றோ கோரலாகாது. கண்டன முழக்க மனப்பான்மையும் சர்வதேசப் புரட்சிகர சமூக-ஜனநாயக இலட்சியத்தின்பால் அனுதாபமும் போதுமானவையாகும். சமூக-ஜனநாயகவாதிகள் முனைப்புடன் இவற்றினிடையே வேலை செய்யும் பட்சத்தில் நிகழ்ச்சிகளது நிர்ப்பந்தத்தின் விளைவினால் அனுதாபிகளாகிய இந்தக் குழுவினர் முதலில் சமூக-ஜனநாயகத் தொழிலாளி வர்க்கக் கட்சியின் ஜனநாயகத் துணையாளர்களாகவும், பிற்பாடு திட நம்பிக்கை கொண்ட உறுப்பினர்களாகவும் மாற்றப்படுவர்.

பெருந் திரள்களான மக்கள் இருக்கிறார்கள், ஆனால் நமக்கு மக்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த முரண்பாடான நிலை சமூக-ஜனநாயகத்தின் நிறுவன வாழ்வுக்கும் நிறுவனத் தேவைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை நீண்ட காலமாய்ப் பிரதிபலித்து வந்துள்ளது. என்றையும் விட இன்று இந்த முரண்பாடு மிகவும் பட்டவர்த்தனமாகியுள்ளது. புதிய சக்திகளுக்கான உணர்ச்சி மிக்க வேண்டுகோள்களையும், நிறுவனங்களில் ஆட்களுக்குப் பற்றாக்குறையாகிவிட்டதென்ற முறையீடுகளையும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அடிக்கடி கேட்கிறோம். அதேபோதில் சேவையாற்ற எல்லா இடங்களிலிருந்தும் எண்ணற்றோர் முன்வருகிறார்கள்; குறிப்பாய்த் தொழிலாளி வர்க்கத்தினிடையே இளம் சக்திகள் வளர்ந்து பெருகக் காண்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் ஆட்களுக்குப் பற்றாக்குறை என்பதாய் முறை

யிடும் நடைமுறை ஒழுங்கமைப்பாளர், 1793ல் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் உச்ச கட்டத்தில் பிரான்சில் முழு மனிதர்கள் இல்லை, குள்ளர்கள்தான் இருக்கிருர்கள் என்று எழுதிய ரொலான் அம்மையார் இலக்காகிய அதே மன மயக் கத்தால் பீடிக்கப்பட்டவரே ஆவார். இவ்விதம் பேசுவோர் சிறு விவரங்களால் மூழ்க்கடிக்கப்பட்டு பேருருவைப் பார்க் கத் தவறுவோரே ஆவர். நிகழ்ச்சிகளால் தாக்குண்டு பார் வை இழந்துவிடுகிருேம் என்பதை இவர்கள் ஒத்துக் கொள் கிருர்கள். மனத்திலும் செயலிலும் நிகழ்ச்சிகளைக் கண் காணிப்பது புரட்சியாளர்களாகிய இவர்கள் அல்ல; நிகழ்ச்சி கள் இவர்களைக் கண்காணிக்கின்றன, திக்குமுக்காடி விழும் படிச் செய்கின்றன. இத்தகைய ஒழுங்கமைப்பாளர்கள் ஓய்வெடுத்து ஒதுங்கிவிடுவதுதான் நல்லது. இளம் சக்திகளுக்கு இவர்கள் இடமளித்து விலகிக் கொள்ள வேண்டும். இளைஞர் கள் அனுபவமில்லாத குறைபாட்டை ஆர்வத் துடிப்பால் அடிக்கடி சரிசெய்து கொண்டுவிடுகின்றனர்.

மக்களுக்குப் பஞ்சமில்லை, புரட்சிகர ருஷ்யாவில் இன்று போல என்றுமே இத்தனை பெருந் திரளானேர் இருந்ததில்லை. புரட்சிகர வர்க்கம் எதுவும் இன்று ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தைப் போல், தற்காலிகக் கூட்டாளிகளையும் உணர்வு பூர்வமான நண்பர்களையும் தம்மை அறியாமலே ஆதரவாளர் களாய் இருப்போரையும் இவ்வளவு ஏராளமாய்ப் பெற் றிருந்ததில்லை. பெரும் பெரும் திரள்களான மக்கள் இருக் கின்றனர். நாம் செய்ய வேண்டியது எல்லாம், வால்பிடித்துப் பின்செல்லும் கருத்துக்களிலிருந்தும் புத்திமதிகளிலிருந்தும் விடுபட்டு வெளிவந்து, முன்முயற்சிக்கும் பிரயத்தனத்துக் கும் மற்றும் ''திட்டங்களுக்கும்'' ''ஏற்பாடுகளுக்கும்'' முழு வீச்சு அளித்து, இவ்விதம் மாபெரும் புரட்சிகர வர்க்கத்தின் சிறந்த பிரதிநிதிகளாய்ச் செயல்படத் தகுதியுடையவர்களே என்று காட்டுவதுதான். இதைச் செய்வோமாயின் ருஷ்யா வின் பாட்டாளி வர்க்கம் மாபெரும் ருஷ்யப் புரட்சி அனைத் தையும், அது இப்புரட்சியைத் துவக்கி வைத்த அதே வீரதீரத்துடன் நடத்தி முடிக்கும்.

விபெரியோத், இதழ் 9,
1905 மார்ச் 8 (பிப்ரவரி 23)

நூல் திரட்டு,
தொகுதி 9,
பக்கங்கள் 294-306

# அரசியலை போதனை முறையுடன் குழப்புவது குறித்து

முதலாளிகளுடனோ அரசாங்கத்துடனோ நடைபெறும் தனிப்பட்ட போர்களில் தொழிலாளர்கள் பின்னடைய நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சோர்வு மனப்பான்மைக்கு இடந் தருவோரும், வெகுஜனங்களிடத்தே நமக்குப் போது மான செல்வாக்கு இருக்கவில்லை என்று கூறித் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மாபெரும் உன்னத நோக்கங்களைப் பற்றிய எல்லாப் பேச்சுகளையுமே மிக அலட்சியமாய் ஒதுக்கி விடுவோருமாகிய சமூக-ஜனநாயகவாதிகள் கணிச அளவில் நம்மிடையே இருக்கவே செய்கிறார்கள். "இத்தகைய நோக் கங்களுக்காகப் பாடுபட நாம் யார், நமக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று இவர்கள் கேட்கிறார்கள். வெகுஜனங்க ளுடைய மனப்பாங்கு என்ன என்பதுகூட உண்மையில் நாம் தெரியாதோராய் இருக்கும்போது, அவர்களுடன் ஒன்றுகலக்க முடியாதோராயும் தொழிலாளர் வெகுஜனங்களைத் தட்டி யெழுப்பி ஊக்குவிக்க இயலாதோராயும் இருக்கும்போது புரட்சியின் முன்னணிப் படையாய் சமூக-ஜனநாயகத்துக் குள்ள பாத்திரம் என்பதாய்ப் பேசுவது அர்த்தமற்றது என் கின்றனர்! கடந்த மேதினத்தில் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு ஏற்பட்ட தோல்விகள் இந்த மனப்பான்மையை வெகுவாய்த் தீவிரப்படுத்தியிருக்கின்றன. இயற்கையாகவே மென்ஷிவிக்கு கள் அல்லது புதிய இஸ்க்ராவாதிகள் இந்தச் சந்தர்ப்பத் தைப் பற்றிக் கொண்டு, "வெகுஜனங்களிடம் செல்வோம்!" என்கிற விசேஷக் கோஷத்தைத் திரும்பவும் கிளப்பியுள் ளனர்—புரட்சிகர இடைக்கால அரசாங்கம் குறித்தும்

புரட்சிகர-ஜனநாயகச் சர்வாதிகாரம் குறித்தும் பிறவும் குறித்தும் நினைக்கவும் பேசவும் செய்தோர்மீது வஞ்சம் தீர்ப்பது போலவும், அவர்களுக்குப் பதிலளிப்பது போலவும் இக்கோஷத்தை மீண்டும் கிளப்பியுள்ளனர்.

இந்தச் சோர்வு மனப்பான்மையிலும், புதிய இஸ்க்ராவின் அவசரக் கட்டுரையாளர்கள் இதிலிருந்து வந்தடையும் முடிவுகளிலும் சமூக-ஜனநாயக இயக்கத்துக்குப் பெருங் கேடு விளைவிக்கக் கூடிய மிகவும் அபாயகரமான ஓர் இயல்பு இருப்பதை ஒத்துக் கொள்ளவே வேண்டும். உயிர் சக்தியும் துடிப்புமிக்க ஒவ்வொரு கட்சிக்கும் சுய-விமர்சனம் அத்தியாவசியம் என்பது மெய்தான். எல்லாம் நல்லபடியாகவே இருப்பதாய்க் கொள்ளும் அசட்டு மனநிறைவைக் காட்டிலும் அருவருக்கத்தக்கது எதுவும் இல்லை. வெகுஜனங்களிடம் நமக்குள்ள செல்வாக்கையும், கண்டிப்பான நமது மார்க்சியப் பிரசாரத்தையும் கிளர்ச்சியையும், தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துடன் நமக்குள்ள மேன் மேலும் நெருக்கமான இணைப்பையும் இன்ன பிறவற்றையும் ஆழமும் விரிவுமுடையதாக்குதல், விரிவும் ஆழமுமுடைய தாக்குதல் இடையறுத அவசர அவசியத் தேவை என்பதை வலியுறுத்துவதைக் காட்டிலும் அத்தியாவசியமானது எதுவும் இல்லை. இருப்பினும், இவ்வாறு வலியுறுத்துவது எல்லா நேரங்களிலும் எல்லா நிலைமைகளிலும் சூழல்களிலும் அத்தியாவசியமானது என்கிற காரணத்தால், இதை ஒரு விசேஷக் கோஷமாய் மாற்றிக் கொண்டுவிடக் கூடாது, இதன் அடிப்படையில் சமூக-ஜனநாயகத்தில் ஒரு தனிப் போக்கை உருவாக்கும் முயற்சிகளுக்கு இது ஒரு நியாயமாகிவிட முடியாது. இங்கு ஓர் எல்லைக் கோடு இருக்கிறது. மறுக்க முடியாத நியாயமான இந்த வற்புறுத்தல், இவ்வரம்பு மீறப்படுகையில், இயக்கத்தின் பணிகளும் வீச்சும் குறுகலாக்கப்படுவதாய், உடனடியான ஜீவாதாரமான, தலையாய அரசியல் பணிகள் குறித்து வறட்டுக் கோட்பாட்டு நெறியில் கண்களை மூடிக் கொள்வதாய் மாறிவிடுகிறது.

வெகுஜனங்களிடத்தே நமது வேலையையும் நமக்குள்ள செல்வாக்கையும் தீவிரமாக்குவதும் விரிபடுத்துவதும் எப்பொழுதுமே நமது கடமையாகும். இதைச் செய்யாத ஒரு சமூக-ஜனநாயகவாதி சமூக-ஜனநாயகவாதி அல்ல. இடை-

யருதும் முறையாகவும் இந்த நோக்கத்துக்காகப் பாடுபடாத எந்த நிறுவனத்தையும் கோஷ்டியையும் குழுவையும் சமூக-ஜனநாயகத் தன்மையதாய்க் கருத முடியாது. இந்த அவசர அவசியப் பணியிலிருந்து எந்த அரசியல் புயல் காற்றுகள் காரணமாகவோ, இன்னுங்கூட முக்கியமாய் எந்த அரசியல் காட்சி மாற்றங்கள் காரணமாகவோ நாம் திசை திருப்பப் படுவதற்கு இடந் தராமல், தொழிலாளி வர்க்கம் அனைத்தை யும் கூடுமான அளவுக்கு சமூக-ஜனநாயக உணர்வு நிலைக்கு உயர்த்தும் மார்க்சியப் பணியை நாம் பிறழாமல் எந்நேர மும் செய்து வருகிறோம் என்பதில்தான் பாட்டாளி வர்க்கத் தின் தனியொரு சுயேச்சைக் கட்சியாய் நாம் கண்டிப்பான முறையில் பிரிந்திருப்பதன் நோக்கமே பெருமளவுக்கு அடங்கி யிருக்கிறது. இந்த மார்க்சியப் பணி செய்யப்படாவிடில் அரசியல் செயற்பாடு தவிர்க்க முடியாதவாறு விளையாட் டாய்ச் சீரழிந்துவிடும். ஏனென்றால் அரசியல் செயற்பாடு குறிப்பிட்ட வர்க்கத்தின் வெகுஜனங்களை ஊக்குவித்து அவர் களுடைய நாட்டத்துக்குரியதாகி நிகழ்ச்சிகளில் முனைப்புடன் முன்நின்று பங்கு கொள்ள அவர்களை அணி திரளச் செய்யும் போது மட்டும்தான், அந்த அளவுக்கேதான் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்தச் செயற்பாடு மெய்யான முக்கியத்துவ முடையதாகிறது. இந்தச் செயற்பாடு நாம் கூறியது போல எப்பொழுதும் அவசியமானது. ஒவ்வொரு தோல்விக்கும் பிறகு மீண்டும் நாம் இதை நினைவுக்குக் கொண்டுவர வேண் டும், வலியுறுத்த வேண்டும். ஏனெனில் இந்தச் செயற்பாட் டில் ஏற்படும் பலவீனம் எப்பொழுதும் பாட்டாளி வர்க்கத் தின் தோல்விக்கான காரணங்களில் ஒன்றாகும். இதே போல ஒவ்வொரு வெற்றிக்கும் பிறகு இதை நாம் எப்பொழுதும் நினை வுக்குக் கொண்டுவந்து இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும். இல்லையேல், வெற்றியானது வெறும் வெளித் தோற்றமாய் மட்டும் அமைந்துவிடும்; வெற்றியின் பலன்கள் உறுதியாய் நிலை பெற மாட்டா; நமது இறுதி இலட்சியத்துக் கான மாபெரும் போராட்டத்தில் இந்த வெற்றியின் முக் கியத்துவம் சொற்பமானதாகிவிடும், ஏன் பாதகமானதாய்க் கூட ஆகிவிடும் (குறிப்பாய் அரைகுறையான வெற்றி நமது விழிப்புணர்ச்சியைத் தளரச் செய்து, நம்பகமல்லாத கூட் டாளிகள் மீதான நமது அவநம்பிக்கையை உறங்க வைத்து,

பகைவன் மீது நாம் மேலும் மும்முரமாய்த் திரும்பவும் புதிய தாக்குதல் தொடுப்பதற்குரிய தக்க தருணத்தை நாம் கை நழுவவிடும்படிச் செய்யுமாயின் இவ்வெற்றி மிகவும் பாதக மானதாகிவிடும்).

ஆனால் வெகுஜனங்களிடம் நமக்குள்ள செல்வாக்கைத் தீவிரமாக்குவதும் விரிவுபடுத்துவதும் ஒவ்வொரு தோல்விக் கும் பிறகு மட்டுமல்லாது, ஒவ்வொரு வெற்றிக்கும் பிறகும், புரட்சியின் கடுங் கொந்தளிப்புக்குரிய காலங்களில் மட்டுமல் லாது, அரசியல் அமைதிக்குரிய காலங்களிலும் அவசியம் என் பதால், வாய்வீச்சின் இழி நிலைக்குத் தாழ்வுற்று முன்னேறிய, மெய்யாகவே புரட்சிகரமான ஒரேயொரு வர்க்கத்தின் நோக்கங்களை இழிவுபடுத்த நாம் விரும்பினால் ஒழிய, இந்தச் செயற்பாட்டின் வலியுறுத்தலை ஒரு விசேஷக் கோஷமாக மாற்றவோ, அதன் அடிப்படையில் ஒரு விசேஷப் போக்கை உருவாக்கவோ முற்படலாகாது. சமூக-ஜனநாயகக் கட்சியின் அரசியல் செயற்பாட்டில் கல்வியறிவுப் போதனை முறை அம்சம் ஒன்று இருக்கிறது, எப்பொழுதும் இருக்கவேசெய்யும். கூலி உழைப்புத் தொழிலாளர்களான முழு வர்க்கத்தை யும் எல்லா ஒடுக்குமுறையிலிருந்தும் மனித குலத்தை விடு விப்பதற்காகப் போராடும் வீரர்களது படைவரிசையாகும் படி போதம் பெறச் செய்தாக வேண்டும். இந்த வர்க்கத்தின் மேலும் மேலும் கூடுதலான பகுதிகளுக்கு நாம் இடையறாது போதனை செய்தாக வேண்டும். இந்த வர்க்கத்தின் மிகவும் பிற்பட்ட, மிகவும் வளர்ச்சி குன்றிய உறுப்பினர்களை, நமது விஞ்ஞானத்தாலும் வாழ்க்கையின் விஞ்ஞானத்தாலும் மிகக் குறைந்த அளவுக்கே பாதிக்கப்பட்டுள்ளவர்களான இவர் களை அணுகி, இவர்களுடன் பேசவும் இவர்களுக்கு மேலும் நெருக்கமானோராகி இவர்களை இடையறாதும் பொறுமையுட னும் சமூக-ஜனநாயக உணர்வு நிலைக்கு உயர்த்தவும் கூடி யோராவதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நமது போதனையை உயிரற்ற வறட்டுச் சூத்திரமாக்கிவிடாதபடி, அதாவது புத்தகங்களிலிருந்து மட்டுமின்றி, பாட்டாளி வர்க் கத்தின் இந்தப் பிற்பட்ட, வளர்ச்சி குன்றிய பகுதிகள் வாழ் வுக்காக நடத்தும் அன்றாடப் போராட்டத்தில் பங்கு கொள் வதன் மூலமாகவும் போதனை பெறும்படிச் செய்ய நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த அன்றாடச் செயற்பாட்டில்

கல்வியறிவு போதனு முறையின் அம்சம் ஓரளவு இருக்கிற தென்பதை மீண்டும் எடுத்துரைக்கிறேம். இந்தச் செயற் பாட்டைப் பார்க்கத் தவறிவிடும் சமூக-ஜனநாயகவாதி சமூக-ஜனநாயகவாதியாய் இருக்க முடியாது. இது உண்மையே. ஆனல் அரசியல் பணிகளை அறிவு போதனுப் பணிகளாய்க் குறுக்கிவிட விரும்பும் சமூக-ஜனநாயகவாதியும், காரணம் வேறென்ருய் இருப்பினும், சமூக-ஜனநாயகவாதியாய் இருக்க முடியாது என்பதை இந்நாட்களில் நம்மில் சிலர் அடிக்கடி மறந்து விடுகின்றனர். இந்தக் ''கல்வியறிவு போதனு முறையை'' ஒரு விசேஷக் கோஷமாய் மாற்றவும், இதை ''அரசியலுக்கு'' எதிராய் முன்வைக்கவும், இதன் அடிப்படையில் ஒரு விசேஷப் போக்கை உருவாக்கவும், இந்தக் கோஷத்தைக் கொண்டு சமூக-ஜனநாயக ''அரசியல்வாதிகளை'' எதிர்த்து வெகுஜனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கவும் நினைப்பவர் எவராயினும் உடனடியாகவும் தவிர்க்க முடியாதவாறும் அவர் வாய்வீச்சின் இழிநிலைக்குத் தாழ்வுற்று விடுகிருர்.

ஒப்பீடுகள் விரும்பத்தக்கவை அல்ல என்பது முதுமொழி. ஒவ்வொரு ஒப்பீட்டிலும், ஒப்பிடப்படும் பொருள்கள் அல்லது கருத்துக்களின் ஒரேயொரு அல்லது ஒருசில அம்சங்கள் சம்பந்தமாய் மட்டும் நிலவும் ஒற்றுமை சுட்டிக்காட்டப்படுகிறது; ஏனைய அம்சங்கள் தற்காலிகமாகவும் நிபந்தனையின் பேரிலும் பிரித்து வைக்கப்படுகின்றன. எல்லோருக்கும் தெரிந்ததே ஆயினும் பல சந்தர்ப்பங்களிலும் கவனியாது விடப்படும் இந்த உண்மையை வாசர்களுக்கு நினைவுபடுத்தி விட்டு, சமூக-ஜனநாயகக் கட்சியை ஆரம்ப நிலை, உயர்நிலை, கல்லூரி நிலை ஆகிய யாவும் ஒருங்கே தன்னுள் அடங்கிய ஒரு பெரிய பள்ளியுடன் ஒப்பிட முற்பட அனுமதியுங்கள். அரிச்சுவடிப் பாடம் பயிற்றுவித்தல், ஆரம்ப அறிவு போதனை, சுயேச்சையாய்த் தானே சிந்திப்பதற்கான பயிற்சி ஆகிய இவை எந்த நிலைமையிலும் ஒருபோதும் இந்தப் பெரிய பள்ளியில் கவனியாது விடப்படமாட்டா. ஆனல் அரிச்சுவடிப் பாடம் கற்றுத் தருவதன் அவசியத்தைக் காரணமாய்க் காட்டி மேற்கல்வி போதனை சம்பந்தமான பிரச்சினைகளை ஒதுக்க யாரும் முயலுவாராயின், இந்த மேற்கல்வியால் கிட்டும் பலன்கள் (அரிச்சுவடி படிப்போரைவிட மிகக் குறைவான

பகுதியோருக்கே இக்கல்வி எட்டிக் கூடியது) நிலையற்றன வாயும் சந்தேகத்துக்குரியனவாயும் ''குறுகலாகவும்'' இருப் பதற்கு எதிராய், ஆரம்பப் பள்ளிப் படிப்பின் நிலையான, ஆழ்ந்த, விரிவான, திண்மை மிக்க பலன்களைச் சுட்டிக்காட்டி மேற்கல்வியை ஒதுக்குவதற்கு யாரும் முயலுவாராயின், அவர் தமது படுமோசமான கிட்டப் பார்வையை வெளிப் படுத்திக் கொள்கிறவரே ஆவார். பெரிய பள்ளியின் நோக்கம் முழுதுமே பாழ்படுவதற்கு அவர் உதவுகிறவருங்கூட ஆகிவிடுவார். எப்படியெனில் மேற்கல்வியை உதாசீனம் செய் வதன்மூலம் அவர் அரிச்சுவடிப் பாடம் மட்டுமே கற்றுக் கொண்டோரை எத்தர்களும் வாய்வீச்சுக்காரர்களும் பிற் போக்குவாதிகளும் எளிதில் ஏய்ப்பதற்கே வகை செய்கிறார். அல்லது நாம் கட்சியினை ஒரு சேனையுடன் ஒப்பிடலாம். சமா தான காலத்திலும் சரி, யுத்த காலத்திலும் சரி நாம் படைக் குத் திரட்டப்பட்டோருக்கான பயிற்சியைக் கவனியாது விட முடியாது; துப்பாக்கிப் பட்டாளப் பயிற்சியையோ, வெகு ஜனங்களிடையே கூடுமான அளவுக்கு ஆழமாகவும் பரவலாக வும் இராணுவ விஞ்ஞானத்தின் அடிப்படைக் கூறுகளைத் தெரியப்படுத்துவதையோ உதாசீனம் செய்ய முடியாது. ஆனால் படை முஸ்தீபுகளையோ மெய்யானா போர்களையோ மேற்பார்வையிட்டு நடத்துவோர்....*

*1905 ஜூனில் எழுதப்பட்டது*

*முதன் முதலாய் 1926ல்*
லெனின் மஞ்சரி 5ல்
*வெளியிடப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 10,*
*பக்கங்கள் 355-358*

---

* கையெழுத்துப் பிரதி இத்துடன் நின்றுவிடுகிறது.— பதிப்பாசிரியர்.

# மாஸ்கோ எழுச்சியின் படிப்பினைகள்

1905 டிசம்பரில் மாஸ்கோ என்னும் புத்தகம் (மாஸ்கோ, 1906) இதைக் காட்டிலும் தக்க தருணத்தில் வெளிவந்திருக்க முடியாது. டிசம்பர் எழுச்சியின்[11] அனுபவத்தைக் கிரகித்துக் கொள்வது தொழிலாளர் கட்சிக்குரிய அவசர அவசியப் பணியாகும். துரதிர்ஷ்டவசமாய் ஒரு பானைத் தேனில் ஒரு கறண்டி கீலைக் கலந்து கெடுப்பது போல இருக்கிறது இப் புத்தகம்: அரைகுறையாய் இருப்பினும் மிகவும் சுவையான விவரப் பொருளும், அதோடு நம்ப முடியாத அளவுக்கு அலங்கோலமான, நம்ப முடியாத அளவுக்குக் கொச்சையான முடிவுகளும் அடங்கியது. இம்முடிவுகள் குறித்து நாம் வேறொரு சந்தர்ப்பத்தில் பரிசீலிப்போம்; தற்போது அவசரமான இன்றைய அரசியல் பிரச்சினையாகிய மாஸ்கோ எழுச்சியின் படிப்பினைகளில் கவனம் செலுத்துவோம்.

மாஸ்கோவில் டிசம்பர் இயக்கத்தின் பிரதான வடிவங்கள் சமாதான பூர்வமான வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும்தான். இந்தப் போராட்ட வடிவங்களில் மட்டும்தான் மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் முனைப்புடன் பங்கெடுத்துக் கொண்டனர். ஆயினும் மாஸ்கோவில் நடைபெற்ற டிசம்பர் நிகழ்ச்சிகள் போராட்டத்தின் சுயேச்சையான, மிகவும் தலைமையான வடிவமென்ற முறையில் பொது வேலைநிறுத்தம் காலங் கடந்ததாகிவிட்டதையும், தடுத்திட முடியாத ஆவேச சக்தியுடன் இயக்கமானது இந்தக் குறுகிய வரம்புகளை உடைத்துக் கொண்டு மிக உயர்ந்த போராட்ட

வடிவமாகிய எழுச்சியை உதித்தெழச் செய்வதையும் கண் கூடாய்ப் புலப்படச் செய்தன.

வேலைநிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தபோது எல் லாப் புரட்சிகரக் கட்சிகளும் மாஸ்கோவின் எல்லாச் சங்கங் களும் தவிர்க்க முடியாதபடி இது ஓர் எழுச்சியாய் வளரவே செய்யுமென்பதை ஏற்றுக் கொண்டன, உணர்ந்தும் கொண் டன. டிசம்பர் 6ல் தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத் ''வேலைநிறுத்தத்தை ஆயுதமேந்திய எழுச்சியாய் மாற்றப் பாடுபட வேண்டும்'' என்று தீர்மானித்தது. ஆனால் உண்மை என்னவென்றால் இந்நிறுவனங்களில் எவையும் இதற்குத் தயா ராய் இருக்கவில்லை. போர்க் குழுக்களின் கூட்டுக் கவுன்சில் கூட[12] எழுச்சியை வருங்காலத்தில் தொலைவிலுள்ள ஒன் றாய்க் கருதியே அது குறித்துப் பேசிற்று (டிசம்பர் 9ல்!). நடை பெற்ற தெருப் போராட்டத்தில் இக்கவுன்சிலுக்கு எந்தப் பங்கும் இல்லை, அது மேற்பார்வையிடவும் இல்லை. இயக்கத் தின் வளர்ச்சியுடனும் வீச்சுடனும் நிறுவனங்கள் சேர்ந்து நடைபோடத் தவறிவிட்டன.

அக்டோபருக்குப் பிற்பாடு ஏற்பட்ட எதார்த்த நிலை மைகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே பிரதானமாய் வேலைநிறுத்தம் ஓர் எழுச்சியாய் வளர்ந்து சென்றது.[13] பொது வேலைநிறுத்தம் இனி எதிர்பாராத ஒன்றாய் அரசாங் கத்தைத் திணற வைப்பதாய் இருக்க முடியாது. அரசாங்கம் ஏற்கனவே எதிர்ப்புரட்சி சக்திகளை ஒழுங்கமைத்துத் தயார் செய்துவிட்டது, இச்சக்திகள் இராணுவ நடவடிக்கை களுக்குத் தயாராயிருந்தன. அக்டோபருக்குப் பிற்பாடு ருஷ்யப் புரட்சியின் போக்கு அனைத்தும், டிசம்பர் நாட்களில் மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வரிசையும் மார்க் சின் ஆழ்ந்த வரையறுப்புகளில் ஒன்றை எடுப்பான முறையில் ஊர்ஜிதம் செய்தன: புரட்சியானது வலுவான ஒன்றுபட்ட எதிர்ப்புரட்சியைத் தோன்றச் செய்துதான் முன்னேறிச் செல்கிறது, அதாவது அது பகைவனை மேலும்மேலும் கடுமை யான பாதுகாப்பு முறைகளைக் கையாளுமாறு பலவந்தப் படுத்துகிறது, இவ்விதம் அது தாக்குதலுக்காக மேலும் மேலும் சக்தி வாய்ந்த வழிகளை வகுத்துக் கொள்கிறது.[14]

டிசம்பர் 7—8: சமாதான பூர்வமான வேலைநிறுத்தம், சமாதான பூர்வமான வெகுஜன ஆர்ப்பாட்டங்கள். 8ஆம்

தேதி மாலை: அக்வேரியப் பூங்கா முற்றுகையிடப்பட்டது. 9ஆம் தேதி பகல்: ஸ்திரஸ்த்னுயாச் சதுக்கத்தில் கூட்டத்தினர் குதிரைப் படையாட்களால் தாக்கப்படுகின்றனர். மாலை: ஃபீட்லர் கட்டிடம் தாக்கப்பட்டு நாசம் செய்யப்படுகிறது. ஆத்திரம் அதிகரிக்கிறது. ஒழுங்கமைக்கப்பட்டாத தெருக் கூட்டத்தினர் முற்றிலும் தன்முனைப்போடும் தயங்கியவாறும் தெருத் தடையரண்களை அமைக்கின்றனர்.

10ஆம் தேதி: தெருக்களில் தடையரண்கள் மீதும் கூட்டங்கள்மீதும் பீரங்கிப் பிரயோகம் நடத்தப்படுகிறது. தடையரண்கள் மேலும் திட்டமிடப்பட்டு அமைக்கப்படுகின்றன, முன்போல் தனிப்பட்ட சில இடங்களில் இல்லாமல் மெய்யாகவே பெருந் திரளான அளவில் அமைக்கப்படுகின்றன. நகர மக்கள் எல்லோரும் தெருக்களில் திரண்டுவிடுகிருர்கள். நகரின் பிரதான மையங்கள் யாவற்றிலும் வலைப்பின்னல் போல் தடையரண்கள் எழுந்துவிடுகின்றன. தொடர்ந்து சில நாட்களுக்குத் தொண்டர்களின் போர்க் குழுக்கள் துருப்புக்களை எதிர்த்து விடாப்பிடியான கொரில்லாப் போர் நடத்துகின்றன, இது துருப்புக்களைச் சோர்வுற்றுத் தளரச் செய்கிறது, கூடுதலாய்ப் படைகள் அனுப்பும்படி துபாசவை மன்றுடும்படிக் கட்டாயப்படுத்துகிறது. டிசம்பர் 15ல்தான் அரசாங்கப் படைகளின் மேல்நிலை முழுமையாய் நிலைநாட்டப்பட முடிந்தது. டிசம்பர் 17ல் செமியோனவ்ஸ்கி படையாட்கள்[15] எழுச்சியின் கடைசி அரணுகிய பிரெஸ்னியா வட்டாரத்தை நசுக்கின்றனர்.

வேலைநிறுத்தத்திலிருந்தும் ஆர்ப்பாட்டங்களிலிருந்தும் தனிப்பட்ட தடையரண்களுக்கு நிலைமை மாறிற்று. தனிப்பட்ட தடையரண்களிலிருந்து பெரும் அளவில் தடையரண்கள் எழுப்பப்படுவதற்கும் துருப்புக்களுக்கு எதிரான தெருப் போராட்டத்துக்கும் மாற்றம் ஏற்பட்டது. நிறுவனங்களின் பங்கு இல்லாமலே வெகுஜனப் பாட்டாளி வர்க்கப் போராட்டம் வேலைநிறுத்த நிலையிலிருந்து எழுச்சியின் நிலைக்கு வளர்ச்சியுற்றது. ருஷ்யப் புரட்சி 1905 டிசம்பரில் சாதித்த மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புடைத்த ஆதாயமாகும் இது. முந்தைய எல்லா ஆதாயங்களையும் போலவே இதுவும் பிரம்மாண்டத் தியாகங்கள் புரியப்பட்டுத்தான் பெறப்பட்டன. அரசியல் பொது வேலை நிறுத்தத்திலிருந்து மேலும்

உயர்வான ஒரு கட்டத்துக்கு இயக்கம் உயர்த்தப்பட்டது. பிற்போக்கினை இது அதன் எதிர்ப்பில் இறுதி வரம்புக்குச் செல்லும்படிக் கட்டாயப்படுத்தி, இவ்விதம் புரட்சியும் தாக்குதல் வழிகளைக் கையாளுவதில் இறுதி வரம்புக்குச் செல்ல வேண்டிவரும் தருணத்தை மிக அருகாமையில் வரச் செய்தது. தடையரண்கள்மீதும் கட்டிடங்கள்மீதும் மக்கள் கூட்டங்கள்மீதும் பீரங்கிப் பிரயோகம் செய்வதைக் காட்டிலும் பிற்போக்கினால் அதிகம் செல்ல முடியாது. ஆனால் புரட்சியானது மாஸ்கோ போர்க் குழுவினர்களைக் காட்டிலும் நெடுந்தொலைவு போக முடியும், விரிவிலும் ஆழத்திலும் அது மிக நெடுந் தொலைவு போக முடியும். டிசம்பர் முதலாய்ப் புரட்சி இதே போல நெடுந் தொலைவு முன்னேறியிருக்கிறது. புரட்சிகர நெருக்கடிக்கான அடித்தளம் அளவிடற்கரிய வாறு விரிவடைந்திருக்கிறது—இப்பொழுது கத்தி மேலும் கூர்மையாய்த் தீட்டப்பட வேண்டும்.

போராட்டத்தின் எதார்த்த நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றத்தையும் வேலைநிறுத்தத்திலிருந்து எழுச்சியாய் மாறிச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் பாட்டாளி வர்க்கம் அதன் தலைவர்களைக் காட்டிலும் சீக்கிரமாய்க் கண்டு கொண்டுவிட்டது. எப்பொழுதும் போலவே நடைமுறை யானது தத்துவத்தை முந்திக் கொண்டு நடைபோட்டது. சமாதான பூர்வமான வேலைநிறுத்தத்துடனும் ஆர்ப்பாட்டங் களுடனும் தொழிலாளர்கள் திருப்தியடையும் நிலை உடனடி யாய் நின்றுவிட்டது. ''அடுத்தபடி செய்ய வேண்டியது என்ன?'' என்று அவர்கள் கேட்டனர். மேலும் உறுதியான செயல் வேண்டுமெனக் கோரினர். நகரின் மைய இடங்களில் தடையரண்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு வந்தன, ஆனால் தடையரண்களை அமைக்க வேண்டுமென்ற அறிவிப்புகள் அளவு கடந்த தாமதத்துக்குப் பிற்பாடே வட்டாரங்களுக்கு வந்து சேர்ந்தன. பெருந் தொகைகளில் தொழிலாளர்கள் வேலை யில் இறங்கினர். ஆனால் இதுவுங்கூட அவர்களைத் திருப்திப் படுத்தவில்லை. ''அடுத்து செய்ய வேண்டியது என்ன?'' என்று அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினர்—முனைப்பான நடவடிக்கைகள் வேண்டுமெனக் கோரினர். மிகப் பெருவாரி யான துருப்புக்கள் போரில் முனைப்பான பங்கு பெறுதபடி அவ்வளவு அசட்டுத் தனமான முறையில் தன் துருப்புக்களை

அணி வகுக்கச் செய்த சேனாதிபதியைப் போன்றவர்களாகவே இருந்தோம் டிசம்பரில் சமூக-ஜனநாயகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களாகிய நாம். தீர்மானகரமான வெகுஜனச் செயலுக்கான உத்தரவுகள் வேண்டுமெனப் பெருந் திரளான தொழிலாளர்கள் கோரினர், ஆனால் இவை அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஆகவே, வேலைநிறுத்தம் அகாலமானது, துவக்கப்பட்டிருக்கக் கூடாது, "அவர்கள் ஆயுதமேந்திப் போரில் இறங்கியிருக்கக் கூடாது" என்ற பிளெஹானவின் கருத்தைக் காட்டிலும்—எல்லாச் சந்தர்ப்பவாதிகளும் உடனே பற்றிக் கொண்டுவிட்ட இக்கருத்தைக் காட்டிலும்—கிட்டப் பார்வை கொண்டது எதுவும் இருக்க முடியாது. மாறாக நாம் மேலும் தீர்மானமாகவும் மும்முரமாகவும் ஆக்கிரமிப்பாகவும் ஆயுதமேந்திப் போரில் இறங்கியிருக்க வேண்டும். சமாதான பூர்வமான வேலைநிறுத்தத்துடன் நின்றுவிடுவது சாத்தியமல்ல, அச்சமில்லாத, விடாப்பிடியான ஆயுதமேந்திய போராட்டம் அவசியம் என்பதை நாம் வெகுஜனங்களுக்கு விளக்கிக் கூறியிருக்க வேண்டும். இப்பொழுது முடிவாக நாம் அரசியல் வேலைநிறுத்தங்கள் போதாவென்பதைப் பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் ஒத்துக் கொள்ள வேண்டும். ஆயுதமேந்திய எழுச்சிக்கு ஆதரவாய் வெகுஜனங்களிடையே விரிவான அளவில் கிளர்ச்சி நடத்த வேண்டும். "பூர்வாங்கக் கட்டங்கள்" என்பதாய்ப் பேசி இந்தப் பிரச்சினையைத் தெளிவற்றதாக்கவோ, எவ்வழியிலும் இதைத் திரையிட்டு ஒளிக்கவோ எம்முயற்சியும் செய்யலாகாது. பூண்டோடு ஒழியச் செய்யும் மூர்க்கமான, இரத்தக் களரியான யுத்தம் அவசியம், இதுவே வருகிற செயலின் உடனடிப் பணி என்பதை வெகுஜனங்களிடமிருந்து மூடிமறைத்தோமாயின் நாம் நம்மையும் மக்களையும் ஏமாற்றுகிறவர்களே ஆவோம்.

இதுதான் டிசம்பர் நிகழ்ச்சிகளின் முதலாவது படிப்பினை. மற்றொரு படிப்பினை எழுச்சியின் தன்மையையும், அது நடத்தப்படும் முறைகளையும், துருப்புக்கள் மக்கள் பக்கத்துக்கு வந்துவிட வகை செய்யும் நிலைமைகளையும் பற்றியது. இந்தக் கடைசி விவரங் குறித்து நமது கட்சியின் வலதுசாரியினரிடையே மிகமிக ஒருதலைப்பட்சமான கருத்து நிலவுகிறது.

நவீனப் படைத் துருப்புக்களை எதிர்த்துப் போராடுவது சாத்தியமல்ல என்பதாகவும், துருப்புக்கள் புரட்சி மனப் பான்மை பெற வேண்டும் என்பதாகவும் கூறப்படுகிறது. புரட்சியானது வெகுஜனத் தன்மையதாகித் துருப்புக்களை யும் பாதித்தாலன்றி தீர்மானகரமான போராட்டத்துக்கு இடமில்லை என்பது மெய்தான். துருப்புக்களிடையே நாம் வேலை செய்யவேண்டுமென்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் துருப்புக்கள் அறிவுறுத்தல்களின் விளைவாகவோ தாமே உண்மைகளை அறிந்து தெளிவு பெறுவதன் விளைவாகவோ ஒரே அடியாய் உடனே நம் பக்கத்துக்கு வந்துவிடுவார் களென நாம் நினைத்துக் கொள்ளக் கூடாது. இது இறுகிக் கெட்டிப்பிடித்துப் போன உயரற்ற கருத்தாகும் என்பதை மாஸ்கோ எழுச்சி தெளிவாய் நிரூபித்துக் காட்டிற்று. உண்மை என்னவெனில் துருப்புக்களிடையே ஏற்படும் ஊசலாட்டம் —மெய்யாகவே வெகுஜனங்களது இயக்கமாய் அமையும் ஒவ்வொரு இயக்கத்திலும் தவிர்க்க முடியாதபடி ஏற்படும் இந்த ஊசலாட்டம்—புரட்சிப் போராட்டம் கடுமையாகி விடும் போதெல்லாம் மெய்யாகவே துருப்புக்களுக்கான போராட்டத்தை எழச் செய்கிறது. துருப்புக்களுக்காகப் பிற் போக்குக்கும் புரட்சிக்குமிடையே நடைபெறும் ஆவேசமான, மூர்க்கமான போராட்டத்துக்கு மாஸ்கோ எழுச்சி துல்லிய மான ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கிற்று. மாஸ்கோ விலிருந்த துருப்புக்களில் பதினைந்து ஆயிரம் படையாட்களில் ஐந்து ஆயிரம் பேர்தான் நம்பத்தக்கவர்கள் என்று துபாசவே கூறினர். ஊசலாடியோரைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மிக வும் ஆவேசமான பலதரப்பட்ட முறைகளையும் கையாண்டது: அது வேண்டுகோள் விடுத்தது, அவர்களை மெச்சிப் புகழ்ந்தது, கடிகாரங்களும் பணமும் இன்ன பிறவும் வழங்கி அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தது, வோத்கா சாராயத்தை அளித்து அவர்களைக் குடி போதையால் மயங்கச் செய்தது, பொய் சொல்லி ஏமாற்றியது, பயமுறுத்திற்று, வெளி போக முடியாதபடி அவர்களைப் பட்டாளக் கொட்டடிகளினுள் அடைத்தது, நிராயுதபாணிகளாக்கிற்று, சிறிதும் நம்பத் தகாதோராய்க் கருதப்பட்டோர் வஞ்சகத்தின் மூலமாகவும் வன்முறையின் மூலமாகவும் அகற்றப்பட்டனர். இத்துறை யில் நாம் அரசாங்கத்துக்குப் பின்தங்கிவிட்டோம் என்பதைப்

பகிரங்கமாகவும் நிபந்தனையின்றியும் ஒத்துக் கொள்ளும் துணிவு நமக்கு இருக்க வேண்டும். ஊசலாடிய துருப்புக்களுக்காக அரசாங்கம் நடத்தி வெற்றி பெற்ற போராட்டத்தைப் போன்ற செயல் முனைப்புடைய, துணிவான, கெட்டிக்காரத்தனமான, முன்முயற்சியுடைய ஒரு போராட்டத்தை நடத்த நம்மிடமிருந்த சக்திகளை நாம் பயன்படுத்தத் தவறி விட்டோம். சேனையினுள் நாம் வேலை செய்து வந்திருக்கிறோம், துருப்புக்களை சித்தாந்த வழியில் ''பக்குவமாக்குவதற்கு'' இனி வருங்காலத்தில் நமது முயற்சிகளை இரு மடங்காக்கிக் கொள்வோம். ஆனால் எழுச்சி ஏற்படும் நேரத்தில் இத்துடன் கூட துருப்புக்களுக்கான நேரடிப் போராட்டமும் நடைபெற வேண்டுமென்பதை மறப்போமாயின் நாம் படுமோசமான பகட்டுப் புலமையாளர்கள் என்பதைத்தான் நிரூபித்துக் கொள்வோம்.

சித்தாந்த வழியில் துருப்புக்களை ''பக்குவமாக்குவதில்'' மாஸ்கோப் பாட்டாளி வர்க்கம் டிசம்பர் நாட்களின் போது சிறப்புக்குரிய பாடங்களை நமக்குக் கற்றுத் தந்தது. டிசம்பர் 8ல் ஸ்திரஸ்த்னுயாச் சதுக்கத்தில் கூட்டத்தினர் கசாக்குத் துருப்புக்களைச் சூழ்ந்து கொண்டு அவர்களுடன் கலந்து சோதரத்துவம் கொண்டாடி அவர்களுக்கு அறிவுறுத்தித் திரும்பிப் போகும்படிச் செய்ததை உதாரணமாய்க் குறிப்பிடலாம். அல்லது டிசம்பர் 10ல் பிரெஸ்னியா வட்டாரத்தில் 10,000 மக்களைக் கொண்ட ஒரு கூட்டத்தில் செங்கொடியை ஏந்திச் சென்ற இரு தொழிலாளிப் பெண்கள் கசாக்குத் துருப்புக்களின் எதிரே ஓடி, ''கொல்லுங்கள் எங்களை! உயிருள்ள வரை எங்கள் கொடியைத் துறக்க மாட்டோம்'' என்று முழங்கியதைக் குறிப்பிடலாம். உடனே கசாக்குகள் கலக்கமுற்றுக் குதிரைகளைத் திருப்பிக் கொண்டு ஓட கூட்டத்தினர் ''கசாக்குகள் வாழ்க, வாழ்க!'' என்று உற்சாகக் கோஷமிட்டனர். நெஞ்சுரத்துக்கும் வீரத்துக்குமான இந்த உதாரணங்களை என்றென்றுக்குமாய்ப் பாட்டாளி வர்க்கத்தின் உள்ளத்தில் ஆழப் பதியச் செய்தாக வேண்டும்.

ஆனால் எப்படி நாம் துபாசவுக்குப் பின்தங்கிவிட்டோம் என்பதற்கு இதோ சில உதாரணங்கள். டிசம்பர் 9ல் படையாட்கள் எழுச்சியாளர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக மார்சேலஸ் பாடிக்கொண்டு பல்ஷாயா செர்ப்புஹவ்ஸ்காயாத்

தெரு வழியே அணி வகுத்துச் சென்று கொண்டிருந்தனர். அவர்களை வரவேற்கத் தொழிலாளர்கள் தம் பிரதிநிதிகளை அனுப்பினர். ஆனால் மலாஹவ் குதிரையின்மீது ஏறித் தலை தெறிக்கும் வேகத்தில் நேரில் இந்தப் படையாட்களிடம் ஓடி வந்தார். தொழிலாளர்களை முந்திக் கொண்டு அவர் இவர்களிடம் முதலில் வந்துவிட்டார். ஆவேசச் சொற்பொழிவு ஆற்றிப் படையாட்களை அவர் ஊசலாட வைத்தார்; குதிரைப் படையினரால் அவர்களைச் சுற்றி வளைத்துப் படைக் கொட்டடிகளுக்கு அவர்களைப் போகச் செய்து பூட்டி அடைத்துவிட்டார். மலாஹவ் தாமதமின்றித் தக்க தருணத்தில் படையாட்களிடம் வந்து சேர்ந்தார். ஆனால் நமது அழைப்புக்கிணங்க இரண்டே நாட்களில் 1,50,000 மக்கள் கிளர்ந்தெழுந்தனர் என்ற போதிலும், தெருக்களில் ரோந்து சுற்றி வர இவர்கள் ஏற்பாடு செய்திருக்க முடியும், செய்திருக்கவும் வேண்டும் என்றபோதிலும், நாம் தாமதமின்றிப் படையாட்களிடம் போய்ச் சேரவில்லை. குதிரைப் படையினரைக் கொண்டு மலாஹவ் அந்தப் படையாட்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார். ஆனால் வெடிகுண்டுகள் வீசுவோரைக் கொண்டு நாம் மலாஹவ்களைச் சுற்றி வளைக்கத் தவறிவிட்டோம். நாம் இதைச் செய்திருக்க முடியும், செய்திருக்கவும் வேண்டும். எழுச்சியின் போது ஆட்சித் தலைவர்களையும் இராணுவத் தலைவர்களையும் ஈவிரக்கமின்றி ஒழித்திடுவது நமது கடமையாகுமென்று நெடுங்காலத்துக்கு முன்பே சமூக-ஜனநாயகப் பத்திரிகைகள் (பழைய இஸ்க்ரா) எடுத்துரைத்திருந்தன. பல்ஷாயா செர்ப்புஹவ்ஸ்காயாத் தெருவில் நடைபெற்றதுதான் பிரதான கூறுகளில் மாற்றமின்றி அப்படியே நெஸ்வீழ்ஸ்கியெ படைக் கொட்டடி முன்னும் குருத்தீத்ஸ்கியெ கொட்டடி முன்னும் நடைபெற்றன. மற்றும் எக்கத்தெரினஸ்லாவ் படைப்பிரிவை ''வாபஸ் வாங்கிச்'' செல்ல வைப்பதற்காகத் தொழிலாளர்கள் முயன்ற போதும், அலெக்சாந்திரோவிலிருந்த சாப்பர் படையினருக்குப் பிரதிநிதிகளை அனுப்பியபோதும், மாஸ்கோவுக்கு வந்து கொண்டிருந்த ரஸ்தோவ் பீரங்கிப் படையினரைத் திரும்பிப் போகச் செய்தபோதும், சாப்பர் படையினர் கலோம்னாவில் நிராயுதபாணிகளாக்கப்பட்ட போதும், பிற சந்தர்ப்பங்களிலும் இதே போலத்தான் நடைபெற்றன. எழுச்சியின்

போது நாம் ஊசலாடும் துருப்புக்களுக்கான போராட்டத்தில் நமது பணியை நிறைவேற்றும் திறனற்றோராகவே இருந்தோம்.

டிசம்பர் நிகழ்ச்சிகள் மார்க்சின் ஆழ்ந்த நிர்ணயிப்புகளில் இன்னென்றை—சந்தர்ப்பவாதிகளால் மறக்கப்பட்டு விட்ட ஒன்றை—ஊர்ஜிதம் செய்தன. எழுச்சி நடத்துவது ஒரு கலையாகும், ஆவேசத் துணிச்சல் மிக்கதும் தளராத வைராக்கியம் கொண்டதுமான தாக்குதல் நடத்துவதே இந்தக் கலையின் தலையாய விதியாகும் என்பதே இந்த நிர்ணயிப்பு. இந்த உண்மையை நாம் போதுமான அளவுக்குக் கிரகித்துக் கொண்டாகவில்லை. இந்தக் கலையை, எப்பாடு பட்டேனும் தாக்கியாக வேண்டுமென்ற இந்த விதியை நாம் போதிய அளவு கற்றுக் கொள்ளவுமில்லை, மக்கள் திரளினருக்கு இதைக் கற்றுத் தரவுமில்லை. நாம் இழைத்த இந்தத் தவறினை நம் முழு சக்தியையும் கொண்டு சரிசெய்தாக வேண்டும். அரசியல் கோஷங்கள் குறித்த பிரச்சினையில் அவரவரும் எத்தரப்பு என்பதைத் தீர்மானித்துக் கொண்டால் மட்டும் போதாது. ஆயுதமேந்திய எழுச்சி குறித்த பிரச்சினையிலும் எத்தரப்பு என்பதைத் தீர்மானித்துக் கொள்வது அவசியம். இந்த எழுச்சிக்கு எதிரானவர்களை, இதற்குத் தயார் செய்யாதவர்களை, புரட்சியின் ஆதரவாளர்களது அணிகளிலிருந்து ஈவிரக்கமின்றி வெளியேற்ற வேண்டும், மூட்டை கட்டிப் புரட்சியின் பகைவர்களிடம், துரோகிகள் அல்லது கோழைகளிடம் அனுப்பிவிட வேண்டும். ஏனெனில் நிகழ்ச்சிகளின் நடப்பும் போராட்டத்துக்கான நிலைமைகளும் நம்மை இந்தக் கோட்பாட்டுக்கு ஏற்ப பகைவர்களையும் நண்பர்களையும் வேறுபடுத்தி இனங் கண்டு கொள்ளும்படிப் பலவந்தம் செய்யப் போகும் நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. செயலற்றுச் சும்மாயிருக்கும்படியோ, துருப்புக்கள் நம் ''பக்கத்துக்கு வரும்'' வரைக் ''காத்துக் கொண்டு'' நிற்கும்படியோ உபதேசம் செய்வதல்ல நமது கடமை. இல்லை! துணிச்சலான தாக்குதலும் ஆயுதமேந்திப் போர் தொடுப்பதும் அவசியமென்று, பகைவனது தலைமையில் இருப்போரை ஒழித்திடுவதும் ஊசலாடும் துருப்புக்களுக்காக முழு மூச்சுடன் போராடுவதும் இத்தகைய நேரங்களில் அவசியமென்று நாம் கூரை மீதிருந்து பறைசாற்றியாக வேண்டும்.

மாஸ்கோ நிகழ்ச்சிகளிடமிருந்து நாம் பெற வேண்டிய மூன்றாவது படிப்பினை எழுச்சிக்கான போர்த்தந்திரத்தையும் சக்திகளது ஒழுங்கமைப்பையும் பற்றியது. இராணுவப் போர்த்தந்திரம் இராணுவ வினைநுட்பத்தின் வளர்ச்சி நிலையைச் சார்ந்ததாகும். தெளிவான இந்த உண்மையை எங்கெல்ஸ் கண்கூடாக்கி எல்லா மார்க்சியவாதிகளுக்கும் ஆழப் பதியவைத்தார்.[16] இன்று இராணுவ வினைநுட்பம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் இருந்தது போல இருக்கவில்லை. பீரங்கிகளை எதிர்த்துக் கூட்டமாய்ச் சென்று சமாளிக்க முயலுவதும், ரிவால்வர்களைக் கொண்டு தெருத் தடையரண்களைப் பாதுகாக்க முற்படுவதும் அசட்டுத்தனமாகும். இப்பொழுது, மாஸ்கோவுக்குப் பிற்பாடு, எங்கெல்சின் முடிவுகளுக்கு மறு பரிசீலனை செய்வது அவசியமென்றும், மாஸ்கோவானது ''புதிய தெருத் தடையரண் போர்த்தந்திரத்தைத்'' துவக்கி வைத்திருக்கிறதென்றும் காவுத்ஸ்கி சரியாகவே எழுதினார். இந்தப் போர்த்தந்திரம் கொரில்லா யுத்தத்துக்குரிய போர்த்தந்திரமாகும். இத்தகைய போர்த்தந்திரத்துக்குத் தேவைப்படும் ஒழுங்கமைப்பு எளிதில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லக் கூடியதும் மிக மிகச் சிறு குழுக்களாலானதுமாகிய, பத்து, மூன்று, ஏன் இரண்டு பேருங்கூட கொண்ட சிறிய குழுக்களாலானதுமாகிய ஒழுங்கமைப்பு. ஐந்து அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்கள் குறித்துப் பேசும் போது ஏளனம் செய்யும் சமூக-ஜனநாயகவாதிகளை இப்பொழுது நாம் அடிக்கடி காண்கிறோம். ஆனால் இவர்களுடைய இந்த ஏளனம் நவீன இராணுவ வினைநுட்பத்தால் தோற்றுவிக்கப்படும் நிலைமைகளில் நடைபெற வேண்டியுள்ள தெருப் போராட்டத்தின்போது போர்த்தந்திரம், ஒழுங்கமைப்பு குறித்து எழும் **புதிய** பிரச்சினையைக் கவனியாது புறக்கணிப்பதற்கான ஓர் அற்ப வழியே அன்றி வேறல்ல. கனவான்களே, மாஸ்கோ எழுச்சியின் விவரங்களைக் கவனமாய்ப் பரிசீலனை செய்யுங்கள், ''ஐவர் குழுக்களுக்கும்'' ''புதிய தெருத் தடையரண் போர்த்தந்திரத்துக்கும்'' உள்ள சம்பந்தத்தை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

மாஸ்கோ இந்தப் போர்த்தந்திரத்தை முன்கொண்டு வந்தது. ஆனால் இதை அது போதிய அளவுக்கு வளர்த்துச்

செல்லத் தவறிவிட்டது; குறிப்பிடத்தக்க அளவில், மெய்யாகவே வெகுஜன அளவில் இதைக் கையாளத் தவறிவிட்டது. போர்க் குழுக்கள் மிகச் சொற்பமாய் இருந்தன, துணிச்சலான தாக்குதல் தொடுக்கும்படி தொழிலாளர் பெருந் திரள் மக்களுக்குக் கோஷம் விடுக்கப்படவில்லை, இவர்கள் இக் கோஷத்தை அனுசரித்துச் செயல்படவில்லை. கொரில்லாப் படைப்பிரிவுகள் மாறுபாடின்றி மிதமிஞ்சி ஒரே தன்மையனவாய் இருந்தன, அவற்றின் ஆயுதங்களும் போர் முறைகளும் போதுமானவையாய் நிலைமைகளுக்கு ஏற்றனவாய் இல்லை, கூட்டத்தினருக்குத் தலைமை தாங்குவதில் அவற்றின் ஆற்றல் அனேகமாய் வளர்க்கப்படாமலே கீழ்நிலையில் இருந்தது. இவை யாவற்றையும் நாம் சரி செய்து கொண்டாக வேண்டும்; மாஸ்கோ அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்வதன் மூலமும், இந்த அனுபவத்தைப் பெருந் திரளான மக்களிடத்தே பரவச் செய்வதன் மூலமும், இதை மேலும் வளர்த்துச் செல்வதற்கான அவர்களது ஆக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் நாம் இதைச் செய்வோம். டிசம்பர் முதலாய் ருஷ்யா பூராவிலும் அனேகமாய் இடையறுது நடைபெற்று வந்துள்ள கொரில்லாப் போரும் வெகுஜனப் பயங்கரமும் எழுச்சியின் போதான பிழையற்ற போர்த் தந்திரத்தைப் பெருந் திரள்களான மக்கள் கற்றுக் கொள்ள துணை புரியுந் என்பதில் ஐயமில்லை. இந்த வெகுஜனப் பயங்கரத்தை சமூக-ஜனநாயகம் அங்கீகரித்தாக வேண்டும், இதைத் தனது போர்த்தந்திரத்தின் ஒரு கூறுய் இணைத்துக் கொண்டாக வேண்டும். இந்த வெகுஜனப் பயங்கரத்தை அது ஒழுங்கமைக்க வேண்டும், மேற்பார்வையிட வேண்டும் என்பதைக் கூறத் தேவையில்லை. இதை அது தொழிலாளி வர்க்க இயக்கத்தின், பொதுவான புரட்சிப் போராட்டத்தின் நலங்களுக்கும் நிலைமைகளுக்கும் கீழ்ப்படச் செய்ய வேண்டும். அதேபோதில் இந்தக் கொரில்லாப் போரை ''ரௌடித்தனமாய்'' இழிவுறச் செய்யும் முறைகேட்டினை ஈவிரக்கமின்றி துண்டித்து அகற்றிவிட வேண்டும். எழுச்சியின்போது நமது மாஸ்கோத் தோழர்களும், புகழ் படைத்த லாத்வியக் குடியரசுகளின்[17] நாட்களில் லாத்வியர்களும் இக்காரியத்தை மிகச் சிறப்பாகவும் ஈவிரக்கமின்றி உறுதியாகவும் செய்து காட்டினர்.



4—1061

மிகச் சமீப காலத்தில் இராணுவ விஞ்ஞானத்தில் புதிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானிய யுத்தம்[18] கைக்குண்டை உண்டாக்கியது. படைக் கல ஆலை தானியங்கி இயந்திரத் துப்பாக்கிகளைச் சந்தையில் விற்பனைக்கு வரச் செய்திருக்கிறது. இவ்விரு ஆயுதங்களும் ருஷ்யப் புரட்சியில் வெற்றிகரமாய் ஏற்கனவே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் போதுமான அளவைவிட மிகமிகக் குறைவாகவே இவை உபயோகிக்கப்படுகின்றன. விஞ்ஞானத்தில் ஏற்பட்டிருக்கும் மேம்பாடுகளை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். பெரிய அளவில் வெடிகுண்டுகள் தயாரிப்பதற்குத் தொழிலாளர் படைப்பிரிவுகளுக்குக் கற்றுத் தர வேண்டும். வெடிகளையும் எரியிணைப்புகளையும் தானியங்கித் துப்பாக்கிகளையும் தொழிலாளர் படைப்பிரிவுகளும் நமது போர்க் குழுக்களும் பெற்றுக்கொள்ள நாம் துணை புரிய வேண்டும். நகரங்களில் தொழிலாளர் பெருந் திரளினர் எழுச்சியில் பங்கு கொள்வார்களாயின், பகைவன் மீது வெகுஜன அளவில் தாக்குதல்கள் தொடுக்கப்படுமாயின், துருப்புக்களுக்காக வைராக்கியமான, சாமர்த்தியமான போராட்டம் நடத்தப்படுமாயின்—ரூமாவுக்குப்[19] பிற்பாடு, ஸ்வெயபோர்குக்கும் கிரான்ஷ்டாத்துக்கும்[20] பிற்பாடு என்றையும்விட அதிகமாய்த் துருப்புக்களிடையே ஊசலாட்டம் ஏற்பட்டிருக்கிறது—மேலும் பொதுப் போராட்டத்தில் கிராமப் பகுதிகளையும் பங்கெடுத்துக்கொள்ளுமாறு நாம் உறுதி செய்து கொள்வோமாயின், அடுத்த அனைத்து ருஷ்ய ஆயுதமேந்திய எழுச்சியில் வெற்றி நமக்குத்தான்!

ஆகவே நமது செயற்பாட்டை விரிவான அளவில் மேலோங்கச் செய்வோமாக, மேலும் துணிவுடன் நமது பணிகளை வகுத்துக் கொள்வோமாக. இவற்றுடன் கூடவே, ருஷ்யப் புரட்சியின் மகத்தான நாட்கள் அளித்திடும் படிப்பினைகளைக் கற்றுத் தேர்வோமாக. தற்போதைய தருணத்தில் வர்க்க நலன்களையும் தேச வளர்ச்சிக்குரிய தேவைகளையும் சரிவர மதிப்பிடுதலே நமது செயற்பாட்டுக்கான அடிப்படையாகும். ஜார் ஆட்சியைக் கவிழ்த்துப் புரட்சிகர அரசாங்கத்தைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதென்ற கோஷத்தை முன்வைத்துப் பாட்டாளி வர்க்கத்திலும்

விவசாயிகளிலும் சேனையிலும் மேலும் மேலும் கூடுதலான பகுதியை நாம் ஒன்றுதிரட்டி வருகிறோம், இனியும் தொடர்ந்து ஒன்றுதிரட்டிச் செல்வோம். வெகுஜனங்களுடைய அரசியல் உணர்வை வளர்த்திடுவதுதான், இதுகாறும் இருந்தது போலவே இனியும் நமது செயற்பாட்டின் அடிப்படையும் பிரதான உள்ளடக்கமுமாகும். ஆனால் இந்தப் பொதுவான, இடையறாத, அடிப்படைப் பணியுடன்கூட, ருஷ்யாவில் தற்போதுள்ளதைப் போன்ற காலங்கள் ஏனைய குறிப்பான, விசேஷமான பணிகளையும் அவசியமாக்கின்றன என்பதை நாம் மறக்கலாகாது. நாம் பகட்டுப் புலமையாளர்களாகவும் அற்பவாதிகளாகவும் ஆகக் கூடாது. எக்காலத்திலும் எல்லா நிலைமைகளிலும் மாறாதவையாய் இருக்கும் நிரந்தரமான நம் கடமைகள் பற்றிய அர்த்தமற்ற பேச்சுக்களைப் பேசி இத்தருணத்துக்குரிய இந்த விசேஷப் பணிகளை, போராட்டத்தின் குறிப்பிட்ட வடிவங்களுக்குரிய இந்த விசேஷப் பணிகளை நாம் தட்டிக் கழிக்கக் கூடாது.

மாபெரும் வெகுஜனப் போராட்டம் நெருங்கி வருகிறதென்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இது ஆயுதமேந்திய எழுச்சியாய் இருக்கும். கூடுமான அளவுக்கு இது ஏககாலத்தில் ஒருங்கே நடைபெறுதல் வேண்டும். ஆயுதமேந்திய, இரத்தக் களரியான, ஜீவமரணப் போராட்டத்தில் இறங்குகிறோம் என்பதை வெகுஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டும். சாவைத் துச்சமாய் நினைக்கும் மனப்பாங்கு அவர்களிடம் வெகுவாய்ப் பரவ வேண்டும், இது வெற்றியை உறுதி செய்யும். பகைவன் மீதான தாக்குதல் முழு சக்தியையும் கொண்டு நடத்தப்பட வேண்டும். தாக்குதலே வெகுஜனங்களது கோஷமாயிருக்க வேண்டுமே ஒழிய தற்காப்பல்ல. பகைவனை ஈவிரக்கமின்றி ஒழித்துக் கட்டுதல் அவர்களது பணியாகும். போராட்டத்தின் ஒழுங்கமைப்பு செயலுடையதாகவும் நெகிழ்வுடையதாகவும் இருக்கும். துருப்புக்களில் ஊசலாடக் கூடியோர் போராட்டத்தில் முனைப்புடன் பங்கு கொள்ளும்படி ஈர்க்கப்படுவர். வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கத்தின் கட்சி இந்த மகத்தான போராட்டத்தில் தன் கடமையை முழு அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்.

புரொலெத்தாரி, இதழ் 2,
1906 ஆகஸ்டு 29

நூல் திரட்டு,
தொகுதி 13,
பக்கங்கள் 369-77

CONNEMARA ... LIBRARY
- 5 MAR 1983

# டூமா தேர்தல்களில் முதலாளித்துவக் கட்சிகளின் போக்கும் தொழிலாளர் கட்சியின் போக்கும்

தேர்தல்களுக்காக[21] நடைபெறும் தயாரிப்புகளைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் நிறைய வருகின்றன. நம் பத் தகாத குடிமக்களாய் மேலும் ஒரு தொகுதியினர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் புதிய அரசாங்க ''விளக்கம்'' குறித்தோ, புதிய அடக்குமுறைகள், கூட்டங்களுக்குத் தடை விதிப்புகள், பத்திரிகைகள் தடையிடப்பட்டு மூடப் படுதல் குறித்தோ, சந்தேகத்துக்கு இலக்கான தேர்வாளர் கள் அல்லது வேட்பாளர்கள் கைது செய்யப்படுவது குறித் தோ அனேகமாய்த் தினசரி நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. கறுப்பு நூற்றுவர்[22] என்றையும்விட ஆணவமாய் ஊளையிட் டும் உறுமிக் கொண்டும் தலை தூக்கியிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் ஆட்சேபத்துக்குரிய கட்சிகளும் தேர்தல் களுக்காகத் தயார் செய்து வருகின்றன. வாக்காளர்களுக்கு எதிராய்ச் செய்யப்படும் எல்லாத் தந்திரங்களையும் உபத் திரவங்களையும் தடங்கல்களையும் மீறி பெருந் திரளான வாக் காளர்கள் தாம் கூற வேண்டியதைக் கூறிவிடுவார்கள் என்று, தேர்தல்களின் மூலம் தம் கருத்துகளை வெளியிடுவார்கள் என்று இந்தக் கட்சிகள் உறுதியாய் நம்புகின்றன. இந்த நம் பிக்கை நியாயமானதே. இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாய் அமையும் உண்மை என்னவெனில் மிகவும் மூர்க்கமான அடக்கு முறைகளும் சகிக்கவொண்ணுத உபத்திரவங்களும் அதி கம் போனல் ருஷ்யா பூராவிலும் நூற்றுக் கணக்கான, ஆயி ரக் கணக்கான—பத்தாயிரக் கணக்கான என்றே கொள் வோம்—வாக்காளர்களை அகற்றிவிடலாம். ஆனல் வெகு

ஜனங்களுக்கு உள்ள மனப்பான்மையையும் அரசாங்கத்தின் பால் இவர்களுக்குள்ள போக்கினையும் இது மாற்றிவிடப் போவதில்லை. உதாரணமாய், செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் பத்து அல்லது இருபது ஆயிரம் பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிடலாம். இதனால் தலைநகரின் 1,50,000 வாக்காளர்கள் பதுங்கும்படி, சிறிது காலம் அடங்கியிருந்து காத்திருக்கும்படி நேர்வதற்கு மேல் ஒன்றும் ஆகிவிடாது. எப்படியும் இவர்கள் மறைந்துவிடப் போவதில்லை, இவர்களுடைய வெகுஜன மனப்பான்மை மாறிவிடப் போவதில்லை. அப்படி மாறினாலும் அது அரசாங்கத்துக்குச் சாதகமாயிருக்காது என்பது தெளிவு. ஆகவே, தேர்தல் சட்டம் அடியோடு திருத்தப்பட்டாலொழிய, எஞ்சியிருக்கும் தேர்தல் சட்ட முறைமையின் மிச்சசொச்சங்களும் இறுதியாய் மிதித்து நசுக்கப்பட்டாலொழிய (திட்டமிட்டு தேர்வாளர்களைக் கைது செய்வதன் மூலம் இன்னும் இவை கடுமையாய் மிதித்து நசுக்கப்படுவதும் சாத்தியமே, ஸ்தலீப்பினிடமிருந்து எந்தப் படுபாதகச் செயலையும் எதிர்பார்க்கலாம்!) வெகுஜனங்களுடைய மனப்பான்மைதான் தேர்தல்களின் முடிவைத் தீர்மானிக்கப் போகிறது, ஒருபோதும் இந்த முடிவு அரசாங்கத்துக்கும் அதனுடைய கறுப்பு நூற்றுவர்களுக்கும் சாதகமாய் இருக்காது என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

அரசாங்கத்தை ஆதரிக்காதோர் அனைவரும் வாக்காளர் வெகுஜனங்களையே தமது நம்பிக்கைக்கு ஆதாரமாய்க் கொண்டுள்ளனர். ஆனால் வெகுஜனங்களிடம் வைக்கப்பட்டிருக்கும் இந்த நம்பிக்கையின் உண்மை சொரூபம் என்ன, பல்வேறு கட்சிகளும் வெகுஜனங்களிடம் கொண்டுள்ள போக்கு என்ன என்பதைக் கவனமாய் ஆராய்ந்தால், முதலாளித்துவக் கட்சிகளுக்கும் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குமுள்ள மிகப் பெரிய வேறுபாட்டை நீங்கள் காண்பீர்கள்.

காடேட்டுகள்[23] மிதவாத-முதலாளித்துவக் கட்சிகளின் தலைமையில் உள்ளனர். முதலாவது டூமாவுக்குத் தேர்தல்கள் நடைபெற்றபோது இவர்கள் மானவெட்கமின்றி துரோகமிழைத்துப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தனர், பகிஷ்காரத்தில் பங்கு கொள்ள மறுத்துவிட்டனர். அடக்க ஒடுக்கமாய் இவர்கள் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டதோடு அனுபவமில்லாத வெகுஜனங்களையும் தம் பின்னால் அழைத்துச்

சென்றனர். இப்பொழுது இவர்கள் இந்த வெகுஜனங்களின் ஊக்கமில்லாத மனப்பான்மையையும், கிளர்ச்சியின் மீதும் இடதுசாரிக் கட்சிகளின் தேர்தல் இயக்கத்தின் மீதும் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுகளேயும் தம் நம்பிக்கைக்கு ஆதாரமாய்க் கொள்கின்றனர். வெகுஜனங்களிடம் காடேட்டுக்குள்ள நம்பிக்கை வெகுஜனங்களது முதிர்ச்சியின்மையிலும் அடிமை வாழ்விலுமான நம்பிக்கையே ஆகும். அவருடைய வாதம் இதுதான்: வெகுஜனங்கள் எங்களுடைய வேலேத்திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் புரிந்து கொள்ளப் போவதில்லே, சமாதான வழியிலான, சட்ட வழியிலான, மிகமிக அமைதியான, இலேசான கண்டனம் தெரிவிப்பதற்குமேல் அவர்கள் போக மாட்டார்கள்—போக விருப்பமில்லே என்பதால் அல்ல, அதற்குமேல் போக அனுமதிக்கப்படப் போவதில்லே என்பதால். எங்களுக்குத்தான் அவர்கள் வாக்களிப்பார்கள். ஏனெனில் இடதுசாரிகளிடம் செய்தியேடுகள் இல்லே, அவர்கள் கூட்டங்கள் நடத்தவோ துண்டுப் பிரசுரங்கள் போடவோ முடியாது, சட்டத்திற்குப் புறம்பான முறையில் கைது செய்யப்படுவதிலிருந்தும் அடக்குமுறைக்கு இரையாவதிலிருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பு ஏதுமில்லே. இதுவேதான் காடேட்டின் நிஜேப்பு. ஆகவே அவர் பெருமையாய் விண்ணுலகை நோக்கிப் பார்வையை உயர்த்தியவாறு கூறுகிறுர்: தேவனே, வாழ்க நீ! நான் அந்த ''தீவிரவாதிகளில்'' ஒருவனுய் இல்லாததற்காக உனக்கு என் நன்றி! நான் புரட்சியாளன் அல்ல, அரசு நடவடிக்கை எதற்கும் நான் தண்டமிட்டுக் கீழ்ப்படிந்து தக்கபடி நடந்து கொள்ளும் வல்லமை படைத்தவன். தேர்தல் மனுக்களே சமாதானப் புனரமைப்பாளர்கள்[24] இடமிருந்துகூடப் பெறக் கூடியவன்.

எனவே, காடேட்டுகளின் தேர்தல் இயக்கம் அனேத்துமே கறுப்பு நூற்றுவரால் எழும் அபாயத்தையும் தீவிர இடதுசாரிக் கட்சிகளால் ஏற்படும் அபாயத்தையும் காட்டி வெகுஜனங்களேப் பீதியுறச் செய்வதையும், குட்டிபூர்ஷுவாவின் அற்பவாதத்துக்கும் கோழைத்தனத்துக்கும் தளர்ச்சிக்கும் இவ்வியக்கத்தைத் தகவமைத்துக்கொள்ளுதலேயும், காடேட்டுகள்தான் மிகவும் நம்பத்தகுந்த பணிவன்புடைய மிதவாதப் பண்பு மிக்க நன்னடத்தையுடையோரென இந்த அற்பவாதக் குட்டிபூர்ஷுவாவுக்கு அறிவுறுத்துவதையும்

நோக்கமாய்க் கொண்டுள்ளது. காடேட்டுப் பத்திரிகைகள் நாள் தவறாமல் தம் வாசகர்களிடம் கூறி வருகின்றன: குட்டி பூர்ஷுவா அற்பவாதியே, நீ அச்சப்படுகிறாயா? உனக்கு ஆதாரம் நாங்கள்தான்! உன்னை நாங்கள் அச்சுறுத்த மாட்டோம். நாங்கள் பலாத்காரத்தை எதிர்ப்பவர்கள், அரசாங்கத்துக்குப் பணிந்து நடப்பவர்கள். நீ எங்களை ஆதாரமாய்க் கொள், உனக்கு வேண்டியது அனைத்தையும் நாங்கள் ''கூடுமான வரை'' செய்வோம்! பீதியுற்ற குட்டிபூர்ஷுவா அற்பவாதிகளின் முதுகுக்குப் பின்னால் இந்தக் காடேட்டுகள் அரசாங்கத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்து தரவும், இடதுசாரியினருக்குத் தமது சுதந்திர வேட்கை குறித்து உறுதி கூறவும், சமாதானப் புனரமைப்பாளர்களுக்கு அவர்களது கட்சியிடத்தும் அவர்களது தேர்தல் மனுக்களிடத்தும் தமக்குள்ள ஒட்டுறவை உறுதி செய்யவும் எல்லா விதமான தந்திர முறைகளையும் கையாளுகின்றனர்.

அரசியல் உணர்வு பெறும்படி வெகுஜனங்களுக்கு அறிவொளி அளிக்க வேண்டாம், வெகுஜனங்களைத் தட்டியெழுப்ப எந்தக் கிளர்ச்சியும் வேண்டாம், முரணற்ற ஜனநாயகக் கோஷங்களை முன்வைத்து விளக்க வேண்டாம், பீதியுற்ற குட்டிபூர்ஷுவா அற்பவாதிகளின் முதுகுக்குப் பின்னால் சட்டமன்ற இடங்களுக்காகப் பேரம் நடத்தினால் போதும்— இதுவேதான் கட்சிசார்பில்லாத மக்கள் (தவாரிஷினுடையது) முதல் ஜனநாயகச் சீர்திருத்தக் கட்சி வரையிலான மிதவாத முதலாளித்துவ வர்க்கக் கட்சிகள் யாவும் நடத்தும் தேர்தல் இயக்கம்.[25]

வெகுஜனங்களிடம் தொழிலாளர் கட்சி கொண்டுள்ள போக்கு இதற்கு நேர் மாறானதாகும். பேரங்களின் மூலம் டூமாவில் இடங்கள் பெறுவது நமக்கு முக்கியமானதல்ல. மாறாக, டூமாவில் பெறும் இடங்கள் வெகுஜனங்களுடைய அரசியல் உணர்வை உயர்த்த உதவுவதால்தான், அந்த அளவுக்குத்தான், அவை முக்கியமானவை. வெகுஜனங்களை மேலும் உயர்வான அரசியல் உணர்வு நிலைக்கு உயர்த்துவதற்கு, அவர்களை ஒழுங்கமைப்பதற்கு—அற்பவாதக் குட்டிபூர்ஷுவா அர்த்தத்தில் நல்வாழ்வுக்காகவும், ''அமைதிக்காகவும்'', ''ஒழுங்குக்காகவும்'', ''சமாதான [முதலாளித்துவ] இன்ப நிலைக்காகவும்'' அல்ல, போராட்டத்துக்காக, எல்லா விதச்

சுரண்டலிலிருந்தும் எல்லா வித ஒடுக்குமுறையிலிருந்தும் உழைப்பு முழுநிறை விடுதலை பெறுவதற்கான போராட்டத்துக்காக இதைச் செய்ய வேண்டியிருக்கிறது—டூமாவிலான இடங்கள் நமக்கு முக்கியத்துவமுடையவை. இதற்காக மட்டுமே, இதைச் சாதிக்க எந்த அளவுக்கு அவை நமக்கு உதவுகின்றனவோ அந்த அளவுக்கு மட்டுமே, டூமாவில் இடங்களும், தேர்தல் இயக்கம் அனைத்தும் நமக்கு முக்கியத்துவமுடையவை. தொழிலாளர் கட்சி தனது நம்பிக்கை அனைத்துக்கும் வெகுஜனங்களையே ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. இந்த வெகுஜனங்கள் பீதியுற்றவர்கள் அல்ல, செயலற்றோராய்ப் பணிந்து விடுகிறவர்கள் அல்ல, பணிவுடன் ஒடுக்குமுறையை ஏற்றுக் கொள்வோர் அல்ல; இவர்கள் அரசியல் உணர்வு படைத்தவர்கள், எதிர்த்துக் கேட்பவர்கள், போர்க்குணம் கொண்டவர்கள். கறுப்பு நூற்றுவர் அபாயமென்று பூச்சாண்டி காட்டிக் குட்டிபூர்ஷுவா அற்பர்களைப் பீதியுறச் செய்யும் வழக்கமான மிதவாத முறையினைத் தொழிலாளர் கட்சி அருவருப்புடன் நிராகரிக்க வேண்டும். வெகுஜனங்களை மெய்யான அபாயம் குறித்து, போராட்டத்தின் உண்மை நோக்கங்கள் குறித்து—டூமாவைத் தமது பலத்தின் இருப்பிடமாய்க் கொள்ளாமல், டூமா விவாதங்களில் முழு அளவுக்கு வெளியீடாகாமல், டூமாவுக்கு வெளியிலேதான் ருஷ்யாவின் எதிர்காலத்தை முடிவு செய்யப் போகின்ற அந்த சக்திகளுடைய போராட்டத்தின் உண்மை நோக்கங்கள் குறித்து—உணர்வு பெறச் செய்வதில்தான் சமூக-ஜனநாயகவாதிகளது பணி அடங்கியிருக்கிறது.

ஆகவே தொழிலாளர் கட்சி காடேட்டுகளான முதலாளிகளினுடைய இரகசியத் தேர்தல் தந்திரங்கள் குறித்து, கறுப்பு நூற்றுவர் அபாயத்துக்கு எதிராய்ப் போராடும் பணியை வழக்கறிஞர்களும் பேராசிரியர்களும் அறிவொளி படைத்த நிலப் பிரபுக்களுமாகிய எங்களிடம் ஒப்படையுங்கள் என்று அரசியல் உணர்வினைப் பாழ்படுத்தும் முறையில் இவர்கள் எழுப்பும் கூச்சல் குறித்து வெகுஜனங்களை எச்சரிக்கை செய்கிறது.

தொழிலாளர் கட்சி வெகுஜனங்களிடம் கூறுவதாவது: உங்களுடைய சோஷலிச உணர்வையும் உங்களுடைய சோஷலிச ஒழுங்கமைப்பையுமே நீங்கள் நம்பிச் செயல்பட

வேண்டும். போராட்டத்தில் முதன்மை நிலையையும் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் உரிமையையும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரிடம் ஒப்படைப்பதானது, சுதந்திர இலட்சியத்தை நாடக பாணியிலான சொல்லடுக்குகளுக்காக, புது மோஸ்தரில் அமைந்து கண்ணைப் பறிக்கும் விளம்பர ஜோடனைகளின் போலி மினுக்குக்காக விற்பதற்கே ஒப்பாகும். கண்ணை மூடிக் கொண்டு மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினரையும் அதன் கோஷங்களையும் வேட்பாளர் பட்டியல்களையும் கொள்கையையும் பின்பற்றும் வெகுஜனங்களின் அரசியல் உணர்வு பாழ்படுத்தப்படுவதைக் காட்டிலும் ஒரு பெருங் கேடு டூமாவில் கறுப்பு நூற்றுவரால் எழக் கூடிய எந்த அபாயத்தாலும் ஏற்பட்டுவிட முடியாது.

தொழிலாளர் கட்சி அறைகூவி அழைக்கும் வெகுஜனங்களில் விவசாயிகளும் பல்வேறு குட்டிபூர்ஷுவாப் பகுதிகளைச் சேர்ந்தோரும்தான் எண்ணிக்கையில் அதிகமானோர். இவர்கள் காடேட்டுகளைக் காட்டிலும் உறுதியும் நேர்மையும் கொண்டவர்கள், காடேட்டுகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகம் போராடக்கூடியவர்கள். ஆனால் அரசியலில் அடிக்கடி இவர்கள் காடேட்டு வாய்வீச்சுக்காரர்களின் பின்னால் சென்றுவிடுகிறார்கள். இப்பொழுதுங்கூட இவர்கள் போர்க்குணம் படைத்த பாட்டாளி வர்க்கத்துக்கும் சமரசவாத முதலாளித்துவ வர்க்கத்தினருக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர்.

காடேட்டுகளுடன் கூட்டணிகள் கொள்ளும்படிக் கூறுவோர் பாட்டாளி வர்க்கத்துக்கும் சுதந்திர இலட்சியம் அனைத்துக்குமே தீங்கிழைக்கிறார்கள் என்பதுடன், நகரத்து, கிராமத்து ஏழைகளிடையே அரசியல் உணர்வு வளர்வதற்கும் ஊறு விளைவிக்கிறார்கள். இந்த ஏழை மக்களை மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்து விடுவிப்பதென்ற தமது உடனடிக் கடமையை அவர்கள் நிறைவேற்றவில்லை. துருதொவிக்குகளையும் "மக்கள் சோஷலிஸ்டுகளையும்" சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரையும்[26] பாருங்கள். அவர்களும் ஊசலாட்டக்காரர்கள்தான். காடேட்டுகளுடன் பேரம் செய்து கொள்வதற்கான திட்டங்களில்தான் அவர்களும் பிரதானமாய் ஈடுபட்டிருக்கின்றனர். சொந்தக் கட்சி ஒன்றை அமைக்கும் முயற்சியில் தோல்வியுற்ற துருதொவிக்குகளின் தலைவர்கள் காடேட்டுகளுக்கு வாக்களிக்கும்படி வெகு

ஜனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர் (அனீக்கின்——பத்திரிகை நிருபர்கள் மூலம், ழீல்க்கின்—தவாரிஷ் ஏட்டில், ஏனையோர்—பிற வழிகளில்). இதன் மூலம் அவர்கள் தமது டூமா தவறுகளை மேலும் பத்து மடங்கு பெருகச் செய்கின்றனர். இவ்வாறு செய்வது விவசாயிகளின் இயக்கத்துக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகமாகும், மிதவாத நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகளை அப்பட்டமாய்க் காட்டிக் கொடுப்பதாகும். இந்த மிதவாத நிலப்பிரபுக்கள் ''நியாயமான'' நஷ்டஈடு என்பதன் வாயிலாய் விவசாயிகளைக் கொள்ளையடிக்கப் போகிறார்கள், இவர்களது முன்னோர்கள் 1861ல் செய்தார்களே அதே போல.[27] ''மக்கள் சோஷலிஸ்டுகளைப்'' பொறுத்த மட்டில் காடேட்டுகளே அவர்களைக் கேலி செய்கிறார்கள், ''இரண்டாம் தரக் காடேட்டுகள்'' என்று அவர்களை அழைக்கின்றனர் (ரேச் ஏட்டில் மிலுக்கோவ்). அவர்களுடைய தலைவர்களும் (அனேன்ஸ்கியும் பிறரும்) காடேட்டுகளுடன் கூட்டு சேர வேண்டும் என்கிறார்கள். அவர்களுடைய சின்னஞ்சிறு கட்சி (அவர்களுக்கு அனுசரணையாய் இருந்து வரும் தவாரிஷ் பத்திரிகையின்படி இக்கட்சி சமாதானக் கொள்ளைக் கட்சியை[28] விடக்கூட பலவீனமானது, ருஷ்யா பூராவிலும் சுமார் 2,000 உறுப்பினர்களையே கொண்டது) காடேட்டுகளுடைய துணையங்கமே தவிர வேறல்ல. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் நிலையும் இருமுகத் தன்மையதாகவே இருந்து வருகிறது. அவர்கள் மக்கள் சோஷலிஸ்டுகளிடமிருந்து தாம் பிளவுண்டதை அக்டோபரின் போதும் இரண்டாவது டூமாவின் போதும் மூடி மறைத்து வந்தனர்; அவர்களுடன் தொடர்ந்து ஒத்துழைத்து, அவர்களுடன் சேர்ந்து கூட்டாய்ப் பத்திரிகைகளை வெளியிட்டு வந்தனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் இன்று பகிரங்கமான, சுயேச்சையான போராட்டம் எதுவும் நடத்தவில்லை, ''இரண்டாம் தரக் காடேட்டுகளுக்கு'' எதிராகப் போதிய அளவு விரிவாகவும் பகிரங்கமாகவும் வன்மையாகவும் தாக்கவில்லை, அந்தக் க்ட்சியை விமர்சிப்பதற்குப் போதுமான விவரங்களை வெகுஜனங்களுக்கு அளித்திடவில்லை, பொதுவில் தேர்தல் இயக்கம் பூராவையும் பற்றி, தேர்தல் உடன்பாடுகள் யாவற்றையும் பற்றி கோட்பாட்டு வழியில் எந்த மதிப்பீடும் செய்யவில்லை.

சுயேச்சையான தொழிலாளி வர்க்கக் கட்சி தோன்று வதற்குத் துணை புரிதல் தொழிலாளர் கட்சியின் மாபெரும் வரலாற்றுக் கடமையாகும். காடேட்டுகளுடன் கூட்டணி களை ஆதரிப்போர் இந்தக் கடமையின் நிறைவேற்றத் துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்.

ஒட்டாண்டிகளாய் வறுமையுற்று நிர்க்கதியாகி வரும் நகரப்புறக் குட்டி பூர்ஷுவாக்களும் மற்றும் விவசாயிகளுமான வெகுஜனங்களை மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் கருத்துக்கள், தப்பெண்ணங்களது செல்வாக்கிலிருந்து விடுவிப்பது தொழிலாளர் கட்சியின் முன்னுள்ள மற்றொரு பெரிய கடமையாகும். காடேட்டுகளுடன் கூட்டணிகளை ஆதரிப்போர் இந்தக் கடமையின் நிறைவேற்றத்துக்கும் தடங்கலாகிவிடுகின்றனர். விவசாயிகளை இவர்கள் மிதவாதி களிடமிருந்து பிரிந்து வரச் செய்யவில்லை; சுதந்திர இலட்சி யத்துக்கும் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கும் நாசம் உண்டாக்கும், இயற்கைக்கு விரோதமான இந்த இணைப்பை வலுவடையவே செய்கின்றனர். மிதவாதிகளது புழைக்கடை அரசியலை எதிர்த்து (அல்லது இன்னும் சரியாய்ச் சொல்வ தெனில் டூமாவில் இடங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அவர்கள் செய்யும் அரசியல் சூழ்ச்சியை எதிர்த்து) விவசாயி வெகுஜனங்களை எச்சரிக்கை செய்யவில்லை; அதில் பங்குகொள் வதன் மூலம் இந்த சூழ்ச்சிக்கு அங்கீகாரமே அளிக்கின்றனர்.

இந்தக் கூட்டணிகள் யாவும் ஒழிக! தொழிலாளர் கட்சி சொல்லில் மட்டுமின்றி செயலிலும் சுயேச்சையாய்த் தனது தேர்தல் இயக்கத்தை நடத்த வேண்டும். சித்தாந்தத் திலிருந்து பிறழாது துணிவுடனும் முரணின்றியும் விமர்சிப் பதில் அது மக்கள் அனைவருக்கும் மற்றும் குறிப்பாய்ப் பாட் டாளி வர்க்க வெகுஜனங்களுக்கும் முன்மாதிரியாய்த் திகழ வேண்டும். இவ்வழியிலேதான், இவ்வழியில் மட்டுமேதான் நாம் வெகுஜனங்களை சுதந்திரப் போராட்டத்தில்—சுதந் திரத்துக்குத் துரோகம் புரியும் காடேட்டுகளுடைய விளையாட்டு மிதவாதத்தில் அல்ல—பயனுள்ள முறையில் பங்கு கொள்ள ஒன்றுதிரட்டுவதில் வெற்றி பெறுவோம்.

தேர்னியி துருதா, இதழ் 2,
1906 டிசம்பர் 31

நூல் திரட்டு,
தொகுதி 14,
பக்கங்கள் 228-33

## ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஐந்தாவது காங்கிரசுக்கான நகல் தீர்மானங்களிலிருந்து

### 4. கடுமையாகி வரும் வெகுஜன வறுமையும் பொருளாதாரப் போராட்டமும்

*1. மிகப் பல உண்மைகளும் பாட்டாளி வர்க்கத்தினிடையே வறுமையும் மற்றும் இவ்வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டமும் மிகவும் கடுமையாகியுள்ளதை (போலந்தில் கதவடைப்பும், செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலும் இவானவ-வஸ்னெசேன்ஸ்கிலும் வாழ்க்கைச்செலவு உயர்வை எதிர்த்துத் தொழிலாளர்களிடையே எழுந்துள்ள இயக்கமும், மாஸ்கோ தொழிற் பிரதேசத்தில் காணப்படும் விரிவான வேலைநிறுத்த இயக்கமும், கடும் போராட்டத்துக்குத் தயார் செய்யும்படி தொழிற் சங்க நிறுவனங்கள் விடுக்கும் அவசர அறைகூவல்களும், இன்னபிறவும்) நிரூபித்துக் காட்டுவதாலும்;*

*2. பொருளாதாரப் போராட்டத்தின் இந்தப் பல்வேறு வெளியீடுகளும், முன்னிலும் பெரிய அளவிலான பாட்டாளி வர்க்கப் பகுதிகள் கலந்து கொள்ளும் வெகுஜனப் பொருளாதார நடவடிக்கைகள் நாடெங்கிலும் எடுக்கப்படுமென்று முழு நியாயத்துடன் எதிர்பார்க்கத் தக்க அளவுக்கு மிகுதியாகி வருவதை எல்லா அறிகுறிகளும் தெரிவிப்பதாலும்;*

*3. இத்தகைய வெகுஜனப் பொருளாதார இயக்கங்களின் அடிப்படையில்தான் புரட்சி இயக்கத்தின் சக்தி வாய்ந்த எல்லா எழுச்சிகளும் ஆரம்பமாயின என்பதை ருஷ்யப் புரட்சியின் வரலாறு அனைத்தும் காட்டுவதாலும்;—*

*இந்த மாநாடு,*

*1. கட்சி நிறுவனங்கள் யாவும் இந்த நிலைமைகளில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும், இவை குறித்து மேலும்*

முழுமையான தகவல்களைச் சேகரிக்க வேண்டும், இந்தப் பிரச்சினை ஐந்தாவது கட்சிக் காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டும் என்றும்;

2. வெகுஜனங்களிடையிலான பொருளாதாரக் கிளர்ச்சியில் கட்சி உறுப்பினர்கள் சாத்தியமான மிக அதிக எண்ணிக்கையில் ஒருசேர ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும்;

3. இந்தப் பொருளாதார இயக்கம் ருஷ்யாவில் வளர்ந்து வரும் புரட்சிகர நெருக்கடி அனைத்துக்குமான பிரதான தோற்றுவாயாகவும் அடிப்படையாகவும் கருதப்பட வேண்டும் என்றும் பறைசாற்றுகிறது.

## 5. கட்சி சார்பில்லாத் தொழிலாளர் நிறுவனங்களும் பாட்டாளி வர்க்கத்திடையே அராஜக-சிண்டிகலிஸ்டுப் போக்கும்

1. கட்சி சார்பில்லாத் தொழிலாளர் காங்கிரசுக்காக தோழர் அக்செல்ரோத் நடத்தும் கிளர்ச்சி சம்பந்தமாய், ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அணிகளில் ஒரு போக்கு தோன்றியிருப்பதாலும் (லாரின், ஷெக்லோ, எல், இவனேவ்ஸ்கி, மீரவ் ஆகியோராலும் ஒதேஸ்ஸா வெளியீடான ஒஸ்வொபழ்தேனியே துருதாவாலும் இப்போக்கு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது); சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை அழித்துவிட்டு அதனிடத்தில் கட்சி சார்பற்ற பாட்டாளி வர்க்க அரசியல் நுறுவனத்தை[29] அமைப்பதே இந்தப் போக்கின் நோக்கமாய் இருப்பதாலும்;

2. இதன்றி, கட்சிக்கு வெளியிலும், உண்மையில் கட்சியை எதிர்த்தும், இதே கட்சி சார்பில்லாத் தொழிலாளர் காங்கிரஸ், கட்சி சார்பில்லா நிறுவனங்கள் என்ற கோஷத்துடன் பாட்டாளி வர்க்கத்தினிடையே அராஜக-சிண்டிகலிஸ்டுக் கிளர்ச்சி நடத்தப்படுவதாலும் (மாஸ்கோவில் ''சயூஸ்னயெ தியேலொ'' ஏடும் அதன் கோஷ்டியும், ஒதேஸ்ஸாவில் அராஜகவாதப் பத்திரிகைகளும், இன்ன பிறவும்);

3. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நவம்பர் மாத அனைத்து ருஷ்ய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் மீறி, கட்சி சார்பில்லா நிறுவனங்களை அமைத்திடும் நோக்கத்தோடு நம் கட்சியினுள் வரி

சையாய்ச் சீர்குலைவுச் செயல்கள் நடைபெறுவது தெரிவதாலும்;

4. மறுபுறத்தில் தொழிலாளி வர்க்கத்திடையே சமூக-ஜனநாயகச் செல்வாக்கை விரிவாக்குவதற்காகவும் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் இயக்கத்தை வலுப்பெறச் செய்வதற்காகவும், அதிகமாகவோ குறைவாகவோ புரட்சிகர எழுச்சி கடுமையாயுள்ள காலங்களில், தொழிலாளர்களது பிரதிநிதிகளின் சோவியத்துகளைப் போன்ற கட்சி சார்பில்லாக் குறிப்பிட்ட சில நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் உத்தேசத்தை ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி ஒருபோதும் நிராகரித்து விடவில்லை என்பதாலும் (தொழிலாளர் காங்கிரஸ் குறித்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கமிட்டியும் மாஸ்கோ கமிட்டியும் ஏற்ற செப்டம்பர் தீர்மானங்களை புரொலெத்தாரி இதழ்கள் 3,4ல் காண்க);

5. சமூக-ஜனநாயக இயக்கத்தை வளர்த்துச் செல்லும் பொருட்டு, தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்துகள், தொழிலாளர் தூதுக் குழுவினர் சோவியத்துகள் முதலானவை போன்ற கட்சி சார்பில்லா தொழிலாளி வர்க்கப் பிரதிநிதித்துவ நிறுவனங்களை அமைத்திட அல்லது பயன்படுத்திக் கொள்ள தற்போது தொடங்கியிருக்கும் புத்தெழுச்சி வாய்ப்பளிப்பதாலும்; அதேபோதில் பாட்டாளி வர்க்க வெகு ஜனங்களிடையே சமூக-ஜனநாயகச் செயற்பாடு ஒழுங்காகவும் பயனுள்ளவாறும் விரிவாகவும் ஏற்பாடு செய்யப்படுமாயின் இத்தகைய நிறுவனங்கள் உண்மையில் தேவையற்றவையாகி விடும் என்பதை சமூக-ஜனநாயகக் கட்சி அமைப்புக்கள் நினைவில் கொண்டிருக்க வேண்டுமாதலாலும்;—

இம்மாநாடு,

1. பாட்டாளி வர்க்கத்தினிடையே அராஜக-சிண்டிகலிஸ்டு இயக்கத்தை எதிர்த்தும் சமூக-ஜனநாயகக் கட்சியினுள் அக்செல்ரோதின், லாரினின் கருத்துக்களை எதிர்த்தும் மிகவும் வைராக்கியமான சித்தாந்தப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும்;

2. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உள்ளிருந்து கொண்டு கட்சி நிறுவனத்தைப் பலவீனப்படுத்தவோ, சமூக-ஜனநாயகக் கட்சிக்குப் பதில் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி சார்பில்லா அரசியல் நிறுவனங்களைத்

தோற்றுவிப்பதற்காக அதைப் பயன்படுத்திக் கொள்ளவோ செய்யப்படும் எல்லா விதமான சீர்குலைவு முயற்சிகளையும் வாய்வீச்சு முயற்சிகளையும் எதிர்த்து மிகவும் வைராக்கிய மான போராட்டம் நடத்த வேண்டும் என்றும்;

3. சமூக-ஜனநாயகக் கட்சி நிறுவனங்கள் அவசியம் ஏற்படும்போது அனைத்துக் கட்சித் தொழிலாளர் தூதுக் குழுவினரது சோவியத்துகளிலும், தொழிலாளர் பிரதிநிதி களது சோவியத்துகளிலும், இந்த நிறுவனங்களுடைய பிரதி நிதிகளின் காங்கிரசுகளிலும் பங்கெடுத்துக் கொள்ளலாம் என்றும், இத்தகைய அமைப்புகளுக்கு ஏற்பாடு செய்யலாம் என்றும், ஆனால் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை வளர்த்திடுவதற்காகவும் வலுவாக்குவதற்காகவும் மட்டுமே இது செய்யப்பட வேண்டும் என்றும்;

4. பாட்டாளி வர்க்கத்தின் விரிவான திரளினரிடம் சமூக-ஜனநாயகக் கட்சிக்குள்ள செல்வாக்கை விரிவாக்கும் பொருட்டும் பலப்படுத்தும் பொருட்டும், ஒருபுறம் தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சமூக-ஜனநாயகப் பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் நடத்துவதற்குமான முயற்சி களை அதிகமாக்குவதும், மறுபுறம், மேலும் பெரும் பெரும் தொழிலாளி வர்க்கப் பிரிவுகளைக் கட்சி அமைப்புகளுடைய எல்லா வகையான செயற்பாடுகளிலும் ஈடுபடும்படி ஈர்ப்ப தும் அத்தியாவசியமானது என்றும் உறுதியாய் அறிவிக்கிறது.

1907 பிப்ரவரி 15-18ல்
(பிப்ரவரி 28—மார்ச் 3)
எழுதப்பட்டது

புரொலெத்தாரி,
இதழ் 14ல்,
1907 மார்ச் 4ல்
வெளியானது

நூல் திரட்டு,
தொகுதி 15,
பக்கங்கள் 8-11

# தற்போதைய நிலைமை பற்றிய மதிப்பீடு

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் வரப்போகும் அனைத்து ருஷ்யக் காங்கிரசினது நிகழ்ச்சி நிரலில் ''தற்போதைய நிலைமையும் கட்சியின் பணிகளும்'' என்னும் பிரச்சினை இடம் பெற்றிருக்கிறது. இப்பிரச்சினை அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை. நமது கட்சி நிறுவனங்கள் இந்தப் பிரச்சினை குறித்து முறையாய் விவாதிக்கத் தொடங்கிவிட்டன (இத்துறையில் ஏனைய எல்லா மையங்களையும்விட மாஸ்கோவும் செயின்ட் பீட்டர்ஸ்பர்கும் முன்னிலையில் உள்ளன).

விடுதலை இயக்கத்தில் செயலடங்கி ஒய்ந்த இடைநேரத்துக்கும், தலைவிரித்தாடும் பிற்போக்குக்கும், ஜனநாயகவாதிகளது முகாமில் துரோகச் செயல்களுக்கும் மனச்சோர்வுக்கும், சமூக-ஜனநாயக நிறுவனங்களில் நெருக்கடிக்கும் அரைகுறைத் தகர்வுகளுக்குமான தற்போதைய காலகட்டம், நமது புரட்சியின் முதலாவது இயக்கத்தின் பிரதான படிப்பினைகளை யாவற்றுக்கும் முதலாய்க் கணக்கில் எடுத்துக் கொள்வதன் ஜீவாதார முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறது. இங்கு நாம் மனதிற் கொண்டிருப்பது அதன் குறுகிய பொருளிலான போர்த்தந்திரப் படிப்பினைகளை அல்ல, புரட்சியின் பொதுவான படிப்பினைகளையே யாவற்றிலும் முக்கியமாய் மனதிற் கொண்டுள்ளோம். இதற்கிணங்க நம்முன் எழும் முதற் கேள்வி இதுவே: 1904க்கும் 1908க்கும் இடையில்[30] ருஷ்யாவில் வர்க்கங்களது கோஷ்டிப் பிரிவினையிலும்

அரசியலில் சக்திகளது பரஸ்பர நிலேயிலும் ஏற்பட்டிருக்கும் எதார்த்த மாறுதல்கள் யாவை? பிரதான மாறுதல்களை எங்கள் கருத்துப்படி பின்வரும் ஐந்து கூறுகளாய்க் குறுகச் செய்துவிடலாம்: (1) விவசாயிப் பிரச்சினையில் எதேச்சாதிகாரம் பின்பற்றும் நிலக் கொள்கையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; பழைய கிராமச் சமுதாயங்களை ஆதரிப்பதும் உறுதிபெறச் செய்வதும் விட்டொழிக்கப்பட்டு அதனிடத்தில் இச்சமுதாயங்கள் போலீஸ் முறைகள் கொண்டு சீரழிக்கப்படுதலேயும் சூறையாடப்படுதலேயும் துரிதமாக்கும் கொள்கை[31] பின்பற்றப்படுகிறது. (2) கறுப்பு நூற்றுவரான பிரபுக்கள், பெரு முதலாளிகளது பிரதிநிதித்துவ ஏற்பாடுகளில் பிரமாதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது: பிரபுக்கள், வர்த்தகர்களது தேர்ந்தெடுக்கப்பட்ட பழைய ஸ்தல கமிட்டிகளுக்குப் பதிலாய், அனைத்து ருஷ்ய அளவில் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்குத் தனிப்பட்ட முறையில் எப்பொழுதாவது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்குப் பதிலாய் இவ்வர்க்கங்களுக்கு முழுநிறை முதன்மை நிலே அளித்திடும் தனியொரு பிரதிநிதித்துவ அமைப்பாகிய அரசாங்க டூமா நிறுவப்பட்டிருக்கிறது. ''அரசியல் சட்ட'' மன்றம் என்பதாய் எதேச்சாதிகாரத்தைப் பலப்படுத்தும் பொருட்டு நிறுவப்பட்ட இதில் அறிவுத்துறைத் தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கான பிரதிநிதித்துவம்—விவசாயிகள், பாட்டாளி வர்க்கத்தினர் இவர்களுக்கானதைப்பற்றி கூறவே வேண்டாம்— எடைநிறைவுக் குன்றிமணியாகவும் துணையங்கமாகவும் செயல்பட வேண்டிய நிலேக்குச் சிறுமை செய்யப்படுகிறது. (3) வர்க்கங்கள் முதன் முதலாய் இக்காலத்தில் பகிரங்க அரசியல் போராட்டத்தில் தம்மிடையே திட்டவட்டமாய்ப் பிளந்து தம்மிடையே தெளிவான உருவரைகளை உண்டாக்கிக் கொண்டன: தற்போது பகிரங்கமாகவும் இரகசியமாகவும் இருந்து வரும் அரசியல் கட்சிகள் (இன்னும் கூருராய்ச் சொல்வதெனில் ஓரளவு இரகசியமாயுள்ள கட்சிகளென வேண்டும், ஏனெனில் புரட்சிக்குப் பிற்பாடு ருஷ்யாவில் முற்றிலும் ''இரகசியமான'' கட்சிகள் எவையும் இல்லே) இதன் முன் கண்டும் கேட்டுமிராத துல்லியத்துடன் வர்க்கங்களது நலன்களேயும் கருத்தோட்டங்களேயும் பிரதிபலிக்கச் செய்கின்றன. இந்த மூன்று ஆண்டுகளில் இவ்வர்க்கங்

கள் முந்திய அரை நூற்றாண்டில் பெற்றதைக் காட்டிலும் நூறு மடங்கு கூடுதலான முதிர்ச்சி பெற்றிருக்கின்றன. கறுப்பு நூற்றுவர் பிரபுக்குலமும் தேசிய-''மிதவாத'' முதலாளித்துவ வர்க்கமும் குட்டிபூர்ஷுவா ஜனநாயகமும் (துருதொவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினராலான அவர்களது சிறிய இடதுசாரியும்) மற்றும் பாட்டாளி வர்க்க சமூக-ஜனநாயகமும் இந்தக் காலகட்டத்தில் தமது வளர்ச்சியின் ''கருக்'' கட்டத்தைக் கடந்துள்ளதோடு வரப்போகிற பல ஆண்டுகளில் தமக்குரிய இயல்பினை, சொற்களில் அல்ல, எதார்த்த உண்மை மூலமும் வெகுஜனச் செயற்பாடுகள் மூலமும் வரையறை செய்து கொண்டுவிட்டன. (4) புரட்சிக்கு முன்பெல்லாம் மிதவாத, மிதவாத-நரோதினிக் ''சமூகமாய்'', அல்லது பொதுப்பட ''தேசத்தின்'' பிரதிநிதியாய், ''அறிவொளி படைத்த பகுதியாய்க்'' கருதப்பட்டு வந்தவர்கள்—ஸெம்ஸ்த்வொக்களிலும்[32] பல்கலைக் கழகங்களிலும் ''தரமான'' எல்லாப் பத்திரிகைகளிலும் இன்ன பிறவற்றிலும் நிறைந்து முழுமொத்தமாகவும் ஒருபடித்தானதாகவும் தோன்றிய வசதி படைத்த பிரபுக்களது, அறிவுத் துறையினரது ''எதிர்த்தரப்பின்'' பெருந் திரளானோர்—இப்புரட்சியின்போது முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்தவாதிகளாகவும் ஆதரவாளர்களாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டனர்; சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின், ஜனநாயக விவசாயிகளின் வெகுஜனப் போராட்டம் சம்பந்தமாய் இன்று எல்லோராலும் எதிர்ப்புரட்சி நிலை என்பதாய் ஏற்கப்படக் கூடியதான ஒரு நிலையை மேற்கொண்டுவிட்டனர். எதிர்ப்புரட்சி மிதவாத முதலாளித்துவ வர்க்கம் தோற்றமெடுத்து வளர்ந்து வருகிறது—இந்த உண்மையைச் சட்டபூர்வமான ''முற்போக்குப்'' பத்திரிகைகள் மறுப்பதாலோ, நமது சந்தர்ப்பவாதிகளாகிய மென்ஷிவிக்குகள் இது குறித்து மௌனம் சாதிப்பதாலோ, இதைப் புரிந்து கொள்ளாததாலோ, இது உண்மையாய் இல்லாமற் போய்விடவில்லை. (5) ''பொது வேலைநிறுத்தம்'', நிலப்பிரபுக்களின் வெளியேற்றம், அவர்களுடைய பண்ணைகள் தீக்கிரையாக்கப்படுதல், ஆயுதமேந்திய பகிரங்க எழுச்சி ஆகியவை அடங்கலான மெய்யாகவே வெகுஜனங்களாலான நேரடியான புரட்சிப் போராட்டத்தின் மிகப் பல்வேறுபட்ட வடிவங்களிலும்

பொது மக்களில் இலட்சோப இலட்சக் கணக்கானேர் நடைமுறை அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அரசியல் நெருக்கடியின் வளர்ச்சிப் போக்கு, இந்த வளர்ச்சியின் வேகம், வெகுஜனங்களால் நடைமுறையில் படைக்கப்படும் வரலாற்றின் இயக்கவியல் ஆகிய இவை குறித்து முன்பு நிலவிய கருத்துக்களில் பலவற்றையும் அடியோடு மாறச் செய்துவிட்ட இந்த உண்மையின் மகத்தான முக்கியத்துவத்தைப் புரட்சிக்கு முன்னரே புரட்சியாளராகவோ, வர்க்க உணர்வு படைத்தவராகவோ இருந்த தொழிலாளரால் உடனடியாக முழு அளவுக்கு உணர முடியாது. வெகுஜனங்களால் இந்த அனுபவம் மதிப்பீடு செய்யப்படுதல் வெளியே புலப்படாமலும் துன்பகரமாகவும் மெதுவாகவும் நடந்தேறும் ஒரு நிகழ்ச்சிப் போக்கு. இந்நிகழ்ச்சிப் போக்கு நாட்டின் அரசியல் வாழ்வில் மேற்பரப்பிலே நடைபெறும் பல நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மிக முக்கியப் பங்காற்றுவதாகும். ஆனால் இந்த மேற்பரப்பு நிகழ்ச்சிகள்தான் சிறுபிள்ளைகளை—அரசியலில் பிள்ளைப் பிராயத்தினராய் இருப்பினும் சில சமயங்களில் வயதில் இவர்கள் மிகவும் ''மூப்படைந்தவர்களாவர்'' — மயங்கச் செய்கின்றன. இந்தக் காலகட்டம் முழுவதையும் உற்றுநோக்கும் பட்சத்தில், இதில் பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் புரட்சி பூராவிலும், ஆர்ப்பாட்டங்களிலிருந்து தொடங்கி எழுச்சி நடத்தியதிலிருந்து (காலக் கிரமப்படி கூறுவோமாயின்) ''பாராளுமன்றச்'' செயற்பாடு வரையில், போராட்டத்தின் எல்லாத் துறைகளிலுமே தலைமைப் பாத்திரம் ஆற்றினர் என்பது எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படுகிறது.

இவைதாம் அக்டோபருக்கு முந்தைய[33] ருஷ்யாவுக்கும் இன்றைய ருஷ்யாவுக்குமிடையே பெரும் பிளவை உண்டாக்கியுள்ள எதார்த்த மாறுதல்கள். இவைதாம் நமது வரலாற்றில் செழுமையான பல நிகழ்ச்சிகளுக்குமுரிய இந்த மூன்று ஆண்டுக் காலத்தின் பலன்கள்—சுருக்கமான வடிவில்தான் இங்கு இவற்றைத் தந்துள்ளோம், அதாவது மிகவும் முக்கியமானவற்றை, அத்தியாவசியமானவற்றை ஒரு சில வார்த்தைகளில் குறிப்பிடுவது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் குறிப்பிட்டுள்ளோம். இனி இந்தப் பலன்களால் போர்த்தந்திரத் துறையில் வலியுறுத்தப்படும் முடிவுகளை ஆராயலாம்.

எதேச்சாதிகாரம் பின்பற்றும் நிலக் கொள்கையில் ஏற்படும் மாறுதல் ருஷ்யாவைப் போன்ற ஒரு ''விவசாயி'' நாட்டுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த மாறுதல் அகஸ்மாத்தாய் நேர்ந்ததல்ல, அமைச்சரகங்களது செயல்முறைகளில் காணக்கூடிய அலைவுகளோ, அதிகாரவர்க்கத்தின் கண்டுபிடிப்போ அல்ல. அல்லவே அல்ல. நிலத் துறை போனப்பர்ட்டிசத்தை நோக்கியமைந்த, விவசாயிகளது நிலவுடைமை உறவுகளின் துறையில் மிதவாதக் கொள்கையை (பொருளாதார அர்த்தத்தில், அதாவது முதலாளித்துவக் கொள்கையை) நோக்கியமைந்த ஆழ்ந்ததொரு ''பெயர்ச்சி'' ஆகும். போனப்பர்ட்டிசம் என்பது எளியதும் உறுதியானதுமான தனது பழைய தந்தைவழி அல்லது பிரபுத்துவ அடித்தளத்தை இழந்துவிட்ட முடியரசு கையாளும் தந்திர முறையாகும்—குப்புற விழாதிருக்கும் பொருட்டுக் கழைக் கூத்தாடிக் கயிற்றில் நடந்து வித்தை காட்டும்படி, அரசாளும் பொருட்டு ஆசை காட்டும்படி, நேசத்தைப் பெறும் பொருட்டு லஞ்சம் தரும்படி, முற்றிலும் துப்பாக்கியை மட்டுமே ஆதாரமாய்க் கொள்ளாதிருக்கும் பொருட்டு சமுதாயத்தின் கழிசடைப் பகுதிகளை, பக்காத் திருடர்களையும் எத்தர்களையும், கட்டித் தழுவிக் கொள்ளும்படி நேர்ந்துவிட்ட முடியரசு கையாளும் தந்திர முறையாகும். எந்த முதலாளித்துவ நாட்டிலும் முடியரசுக்கு எதார்த்த வழியில் அவசியமாகிவிடும் பரிணாம வளர்ச்சியே போனப்பர்ட்டிசம். தற்கால ஐரோப்பிய வரலாற்றின் பல உண்மைகளையும் கொண்டு மார்க்சும் எங்கெல்சும் இதை நிலைநாட்டினர். ருஷ்யாவில் கிராமச் சமுதாயம் முதலாளித்துவத் திசையில் வளர்ச்சி பெறுதிருக்குமாயின், எதேச்சாதிகாரமானது கட்டித் தழுவிக் குலாவத் தொடங்கி, ''செல்வம் திரட்டுங்கள்!'', ''கிராமச் சமுதாயத்தைச் சூறையாடுங்கள், ஆனால் எனக்கு ஆதரவு அளியுங்கள்!'' என்று கூறுவதற்கு ஏற்றதான கூறுகள் இந்தக் கிராமச் சமுதாயத்தில் தொடர்ந்து உருவாகாதிருக்குமாயின், ஸ்தலீப்பினுடைய நிலத் துறைப் போனப்பர்ட்டிசம்—இந்த விவகாரத்தில் கறுப்பு நூற்றுவர் நிலப்பிரபுக்களும் அக்டோபரிஸ்டு[34] முதலாளித்துவ வர்க்கத்தாரும் முழு உணர்வுடனும் நிலையாகவும் ஸ்தலீப்பினை ஆதரிக்கின்றனர்—தற்போது நீடித்துள்ளது போல

இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பது போகட்டும், வெளித் தோன்றக்கூட முடியாமற் போயிருந்திருக்கும். ஆகவே ஸ்தலீப்பினுடைய நிலக் கொள்கையின் போனபர்ட்டிஸ்டு முறைகளேயும், மற்றும் அதன் முதலாளித்துவ (அதாவது மிதவாத) சாராம்சத்தையும் கணக்கில் எடுக்காமலே இக் கொள்கை குறித்துச் செய்யப்படும் எந்த மதிப்பீடும் தீர் மானமாய்த் தவருனதாகவே இருக்கும்.

உதாரணமாய் நமது மிதவாதிகள், ஸ்தலீப்பினுடைய நிலக் கொள்கை போனபர்ட்டிசமே ஆகும் என்று தெளி வின்றி அரைகுறையாய்த் தாம் புரிந்து கொள்வதை இந்தக் கொள்கையின் போலீஸ் இயல்புமீதும், விவசாயிகளது விவ காரங்களில் அதிகாரிகளின் அசட்டுத்தனமான தலையீடு மீதும், இன்ன பிறவற்றின்மீதும் அவர்கள் தொடுக்கும் தாக்கு தல்களின் மூலம் வெளியிடுகிருர்கள். ஆளுல் காடேட்டுகள் நமது கிராம வாழ்க்கையின் ''தொன்னெடுங் கால'' அடித் தளங்கள் பலாத்காரமாய்த் தகர்த்தெறியப்படுவதாய் அழுது புலம்பும் போது, அவர்கள் பிற்போக்குவாத அழுகுணிகளாகி விடுகின்றனர். பழைய ருஷ்யக் கிராமப்புறத்தின் அடித் தளங்கள் பலாத்காரமாகவும் புரட்சிகரமாகவும் தகர்க்கப் படாதவரையில் ருஷ்யா வளர்ச்சிபெற முடியாது. போராட் டம் நடைபெற்று வருகிறது—இதில் பங்கெடுத்துக் கொள்வோரில் மிகப் பலரும் இதை உணராவிட்டாலும்— விவசாயிகளுக்கு எதிரான நிலப்பிரபுக்களது முடியரசின் பலாத்காரமாய் இருக்கப் போகிறதா, அல்லது நிலப்பிரபுக் களுக்கு எதிரான விவசாயிகளது குடியரசின் பலாத்காரமாய் இருக்கப் போகிறதா என்பதுதான் இந்தப் போராட்டம்; இந்த இரண்டில் எது நிகழ்வதாயினும், முதலாளித்துவ வகையிலான—வேறு எவ்வகையிலானதும் அல்ல—நிலப் புரட்சி ருஷ்யாவில் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகும். ஆளுல் முதலாவது நிகழ்வில் இப்புரட்சி மந்த கதியில் மெது வாய் நடைபெறுவதாகவும் வேதனை மிக்கதாகவும் இருக்கும்; இரண்டாவதில் வேகமானதாகவும் விரிவானதாகவும் தடங் களின்றி நடைபோடுவதாகவும் இருக்கும். இந்த இரண்டாவது பாதைக்காகத் தொழிலாளர் கட்சி நடத்தும் போராட்டம் நிலத் துறையிலான நமது வேலைத்திட்டத்தில் வெளி யிடப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது—''ஊராட்சி

யின் உடைமையாக்குதல்'' என்ற அர்த்தமற்ற கருத்து முன் வைக்கப்படும் பகுதியில் அல்ல, நிலப்பிரபுக்களின் நிலங்கள் யாவற்றையும் பறிமுதல் செய்ய வேண்டுமெனக் கூறும் பகுதியில் இது செய்யப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுக் கால அனுபவத்துக்குப் பிற்பாடு இவ்விதம் பறிமுதல் செய்வதற் கான போராட்டத்துக்கும் குடியரசுக்கான போராட்டத்துக்கு முள்ள இணைப்பைக் காண முடியாதோர் ஒருவேளை மென் ஷிவிக்குகளிடையில் மட்டும் வேண்டுமானுல் இருக்கக் கூடும். ஸ்தலீப்பினது நிலக் கொள்கை நீண்ட நெடுங் காலத்துக்கு அனுசரிக்கப்படுமாயின், கிராமப்புறத்தில் அது நிலவுடைமை உறவுகள் யாவற்றையும் முற்றிலும் முதலாளித்துவ வழிகளில் திருத்தியமைத்துவிடுமாயின், அப்பொழுது அது நம்மை முதலாளித்துவ சமுதாயத்தில் நிலத் துறை வேலைத் திட்டம் எதுவும் வேண்டுமென்ற கருத்தையே கைவிடுமாறு நிர்ப்பந்தம் செய்யலாம் (இது நாள் வரை மென்ஷிவிக்கு களுங்கூட, மென்ஷிவிக்களைச் சேர்ந்த செரெவானின்களுங் கூட, நமது நிலத் துறை வேலைத்திட்டத்தை நிராகரிக்கும் நிலையை வந்தடைந்தாகவில்லை). ஆனுல் ஸ்தலீப்பினது கொள்கையால் எவ்வகையிலும் இன்று நம்மை நமது போர்த் தந்திரத்தை மாற்றிக் கொள்ளுமாறு செய்ய முடியாது. ''நிலப்பிரபுக்களின் நிலங்கள் யாவற்றையும் பறிமுதல் செய்ய வேண்டும்'' என்பது நமது வேலைத்திட்டத்தில் இருந்து வருவதால், இதிலிருந்து பெறப்படும் புரட்சிகரப் போர்த் தந்திரம் (''புரட்சிகர'' என்னும் சொல்லின் நேரடியான, குறுகலான பொருளில்) என்னவென்பதைப் பச்சைக் குழந் தைகளால் மட்டுமே பார்க்கத் தவற முடியும். ஸ்தலீப் பினது கொள்கை ''கையாலாகாததாய்'' விடுமாயின், புத் தெழுச்சி நெருங்கிவிட்டதாகவும்—இதற்கு எதிர் மாருன நிலையில் தொலைவிலிருப்பதாகவும்—இந்தப் பிரச்சினையை எடுத்துரைப்பது தவருகும். போனப்பர்ட்டிஸ்டு முறைக ளின் தோல்வியானது கிராமச் சமுதாயத்தைக் குலாக்குகள் சூறையாடுவதற்குரிய கொள்கையின் தோல்வியைக் குறிப்ப தாகாது. இதற்கு எதிர்மாருன நிலையில், அதாவது ஸ்தலீப் பினுக்குத் தற்போதும் வரப்போகிற ஆண்டுகளிலும் ''வெற்றி'' கிட்டுமாயின், அது விவசாயிகளிடையிலான போராட்டத்தைத் தணியச் செய்துவிடாது, மாருகக் கட்டாய

மாய்க் கொழுந்துவிட்டு எரியவே செய்யும். ஏனெனில் நீண்ட, மிக நீண்ட பாதையிலேதான் ''இலக்கை''—அதாவது முழுக்க முழுக்க முதலாளித்துவ முறையிலான விவசாயிப் பொருளாதாரம் முடிவாகவும் முழுநிறைவாகவும் உறுதியாவதை—வந்தடைய முடியும். உடனடியாய் வருகிற ஆண்டுகளில் ஸ்தலீப்பினது ''வெற்றியானது'' அதிகம் போனுல் உணர்வு பூர்வமாகவே எதிர்ப்புரட்சி தன்மையோரான அக்டோபரிஸ்டு விவசாயிகளது பகுதி ஒன்றைத் தோன்றச் செய்யலாம். ஆனுல் வசதி படைத்த ஒரு சிறுபான்மை இவ்விதம் அரசியல் உணர்வு கொண்ட, ஒன்றுபட்ட சக்தியாய் மாற்றப் படுவதால், இந்தச் சிறுபான்மைக்கு எதிராய் ஜனநாயக வெகுஜனங்களது அரசியல் உணர்வின் வளர்ச்சிக்கும் அவர்களது ஒற்றுமையின் வளர்ச்சிக்கும் தவிர்க்க முடியாதவாறு பிரம்மாண்ட ஊக்கம் ஏற்படவே செய்யும். ''சுறு மீன்களுக்கும்'' ''சமுதாயத்துக்கும்'' இடையே நடைபெறும் தானுகவே மூண்டெழும் தன்முனைப்புத் தன்மையதான, தொடர்ச்சியற்ற, சிதறலான, குருட்டுப் போராட்டமானது அக்டோபரிஸ்டுகளுக்கும் துருதொவிக்குகளுக்கும் இடையிலான உணர்வு படைத்த, பகிரங்கப் போராட்டமாய் மாற்றப்படுவதைக் காட்டிலும் சமூக-ஜனநாயகவாதிகளான நமக்குச் சிறந்தது வேறு எதுவும் இல்லை.

டூமா பற்றிய பிரச்சினைக்கு வருவோம். கறுப்பு நூற்றுவரது இந்த ''அரசியல் சட்ட'' மன்றமானது வரம்பில்லா முடியரசு போனபர்ட்டிசத்தை நோக்கிச் செல்வதன் மற்றுமொரு வளர்ச்சியே என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. போனபர்ட்டிசத்தின் மேலே நாம் குறிப்பிட்ட எல்லா இயல்புகளும் தற்போதைய தேர்தல் சட்டத்திலும், கறுப்பு நூற்றுவர் பிரதிநிதிகளுக்கும் மற்றும் அக்டோபரிஸ்டுகளுக்கும் தரப்படும் மோசடியான பெரும்பான்மையிலும், ஐரோப்பாவைப் பின்பற்றுவது போன்ற ஏமாற்று நடிப்பிலும், கடன்கள் செலவிடப்படுதலை ''தேசப் பிரதிநிதிகள்'' மேற்பார்வை செய்வதாய்ப் பசப்பி, போட்டி போட்டுக் கொண்டு கடன்கள் பெறுவதிலும், எதேச்சாதிகாரமானது அதன் நடைமுறைக் கொள்கையில் டூமாவின் எல்லா விவாதங்களையும் தீர்மானங்களையும் கவனியாது அறவே புறக்கணிப்பதிலும் தெட்டத் தெளிவாய் புலப்படுகின்றன. நடைமுறையில்

தலைமையாதிக்கம் புரிந்து வரும் கறுப்பு நூற்றுவர் எதேச்சாதிகாரத்துக்கும் முதலாளித்துவ ''அரசியல் சட்டம்'' என்பதான ஒப்பனைச் சிங்காரிப்புக்கும் இடையிலுள்ள முரண்பாடு மேலும் மேலும் கண்கூடாய் வெளிப்பட்டு, தன்னுடன் கூட ஒரு புதிய புரட்சிகர நெருக்கடியின் கூறுகளையும் கொண்டு வருகிறது. டூமாவின் துணை கொண்டு எதேச்சாதிகாரம் மூடி மறைக்கப்பட்டு புத்தாடை அணிவிக்கப்பட்டு சிங்காரிக்கப்படவிருந்தது. கறுப்பு நூற்றுவர்-அக்டோபரிஸ்டு டூமா அதன் வாழ்வின் ஒரு நாளுங்கூட தவறாது செயல் வழியில் நமது அரசு அதிகாரத்தின் உண்மைத் தன்மையையும் அதன் மெய்யான வர்க்க அடித்தளங்களையும் அதன் போனப்பர்ட்டிசத்தையும் மேலும் மேலும் வெளிப்படுத்தி அம்பலமாக்கி வெட்ட வெளிச்சமாக்குகிறது. வரம்பற்ற முடியரசானது அரசியல் சட்ட வழியிலான முடியரசாய் மாறிச் செல்வதன் அர்த்தம் குறித்து எங்கெல்ஸ் கூறும் பொருட் செறிவு மிக்க உரையினை (1883 ஆகஸ்டு 27ல் பெர்ன்ஷ்டைனுக்கு அவர் எழுதிய கடிதத்தில்) இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூராதிருக்க முடியாது. இத்தகைய ஒரு மாற்றத்தில் பொதுவில் மிதவாதிகளும் குறிப்பாய் ருஷ்யக் காடேட்டுகளும் அபக்கியாதி பெற்ற தமது ''சமாதான பூர்வமான'' முன்னேற்றத்தையும் இம்முன்னேற்றத்துக்கான உத்தரவாதத்தையும் காணுகின்றனர். ஆனால் எங்கெல்ஸ் பிரபுக்குலத்தாருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தாருக்குமிடையே தீர்மானகரமான போராட்டம் நடைபெறுவதற்கு அனுசரணையான ஓர் அரசு வடிவமாய் அரசியல் சட்டமுறை முடியரசு ஆற்றும் வரலாற்றுப் பணியினைச் சுட்டிக்காட்டினார். எங்கெல்ஸ் எழுதியதாவது: ''இந்தப் போராட்டம் [பிரபுத்துவத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் நடைபெறும் போராட்டம்] அரசியல் சட்டமுறை முடியரசில் (இங்கிலாந்து, பிரான்ஸ் 1789-92, 1815-30) மட்டுமே ஒழிய, வரம்பில்லாப் பழைய முடியரசில் தீர்மானகரமான ஒரு முடிவு கிட்டும்படி எப்படி நடந்தேற முடியாதோ, அதே போல முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டம் குடியரசில் மட்டும்தான் தீர்மானகரமாய் நடந்தேற முடியும்''. இங்கு எங்கெல்ஸ் 1816ஆம் ஆண்டு பிரான்சுக்கும்—பிற்போக்கு எதிர்ப்புரட்சி அரசு மன்றமாகிய பிரபல Chambre

introuvable[35], புரட்சியை எதிர்த்துக் கொடும் பயங்கரத்தை ஆதரித்து, நமது மூன்ருவது டூமாவுக்குச் சளைக்காததெனக் கூறும்படியான பலாத்காரத்துடன் தலைவிரித்து ஆடிய பிரான்சு அது—அரசியல் சட்டமுறை முடியரசு என்னும் பட்டம் அளிப்பது குறிப்பிடத்தக்கது. இதன் பொருள் என்ன? வரம்பில்லா எதேச்சாதிகாரம் புரட்சியை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் அதற்கு ஆதரவளிக்கும் மன்றங்களாகிய நிலப்பிரபுக்கள், முதலாளிகளது பிரதிநிதிகளின் பிற்போக்கான மன்றங்களை எங்கெல்ஸ் மெய்யான அரசியல் சட்டமுறை மன்றங்களாய் அங்கீகரிக்கிருர் என்ரு பொருள்? இல்லை. அரசியல் சட்டத்தைப் பொய்க் கூற்ருக்கும் மன்றங்கள் மெய்யானதோர் அரசியல் சட்டத்துக்கான போராட்டத்தை மூண்டெழச் செய்து புதிய புரட்சிகர நெருக்கடிகளது வளர்ச்சியில் ஒரு கட்டமாய் அமையும்படியான வரலாற்று நிலைமைகள் தோன்றக்கூடும் என்பதே இதன்பொருள். நமது புரட்சியின் முதலாவது எழுச்சியியக்கத்தின்போது மெய்யானதோர் அரசியல் சட்டத்தை எதேச்சாதிகாரத்துக்கு ஏற்புடையதாக்குவது சாத்தியமே என்பதாய்ப் பெரும்பான்மையான மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர். மக்களிடையே நிலவிய இந்த நம்பிக்கையை இடையருது நீடிக்கச் செய்வதன் அடிப்படையில் காடேட்டுகள் தமது கொள்கை அனைத்தையுமே வகுத்தமைத்துக்கொண்டனர், இவ்விவகாரத்தில் துருதொவிக்குகள் குறைந்தது பாதி அளவுக்கேனும் காடேட்டுகளைப் பின்பற்றிச் சென்றனர். இப்பொழுது எதேச்சாதிகாரமானது தனது மூன்ருவது டூமாவின் மூலம் எவ்விதமான ''அரசியல் சட்டம்'' தனக்கு ''ஏற்புடையதாக'' முடியுமென்பதை நடைமுறையில் மக்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறது—இவ்வழியில் அது எதேச்சாதிகாரத்துக்கு எதிரான மேலும் விரிவான, மேலும் வைராக்கியமான ஒரு போராட்டத்தை நெருங்கி வரச் செய்கிறது.

''எதேச்சாதிகாரம் ஒழிக'' என்ற நமது பழைய கோஷத்துக்குப் பதிலாய் ''மூன்ருவது டூமா ஒழிக'' என்ற கோஷத்தை ஏற்பது முற்றிலும் தவருகுமென்பது மேற்கூறியதிலிருந்து புலனுவதை இங்கு குறிப்பிடலாம். ''டூமா ஒழிக'' என்னும் கோஷம் எந்நிலைமைகளில் அர்த்தமுடையதாக முடியும்? நேரடியான உள்நாட்டு யுத்தம் மூளும் நிலைக்கு வளர்ந்து

விட்ட மிகவும் உக்கிரமான புரட்சிகர நெருக்கடிக்குரிய ஒரு காலகட்டத்தில் சீர்திருத்தத்தை நாடும் சமரச மனப் பான்மையதான மிதவாத டூமாவை நாம் எதிர்நோக்குவதாய்க் கொள்வோம். இத்தகைய ஒரு தருணத்தில் ''டூமா ஒழிக'' என்பது, அதாவது ஜாருடன் சமாதான பூர்வமான பேச்சு வார்த்தைகள் ஒழிக, ''சமாதானம்'' எனும் ஏமாற்று ஏற் பாடு ஒழிக, நேரடித் தாக்குதலுக்கு அறைகூவல் விடுப் போமாக என்பது நமது கோஷமாகிவிடலாம். இனி இதற்கு மாருய், காலத்துக்கு ஒவ்வாத தேர்தல் சட்டத்தின்படி தேர்ந் தெடுக்கப்பட்ட பழுத்த பிற்போக்கான டூமாவையும், நாட் டில் தீவிரமான புரட்சிகர நெருக்கடி எதுவும் இல்லாத நிலை மையையும் நாம் எதிர்நோக்குவதாய்க் கொள்வோம். அப் பொழுது ''டூமா ஒழிக'' என்னும் கோஷம் தேர்தல் சீர்திருத் தத்துக்கான போராட்டத்துக்குரிய கோஷம் ஆகலாம். இந்த இரு நிலைமைகளில் எதுவும் தற்போது இருக்கவில்லை. மூன்ருவது டூமா சமரசவாத அமைப்பல்ல, அப்பட்டமான எதிர்ப்புரட்சி அமைப்பே ஆகும். இது எதேச்சாதிகாரத்தை மூடிமறைக்கவில்லை, அதை அம்பலமே செய்கிறது; எவ்வகை யிலும் சுயேச்சையான பாத்திரம் எதுவும் ஆற்றவில்லை; முற்போக்கான சீர்திருத்தங்களை இது செய்திடுமென எங்கும் யாரும் எதிர்பார்க்கவில்லை; ஜாரிசத்தின் உண்மையான சக் திக்கும் வலுவுக்குமான ஆதாரம் கடைந்தெடுத்த இந்தப் பிற்போக்கர்களது மன்றத்தில் இருப்பதாய் யாரும் நினைக்க வில்லை. ஜாரிசம் இந்த மன்றத்தைப் பயன்படுத்திக் கொள் கிறதேயன்றி அதன் உறைவிடம் இம்மன்றத்தினுள் இல்லை; இத்தகைய ஒரு டூமா கூட்டப்படுவது ஒத்திப்போடப்படு மாயினும் (1878ல் துருக்கியில் பாராளுமன்றம் கூட்டப்படுவது ''ஒத்தப்போடப்பட்டது'' போல), அதற்குப் பதிலாய் ''ஸெ ம்ஸ்கி சபோர்'' அல்லது இதையொத்த ஒன்று கூட்டப்படு மாயினும், ஜாரிசம் தனது தற்போதைய கொள்கை அனைத் தையும் தொடர்ந்து பின்பற்றிச் செல்ல முடியும்—இதை யாவரும் ஒத்துக் கொள்கிருர்கள். ''டூமா ஒழிக'' எனும் கோஷ மானது சுயேச்சையானதாகவோ தீர்மானகரமானதாகவோ இல்லாத, முதன்மைப் பங்கு ஆற்ருத ஒரு அமைப்பின்மீது பிரதான தாக்குதலை ஒன்றுகுவியச் செய்வதாய் அமைந்து விடும். இத்தகைய ஒரு கோஷம் தவருனது. ''எதேச்சாதி

காரம் ஒழிக'', ''அரசியல் நிர்ணய சபை வாழ்க'' என்ற பழைய கோஷத்தையே நாம் அனுசரித்தாக வேண்டும். ஏனெனில் எதேச்சாதிகாரம்தான் மெய்யான அரசதிகாரமாய்த் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது, பிற்போக்கின் மெய்யான கொத்தளமாகவும் ஆதாரமாகவும் இருந்து வருகிறது. எதேச்சாதிகாரத்தின் வீழ்ச்சியானது, ஜாரிசத்தின் அமைப்பாகிய மூன்ருவது டூமாவின் ஒழிப்பை (அதுவும் புரட்சிகர முறையிலான ஒழிப்பை) தவிர்க்க முடியாதவாறு குறிப்பதாகும். ஆனுல் மூன்ருவது டூமா மட்டும் வீழ்த்தப் படுமாயின், அதன் விளைவு அதே எதேச்சாதிகாரம் ஒரு புதிய சாகசத்தை மேற்கொள்வதாகவே, அதே எதேச்சாதிகாரம் சீர்திருத்தத்துக்கான—ஏமாற்றுக் கூற்ருகவும் முற்றிலும் வெளிப்பகட்டாகவுமே அமையும் சீர்திருத்தத்துக்கான— முயற்சியில் இறங்குவதாகவோதான் இருக்கும்.*

மேலும் பரிசீலிப்போமாக. முதலாவது புரட்சிகர எழுச்சியியக்கத்தின் மூன்று ஆண்டுகளில் அரசியல் கட்சிகளுடைய வர்க்க இயல்பு விசேஷ திட்பத்துடனும் முனைப்புடனும் வரையறுக்கப்பட்டதை நாம் கண்ணுற்ருேம். எனவே அரசியல் சக்திகளது தற்போதைய பரஸ்பர நிலையையும் இந்நிலையில் மாற்றத்துக்கான போக்குகளையும் இன்ன பிறவற்றையும் பற்றிய எல்லா விவாதங்களிலும் கருத்தியலான ''பொது வாதங்களைக்'' கொண்டு அல்லாமல், வரலாற்று அனுபவத்தின் இந்த ஸ்தூலமான விவரங்களைக் கொண்டு ஆராய்வது அவசியமென்பது புலப்படுகிறது. நேரடியான புரட்சிப் போராட்டக் காலகட்டங்களில்தான் வர்க்கக் கோஷ்டிப் பிரிவினைகளுக்கான நீடித்து நிலவும் ஆழமான அடித்தளங்கள் அமைக்கப்படுகின்றன; பெரிய அரசியல் கட்சிகளாய்ப் பிரிவினை செய்யப்படுதலும் இப்பொழுதுதான் நடைபெறுகின்றது; இதன்பின் இவை தேக்கத்துக்குரிய நீண்ட நெடிய காலங்களிலுங்கூட தொடர்ந்து அப்படியே நிலவுகின்றன.

---

* அடுத்த இதழில் நாம் ''டூமா'' போர்த்தந்திரப் பிரச்சினையின் மற்ருேர் அம்சத்தைப் பரிசீலிப்போம், ரபோச்சியே ஸ்னுமியா, இதழ் 5ல் வாபஸ்வாதியான[36] தோழர் ஒருவர் எழுதும் ''கடிதம்'' குறித்து விவாதிப்போம். (நூல் திரட்டு, தொகுதி 17, பக்கங்கள் 290-307.—பதிப்பாசிரியர்.)

ஐரோப்பிய அரசுகளின் வரலாறு அனைத்தும் இதற்குச் சான்று பகர்கிறது. சில கட்சிகள் தலைமறைவாகிவிடலாம், உயிருக்கான அறிகுறி இல்லாமற் போய்விடலாம், அரசியல் அரங்கிலிருந்து மறைந்தே விடலாம். ஆயினும் சொற்ப அளவு புத்தெழுச்சி ஏற்பட்டதுமே பிரதான அரசியல் சக்திகள் தவிர்க்க முடியாதவாறு திரும்பவும் தாம் இருக்கிறோம் என்பதற்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கிவிடும். மாறுபட்ட ஒரு வடிவில் அவை வெளிப்படலாம், ஆனால் இந்த அல்லது அந்தத் துறைகளில் தோல்வியுற நேர்ந்த புரட்சியின் எதார்த்தப் பணிகள் நிறைவேற்றப்படாத வரையில், அவற்றின் செயற்பாட்டினுடைய தன்மையும் திசையும் மாற்றமின்றி அப்படியேதான் இருக்கும். ஆகவே, உதாரணமாய், கிராமப்புறத்தில் துருதொவிக் நிறுவனங்கள் இருக்கவில்லை என்பதாலும், மூன்றாவது டூமாவில் துருதொவிக் கோஷ்டி குழப்பத்தாலும் செயலின்மையாலும் தீவிரமாய்ப் பீடிக்கப் பட்டுவிட்டது என்பதாலும், ஜனநாயக விவசாயி வெகுஜனங்கள் பிளவுண்டுச் சிதைந்துவிட்டதாகவும் புதிய புரட்சிகர நெருக்கடி மூண்டெழும் நிகழ்ச்சிப் போக்கில் அவர்களுக்கு எந்த முக்கியப் பங்குமில்லை என்பதாகவும் கொள்வதானது படுமோசமான கிட்டத்துப் பார்வையே ஆகும். இது போன்ற ஒரு கருத்து மென்ஷிவிக்குகளுக்குத்தான் பொருத்தமானது. மென்ஷிவிக்குகள்தான் மிகவும் சலிப்பான ''பாராளுமன்ற முடக்குவாதத்தால்'' மேலும் மேலும் பீடிக்கப்பட்டு வருகிறார்கள் (சட்ட விரோதமான கட்சி நிறுவன அமைப்புக்கு எதிராய் ஓடுகாலிகளைப் போல அவர்கள் நடத்தும் மெய்யாகவே அவமானகரமான தாக்குதல்களை உதாரணமாய்க் கூறலாம்). நமது கறுப்பு நூற்றுவர் டூமாவில் மட்டுமின்றி மிகவும் செப்பமான முதலாளித்துவப் பாராளுமன்றத்திலுங் கூட பிரதிநிதித்துவ நிலைமைகள் எப்பொழுதும் வெவ்வேறு வர்க்கங்களது உண்மை பலத்துக்கும் பிரதிநிதித்துவ மன்றத்தில் அதன் பிரதிபலிப்புக்கும் இடையே செயற்கை முறையிலான வேறுபாட்டை உண்டாக்கவே செய்யும் என்பது மார்க்சியவாதிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாய், மிதவாத-முதலாளித்துவ அறிவுத்துறையினர் உண்மையில் இருப்பதைக் காட்டிலும் பாராளுமன்றங்களில் எப்பொழுதும் எங்கும் நூறு மடங்கு கூடுதலான பலம் படைத்தோ

ராய்த் தோன்றக் காண்கிறோம் (நமது புரட்சியின் போதும் சந்தர்ப்பவாத சமூக-ஜனநாயகவாதிகள் காடேட்டுகளை வெளித்தோற்றத்துக்குத் தெரிந்த அதே அளவு பலமுடையோராய்க் கருதிக் கொண்டுவிட்டனர்). இதற்கு மாறாய்க் குட்டிபூர்ஷுவாக்களைச் சேர்ந்த விரிவான ஜனநாயகப் பகுதியினர் (1848ஆம் ஆண்டு முதலாளித்துவப் புரட்சிகளின் போது நகரங்களிலும், ருஷ்யாவில் கிராமப்புறத்திலும்) பாராளு மன்றங்களில் பெற்றிருக்கும் பிரதிநிதித்துவத்தின்படிப் பார்க்கையில் சிறிதும் குறிப்பிடத்தக்கோராய் இல்லை என்றாலும், வெகுஜனங்களது பகிரங்கப் போராட்டத்தில் மிகமிக முக்கியமான அம்சமாய் அடிக்கடி திகழக் காணலாம்.

நமது விவசாயிகள் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினரையும் சோஷலிஸ்டுப் பாட்டாளி வர்க்கத்தினரையும் விட மட்டுமீறிக் குறைவான அரசியல் உணர்வுடையோராகத்தான் புரட்சியினுள் அடியெடுத்து வைத்தனர். இக்காரணத்தால் புரட்சியிடமிருந்து அவர்கள் வேறு எந்த வர்க்கத்தையும்விட அதிக அளவுக்கு வேதனை வாய்ந்ததாயினும் மதிப்பு மிக்க பிரமை நீக்கமும், கசப்பானவையாயினும் நலம் பயக்கும் படிப்பினைகளையும் பெற்றனர். இயல்பாகவே இந்தப் படிப்பினைகளை அவர்கள் மிகுந்த சிரமத்தோடு, மிகவும் மெதுவாகவே கிரகித்து வருகின்றனர். இயல்பாகவே, அறிவுத்துறையினரைச் சேர்ந்த ''தீவிரவாதிகள்'' பலரும் பொறுமை இழந்து இதெல்லாம் உதவாத வீண் வேலை என்று கைவிட்டுவிடுவார்கள். சில சமூக-ஜனநாயக அற்பவாதிகளும் இதே போலத்தான் செய்வார்கள். விவசாயிகளது ஜனநாயகம் என்பதாய் யாரும் பேசியதும் இந்த அற்பவாதிகள் ஏளனமாய்ச் சிரிக்கின்றனர்; அதேபோது ''அறிவொளி படைத்த'' மிதவாதிகளைக் கண்டதும் இவர்களுக்கு வாயில் எச்சி ஊறுகிறது. ஆனால் வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளி வர்க்கம் 1905ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலும் குளிர் காலத்திலும் தான் கண்ணுற்றதையும் தான் பங்கெடுத்துக் கொண்டவற்றையும் அவ்வளவு சுலபமாய்த் தன் நினைவிலிருந்து உதறித் தள்ளிவிடாது. நமது புரட்சியில் சக்திகளது பரஸ்பர பலத்தை மதிப்பீடு செய்வோமாயின், இன்றைய ருஷ்யாவில் சமுதாய எழுச்சி மெய்யாகவே விரிந்த அளவில் ஏற்றம் பெறப் போவதற்கும் புரட்சிகர

நெருக்கடி மெய்யாகவே நெருங்கி விட்டதற்கும் நிச்சயமான அறிகுறியாய் இருக்கக் கூடியது தவிர்க்க முடியாதபடி விவசாயிகளிடையிலான இயக்கமே என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் மிதவாத முதலாளித்துவ வர்க்கம் எதிர்ப் புரட்சிப் பாதையில் இறங்கிவிட்டது. இதனை மறுக்கக் கூடியவர்கள் தீரர்களாகிய செரெவானின்களும் கருத்திலும் செயலிலும் தம் சக தோழர்களாய் இருப்போரை மறுத்துப் பேசிவரும் கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தாவின்[37] பயங் கொள்ளி ஆசிரியர்களும் மட்டுமேதான். ஆனால் முதலாளித் துவ மிதவாதிகளுடைய இந்த எதிர்ப்புரட்சித் தன்மையின் காரணமாய், அவர்களுடைய எதிர்ப்பும் அதிருப்தியும் கறுப்பு நூற்றுவர் நிலப்பிரபுக்களுடன் அவர்களுக்குள்ள மோதல்களும் அல்லது முதலாளித்துவ வர்க்கத்தாரின் பல் வேறு பகுதிகளுக்குள்ளேயே எழும் போட்டாபோட்டியும் போராட்டமும் புதிய எழுச்சியின் வளர்ச்சிக்கு எவ்வகை யிலும் முக்கியமானவையாய் இருக்க முடியாதென யாரும் முடிவு செய்வாராயின் அது மிகப் பெருந் தவறாகிவிடும், உட்புறம் வெளிப்புறமாய் மாறிய மெய்யான மென்ஷிவிச மாகிவிடும். ஆழமான அரசியல் நெருக்கடிக்கான எதார்த்த நிலைமைகள் இருந்து வருகையில், புரட்சியின் மெய்யான தோற்றுவாயிலிருந்து நெடுந் தொலைவு விலகியிருப்பவையாய்த் தோன்றும் அற்ப மோதல்களுங்கூட இறுதிக் காரணமாக வும் கடைசித் துரும்பாகவும் பொதுஜன உணர்ச்சியில் ஒரு திரும்புமுனையாகவும் இன்ன பலவாறாகவும் மிகப் பெரிய முக்கியத்துவமுடையவை ஆகிவிடக் கூடும் என்பதை பிற நாடுகளுடைய அனுபவத்தைப் போலவே ருஷ்யப் புரட்சி யின் அனுபவமும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கிறது. 1904ஆம் ஆண்டின் ஸெம்ஸ்த்வொ இயக்கமும்[38] மிதவாதி களுடைய மனுக்களும் சுயமானதும் முற்றிலும் பாட்டாளி வர்க்க "மனுவும்" ஆகிய ஜனவரி ஒன்பதாம் நாளது[39] மனுவுக்கு முன்னோடிகளாய் அமைந்ததை நினைவு கூர்தல் வேண்டும். ஸெம்ஸ்த்வொ இயக்கத்தை போல்ஷிவிக்குகள் எதிர்த்து வாதாடியது பாட்டாளி வர்க்க ஆர்ப்பாட்டங் களுக்காக இந்த இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக அல்ல; நமது மென்ஷிவிக்குகள் இந்த

ஆர்ப்பாட்டங்களை ஸெம்ஸ்த்வொ மன்றக் கூடங்களுக்கு வெளியே சென்றுவிடாமல் கட்டுப்படுத்த விரும்பியதை எதிர்த்தும், ஸெம்ஸ்த்வொ ஆட்களுக்கு முன்னால் நடத்தப்பட்டவைதான் ஆர்ப்பாட்டத்தின் மிக உயர்ந்த வடிவமாகுமென பறைசாற்றப்பட்டதை எதிர்த்தும், மிதவாதிகள் மிரண்டு ஓடாதபடி தடுப்பதையே நோக்கமாய்க் கொண்டு ஆர்ப்பாட்டங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டதை எதிர்த்தும் தான் போல்ஷிவிக்குகள் வாதாடி வந்தனர். மற்றொரு உதாரணமாய் மாணவர் இயக்கங்களைக் குறிப்பிடலாம். தீ பிடித்து எரியக் கூடியவை மேலும் மேலும் கூடுதலாய்க் குவிக்கப்பட்டு வரும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் சகாப்தத்தைக் கடந்து வரும் ஒரு நாட்டில் இந்த இயக்கங்கள் அரசு நிர்வாகத்தின் தனிப்பட்ட ஒரு கிளையில் விவகாரங்கள் நிர்வகிக்கப்படுவது பற்றிய அற்பமான ஸ்தல சச்சரவைக் காட்டிலும் சொல்ல முடியாத அளவுக்குப் பரந்த விளைவுகளை உண்டாக்கக் கூடிய நிகழ்ச்சிகளை எளிதில் துவக்கிவிட வல்லவை. பாட்டாளி வர்க்கத்தினது சுயேச்சையான வர்க்கக் கொள்கையைச் செயல்படுத்திவரும் சமூக-ஜனநாயகவாதிகள் மாணவர் போராட்டத்துக்கோ, புதிய ஸெம்ஸ்த்வொ காங்கிரசுகளுக்கோ, தமக்குள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்ளும் முதலாளித்துவ வர்க்கப் பகுதிகளது கருத்தோட்டங்களுக்கோ ஏற்ப ஒருபோதும் தம்மைத் தகவமைத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதும், இந்தக் குடும்பச் சண்டைகளுக்கு ஒரு நாளும் அவர்கள் தனியான சுயேச்சை முக்கியத்துவம் அளித்திட மாட்டார்கள் என்பதும், பிறவும் தெளிவாய் விளங்குபவை. ஆனால் சமூக-ஜனநாயகக் கட்சிதான் விடுதலைப் போராட்டம் அனைத்துக்கும் தலைமை வகித்துச் செல்லும் வர்க்கத்தினுடைய கட்சியாகும். ஆகவே இந்தக் கட்சி சந்தேகத்துக்கு இடமின்றி எல்லாச் சண்டைகளையும் பயன்படுத்திக் கொள்ளவே செய்யும், அவற்றைக் கொழுந்து விட்டெரிய வைக்கவும், அவற்றின் முக்கியத்துவத்தை விரிவாக்கிடவும், புரட்சிகரக் கோஷங்களை முன்வைத்து தனது சொந்த கிளர்ச்சியுடன் அவற்றை இணைத்திடவும், இந்தச் சண்டைகளைப் பற்றிய செய்திகளை விரிவான வெகுஜனங்களுக்குத் தெரிவிக்கவும், இவர்களைத் தமது கோரிக்கைகளை முன்வைத்து சுயேச்சையான, பகிரங்கமான செயலில்

இறங்க வைக்கவும் இன்ன பலவும் செய்யும்தான். பிரான்சில் 1793க்குப் பிற்பாடு எதிர்ப்புரட்சி மிதவாத முதலாளித்துவ வர்க்கம் உருவாகி தீவிரமாய் வளரத் தொடங்கியது. இருப்பினும் அதன் பல்வேறு பகுதிகளிடையே சண்டைகளும் போராட்டமும் மேலும் ஒரு நூறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஏற்பட்டு ஏதேனும் ஒரு வழியில் புதிய புரட்சிகள் மூள்வதற்கான காரணங்களாய்ப் பயன்படவே செய்தன. இந்தப் புதிய புரட்சிகளில் பாட்டாளி வர்க்கம் தவறாமல் தலைமையான இயக்கு சக்தியாய்ச் செயல்பட்டு, ஒரு குடியரசு கிடைக்கும்படி வெற்றி பெறும் நிலைக்கு அவற்றை நிறைவுறச் செய்தது.

நமது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் தலைமையான முன்னேறிய வர்க்கமான இந்தப் பாட்டாளி வர்க்கம் தாக்குதல் நடத்துவதற்குரிய நிலைமைகள் என்னவென்பதை இனி பரிசீலனை செய்வோம். மாஸ்கோ தோழர்கள் இந்தப் பிரச்சினையை விவாதித்தபோது அவர்கள் முற்றிலும் சரியாகவே தொழில் துறை நெருக்கடியான ஆதார முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். இந்த நெருக்கடி குறித்து அவர்கள் மிகவும் சுவையான விவரங்களைச் சேகரித்தனர், மாஸ்கோவுக்கும் லோத்ஸுக்கும் இடையிலான போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டனர், இதுவரை ஆதிக்கத்திலிருந்த சில கருத்தோட்டங்களைப் பல விவரங்களில் திருத்தம் செய்தனர். இந்த விவரப்பொருள் மாஸ்கோ கமிட்டி அல்லது மாஸ்கோ பிரதேசக் கமிட்டியின் துணைக் குழுக்களில் முடக்கப்பட்டு வீணாகிவிடக் கூடாது, இது செம்மை செய்யப்பட்டு கட்சி பூராவிலும் விவாதிக்கப்படுவதற்காகப் பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவிக்கிறோம். நம்மைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினை எடுத்துரைக்கப்பட வேண்டிய முறை குறித்து ஒருசில குறிப்புரைகள் கூறுவதுடன் நிறுத்திக் கொள்கிறோம். நிற்க, நெருக்கடி எத்திசையில் நகர்கிறது என்பது சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும் (மிகச் சொற்ப காலத்துக்கு இருந்த இலேசான ஏற்றநிலைக்குப் பிற்பாடு ஒரு நெருக்கடி என்று சொல்லத்தக்க அளவுக்கு மிகக் கடுமையான மந்தம் நமது தொழில் துறையில் மீண்டும் நிலவுகிறது என்பது பொதுவாய் ஒத்துக் கொள்ளப்படுகிறது).

முன்பு போல தொழிலாளர்கள் தாக்குதல்கள் தொடுத்துப் பொருளாதாரப் போராட்டம் நடத்த முடியாது, ஆகவே உடனடி எதிர்காலத்தில் புரட்சி எழுச்சியுறுவது சாத்திய மல்ல என்று சிலர் கூறுகின்றனர். பொருளாதாரப் போராட்டம் சாத்தியமற்றதாய் இருப்பதானது அரசியல் போராட்டத்தில் அவசியம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும், எனவே உடனடி வருங்காலத்தில் புரட்சி எழுச்சியுறுவது தவிர்க்க முடியாததென்று ஏனையோர் கூறுகின்றனர்.

இந்த இரண்டு வகையான வாதங்களும் ஒரே விதமான தவறினைத் தமக்கு அடிநிலையாய்க் கொண்டிருப்பதாய் நாம் கருதுகிறோம். சிக்கலான ஒரு பிரச்சினையை மிகவும் எளிமை யாக்குவதுதான் இந்தத் தவறு. தொழில் துறை நெருக்கடியை விவரமாய் ஆராய்வது மிகுந்த முக்கியத்துவமுடையது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நெருக்கடி பற்றிய புள்ளி விவரங்கள், அவை குற்றங் குறையின்றி எவ்வளவுதான் துல் லியமாயிருப்பினும், புரட்சி அலை உடனடியாய் ஓங்கி உயரப் போகிறதா என்ற கேள்விக்கு உண்மையில் முடிவு கூறிவிட முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் புரட்சி அலை இவ்விதம் ஓங்குவது முன்கூட்டியே அளந்து கூறிவிட முடியாத மேலும் கூடுதலான ஓராயிரம் காரணக் கூறுகளைப் பொறுத்ததாகும். நாட்டில் விவசாய நெருக்கடிக்கும் தொழில் துறையில் மந்தத்துக்குமுரிய பொதுவான அடியமைப்பு இல்லாமல் ஆழ்ந்த அரசியல் நெருக்கடிகள் சாத்தியமல்ல என்பது மறுக்க முடியாதது. ஆனால் இந்தப் பொதுவான அடியமைப்பு இருக்குமாயினும், தொழில் துறை மந்த மானது பொதுவில் தொழிலாளர்களுடைய வெகுஜனப் போராட்டத்தைக் குறிப்பிட்ட காலத்துக்குத் தடுத்து வருமா, அல்லது நகழ்ச்சிகளில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இதே தொழில் துறை மந்தம் புதிய வெகுஜனப் பகுதிகளையும் புதிய சக்திகளையும் அரசியல் போராட்டத்தில் இறங்குமாறு தள்ளிவிடாது இருக்குமா என்று நாம் முடிவு செய்துவிட முடியாது. இத்தகைய ஒரு கேள்விக்கு ஒரேயொரு வழியில் தான் பதில் கூற முடியும்: நாட்டின் அரசியல் வாழ்வு அனைத் தின் நாடியையும், முக்கியமாய் இயக்கத்தின் நிலையையும் வெகுஜன பாட்டாளி மனநிலையையும் உன்னிப்பாய்க் கவ னித்து வர வேண்டும். உதாரணமாய் அண்மையில் ருஷ்யா

வின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் தொழில் துறைப் பிரதேசங்களிலிருந்தும் விவசாயப் பிரதேசங்களிலிருந்தும் கட்சி ஊழியர்கள் தெரிவிக்கும் செய்திகள் பலவும் சந்தேகத்துக்கு இடமின்றி எழுச்சியுற்று வரும் ஆர்வம், புதிய சக்திகள் வந்து கலத்தல், கிளர்ச்சியில் வளர்ந்து பெருகும் நாட்டம் முதலானவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவற்றுடன் ஒரு புறத்தில் மாணவர்களிடையே ஆரம்பித்திருக்கும் வெகுஜன அமைதியின்மையும் மறுபுறத்தில் ஸெம்ஸ்த்வொ காங்கிரஸ்களை உயிர்ப்பிப்பதற்கான முயற்சிகளையும் ஒப்பிடுவோமாயின், நிகழ்ச்சிகளில் ஓரளவு திருப்பம் ஏற்படுவதை, கடந்த பதினெட்டு மாதங்களது முழுநிறை ஸ்தம்பிப்பை ஏதோ ஒன்று தகர்த்து வருவதை நாம் காண முடிகிறது. இந்தத் திருப்பம் எந்த அளவுக்கு வலுவுடையது, பகிரங்கப் போராட்டத்துக்கான புதிய சகாப்தத்தின் தொடக்கக் கட்டத்தை இது குறிப்பதாயிருக்குமா முதலானவற்றை உண்மைகள்தான் தெளிவுபடுத்த வேண்டும். இப்பொழுது நாம் செய்யக் கூடியதும், எப்படியும் நாம் செய்தாக வேண்டியதும், சட்டவிரோதக் கட்சி நிறுவனத்தைப் பலப்படுத்த நமது முயற்சிகளைக் கடுமையாக்குவதும், பாட்டாளி வர்க்க வெகுஜனங்களிடையே நமது கிளர்ச்சியைப் பத்து மடங்காய்க் கூடுதலாக்குவதும்தான். கிளர்ச்சியால் மட்டுமே வெகுஜன மனநிலையின் உண்மை விவரத்தை விரிவான அளவில் புலப்படுத்திக் காட்ட முடியும்; கிளர்ச்சியால் மட்டுமே கட்சிக்கும் தொழிலாளி வர்க்கம் அனைத்துக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியும். இந்த அரசியல் கிளர்ச்சிக்காக ஒவ்வொரு வேலைநிறுத்தத்தையும், தொழிலாளி வர்க்க வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சி அல்லது பிரச்சினையையும், ஆளும் வர்க்கங்களுக்குளோ இவ்வர்க்கங்களில் எந்தவொரு பகுதிக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் இடையிலோ எழும் எல்லா மோதல்களையும், டூமாவில் சமூக-ஜனநாயகவாதியின் ஒவ்வொரு சொற்பொழிவையும், அரசாங்கத்தினுடைய எதிர்ப்புரட்சிக் கொள்கையின் ஒவ்வொரு புதிய வெளிப்பாட்டையும், இன்ன பிறவற்றையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது போன்ற பணியால் மட்டுமே புரட்சிகரப் பாட்டாளி வர்க்க அணிகளை மீண்டும் ஒன்றுதிரளச் செய்ய முடியும், புதிய, மேலும் தீர்மானகரமான போர்களுக்கான

நிலைமைகள் முற்றி வரும் வேகத்தை மதிப்பிடுவதற்கான துல்லியமான விவரப்பொருளை அளிக்க முடியும்.

தொகுத்துரைப்போமாக. புரட்சியின் விளைவுகளையும் தற்போதைய சூழ்நிலையையும் பற்றிய ஆய்வு புரட்சியின் எதார்த்தப் பணிகள் செய்து முடிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாய்க் காட்டுகிறது. எதேச்சாதிகாரத்தின் நிலக் கொள்கையிலும் டூமாவிலும் டூமா மூலமாகவும் அது அனுசரிக்கும் பொதுவான கொள்கையிலும் போனபர்ட்டிசத்தை நோக்கி ஏற்பட்டுள்ள பெயர்ச்சியானது ஒருபுறத்தில் கறுப்பு நூற்றுவர் எதேச்சாதிகாரத்துக்கும் ''முரட்டு நிலப் பிரபுவின்'' மேலாதிக்கத்துக்கும் மறுபுறத்தில் நாடு அனைத்தின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் தேவைகளுக்கும் இடையே முரண்பாட்டைக் கூர்மையாக்கவும் விரிவுபடுத்தவுமே செய்கிறது. கிராமப்புறத்தில் பெருந் திரள்களான மக்களை எதிர்த்து நடைபெறும் போலீஸ், குலாக்குத் தாக்குதல் அங்கே போராட்டத்தை மேலும் கடுமையாகவும் அரசியல் உணர்வுடையதாகவும் செய்கிறது. இதன் மூலம் அது எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை ஒவ்வொரு கிராமத்தின் அன்றாட, ஜீவாதாரப் பிரச்சினைகளை நெருங்கி வரச் செய்கிறது எனலாம். இத்தகைய தருணத்தில் நிலப் பிரச்சினையில் புரட்சிகர-ஜனநாயகக் கோரிக்கைகளை (நிலப்பிரபுக்களினுடைய நிலங்கள் யாவற்றையும் பறிமுதல் செய்தல்) பாதுகாத்துப் போராடுவது சமூக-ஜனநாயகவாதிகளது அத்தியாவசியக் கடமையாகும். கறுப்பு நூற்றுவர்-அக்டோபரிஸ்டு டூமா எந்த ''அரசியல் சட்டம்'' எதேச்சாதிகாரத்துக்கு ''ஏற்புடையதாக'' முடியும் என்பதை நடைமுறையின் வாயிலாய்த் தெளிவாய்க் காட்டுகிறது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்ற மிகக் குறுகிய வரம்புகளுக்குள்ளுங்கூட எந்த ஒரு பிரச்சினைக்கும் அது தீர்வு காணவில்லை. இத்தகைய டூமா ''அரசியல் சட்டத்துக்கான'' போராட்டத்தை எதேச்சாதிகாரத்துக்கு எதிரான ஒரு புரட்சிப் போராட்டமாய் மாற்றி வருகிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் தனிப்பட்ட பிரிவுகளுக்கிடையிலும் மற்றும் அவற்றுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலும் எழும் தனிப்பட்ட மோதல்கள் இந்நிலைமைகளில் இத்தகைய ஒரு போராட்டத்தை மேலும் அருகாமை

யில் வரச் செய்கின்றன. கிராமப்புறம் வறுமையுற்று வருதல், தொழில் துறையில் மந்தம், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் கரையேற வழி ஏதுமில்லை என்றும், அபக்கியாதி வாய்ந்த ''சமாதான பூர்வமான அரசியல் சட்ட'' வழி உதவாக்கரையானது என்றும் பொதுவாய் ஏற்பட்டு வரும் உணர்வு ஆகிய இவை யாவும் ஒரு புதிய புரட்சிகர நெருக்கடியின் கூறுகளை மேலும் மேலும் தோற்றுவித்து வருகின்றன. தற்போது நமது வேலை செயற்கை முறையில் புதிய கோஷங்கள் எவற்றையும் (''எதேச்சாதிகாரம் ஒழிக'' என்பதற்குப் பதிலாய் ''டூமா ஒழிக'' என்பது போன்றவற்றை) கண்டு பிடிப்பது அல்ல. மாறாக, சட்டவிரோதக் கட்சி நிறுவனத்தை (அதைக் குழி தோண்டிப் புதைக்க முயலும் மென்ஷிவிக்குகளுடைய பிற்போக்குக் கூச்சலை மீறி) பலப்படுத்துவதும், கட்சியைப் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களுடன் உறுதியாய் இணைத்து இந்த வெகுஜனங்களை ஒன்றுதிரளச் செய்யும்படியான விரிவான புரட்சிகர சமூக-ஜனநாயகக் கிளர்ச்சியை வளர்த்திடுவதும்தான் நமது வேலை.

புரொலெத்தாரி, இதழ் *38*,
*1908* நவம்பர் *1 (14)*

நூல் திரட்டு,
தொகுதி *17*,
பக்கங்கள் *271-84*

# உரிய பாதையில்

சிதைவுக்குரிய ஓராண்டை, சித்தாந்த, அரசியல் ஒற்றுமையின்மைக்குரிய ஓராண்டை, கட்சி திக்கற்றுச் சென்று வந்த ஓராண்டைக் கடந்து வந்துள்ளோம். நமது கட்சி நிறுவனங்கள் யாவற்றிலும் உறுப்பினர் தொகை சரிந்து விழுந்திருக்கிறது. சில நிறுவனங்கள்—அதாவது மிகச் சொற்ப அளவுக்கே பாட்டாளி வர்க்கத் தன்மையதான உறுப்பினர் தொகையைக் கொண்டவை—தகர்ந்து சின்னுபின்னமாகியுள்ளன. புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட பகுதியளவுக்குச் சட்டபூர்வமான கட்சி ஸ்தாபனங்கள் மீண்டும் மீண்டும் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவான இந்தத் தகர்விஞல் தாக்குண்டு கட்சியினுள் சில நபர்கள் பழைய சமூக-ஜனநாயகக் கட்சியினைப் பேணிக் காப்பது அவசியம்தாஞ, அதன் பணிகளைத் தொடர்ந்து நடத்திச் செல்வது அவசியம்தாஞ என்றும், திரும்பவும் ''தலைமறைவாய்ச்'' செல்ல வேண்டுமா, இதைச் செய்வது எப்படி என்றும் கேட்கும் அளவுக்கு விவகாரங்கள் சென்றுவிட்டன. கடைக்கோடி வலதுசாரியானது (கலைப்புவாதப் போக்கு எனப்படுவதான இது) எந்த விலை கொடுக்க நேர்ந்தாலும், கட்சியின் வேலைத் திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் நிறுவன அமைப்பையும் பகிரங்கமாய்க் கைவிட நேர்ந்தபோதிலும், நாம் நம்மைச் சட்டபூர்வமாக்கிக் கொள்ளது அவசியம் என்று பொருள்படும்படி இக்கேள்விக்குப் பதிலளித்தது. சந்தேகத்துக்கு இடமின்றி இது நிறுவன அமைப்புத் துறையில் மட்டுமின்றி சித்தாந்த-அரசியல் துறைகளிலுமான ஒரு நெருக்கடியே ஆகும்.

அண்மையில் நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அனைத்து ருஷ்ய மாநாடு[40] கட்சியினைக் கரையேறச் செய்து உரிய பாதைக்கு அழைத்து வந்துள்ளது.

எதிர்ப்புரட்சியின் வெற்றிக்குப் பிற்பாடு ருஷ்யாவின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியில் இம்மாநாடு ஒரு திரும்பு முனையைக் குறிப்பதாகும் என்பது வெளிப்படை. இம்மாநாட்டின் தீர்மானங்கள் நமது கட்சியின் மத்தியக் கமிட்டி வெளியிட்டிருக்கும் ஒரு தனி அறிக்கையில் வெளி யாகியுள்ளன. மத்தியக் கமிட்டி இந்தத் தீர்மானங்களை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. ஆகவே அடுத்த காங்கிரஸ் கூடும் வரையில் இவை கட்சி அனைத்துக்குமான தீர்மானங் களாகும். நெருக்கடியின் காரணங்களையும் முக்கியத்துவத் தையும் மற்றும் இந்நெருக்கடியைச் சமாளிப்பதற்குரிய வழிகளையும் பற்றிய கேள்விக்கு இந்தத் தீர்மானங்கள் திட்டவட்டமான பதில் கூறுகின்றன. இம்மாநாட்டுத் தீர் மானங்களின் மனப்பாங்குக்கு இசைவாய்ச் செயல்படுவதன் மூலமும், கட்சி ஊழியர்கள் எல்லோரையும் கட்சியின் தற் போதைய கடமைகளைத் தெளிவாகவும் முழுமையாகவும் உணர்ந்து கொள்ளச் செய்வதற்காகப் பாடுபடுவதன் மூலமும் நமது நிறுவனங்கள் ஒன்றுபட்ட, பயனுள்ள புரட்சிகர சமூக-ஜனநாயகப் பணிக்காகத் தமது சக்திகளைப் பலப்படுத்தி உறுதியாக்கிக் கொள்ள முடியும்.

நிறுவன அமைப்பு குறித்த தீர்மானத்தின் முகப்புரை யில் கட்சியின் நெருக்கடிக்குரிய பிரதான காரணம் சுட்டிக் காட்டப்படுகிறது. ஊசலாடும் அறிவுத்துறையினராலும் குட்டிபூர்ஷுவாக்களாலும் ஆகிய நபர்களே பிரதான காரணமாகும். இந்த நபர்களைத் தொழிலாளர் கட்சி தன்னிடமிருந்து களைந்தாக வேண்டும். இந்நபர்கள் பிரதான மாய் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சீக்கிரத்தில் வெற்றிபெற்றுவிடும் என்ற நம்பிக்கையின் காரணமாய்த் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர். பிற் போக்குக்குரிய ஒரு காலகட்டத்தை இவர்களால் சமாளித்து நிற்க முடியவில்லை. இவர்களுடைய நிலையின்மை தத்துவத்தி லும் (''புரட்சிகர மார்க்சியத்திலிருந்து பின்வாங்குதல்'': தற்போதைய நிலைமை பற்றிய தீர்மானம்), போர்த்தந்திரத்தி லும் (''கோஷங்களை வெட்டிக் குறைத்து உதவாக்கரையாக்கு தல்''), மற்றும் கட்சி நிறுவன அமைப்பிலும் வெளிப்படலா யின. வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் இந்த நிலையின்மையை எதிர்த்தடித்தனர், கட்சிக் கலைப்புவாதிகளை

எதிர்த்துத் தீர்மானமாய்ச் செயல்பட்டனர், கட்சி நிறுவனங்களை நிர்வகிக்கும் பணியினையும் அவற்றுக்கு வழிகாட்டும் பணியினையும் தாமே மேற்கொள்ளத் தொடங்கினர். நமது கட்சியின் உறுதியான உட்கருவாய் அமைந்த இவர்களால் தொடக்கத்தில் ஒற்றுமையின்மையின், நெருக்கடியின் அடிப்படைக் கூறுகளை மேலோங்காதபடி அடக்க முடியாமற் போனதற்குக் காரணம், எதிர்ப்புரட்சியின் வெற்றிக்கிடையே இது கடினமான மிகப் பெரிய பணியாயிருந்தது என்பது மட்டுமல்ல; புரட்சி மனப்பான்மை கொண்டோராயினும் போதிய அளவுக்கு சோஷலிச மனப்பான்மை கொண்டிராத இந்தத் தொழிலாளர்களிடம் கட்சியின் பால் ஓரளவு கருத்தில்லாமற் போனதும் காரணமாகும். ஒற்றுமையின்மையையும் ஊசலாட்டத்தையும் எதிர்த்துப் போராடும் வழிகள் குறித்து சமூக-ஜனநாயகத்தின் திடமான முடிவுகளாய் விளங்கும் இம்மாநாட்டுத் தீர்மானங்கள் யாவருக்கும் முதலாய் ருஷ்யாவின் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களுக்குத்தான் அறைகூவல் விடுக்கின்றன.

இன்றைய வர்க்க உறவுகளையும் ஜாரிசத்தின் புதிய கொள்கையையும் பற்றிய மார்க்சியப் பகுத்தாய்வு; நமது கட்சி முன்பு போலவே தொடர்ந்து இனியும் தனக்கு வகுத்துக் கொள்ளும் போராட்டத்தின் உடனடிக் குறிக்கோளைச் சுட்டியுரைத்தல்; புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளுடைய போர்த்தந்திரம் பிழையற்றது என்பது குறித்துப் புரட்சியிடமிருந்து கிடைக்கும் படிப்பினைகளின் மதிப்பீடு; கட்சி நெருக்கடியின் காரணங்கள் பற்றிய விளக்கம்; இந்த நெருக்கடியை எதிர்த்துப் போராடுவதில் கட்சியின் பாட்டாளி வர்க்கக் கூறுகளுக்குள்ள பாத்திரத்தை எடுத்துரைத்தல்; சட்டவிரோத, சட்டபூர்வ நிறுவனங்களுக்கு இடையிலான உறவுகளின் பிரச்சினைக்குத் தீர்வு; டூமாவின் மேடையைப் பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தை அங்கீகரித்து டூமாவில் நமது பிரதிநிதிகளது குழுவின் தவறுகளை நேரடியாய் விமர்சித்து அதனுடன் இணைந்த முறையில் இக்குழுவுக்கு வழிகாட்டும்படியான கறாரான தாக்கீதுகளை வகுத்தளித்தல் ஆகிய இவையே மாநாட்டுத் தீர்மானங்களின் பிரதான உள்ளடக்கம். கடினமான தற்போதைப் கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கட்சி திட்டவட்டமான ஒரு பாதையைத்

தேர்வு செய்து கொள்ளும் பிரச்சினைக்கு இத்தீர்மானங்கள் முழுநிறைவான பதிலை அளிக்கின்றன. இந்தப் பதிலை மேலும் கவனமாய் ஆராய்வோம்.

வர்க்கங்கள் தமது அரசியல் கோஷ்டிப் பிரிவினையில் கொண்டுள்ள பரஸ்பர உறவு வெகுஜனங்களது நேரடிப் புரட்சிப் போராட்டத்தின் கடந்த காலகட்டத்தில்[41] எப்படி இருந்ததோ அதே போலத்தான் தொடர்ந்து இருந்து வருகிறது. மிகப் பெருவாரியான விவசாயிகள் அரைவாசிப் பிரபுத்துவ நிலவுடைமையை அழிக்க வல்ல நிலப் புரட்சிக் காகப் பாடுபடாமல் இருப்பதற்கில்லை. ஜாரிசத்தை வீழ்த் தாமல் இந்தப் புரட்சி சாத்தியமன்று. பிற்போக்கின் வெற்றி யானது உறுதி வாய்ந்த நிறுவனத்தை அமைத்துக் கொள் ளும் வல்லமையில்லாத விவசாயிகளின் ஜனநாயகப் பகுதி யோரை வெகுவாய் அழுத்தி இருத்தியுள்ளது. ஆயினும் எல்லா ஒடுக்குமுறையையும் மீறி, கறுப்பு நூற்றுவர் டூமாவை யும் மீறி, துருதொவிக்குகளின் மிதமிஞ்சிய நிலையின்மையும் மீறி, விவசாயி வெகுஜனங்கள் புரட்சிகர மனப்பாங்கு கொண்டிருப்பதற்கு மூன்றுவது டூமாவில் நடைபெறும் விவாதங்களே தெளிவான சான்றுகளாகும். ருஷ்யாவில் முத லாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குள்ள பணிகள் குறித்து பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நிலை மாற்றமின்றி அப் படியேதான் இருக்கிறது: ஜனநாயக விவசாயிகளுக்கு வழி காட்டுவதும் அவர்களை மிதவாத முதலாளித்துவ வர்க்கத் தினரின், காடேட்டுக் கட்சியின் செல்வாக்கிலிருந்து முறித்துக் கொண்டு வரச் செய்வதும்தான் இந்த அடிப்படை நிலை. காடேட்டுக் கட்சிக்கும் அக்டோபரிஸ்டுகளுக்கும் அற்பத் தனமான தனிப்பட்ட சச்சரவுகள் நடைபெற்று வந்தாலுங் கூட இக்கட்சி மேலும் மேலும் அவர்களை நெருங்கிச் சென்ற வண்ணம்தான் இருக்கிறது. அண்மையில் காடேட்டுக் கட்சி தேசிய-மிதவாதத்தை நிறுவிக் கொள்ளவும் தேசியவெறிக் கிளர்ச்சியின் மூலம் ஜாரிசத்துக்கும் பிற்போக்குக்கும் ஆதர வளிக்கவும் முயன்று வந்துள்ளது. முடியாட்சியை அடியோடு ஒழிப்பதற்காகவும் பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர விவசாயி களும் அரசியல் அதிகாரம் வென்று கொள்வதற்காகவும் முன்பு போலவே போராட்டம் நடைபெற்று வருகிறது என்று மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது.

இதுவரை இருந்தது போலவே இப்பொழுதும் எதேச்சாதிகாரம்தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஜனநாயகம் அனைத்துக்குமே பிரதான பகையாய் இருந்து வருகிறது. ஆனால் இந்த எதேச்சாதிகாரம் மாற்றமின்றி அப்படியே இருப்பதாய் நினைப்பது தவறாகும். ஸ்தலீப்பினது ''அரசியல் சட்டமும்'' ஸ்தலீப்பினது நிலப் பிரச்சினைக் கொள்கையும் பழைய, பகுதியளவுக்குத் தந்தைவழி, பகுதியளவுக்குப் பிரபுத்துவ வகைப்பட்டதான ஜாரிசத்தின் சிதைவில் ஒருபுதிய கட்டத்தை, அதை முதலாளித்துவ முடியரசாய் மாற்றிடுவதற்கான ஒரு புதிய முயற்சியைக் குறிக்கின்றன. காக்கசஸிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் தற்போதைய நிலைமை பற்றிய இத்தகைய குண நிர்ணயிப்பை அறவே நீக்கிவிடவோ, ''முதலாளித்துவ'' என்பதற்குப் பதிலாய் ''சில ராட்சி'' என்று மாற்றம் செய்யவோ முயன்றனர்; இது தவறாகும். எதேச்சாதிகாரம் நெடுங் காலமாய்ச் சிலராட்சியாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் புரட்சியின் முதலாவது கட்டத்துக்குப் பிற்பாடுதான், புரட்சியிடமிருந்து பெற்ற உதைகளுக்குப் பிற்பாடுதான், எதேச்சாதிகாரமானது அதன் நிலப் பிரச்சினைக் கொள்கையிலும், மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் சில பகுதிகளுடன் அது நிறுவிக் கொள்ளும் நேரடியான, தேச அளவிலான கூட்டணியிலும் முதலாளித்துவத் தன்மையதாகி வருகிறது. ஏற்கனவே நீண்ட காலமாகவே எதேச்சாதிகாரம் முதலாளித்துவ வர்க்கத்தைப் பேணி வளர்த்து வந்திருக்கிறது. முதலாளித்துவ வர்க்கமானது ரூபிளின் துணை கொண்டு, சட்டமியற்றுவதிலும் நிர்வாகத்திலும் தனக்குச் செல்வாக்கும் பிரபுத்துவ உயர் குலத்தோருக்குப் பக்கத்தில் இடமும் கிடைக்கச் செய்து வெற்றிகரமாய் நீண்ட காலமாகவே ''உச்ச நிலை'' அடைய தனக்குப் பாதை வகுத்து வந்திருக்கிறது. ஆனால் தற்போதைய நிலைமையின் விசேஷ இயல்பு என்னவெனில், முதலாளித்துவ வர்க்கத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கான பிரதிநிதித்துவச் சபை ஒன்றை அமைக்கும்படியும், இப்பகுதிகளுக்கும் பண்ணையடிமையாளரான நிலப்பிரபுக்களுக்குமிடையே சம நிலை காணும்படியும், டூமாவில் இப்பகுதிகளை கூட்டணி நிறுவிக் கொள்ளுமாறுச் செய்யும்படியும் எதேச்சாதிகாரம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. ருஷ்ய விவசாயியின் தந்தை

வழிச் சமுதாய மரபுகளில் அது வைத்திருந்த நம்பிக்கையை விட்டொழித்துவிட்டு கிராமப்புற வெகுஜனங்களுக்கு எதிராய், கிராமச் சமுதாயத்தை நாசமாக்கி வரும் பணக்கார விவசாயிகளின் ஆதரவை நாடும்படி எதேச்சாதிகாரம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

போலியான அரசியல் சட்ட மன்றங்களைக் கொண்டு எதேச்சாதிகாரம் தன்னை மூடிமறைத்துக் கொள்கிறது. ஆனால் அதேபோதில் வேறு யாருடனும் அல்லாது புரிஷ்கேவிச்சுகளுடனும் குச்கோவ்களுடனும் ஜார் கூட்டணி நிறுவிக் கொண்டதால் எதேச்சாதிகாரத்தின் வர்க்க சாரம் என்றும் இல்லாதபடி அம்பலமாகி வருகிறது. முதலாளித்துவப் புரட்சியின் பணிகளில் எதார்த்தத்தில் அத்தியாவசியமாய் இருப்பவற்றை—அதாவது முதலாளித்துவ சமுதாயத்தின் விவகாரங்களை மெய்யாகவே நிர்வகிக்கக் கூடிய மக்கள் பிரதிநிதித்துவ சபை ஒன்றை அமைத்தல், கிராமப் புறத்திலிருந்து மத்திய கால, சிக்கலாகிவிட்ட புராதன நிலவுறவுகளை மாற்றுதல் ஆகியவற்றை—எதேச்சாதிகாரம் தானே செய்து முடிக்கலாமென முயலுகிறது. ஆனால் எதேச்சாதிகாரத்தால் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் புதிய நடவடிக்கைகளால் நடைமுறையில் கிடைத்திருக்கும் பலன்கள் இதுகாறும் பூஜ்யமே. இந்த வரலாற்றுப் பணியைச் செய்து முடிக்கப் பிற சக்திகளும் பிற வழிகளும் அவசியம் என்பதைத்தான் என்றையும்விட தெளிவாய் இது புலப்படுத்துகிறது. அரசியலில் அனுபவமில்லாத கோடிக் கணக்கான மக்களின் மனதில் இதுகாறும் எதேச்சாதிகாரமானது பொதுவான மக்கள் பிரதிநிதித்துவத்துக்கு எதிரானதாய் வேறுபடுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது போராட்டம் தனது குறிக்கோளைக் குறுகச் செய்து, பிரதிநிதித்துவத்தின் தன்மையையும் முக்கியத்துவத்தையுமே நிர்ணயிக்கும்படி அரசில் ஆட்சியதிகாரத்துக்கான போராட்டமாய்த் தனது பணியினை மேலும் ஸ்தூலமாய் வரையறுத்துக் கொள்கிறது. எனவேதான் மூன்றுவது டூமா பழைய ஜாரிசத்தின் சிதைவிலும், அதன் சாகசவாதத் தன்மை தீவிரமாவதிலும், பழைய புரட்சிகரக் குறிக்கோள்கள் ஆழம் பெறுவதிலும், இந்தக் குறிக்கோள்களுக்கான போராட்டத்தின் துறை விரிவடைவதிலும் (மற்றும் இப்போராட்டத்தில் பங்கு கொள்வோரின் எண்ணிக்கை விஸ்

தாரமாவதிலும்) ஒரு விசேஷக் கட்டத்தைக் குறிப்பதாகிறது.

இந்தக் கட்டத்தை நாம் கடந்து முன்னே சென்றுக வேண்டும்; தற்போதுள்ள புதிய நிலைமைகளில் புதிய போராட்ட வடிவங்கள் தேவைப்படுகின்றன; டூமாவின் மேடையைப் பயன்படுத்துவது முழுக்க முழுக்க அத்தியாவசியமானது; பாட்டாளி வர்க்க வெகுஜனங்களைப் போதம் பெறச் செய்வதற்கும் ஒழுங்கமைப்புடையோர் ஆக்குவதற்கும் நீடித்த முயற்சி மிக மிக முக்கியமானது; சட்டவிரோத நிறுவனத்தையும் சட்டபூர்வ நிறுவனத்தையும் ஒருசேர இணைத்திடுவதானது கட்சிக்கு விசேஷப் பணிகளை அளிக்கிறது; புரட்சியின் அனுபவத்தை—மிதவாதிகளும் கட்சிக் கலைப்புவாத அறிவுத்துறையினரும் இழுக்கு உண்டாக்க முயலும் இந்த அனுபவத்தை—மக்களிடையே பரப்புதலும் தெளிவு பெறச் செய்தலும் தத்துவார்த்த நோக்கங்களுக்காகவும் மற்றும் நடைமுறை நோக்கங்களுக்காகவும் அவசியமாகும். ஆனால் கட்சியின் போர்த்தந்திரக் கொள்கை வழி—இது புதிய நிலைமைகளைக் கணக்கில் எடுத்துத் தனது போராட்ட முறைகளையும் சாதனங்களையும் தீர்மானித்துக் கொள்ளக் கூடியதாய் இருக்க வேண்டும்—மாற்றமின்றி முன்பு போல அப்படியேதான் இருக்கிறது. புரட்சிகர-சமூக-ஜனநாயகப் போர்த்தந்திரம் பிழையற்றதென்பதை 1905-07ஆம் ஆண்டுகளின் வெகுஜனப் போராட்டத்தின் அனுபவம் ஊர்ஜிதம் செய்கிறதென்று மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்று கூறுகிறது. இந்த முதலாவது எழுச்சியியக்கத்தில் புரட்சிக்கு ஏற்பட்ட தோல்வி இப்பணிகள் தவறு என்றோ, உடனடிக் குறிக்கோள்கள் "கற்பனாவாதக்" குறிக்கோள்கள் என்றோ, போராட்ட முறைகளும் சாதனங்களும் பிழையானவை என்றோ புலப்படுத்தவில்லை; மாறாக சக்திகள் போதிய அளவுக்குத் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை, புரட்சிகர நெருக்கடி போதிய அளவு விரிவும் ஆழமும் பெற்றிருக்கவில்லை என்பதைத் தான் புலப்படுத்திற்று—ஸ்தலீப்பினும் அவரைச் சேர்ந்தோரும் இதை விரிவும் ஆழமும் பெறச் செய்வதற்காகப் போற்றத்தக்க உற்சாகத்துடன் செயல் புரிந்து வருகிறார்கள்! மிதவாதிகளும் பீதியுற்ற அறிவுத்துறையினரும் சுதந்திரத்துக்காக மெய்யாகவே வெகுஜன அளவில் நடைபெற்ற முதலாவது

போரைத் தொடர்ந்து தைரியம் இழக்கட்டும்; முன்பு நீங்கள் தோற்கடிக்கப்பட்ட இடத்தின் பக்கம் போகாதீர்கள், அபாய கரமான அந்தப் பாதையில் மீண்டும் செல்லாதீர்கள் என்று கோழைகளைப் போல அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கட்டும். வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கம் அவர்களுக்குப் பதிலளிக்கும்: முன்னேறிய வர்க்கங் கள் மீண்டும் மீண்டும் தாக்குதலில் இறங்கியதன் மூலம்தான் வரலாற்றின் பெரும் போர்களுக்கு, புரட்சிகளின் பெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டின—தோல்வின் படிப்பினை களைக் கற்றுத் தேர்ந்தபின் இவ்வர்க்கங்கள் வெற்றி பெற் றன. தோற்கடிக்கப்பட்ட சேனைகள் சிறப்பாய்க் கற்றுக் கொள்கின்றன. ருஷ்யாவின் புரட்சிகர வர்க்கங்கள் தமது முதலாவது எழுச்சியியக்கத்தில் தோல்வியுற்றுள்ளன, ஆனால் புரட்சிகர நிலைமை மறையாது அப்படியே இருந்து வருகிறது. புதிய வடிவங்களிலும் பிற வழிகளிலும் புரட்சிகர நெருக் கடி, நாம் விரும்புவதைக் காட்டிலும் சில நேரங்களில் மிக வும் மெதுவாகவே எனினும், மீண்டும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது; மீண்டும் மூண்டெழுந்து கொண்டிருக் கிறது. அந்த நெருக்கடிக்காக மேலும் பெருந் திரளான வெகுஜனங்களைத் தயார் செய்திடும் நீண்ட நெடிய பணி யினை நாம் நடத்திச் சென்றாக வேண்டும். மேலும் உயர்வான, மேலும் ஸ்தூலமான பணிகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தயாரிப்பு மேலும் மும்முரமாய் நடைபெற்றாக வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு வெற்றிகரமாய் இந்த வேலையைச் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு புதிய போராட்டத் தில் நமது வெற்றி உறுதியாகிவிடும். அடிமைகளது தேசம் 1905ல் தனது தலைமையில் முதன் முதலாய்க் கோடிக் கணக் கான வீரர்களது முகாமாகி, புரட்சியின் சேனையாகி ஜாரிசத் தின்மீது தாக்குதல் தொடுத்ததென ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் பெருமிதம் கொள்ளலாம். இன்று இதே பாட்டாளி வர்க்கம் மேலும் வலிமை மிக்கதான ஒரு புரட்சி சக்தியின் புதிய ஊழியர்களுக்குப் போதமும் பயிற்சியும் அளிக்கும் பணியினை விடாமுயற்சியோடும் உறுதியோடும் பொறுமை யாகவும் எப்படிச் செய்து முடிக்க வேண்டுமென்பதைத் தெரிந்தது கொள்ளும்.

போதமும் பயிற்சியும் அளிப்பதற்கான இந்தப் பணியில்,

ஏற்கனவே நாம் கூறியது போல டூமா மேடையைப் பயன் படுத்திக் கொள்வது ஓர் அத்தியாவசியக் கூறாகும். வரலாற்றில் நாம் உதாரணங்கள் காண்பதெனில், சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டக் காலத்தில்[42] ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தின் அனுபவத்துக்கு மிகவும் நெருங்கியதான பாதையை டூமாவிலுள்ள கட்சிக் குழு பற்றிய மாநாட்டுத் தீர்மானம் நமது கட்சிக்குச் சுட்டிக்காட்டுகிறது. சட்டவிரோதமான கட்சியானது சட்டபூர்வமான டூமாக் குழுவை எப்படிப் பயன்படுத்திக் கொள்வதென்று அறிந்திருக்க வேண்டும், எப்படிப் பயன்படுத்திக் கொள்வதென்று கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். இக்குழுவை அது பயிற்றுவித்துத் தனக் குரிய பணிகளை நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்த கட்சி நிறு வனமாக்கிக் கொள்ள வேண்டும். டூமாவிலுள்ள குழுவினைத் திருப்பியழைத்திடும் பிரச்சினையை எழுப்புதல் (மாநாட்டில் ''வாபஸ்வாதிகள்'' இருவர் இருந்தனர், ஆனால் அவர்கள் பகிரங்கமாய் இப்பிரச்சினையை எழுப்பவில்லை), அல்லது இக் குழுவின் தவறுகளை (மாநாட்டில் சில பிரதிநிதிகள் வற்புறுத் தியது போல) நேரடியாகவும் பகிரங்கமாகவும் விமர்சனம் செய்யாமலும் தீர்மானத்தில் அவற்றை எடுத்துரைக்காம லும் விட்டுவிடுதல் மிகமிகத் தவறான போர்த்தந்திரமாய், இன்றைய காலகட்டத்தின் நிலைமைகள் அவசியமெனக் கோ ரும் முரணற்ற பாட்டாளி வர்க்கப் பணியிலிருந்து மிகவும் வருந்தத்தக்கவாறு விலகிச் சென்றுவிடும் திரிபாய் அமைந்து விடும். டூமாக் குழு தவறுகள் இழைத்துள்ளது என்பதையும், இதற்குரிய குற்றம் இக்குழுவை மட்டும் சார்ந்ததல்ல, இத்தவறுகள் நமது கட்சி நிறுவனங்கள் யாவும் புரிந்த தவிர்க்கவொண்ணாத தவறுகளைப் பெரிதும் ஒத்தவையே என் பதையும் இத்தீர்மானம் பூரணமாய் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பிற தவறுகளும்—கட்சியின் அரசியல் கொள்கை வழியிலிருந்து விலகிச் செல்லும் தவறுகளும்—இழைக்கப் பட்டன. இவ்வாறு விலகிச் சென்றதாலும், கட்சி அனைத்தின் பெயரில் பகிரங்கமாய்ச் செயல்படும் ஒரு நிறுவனம் இதைச் செய்ததாலும், இந்த விலகல்கள் திரிபுகளாகுமென்று தெளி வாகவும் திட்டவட்டமாகவும் பறைசாற்றுவது கட்சியின் கடமையாகும். மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்டுக் கட்சி களின் வரலாற்றில் பாராளுமன்றக் குழுக்களுக்கும் கட்சிக்

குமிடையே முறைகேடான உறவுகளுக்கு உதாரணங்கள் பலவும் இருந்துள்ளன. லத்தீன நாடுகளில் இவ்வுறவுகள் இது நாள் வரை அடிக்கடி முறைகேடானவையாகவே இருந்து வருகின்றன. இந்நாடுகளில் பாராளுமன்றக் குழுக்கள் போது மான அளவுக்குக் கட்சி முறையில் செயல்படவில்லை. ருஷ்யா வில் நாம் தொடக்கத்திலேயே வேறொரு அடிப்படையில் சமூக-ஜனநாயகப் பாராளுமன்றப் பணியினை ஒழுங்கமைத் துக் கொள்ள வேண்டும். சமூக-ஜனநாயகப் பிரதிநிதி ஒவ் வொருவரும் தனக்கு ஆதாரமாய்த் தன் பின்னால் கட்சி இருக்கிறதென்றும், தனது தவறுகள் குறித்து கட்சி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது, தனக்குப் பாதையைச் சரி செய்ய முயலுகிறதென்றும் மெய்யாகவே உணரக் கூடிய வகை யிலும் — கட்சி ஊழியர் ஒவ்வொருவரும் கட்சியின் பொது வான டூமாப் பணியில் பங்கு கொண்டு அதன் நடவடிக்கை கள் பற்றிய நடைமுறை மார்க்சிய விமர்சனத்திலிருந்து கற்றறிந்து, அதற்குத் துணை புரிதல் தனது கடமையாகுமென உணர்ந்து, கட்சியின் பிரசார, கிளர்ச்சிச் செயற்பாடு அனைத் துக்கும் இசைவாய் டூமாக் குழுவின் தனிப்பட்ட வேலைகளை ஒழுங்கு செய்யப் பாடுபடக் கூடிய வகையிலும் — இத்துறை யில் உடனடியாய் நாம் ஒன்றுபட்டக் கூட்டுப் பணிக்கு ஏற்பாது செய்து கொள்ள வேண்டும்.

இம்மாநாடு மிகப் பெரிய கட்சி நிறுவனங்களது பிரதி நிதிகள் டூமாவிலுள்ள சமூக-ஜனநாயகக் குழு டூமா அமர்வு பூராவிலும் செய்த வேலைகளை விவாதித்த அதிகாரபூர்வமான முதலாவது கூட்டமாகும். மாநாட்டின் தீர்மானம் நமது கட்சி டூமாவில் தனது பணியினை எப்படி நடந்தேறச் செய்யப் போகிறது, இத்துறையில் தன்பாலும் டூமாக் குழுவின் பாலும் எப்படி அது கண்டிப்பாய் இருக்கப் போகிறது, மெய்யான சமூக-ஜனநாயகப் பாராளுமன்றப் பணியை வளர்த்து உருவாக்குவதற்காக எப்படி அது பிறழாதும் முரணின்றியும் பாடுபடப் போகிறது என்பதை மிகத் தெளி வாய் விளங்க வைக்கிறது.

டூமாக் குழுவின்பால் நமது போக்கு பற்றிய பிரச்சினை போர்த்தந்திர அம்சமும் நிறுவன ஒழுங்கமைப்பு அம்சமும் உள்ளடங்கியதாகும். நிறுவன ஒழுங்கமைப்பைப் பொறுத்த வரை டூமாக் குழு பற்றிய தீர்மானம், நமது நிறுவன ஒழுங்

கமைப்புக் கொள்கையின் பொதுக் கோட்பாடுகளை—நிறுவன ஒழுங்கமைப்புப் பிரச்சினையிலான தாக்கீதுகளை அளிக்கும் தீர்மானத்தில் மாநாடு எடுத்துரைக்கும் இந்தக் கோட்பாடுகளை—குறிப்பிட்ட ஒரு விவகாரத்தில் கையாளுதலையே குறிக்கிறது. இப்பிரச்சினையில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் இரு பிரதான போக்குகள் இருப்பதை மாநாடு பதிவு செய்திருக்கிறது: ஒரு போக்கு சட்ட விரோதக் கட்சி நிறுவனத்துக்கு முதன்மை தருகிறது, மற்றொன்று—கட்சிக் கலைப்புவாதத்தை அதிகமாகவோ குறைவாகவே ஒத்திருக்கும் இது—சட்டபூர்வமான, பகுதியளவுக்குச் சட்டபூர்வமான நிறுவனங்களுக்கே முதன்மை தருகிறது. விவகாரம் என்னவெனில், நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, கட்சி ஊழியர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர்—முக்கியமாய் அறிவுத்துறையினரும், மற்றும் தொழிலாளர்களில் ஒரு சிலரும்—கட்சியை விட்டு வெளியேறுவது தற்போதைய சூழ்நிலையின் தனி விசேஷமாகும். மிகச் சிறந்த, மிகவும் செயல்முனைப்புள்ள நபர்கள் கட்சியைத் துறந்துவிட்டு சட்டபூர்வமான நிறுவனங்களைத் தமது செயல்களுக்கான அரங்காய்த் தேர்வு செய்து கொள்கின்றனரா, அல்லது "ஊசலாடும் அறிவுத்துறையினரான, குட்டிபூர்ஷுவா நபர்கள்தான்" கட்சியை விட்டு விலகிச் செல்கின்றனரா என்ற கேள்வியைக் கலைப்புவாதப் போக்கு எழுப்புகிறது. கலைப்புவாதத்தை மாநாடு உறுதியான முறையில் நிராகரித்து அதை கண்டனம் செய்ததன் மூலம், இரண்டாவது வகை நபர்கள்தான் கட்சியை விட்டு விலகிச் செல்கின்றனர் என்று அது பதிலளித்தது என்பதைக் கூறத் தேவையில்லை. கட்சியில் மிகவும் பாட்டாளி வர்க்கத் தன்மையுடைத்த நபர்களும், அறிவுத்துறையினரில் கோட்பாட்டில் மிகவும் நிலைபேறுள்ள, மிகுந்த அளவுக்கு சமூக-ஜனநாயகத் தன்மையுடையோரான உறுப்பினர்களும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியிடம் பற்றுறுதி கொண்டோராய் இருந்தனர். கட்சியை விட்டுச் சில நபர்கள் துறந்து ஓடுவதால், கட்சி தூய்மையே அடைகிறது. கட்சியானது இதன் மூலம் தன்னிடமிருந்து மிகவும் நிலையற்றோரை நம்பத் தகாத நண்பர்களை, "சகபயணிகளை" (Mitläufer)—சொற்ப காலத்துக்குப் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொள்

வோரும், குட்டிபூர்ஷுவாக்களிடமிருந்து அல்லது ''வர்க்க நீக்கம் பெற்றவர்களிடமிருந்து'', அதாவது குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் பிடியிலிருந்து உதறியெறியப்பட்டவர்களிடமிருந்து கட்சியினுள் சேர்க்கப்பட்டோருமான இவர்களை—கழித்துக் கட்டிக் கொள்கிறது.

மாநாட்டால் ஏற்கப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்புக் கொள்கை வழியானது, கட்சி நிறுவன ஒழுங்கமைப்புக் கோட்பாடு பற்றிய மேற்கூறிய மதிப்பீட்டிலிருந்து தர்க்க வழியில் பெறப்படுவதாகும். சட்டவிரோதக் கட்சி நிறுவனத்தைப் பலப்படுத்திச் செல்லுதல், எல்லாப் பணித் துறைகளிலும் கட்சிக் குழுக்களைத் தோற்றுவித்தல், யாவற்றுக்கும் முதலாய் ''ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் எண்ணிக்கையில் சொற்பமாயினும் தொழிலாளர்களாலாகிய மெய்யான கட்சிக் கமிட்டிகளை'' அமைத்தல், தலைமைப் பதவியின் வேலைகளைத் தொழிலாளர்களிடமிருந்தே தோன்றிய சமூக-ஜனநாயக இயக்கத் தலைவர்களின் கரங்களில் ஒன்று குவியச் செய்தல்—இவைதாம் இன்றுள்ள பணி. பகுதி அளவுக்குச் சட்டபூர்வமான நிறுவனங்கள் யாவற்றையும், கூடுமான வரை, சட்டபூர்வ நிறுவனங்களையும் பயன்படுத்திக் கொள்ளுதலும், ''வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு'' நிறுவிக் கொள்ளுதலும், வெகுஜனங்களது எல்லாத் தேவைகளுக்கும் சமூக-ஜனநாயகம் செவி சாய்க்கும்படியாய் வேலைகளை நெறிப்படுத்தலுமே இந்தக் குழுக்களுக்கும் கமிட்டிகளுக்குமுள்ள பணி என்பது கூறுமலே விளங்கும். கட்சிக் குழு ஒவ்வொன்றும், தொழிலாளர் கமிட்டி ஒவ்வொன்றும் ''வெகுஜனங்களுக்கிடையே கிளர்ச்சிக்கும் பிரசாரத்துக்கும் நடைமுறை ஒழுங்கமைப்பு வேலைகளுக்குமான அடித்தளம்'' ஆதல் வேண்டும், அதாவது வெகுஜனங்கள் எங்கே செல்கிருர்களோ அங்கே அவையும் செல்ல வேண்டும், ஒவ்வோர் அடியிலும் சோஷலிசத்தின் திசையில் வெகுஜனங்களது உணர்வினை உந்திவிடவும் ஒவ்வொரு பிரத்தியேகப் பிரச்சினையையும் பாட்டாளி வர்க்கத்தினுடைய பொதுப் பணிகளுடன் இணைத்திடவும் நிறுவன ஒழுங்கமைப்புச் செயல் ஒவ்வொன்றையும் வர்க்கத்தை ஒன்றுதிரண்டு உறுதி பெறச் செய்யும் செயலாய் மாற்றிடவும் அயராத செயலாற்றலைக் கொண்டும் சித்தாந்தச் செல்வாக்கைக்

கொண்டும் (பட்டம் பதவிகளைக் கொண்டல்ல) பாட்டாளி வர்க்கத்தின் சட்டபூர்வ நிறுவனங்கள் யாவற்றிலும் தலைமைப் பாத்திரம் பெறவும் முயல வேண்டும். இந்தக் குழுக்களும் கமிட்டிகளும் சில நேரங்களில் மிகச் சிறியதாய் இருக்க நேர்ந்த போதிலும், இவை கட்சிப் பாரம்பரியத்தாலும் கட்சி நிறுவன அமைப்பாலும் திட்டவட்டமான வர்க்க வேலைத்திட்டத்தாலும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும். கட்சியின் இரண்டு மூன்று சமூக-ஜனநாயக உறுப்பினர்கள் திட வடிவமில்லா சட்டபூர்வ நிறுவனத்தில் மூழ்க்கடிக்கப்பட்டுவிடுவதை இவ்வழியில் தவிர்த்துக் கொள்ள முடியும்; எல்லா நிலைமைகளிலும் எல்லாச் சூழல்களிலும் எல்லா வகையான சந்தர்ப்பங்களிலும் தமது கட்சிக் கொள்கை வழியினைப் பின்பற்றிச் செல்ல முடியும்; சுற்றுச்சார்பு தம்மை விழுங்கிவிட இடமளியாது கட்சி முழுவதுக்குமான போக்குக்கு உகந்தவாறு தமது சுற்றுச்சார்பினை வயப்படுத்தி மாற்ற முடியும்.

எந்த வகைப்பட்ட வெகுஜன நிறுவனங்களும் கலைக்கப்படலாம் என்றாலும், சட்டபூர்வத் தொழிற் சங்கங்கள் வேட்டையாடப்பட்டு ஒழித்துக் கட்டப்படலாம் என்றாலும், தொழிலாளர்களது முன்முயற்சியால் நடைபெறும் ஒவ்வொரு பகிரங்கச் செயலும் எதிர்ப்புரட்சியின் ஆட்சியில் எந்த சாக்கின் பேரிலும் போலீசால் குலைக்கப்படலாம் என்றாலும் —ருஷ்யா ஏற்கனவே ஆகிவிட்டதைப் போன்ற ஒரு முதலாளித்துவ நாட்டில் தொழிலாளர்களில் பெருந் திரள்களானோர் ஒரு சேரத் திரள்வதை உலகின் எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது. தொழிலாளி வர்க்கம் தன்னை ஒன்று சேரச் செய்வதற்கான நிலைகளை இவ்வழியிலோ அவ்வழியிலோ, சட்டபூர்வமாகவோ சட்டவிரோதமாகவோ, பகிரங்கமாகவோ இரகசியமாகவோ தேடிக் கொள்ளவே செய்யும். வர்க்க உணர்வு படைத்த கட்சியைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் எங்கும் எப்போதும் வெகுஜனங்களது முன்வரிசையில் நடைபோடுவர், கட்சி மனப்பான்மையுடன் வெகுஜனங்களை வயப்படுத்தி இயங்கச் செய்வதற்காக எங்கும் எப்போதும் ஒன்றுசேர்ந்து செயல்படுவர். சமூக-ஜனநாயகம் பகிரங்கப் புரட்சியில் தானே வர்க்கத்தின் கட்சி என்பதை, வேலைநிறுத்தங்களிலும் 1905ஆம் ஆண்டு எழுச்சியிலும் மற்றும் 1906-07ஆம் ஆண்டுகளின் தேர்தல்களிலும் கோடிக்

கணக்காஞேருக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்வதில் வெற்றி கண்ட கட்சி என்பதை நிரூபித்துக் காட்டிற்று. மீண்டும் இப்பொழுது அதஞல் வர்க்கத்தின் கட்சியாய், வெகு ஜனங்களின் கட்சியாய் இருக்க முடியும்; முன்னணிப் படையாய், மிகக் கடின நேரத்திலும் சேனை அனைத்திடமுமிருந்து தொடர்பு அருதிருந்து இக்கடின நேரத்தை இச்சேனை சமாளிக்கவும் தன் அணிவரிசைகளை மீண்டும் ஒன்றுதிரளச் செய்து உறுதியாக்கி, மேலும் மேலும் புதிய வீரர்களைப் பயிற்றுவித்துக் கொள்ளவும் இதற்குத் துணை புரிய வல்லதான முன்னணிப் படையாய் இருக்க முடியும்.

கடும் கறுப்பு நூற்றுவர் பிற்போக்காளர்கள் டூமாவின் உள்ளும் வெளியிலும், தலைநகரிலும் தொலைதூர இடங்களிலும் ஆடிப் பாடட்டும், ஊளையிடட்டும், பிற்போக்கு தலைவிரிகோலமாய் ஆடட்டும்—மெத்தப் பெரிய அறிவாளராகிய திருவாளர் ஸ்தலீப்பின், குப்புறவிழும் அபாய நிலையில் தோத்திக் கொண்டு நிற்கும் எதேச்சாதிகாரத்தை அதன் வீழ்ச்சியை மேலும் நெருங்கி வரச் செய்யாமல், அரசியல் அசாத்தியங்களாலும் அபத்தங்களாலுமான புதிய கடுஞ் சிக்கலை உண்டாக்காமல், பாட்டாளி வர்க்கத்தின் அணிகளிலும் விவசாயி வெகுஜனங்களது புரட்சிகரப் பகுதியினரின் அணிகளிலும் புதிய படைவரிசைகளைச் சேரச் செய்யாமல் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க முடியப் போவதில்லை. வெகுஜனங்களுடன் இணைந்து இடையருது செயலாற்றுவதற்காகத் தன்னை வன்மையும் திண்மையுமுடையதாக்கிக் கொள்ளும் ஒரு கட்சி, முன்னேறிய வர்க்கத்தின் ஒரு கட்சி, இவ்வர்க்கத்தின் முன்னணிப் படையை ஒழுங்கமைப்பதில் வெற்றி பெறும் ஒரு கட்சி, பாட்டாளி வர்க்கத்தின் உயிர் அறிகுறி ஒவ்வொன்றையும் சமூக-ஜனநாயக மனப்பான்மையிலே செயல்பட வைக்கும்படித் தனது சக்திகளை நெறிப்படுத்திக் கொள்ளும் ஒரு கட்சி—என்னதான் நேர்ந்தபோதிலும் வெற்றி பெறுவது திண்ணம்.

சொத்சியால்-டெமக்ராத்,
*இதழ் 2, ஜனவரி 28*
*(பிப்ரவரி 10), 1909*

நூல் திரட்டு,
தொகுதி 17,
பக்கங்கள் 354-65

# மீண்டும் கட்சி இயல்பும் கட்சிசார்பின்மையும் குறித்து

கட்சி, கட்சிசார்பில்லா, தேவையான, '''தேவையற்ற'' வேட்பாளர்கள் பற்றிய பிரச்சினை தற்போதைய டூமா தேர்தலில் சந்தேகத்துக்கு இடமின்றி—மிக முக்கியமானது இல்லையெனில்—மிக முக்கியமானவற்றுள் ஒன்றாகும். முதலாவதாகவும் முதன்மையானதாகவும், தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களும் தேர்தலைப் பார்த்துக் கொண்டிருக்கும் விரிவான வெகுஜனப் பகுதியோரும் தேர்தல் தேவையாய் இருப்பது ஏன், டூமா பிரதிநிதி ஒருவர் முன்னால் இருக்கும் பணி என்ன, மூன்றாவது டூமாவில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரதிநிதி ஒருவரின் போர்த்தந்திரம் என்னவாய் இருக்க வேண்டும் என்பவற்றை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் தேர்தல் இயக்கம் முழுதும் கட்சித் தன்மை கொண்டதாய் இருந்தால் தான் இவை யாவுங் குறித்து முழுமையானதும் துல்லியமானதுமான கருத்தினைப் பெற முடியும்.

மெய்யாகவே விரிவான, மிகமிக விரிவான பெருந் திரள்களானோரின் நலன்களைத் தேர்தலில் நிலைநிறுத்த விரும்புவோர் பெருந் திரளான மக்களின் அரசியல் உணர்வினை வளர்த்திடுவதுதான் முதலாவதும் முதன்மையானதுமான பணி. இந்த உணர்வு அதிகமாய் வளர்க்கப்பட வளர்க்கப்பட, பிரிக்க முடியாதபடி இந்த வளர்ச்சியுடன் இணைந்த முறையில் மக்களது பல்வேறு வர்க்கங்களுடைய மெய்யான நலன்களுக்கு ஏற்ப வெகுஜனங்களது தொகுதிப் பிரிவினையும் மேலும் மேலும் தெளிவாய் விளக்கம் பெறும். எல்லா வகையான கட்சிசார்பின்மையும், மிகவும் சாதகமான நிலைமை

களிலுங்கூட, வேட்பாளர், அவரை ஆதரிக்கும் கோஷ்டிகள் அல்லது கட்சிகள், மற்றும் அவருடைய தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளும் வெகுஜனங்களின் அரசியல் உணர்வில் தெளிவும் முதிர்ச்சியும் போதியஅளவு இல்லை என்பதையே எப்பொழுதும் சுட்டிக்காட்டுகிறது.

தக்க நிறுவன ஒழுங்கமைப்பும் தெளிவாய் வரையறுக்கப்பட்ட, கோட்பாடு வழிப்பட்ட வேலைத்திட்டமும் இல்லாமல், சொத்துடைத்த வர்க்கங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சிறு தொகுதிகளின் நலன்களுக்குத் தொண்டாற்றுவதையே தேர்தலில் நோக்கமாய்க் கொண்ட எல்லாக் கட்சிகளின் விவகாரத்தில் வெகுஜனங்களுடைய அரசியல் உணர்வினை வளர்த்திடும் பணி பின்னிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது; வெகுஜனங்கள் தெளிவான வர்க்கத் தொகுப்புகளாய்ப் பிரிக்கப்படுவது அனேகமாய் எப்பொழுதுமே விரும்பத்தகாததாகவும் அபாயகரமானதாகவும் கருதப்படுகிறது. முதலாளித்துவக் கட்சிகளுக்குப் பாதுகாப்பாய்ச் செயல்பட விரும்பாதோருக்கு அரசியல் உணர்விலும் வர்க்க ஒழுங்கிணைவிலும் தெளிவு ஏற்படுதல் யாவற்றுக்கும் முதன்மையானவை ஆகும். இது குறிப்பிட்ட விசேஷ சந்தர்ப்பங்களில் வெவ்வேறு கட்சிகளும் தற்காலிகமாய்க் கூட்டாய்ச் செயல்கள் மேற்கொள்வதைத் தடுப்பதாகிவிடாது. ஆனால் எல்லா வகையான கட்சிசார்பின்மையையும் கட்சித் தன்மை எவ்விதத்திலும் பலவீனமாக்கப்படுதலையும் தெளிவின்றி குலைக்கப்படுதலையும் இது முற்றுகத் தடுப்பதாகும்.

விரிவான வெகுஜனங்களின் நலன்களுக்காக வேண்டி, எவ்விதமான முதலாளித்துவச் செல்வாக்கிலிருந்தும் அவர்களை விடுவிப்பதற்காக வேண்டி, வர்க்க ஒழுங்கிணைவுகள் முழு அளவுக்குத் தெளிவாயிருப்பதற்காக வேண்டி நாம் கட்சித் தன்மையை உறுதியாய்ப் பாதுகாத்து நிலைநாட்டும் இதே காரணத்தை முன்னிட்டு, கட்சித் தன்மை வெறும் சொல்லளவில் மட்டுமின்றி, எதார்த்த உண்மையிலும் அனுசரிக்கப்படுமாறு கவனித்துக் கொள்வதற்காக நமது பலத்தையும் விழிப்புணர்ச்சியையும் சாத்தியமான முழு அளவுக்கும் பிரயோகித்தாக வேண்டும்.

கட்சிசார்பில்லாத வேட்பாளர் குஸ்மீன்-கரவாயெவ்— ஏற்கனவே ''தேவையற்ற'' வேட்பாளராய்ப் பட்டமிடப்

பட்டுவிட்ட இவர்—செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தேர்தல்களில், கருராய்ப் பேசுமிடத்து, கட்சி வேட்பாளர்கள் என்பதாய் யாரும் இல்லை என்று அடித்துக் கூறுகிருர். மறுத்து வாதாடு வதற்குக்கூட தகுதியில்லாத அளவுக்குத் தவருன அபிப்பி ராயம் இது. கூத்லெரும் என். தி. சக்கலோவும் கட்சி வேட் பாளர்களே என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. இவர்களை வேட்பாளர்களாய் நிறுத்தியுள்ள கட்சிகள் முழுதும் பகிரங் கமான கட்சிகளாய் இல்லாத நிலைமையால் ஓரளவு குஸ்மீன்-கரவாயெவ் தவருன பாதையில் இட்டுச் செல்லப்படுகிருர். ஆனுல் இந்த நிலைமை கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெற இடையூருய் இருக்கிறது என்ருலும், இவ்வாறு இவை நடைபெற வேண்டிய அவசியத்தை அகற்றிவிட வில்லை. இத்தகைய இடையூறுகளுக்கு அடிபணிவது, இவற் றின் எதிரே கைகட்டிக் கொண்டு நிற்பது, திருவாளர் ஸ்தலீப்பின் தமது "அரசியல் சட்ட நெறி" குறித்து "எதிர்த் தரப்பிடமிருந்து" (எதிர்த்தரப்பு என்பதாய்ச் சொல்லப் படும் இதனிடமிருந்து) ஆமோதிப்பு பெற விரும்புகிருரே அவரது அந்த விருப்பத்துக்கு இணங்கிவிடுவதற்கே முற்றி லும் ஒத்ததாகும்.

இந்த இடையூறுகளின் முன்னுல் எந்தக் கட்சிகள் அடி பணிந்துவிட்டன, எவை தமது வேலைத்திட்டத்தையும் தமது கோஷங்களையும் முழுமையாய்ப் பாதுகாத்துக் கொண்டுள் ளன; எவை தமது டூமாச் செயற்பாட்டையும் தமது பத்திரிகைகளையும் தமது நிறுவனத்தையும் பிற்போக்குவாத ஆட்சியின் கட்டுக்கோப்புக்கு ஏற்றபடி குறைத்தும் கட்டுப் படுத்தியும் இந்தப் பிற்போக்குவாத ஆட்சிக்கு உகந்தவாறு "தம்மைத் தகவமைத்துக் கொள்ள" முயன்றுள்ளன, எந்தக் கட்சிகள் குறிப்பிட்ட சில செயற்பாட்டு வடிவங்களை மாற்றிக் கொள்வதன் மூலம்—எவ்வகையிலும் டூமாவில் தமது கோஷங்களை வெட்டிக் குலைத்துக் கொள்வதன் மூல மோ தமது பத்திரிகைகளையும் நிறுவனத்தையும் பிறவற்றை யும் கடுமையாய்க் கட்டுப்போட்டுக் கொள்வதன் மூலமோ அல்ல—தம்மைத் தகவமைத்துக் கொண்டன ஆகிய இவற் றை இப்பொழுது கண்டு கொள்வது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளும் வெகுஜனங்களுக்குக் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கட்சிகளுடைய

வரலாற்றின் அடிப்படையில், டூமாவினுள்ளும் வெளியிலும் அவற்றின் செயற்பாடு பற்றிய உண்மைகளின் அடிப்படையில் அமைந்த இத்தகைய விரிவான பரிசீலனை தேர்தல் இயக்கத்தின் பிரதான உள்ளடக்கமாதல் வேண்டும். புதியதும், ஜனநாயகவாதிகளுக்கு அதிகக் கடினமானதுமாகிய இந்தச் சூழ்நிலையில் வெகுஜனங்கள், ஜனநாயகக் கட்சிகள் என்னும் பட்டத்துக்கு உரிமை கொண்டாடும் கட்சிகள் பற்றி மீண்டும் பரிச்சயம் பெற்றுக் கொண்டாக வேண்டும். வெகுஜனங்கள் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் என். தி. சக்கலோவை வேட்பாளராய் நிறுத்தியிருக்கும் ஜனநாயகவாதிகளிடமிருந்து வேறுபடுத்தும் இயல்புகளை மீண்டும் மீண்டும் கண்டு தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய பொதுக் கண்ணோட்டத்திலும் இறுதிக் குறிக்கோளிலும் விடுதலைக்கான மாபெரும் சர்வதேச இயக்கத்தின் பணி குறித்து அவர்களுக்குள்ள போக்கிலும் ருஷ்யாவில் விடுதலை இயக்கத்தின் இலட்சியங்களையும் முறைகளையும் பாதுகாத்து நிற்க அவர்களுக்குள்ள ஆற்றலிலும் காணப்படும் வித்தியாசங்களை வெகுஜனங்கள் கண்டு தெரிந்து கொள்ள வேண்டும். வெகுஜனங்கள் இந்தத் தேர்தல் இயக்கத்திலிருந்து மேலும் அதிகக் கட்சி-உணர்வுடையோராய், வெவ்வேறு வர்க்கங்களுடைய நலன்களையும் குறிக்கோள்களையும் கோஷங்களையும் கருத்தோட்டங்களையும் செயல் முறைகளையும் மேலும் தெளிவாய் அறிந்து கொண்டோராய் வெளிவர வேண்டும்—இதுவேதான் என். தி. சக்கலோவால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் அரசியல் போக்கு மற்றவை யாவற்றிலும் உயர்வானதாய் மதித்துப் போற்றும் நிரந்தரப் பலனாகும்; பிரயாசை மிக்க, ஊசலாட்டம் சிறிதுமில்லாத, விடாப்பிடியான, விரிவான வேலைகளின் மூலம் அது சாதிக்கப் போகும் நிரந்தரப் பலனாகும்.

நோவி தியேன், இதழ் 9,
*1909 செப்டம்பர் 14 (27)*
ஒப்பம்: விள. இலியீன்

நூல் திரட்டு,
*தொகுதி 19,*
*பக்கங்கள் 109-11*

# நான்காவது டூமாவுக்கான தேர்தல்களின் தறுவாயில்

தேர்தல்களின் தறுவாயில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியானது கொடிய அடக்குமுறையையும் மீறி, முழுமுழுத் தொகுதியானோர் சிறைபிடிக்கப்பட்டுள்ளதையும் மீறி வேறு எந்தக் கட்சியைக் காட்டிலும் தெளிவான, திட்டவட்டமான, துல்லியமான வேலைத்திட்டத்துடனும் போர்த்தந்திரத்துடனும் கொள்கைப் பிரகடனத்துடனும் முன்வந்துள்ளது.

*1912* ஜனவரியில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அனைத்து ருஷ்ய மாநாடு, எதிர்ப்புரட்சியின் கொடிய ஆண்டுகளில் கட்சி செய்த சித்தாந்த, அரசியல் வேலைகளின் பலன்களைத் தொகுத்துக் கூறிற்று. இயக்கத்தின் எல்லா அவசரப் பிரச்சினைகளுக்கும் மாநாட்டுத் தீர்மானங்கள் பதிலளித்தன. இத்தீர்மானங்களின் விளைவாய் தேர்தல் கொள்கைப் பிரகடனம் இறுதி அறிக்கையாய் வெளியாயிற்று. இந்த அறிக்கை மத்தியக் கமிட்டியால் ருஷ்யாவில் வெளியிடப்பட்டது. பிறகு ஸ்தல நிறுவனங்கள் மிகப் பலவற்றாலும் மீண்டும் அச்சிடப்பட்டது. முதலாளித்துவப் பத்திரிகைகள் யாவும் மாநாடு பற்றி செய்தி அறிவித்து அதன் தீர்மானங்கள் சிலவற்றை வெளியிட்டன.

மாநாட்டுக்குப் பிறகு கழிந்திருக்கும் ஆறு மாதங்களில் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிக் கூறுவதற்காகவும் அவற்றைச் செயல்படுத்துவதற்காகவும் கட்சிப் பத்திரிகைகள் மூலமும் ஆலைக் குழுக்களில் நிகழ்த்தப்பட்டுள்ள மிகப் பல விளக்கவுரைகள் மூலமும் நூற்றுக் கணக்கான சொற்பொழிவு

கள் வாயிலாகவும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்ற கூட்டங்கள் வாயிலாகவும் வேலைகள் நடந்தேறியுள்ளன. கட்சியின் கோஷங்கள்—குடியரசு, எட்டுமணி நேர வேலை நாள், நிலப்பிரபுக்களினது நிலங்களைப் பறிமுதல் செய்தல்—ருஷ்யா பூராவும் பரப்பப்பட்டிருக்கின்றன. முன்னணிப் பாட்டாளி வர்க்கத்தவர்களால் இவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. வெகுஜனங்களுடைய புரட்சிகர அலைமோத லானது—வேலைநிறுத்தங்கள், கூட்டங்கள் முதலாய் சேனை யில் நடைபெறும் கலகங்கள் வரையிலாய்ப் பலவாறாகவும் இது வெளிப்பட்டிருக்கிறது—இந்தக் கோஷங்கள் பிழை யற்றவை, ஜீவாதாரமானவை என்பதை நிரூபித்திருக் கிறது.

நமது கட்சி தேர்தல்களை ஏற்கனவே பயன்படுத்திக் கொண்டுள்ளது, மிகவும் விரிவாகவே பயன்படுத்திக் கொண் டுள்ளது. போலீஸ் எவ்வளவுதான் ''விளக்கம்'' தந்தபோதி லும், நான்காவது டூமா குறித்து எவ்வளவுதான் பொய் கள் திரிக்கப்பட்டபோதிலும் (பாதிரிமார்களாலும் பிறரா லும்) இவற்றால் இந்தப் பலனை வீணாக்கிவிட முடியாது. கண் டிப்பான முறையில் கட்சி வழிகளில் அமைந்த பிரசாரம் ஏற் கனவே எங்கணும் நடத்தப்பட்டிருக்கிறது, சமூக-ஜனநாயக வாதிகளது தேர்தல் இயக்கம் அனைத்துக்கும் இது சுதி கூட்டித் தந்துள்ளது.

முதலாளித்துவக் கட்சிகள் ''தேர்தல்களுக்காகக் கொள் கைப் பிரகடனங்கள்'', வாக்குறுதிகளுக்காக, வாக்காளர் களை ஏய்ப்பதற்காகக் கொள்கைப் பிரகடனங்கள் அவசர மாகவும் அலங்கோலமாகவும் எழுதி வருகின்றன. மிதவாதி களின் வாலைப் பிடித்துச் செல்லும் கலைப்புவாதிகளுங்கூட தற்போது ''தேர்தல்களுக்காகக் கொள்கைப் பிரகடனம்'', சட்டபூர்வமான ஒரு கொள்கைப் பிரகடனம் புனைந்து வரு கிறார்கள். சட்டத்துக்குப் பணிந்து செல்லும் மதிப்பான ''தேர்தல்களுக்காகிய கொள்கைப் பிரகடனத்தைக்'' கொண்டு தமது படுமோசமான குழப்படியையும் ஒழுங்கின் மையையும் சித்தாந்தக் கோட்பாடு இல்லாத நிலையையும் மறைத்துக்கொள்ளத் தயார்செய்யும் இவர்கள் தணிக்கைக்கு உட்பட்ட சட்டபூர்வமான பத்திரிகைகளில் கொள்கைப் பிரகடனங்கள் குறித்து வெற்றுக் கூச்சல் போடுகின்றனர்.

''தேர்தல்களுக்காகக்'' கொள்கைப் பிரகடனமல்ல, **புரட்சிகர சமூக-ஜனநாயகக்** கொள்கைப் பிரகடனத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்தல்கள்! — தொழிலாளி வர்க்கத்தின் கட்சி இப்படித்தான் இதைப் பார்க்கிறது. இந்த நோக்கத்துக்காக ஏற்கனவே நாங்கள் தேர்தல்களைப் பயன்படுத்தியுள்ளோம், இனியும் முழு அளவுக்குப் பயன் படுத்திக் கொள்வோம். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் புரட்சிகரக் கொள்கைப் பிரகடனத்துக்கும் போர்த்தந்திரத்துக்கும் வேலைத்திட்டத்துக்கும் ஆதரவாய்ப் போராட நாம் மிகவும் பிற்போக்கான ஜாரிஸ்டு டூமாவையுங்கூட பயன்படுத்திக் கொள்ளவே செய்வோம். இயக்கத்தின் **எல்லாக்** கேள்விகளுக்கும் முழுநிறைபதில்களை ஏற்கனவே அளித்துவிட்ட **புரட்சிகரக்** கிளர்ச்சிக்கான நீண்ட நெடும் பணியினை நிறைவு பெறச் செய்யும் கொள்கைப் பிரகடனங்கள் மட்டும்தான் மதிப்பு மிக்கவை. கலைப்புவாதிகளுடையதைப் போல் சமாளிப்புத் தந்திரமாகவும் ஆடம்பர விளம்பரமாகவும் அவசர கோலமாய்த் தயாரிக்கப்பட்ட கொள்கைப் பிரகடனங்கள் (முக்கியமாய்ச் சட்டபூர்வமானவை) சிறிதும் மதிப்பில்லாதவை.

கட்சி தன்னை மீண்டும் நிறுவிக் கொண்டபின் ஆறு மாதங்கள் கழிந்திருக்கின்றன. நம்புதற்கரிய இடர்ப்பாடுகளை மீறிச் சென்று, பயங்கர அடக்குமுறைக்கு ஆட்பட்டு, இந்த அல்லது அந்த ஸ்தல மையத்தின், அல்லது பொது மையமாகிய மத்தியக் கமிட்டியின் வேலைகளில் ஏற்பட்ட முறிவுகளுக்கு இலக்காகி, கட்சியானது திட்டவட்டமாய் முன்னேக்கி நடைபோட்டு வெகுஜனங்களிடையே தனது வேலைகளையும் தனது செல்வாக்கையும் வியாபகமாக்கிச் செல்கிறது. வேலைகள் இவ்விதம் வியாபகமாக்கப்படுதல் ஒரு **புதிய** வடிவில் நடந்தேறுகிறது: இரகசியமானவையும் குறுகலானவையுமான முன்னிலும் நன்கு வேடமிட்டு மறைக்கப்பட்டிருக்கும் சட்டவிரோதக் குழுக்களை அன்னியில், இன்னும் விரிவான சட்டபூர்வ மார்க்சியப் பிரசார இயக்கமும் இருந்து வருகிறது. புதிய நிலைமைகளில் புரட்சிக்கான புதிய தயாரிப்புகளின் இந்தத் தனித் தன்மை கட்சியினுல் நெடுங் காலமாய்க் குறிக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருக்கிறது.

இப்பொழுது நாம் கலைப்புவாதிகளுடைய கூச்சல்களுக்கு முழுமையான பதிலை அளிக்க முடியும். இவர்கள் ''மாற்று வேட்பாளர்களை''[43] நிறுத்தப் போவதாய் நம்மை மிரட்டு கிறார்கள். யாரும் பயந்துவிடப் போவதில்லை, வெற்று மிரட்டல்கள்! எவ்வளவுதான் உதவி கிடைப்பதாயினும் இவர் களைப் புத்துயிர் பெறச் செய்ய முடியப் போவதில்லை— கலைப்புவாதிகள் அப்படிப் படுமோசமாய்த் தோற்கடிக்கப் பட்டு சக்தியற்றுக் கிடக்கிறார்கள். ''மாற்று வேட்பாளர்களை'' நிறுத்துவது இவர்களுக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்று. அப்படி இவர்கள் நிறுத்தினாலும் நகைக்கத்தக்கதான, பரிதாப கரமான அற்ப வாக்குகளையே பெறுவார்கள். இவர்களுக்கு இது தெரியும், ஆகவே இந்தச் சோதனையில் இறங்கமாட்டார் கள். கவனத்தைத் திசைதிருப்பிவிட்டு உண்மையை மறைப் பதற்காகவே கூச்சல் எழுப்புகின்றனர்.

''எவ்வளவுதான் உதவி கிடைப்பதாயினும்'' என்று கூறி னோம். கலைப்புவாதிகள் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய உதவியை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நண்பர்கள்—முக்கியமாய் லாத்வியர்களும்[44] பூந்தும்[45] திரோத்ஸ்கியும் — பத்து ''மையங்களும் நிறுவனங்களும் குழுக்களும்'' கூட்டப்படப் போவதாய் அறிவித்திருக் கிறார்கள்! சிரிக்க வேண்டாம்! வெளியுலகம் செல்வமிக்கது, பெரியது, அள்ளி வழங்க வல்லது. ஒன்று இரண்டல்ல, ''பத்து மையங்களாம்''!! இங்கு கையாளப்படும் முறைகள் நான் காவது டூமாவில் அரசாங்கம் கையாளும் அதே முறைகள் தான்: பிரதிநிதித்துவ உறுப்பை நிறுவுவதற்காகத் தயாரிப்பு கள் செய்தல், பல பூஜ்யங்களைப் ''பெரிய எண்களாய்த்'' தோன்றும்படி மாற்றுதல் ஆகிய இவையேதான். முதலாவ தாய், திரோத்ஸ்கி (ருஷ்யாவில் இவர் ஒரு பூஜ்யமே, ழிவோயெ தியேலொவுக்கு[46] எழுதும் ஒருவர் என்பதற்கு மேல் இல்லை; இவருடைய ஆட்கள் கலைப்புவாதிகளது ''துவக்கக் குழுக்களின்''[47] ஆதரவாளர்கள் என்பதற்கு மேல் இல்லை). இரண்டாவதாக, 'கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா, அதாவது கையாலாகாத இதே கலைப்புவாதிகள். மூன்றாவதாக, ''காக்கேஷியப் பிராந்தியக் கமிட்டி''—இதுவும் ஒரு பூஜ்யமே, மூன்றாவது வகை வேடம் பூண்டது. நான்காவ தாக, ''நிறுவனக் கமிட்டி''[48]—அதே கலைப்புவாதிகளது

நான்காவது வகை வேடம் பூண்டோர். ஐந்தாவதாகவும் ஆறுவதாகவும், லாத்வியர்களும் இன்று முற்றிலும் கலைப்பு வாதியாகிவிட்ட பூந்த். மேலும் கூற வேண்டாம், போதும்!

வெளிநாடுகளிலுள்ள அனுமதேயங்களது இந்தக் கூத்தைக் கண்டு நமது கட்சி எள்ளி நகையாடுவதைக் கூறத் தேவையில்லை. செத்த பிணத்துக்கு அவர்களால் உயிரூட்டி எழுந்து நிற்கச் செய்ய முடியாது. ருஷ்யாவில் கலைப்பு வாதிகள் செத்த பிணமே ஆவர்.

இதோ இதற்குரிய உண்மைகள்.

ஆறு மாதங்களாய்க் கலைப்புவாதிகளும் இவர்களுடைய எல்லா நண்பர்களும் கட்சியை எதிர்த்து வெறித்தனமான போராட்டம் நடத்தி வந்துள்ளனர். சட்டபூர்வமான மார்க்சியப் பத்திரிகைகள் இருந்து வருகின்றன. இவை பயங்கரமாய் விலங்கிடப்பட்டிருக்கின்றன. குடியரசு வேண்டுமென்றோ, கட்சி குறித்தோ, எழுச்சி குறித்தோ, ஜார் மன்னரது கும்பல் குறித்தோ இவற்றால் துணிந்து ஒரு சொல் கூட சொல்ல முடியவில்லை. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினது கோஷங்களை இந்தப் பத்திரிகைகள் மூலம் எடுத்துரைக்கலாமென நினைப்பது முற்றிலும் நகைக்கத்தக்கதாகவே இருக்கும்.

ஆனால் ருஷ்யாவிலுள்ள தொழிலாளி முன்பிருந்த நிலையில் தற்போது இருக்கவில்லை. அவன் ஒரு சக்தியாய் மாறிவிட்டான். தனக்கு ஒரு பாதையைச் செப்பனிட்டுக் கொண்டுவிட்டான். தனது சொந்த பத்திரிகைகளை உடைத்தவனாகிவிட்டான். இவை மிகுந்த இடர்ப்பாடுகளுக்கு உட்பட்டிருந்த போதிலும் தொழிலாளிக்கே உரியவை, மார்க்சியத்தைத் தத்துவார்த்த வழியில் பாதுகாத்து வருகிறவை.

இந்தப் பகிரங்க அரங்கில், கலைப்புவாத-எதிர்ப்பாளர்களை எதிர்த்து கலைப்புவாதிகளது போராட்டம் பெற்றிருக்கும் ''வெற்றிகளை'' யாவரும் பார்க்க முடிகிறது. விபெரியோத்வாதியான[49] எஸ். வி. திரோத்ஸ்கியினுடைய கலைப்புவாத வியென்னு பிராவ்தாவில்[50] ஏற்கனவே இந்த வெற்றிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். தொழிலாளர்களுடைய வசூல்கள் அனேகமாய்ப் பூரணமாய்க் கலைப்புவாத-எதிர்ப்பாளர்களுக்கே போய்விடுகின்றன என்று அவர் எழுதினார். ஆனால் இதற்குக் காரணம் ''லெனினியவாதிகளைத்'' தொழிலாளர்கள்

ஆதரிக்கிறார்கள் என்பதல்ல என்று அவர் தமக்கு ஆறுதல் கூறிக் கொள்ள முயன்றார்.

அப்படியா, கலைப்புவாதிகளது அருமை நண்பரே!

இருப்பினும் உண்மை விவரங்களை உற்று நோக்கலாம்.

**தொழிலாளர்களுடைய தினசரி செய்தியேட்டுக்காக**[51] ஆறு மாதங்களாய்ப் பகிரங்கப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது.

1910 முதலாய்க் கலைப்புவாதிகள் இது பற்றி கூச்சலிட்டு வந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்ன? இவர்களுடைய பத்திரிகைகளான **ழிவோயெ தியேலொ**விலும் **நெவ்ஸ்கி கோலச**ிலும் ஆறு மாதங்களில்— 1912 ஜனவரி 1 முதல் ஜூலை 1 வரை—தொழிலாளர்களது தினசரிச் செய்தியேட்டுக்காகத் தொழிலாளர் குழுக்களுடைய **15 (பதினைந்து)** வசூல்கள் பற்றிய கணக்குகள் வெளிவந்தன!! ஆறு மாதங்களில் பதினைந்து தொழிலாளர் குழுக்களது வசூல்கள்!

கலைப்புவாத-எதிர்ப்பாளர்களுடைய பத்திரிகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். தொழிலாளர் தினசரிக்காக இதே ஆறு மாதக் காலத்தில் செய்யப்பட்ட வசூல்களைப் பற்றி அவை தரும் கணக்குகளைப் பாருங்கள். தொழிலாளர் குழுக்களுடைய வசூல்களின் எண்ணிக்கையைக் கூட்டிப் பாருங்கள். **தொழிலாளர் குழுக்கள் 504 வசூல்கள்** நடத்தியதைக் காண்பீர்கள்.

ருஷ்யாவின் பல பகுதிகளுக்குமான துல்லியமான மாதாந்தரப் புள்ளிவிவரங்களை அடியில் காணலாம்: [பக்கம் 109ல் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.]

ருஷ்யாவிலுள்ள தொழிலாளர் குழுக்களிடையே கலைப்புவாதிகள் படுதோல்வியுற்று விட்டனர். கலைப்புவாதிகள் செத்த பிணமாகிவிட்டனர். வெளிநாடுகளிலுள்ள பயங்கரமான (மிகமிக பயங்கரமானவைதான்!) ''கோஷ்டிகள், மையங்கள், குழுக்கள், போக்குகளின் கூட்டமைப்புகள்'' எவற்றாலும் இந்தப் பிணத்துக்கு உயிரூட்டிவிட முடியாது.

**ருஷ்யாவில் நூற்றுக் கணக்கான தொழிலாளர் குழுக்கள்** மத்தியில் கலைப்புவாதிகளுக்குக் கிடைத்திருக்கும் இந்த முழுத் தோல்வியினை வெளிநாடுகளிலிருந்து கூச்சலிடும் அறிக்கைகள் எவற்றாலும், ''துவக்கக் குழுக்களுக்கும்'' கலைப்புவாதி

| | 1912ன் முதற் பாதியில் தொழிலாளர்களது தினசரிச் செய்தியேட்டுக்காகத் தொழிலாளர் குழுக்களுடைய வசூல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | கலைப்புவாத-எதிர்ப்புப் பத்திரிகைகளில் | கலைப்புவாதப் பத்திரிகைகளில் |
| ஜனவரி . . . . . . . . | 14 | 0 |
| பிப்ரவரி . . . . . . . . | 18 | 0 |
| மார்ச் . . . . . . . . . | 76 | 7 |
| ஏப்ரல் . . . . . . . . | 227 | 8 |
| மே . . . . . . . . . | 135 | 0 |
| ஜூன் . . . . . . . . | 34 | 0 |
| மொத்தம்... | 504 | 15 |
| செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலும் சுற்றுப் புறங்களிலும் . . . . . | 415 | 10 |
| தெற்கில் . . . . . . . | 51 | 1 |
| ருஷ்யாவின் பிற பகுதிகளில் . . . . | 38 | 4 |
| மொத்தம்... | 504 | 15 |

களுக்கும் இடையிலான போலி மாநாடுகள் எவற்றுலும் சரிசெய்யவோ, குறைக்கவோ முடியாது.

ருஷ்யாவில் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுடைய தேர்தல் இயக்கத்தின் ஒற்றுமை உறுதியாகிவிட்டது. கலைப்புவாதிகளுடனை "ஒப்பந்தங்கள்" மூலமல்ல, கலைப்புவாதிகள் மீதான முழு வெற்றியினுல் உறுதியாகிவிட்டது. கலைப்புவாதிகள் ஏற்கனவே அவர்களது மெய்யான பாத்திரத்துக்குரியோராய், அதாவது மிதவாத அறிவுத்துறையினரின்

பாத்திரத்துக்குரியோராய்க் குறுக்கப்பட்டுவிட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியைச் சேர்ந்த கலைப்புவாதி ஸாவின் எவ்வளவு கச்சிதமாய் நாஷா ஸாரியாவுடன்[52] இணைந்து பொருந்துகிறார் பாருங்கள். மீண்டும் கலைப்புவாதத்துக்குச் சரிந்து செல்லும் (வாபஸ்வாதிகளாய் இருந்ததன் பின் விளைவுகள் காரணமாய்!) சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் ''முன்முயற்சியை'' லிஸ்தோக் கோலஸா சொத்சியால்-டெமக்ராத்தாவில் லெ. மா. எவ்வளவு ஆர்வமாய்ப் புகழ்கிறார் பாருங்கள். இதே ஏடு பிளெஹானவுக்குரிய முன்மாதிரியாய் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் பிரபலத் ''தலைவர்'' அவ்க்சேன்தியெவை முன்வைப்பதன் பொருள் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். போலந்து சோஷலிஸ்டுக் கட்சியின் சமூக-ஜனநாயகவாதமல்லாத இடதுசாரியை எல்லாக் கலைப்புவாதிகளும் எப்படி முத்தமிட்டுக் கொஞ்சுகிறார்கள் என்பதை நினைவு கூருங்கள். எல்லாக் கட்சிகளிலுமுள்ள கலைப்புவாதிகளே, ஒன்றுசேருங்கள்!

அவரவரும் முடிவில் அவரவரது உறைவிடத்துக்கு வந்து சேருகிறார். முன்னாள் மார்க்சியவாதிகளிடமிருந்தும், கையில் குண்டு ஏந்திய முன்னாள் மிதவாதிகளிடமிருந்தும்[53] கலைப்புவாத அறிவுத்துறையினர் நிகழ்ச்சிகளின் போக்கினால் ஒருசேர இணைக்கப்படுகின்றனர்.

தொழிலாளி வர்க்கக் கட்சியான ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைப் பொறுத்தவரை, அதைக் கலைத்தழித்தோர் பூட்டிய விலங்குகளிலிருந்து விடுதலை பெற்று வெளிவந்தபின் இந்த ஆறு மாதங்களில், மேற்கூறிய உண்மை விவரங்களிலிருந்து தெரிய வருவது போல, அது பிரமாதமாய் முன்னேறிச் சென்றிருக்கிறது.

ரபோச்சயா கஸேத்தா, இதழ் 9,
ஜூலை 30 (ஆகஸ்டு 12), 1912

நூல் திரட்டு,
தொகுதி 22,
பக்கங்கள் 5-9

# விவசாயிப் பிரதிநிதிகளது காங்கிரஸ்

விவசாயிகளது நிறுவனங்களேயும் விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளேயும் சேர்ந்த பிரதிநிதிகளது காங்கிரஸ் ஒன்று தவ்ரீதா மாளிகையில் ஏப்ரல் 13 முதலாய் நடைபெற்று வருகிறது. விவசாயிப் பிரதிநிதிகளது அனேத்து ருஷ்ய சோவியத்தைக் கூட்டுவதற்கான விதிமுறைகளே வகுப்பதற்காகவும் இத்தகைய ஸ்தல சோவியத்துகளே நிறுவுவதற்காகவும் இப்பிரதிநிதிகள் கூடியிருக்கிறார்கள்.

தியேலோ நரோதா தரும் தகவலின்படி 20க்கும் அதிகமான மாகாணங்களிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகள் இந்தக் காங்கிரசில் கலந்து கொள்கிறார்கள்.

அடியிலிருந்து ''உச்சி மட்டம்'' வரை அதிவேகமாய் ''விவசாயிகளே'' ஒழுங்கமைத்திடுவதன் அவசியத்தை வலியுறுத்தித் தீர்மானங்கள் ஏற்கப்பட்டுள்ளன. ''பல்வேறு பிரதேசங்களிலும் இயங்கி வரும் விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகள்தான்'' ''விவசாயிகளுக்கான சிறந்த நிறுவன ஒழுங்கமைப்பு வடிவமாகும்'' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காங்கிரசைக் கூட்டுவதற்கான தற்காலிகக் குழுவின் உறுப்பினரான பிஹோவ்ஸ்கி, விவசாயிப் பிரதிநிதிகளது அனேத்து ருஷ்ய சோவியத்தை நிறுவி விவசாயிகளே ஒழுங்கமைத்திடுவதென்ற தீர்மானம் 120 லட்சம் உறுப்பினர்களேக் கொண்ட அல்லது 500 லட்சம் மக்களேப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பான மாஸ்கோ கூட்டுறவுக் காங்கிரசால் முன்பு ஏற்கப்பட்டதாகும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

மகத்தான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முயற்சி இது. எல்லா வழிகளிலும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும். தாமதமின்றி நிறைவேற்றப்படுமாயின், ஷிங்கரியோவ் விரும்புவது போல நிலப்பிரபுக்களுடன் ''மனமுவந்த உடன்பாட்டுக்கு''[54] வந்தல்ல, அவரை மீறிச் சென்று பெரும்பான்மை முடிவின் பேரிலேயே விவசாயிகள் எல்லா நிலங்களையும் உடனடியாய் எடுத்துக் கொள்வார்களாயின், படைவீரர்கள் அதிக அளவில் ரொட்டியும் இறைச்சியும் பெற்று அனுகூலமடைவார்கள் என்பதோடு, சுதந்திர இலட்சியமும் அனுகூலம் அடையும்.

அரசாங்க அதிகாரிகளின்றி, நிலப்பிரபுக்களும் அவர்களுடைய பரிவாரத்தினரும் செய்யும் ''கண்காணிப்பும் மேற்பார்வையும்'' இன்றி அடியிலிருந்து செயலாக்கப்படும் விவசாயிகளது ஒழுங்கமைப்பானது, புரட்சியின், சுதந்திரத்தின், நிலப்பிரபுக்களது ஆதிக்கத்திலிருந்தும் அடிமைத் தளைகளிலிருந்தும் ருஷ்யாவின் விடுதலையின் வெற்றிக்குரிய நம்பகமான ஒரே உத்தரவாதமாகும்.

நமது கட்சியின் உறுப்பினர்கள் யாவரும், வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் எல்லோரும் விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளை அமைப்பதற்கு ஆதரவளிக்கத் தம்மால் இயன்றது அனைத்தையும் செய்வார்கள் என்பதிலும், அவற்றின் எண்ணிக்கை பெருகி அவற்றின் பலம் உறுதியடையும்படிச் செய்வார்கள் என்பதிலும், இந்த சோவியத்துகளினுள் முரணற்ற கண்டிப்பான பாட்டாளி வர்க்க வழிகளில் பணியாற்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

இப்பணியைச் செய்யும் பொருட்டு பொதுவான விவசாயி சோவியத்துகளினுள் பாட்டாளி வர்க்கக் கூறுகளை (விவசாயத் தொழிலாளர்கள், கூலியாட்கள் முதலானோர்) தனியே ஒழுங்கமைத்திடுவது, அல்லது (சில சமயங்களில் இதனுடன் கூடவே) தனியே விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்துகளை நிறுவுவது அவசியமாகும்.

நமது நோக்கம் சக்திகளைச் சிதறடிப்பதல்ல; மாறாக இயக்கம் பலமடையும் பொருட்டும் விரிவடையும் பொருட்டும் — நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பதத்தைப் பிரயோகிப்பதெனில் — மிகவும் ''கீழான'' சமுதாயப் பிரிவை,

அல்லது இன்னும் சரிவரச் சொல்வதெனில் வர்க்கத்தை, நாம் தட்டியெழுப்பியாக வேண்டும்.

இயக்கத்தை முன்னேறச் செய்ய வேண்டுமாயின் அதை நாம் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்து விடுவித்தாக வேண்டும்; குட்டிபூர்ஷுவாக்களுடைய தவிர்க்க முடியாத பலவீனங்களையும் ஊசலாட்டங்களையும் தவறுகளையும் அதனிடமிருந்து அகற்றியாக வேண்டும்.

நேசமுறையில் அறிவுறுத்தி இணங்க வைப்பதன் மூலமே இந்தப் பணி செய்யப்பட வேண்டும்; நிகழ்ச்சிகளை முந்திக் கொண்டு செல்லாமல், கிராமப் பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகளது பிரதிநிதிகள் இன்னும் தாமே முழுமையாய் உணர்ந்து, சிந்தனை செய்து, கிரகித்துக் கொள்ளாததை நிறுவன ஒழுங்கமைப்பு வழியில் ''உறுதிப்படுத்திக் கொள்ள'' அவசரப்படாமல் இது செய்யப்பட வேண்டும். ஆனால் செய்து முடிக்கப்பட வேண்டிய ஒரு பணி இது. உடனடியாகவே எங்கும் இதற்கான துவக்கம் செய்யப்பட்டாக வேண்டும்.

விவசாயிகளுடைய கவனத்தை ஈர்க்கும் பொருட்டு எழுப்பப்பட வேண்டிய நடைமுறைக் கோரிக்கைகளும் கோஷங்களும், அல்லது மேலும் திருத்தமாய்ச் சொல்வதெனில் பிரேரணைகள், ஜீவாதாரமான அவசர அவசியப் பிரச்சினைகளை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும்.

முதலாவது பிரச்சினை நிலப் பிரச்சினையாகும். விதிவிலக்கின்றி எல்லா நிலங்களும் அனைத்து மக்களுக்குரியதாய் முழுமையாகவும் உடனடியாகவும் மாற்றப்படுவதையும், ஸ்தல கமிட்டிகளால் உடனே அவை எடுத்துக் கொள்ளப்படுவதையும் கிராமப் பாட்டாளிகள் ஆதரிப்பார்கள். ஆனால் நிலத்தை உண்ண முடியாது. குதிரைகளோ உழுபடைக் கருவிகளோ விதைகளோ இல்லாத லட்சோப லட்சக் கணக்கான விவசாயிக் குடும்பங்களுக்கு நிலம் ''மக்களுக்குரியதாய்'' மாற்றப்படுவதால் எந்த நன்மையும் கிடைத்துவிடாது.

பெரிய பண்ணைகளை எங்கெல்லாம் முடியுமோ அங்கு பெருவீதத் தொழில் முயற்சிகளாய் விவசாய நிபுணர்களின் மேற்பார்வையிலும், விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்துகளின் மேற்பார்வையிலும், சிறந்த இயந்திரங்களையும் விதைகளையும் வினைதிறன் மிக்க சாகுபடி முறை

களையும் பயன்படுத்திக் கொள்ளும்படியான முறையில், தொடர்ந்து நடத்திச் செல்வதென்ற பிரச்சினை தாமதமின்றி விவாதிக்கப்பட்டு நடைமுறைச் செயல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பரிவர்த்தனைப் பண்டப் பொருளாதாரத்திலும் முதலாளித்துவத்திலுமான சிறுவீதப் பயிர்த்தொழிலால் மனித குலத்தை வெகுஜன வறுமையிலிருந்து விடுவிக்க முடியாது, பொதுத் துறையிலான வழிகளில் நடத்தப்படும் பெருவீதப் பயிர்த்தொழிலுக்கு மாறிச் செல்வது குறித்து சிந்திப்பது அவசியம், இத்தகைய ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய நடைமுறை சாத்திய உசித முறைகளை வெகுஜனங்களுக்குப் போதிப்பதன் மூலமும் அதேபோதில் வெகுஜனங்களிடமிருந்து கற்றறிவதன் மூலமும் உடனே இந்த பணியில் இறங்குவது அவசியம் என்பதை நாம் விவசாயிகளிடமிருந்து, மிகவும் முக்கியமாய்க் கிராமப் பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகளிடமிருந்து மறைத்துவிட முடியாது.

அரசின் ஒழுங்கமைப்பையும் நிர்வாகத்தையும் பற்றிய பிரச்சினை ஜீவாதாரமான, அவசர அவசியமான மற்றொரு பிரச்சினையாகும். ஜனநாயகத்தை உபதேசித்தால் போதாது; அதைப் பிரகடனம் செய்தால், ஆணையிட்டுப் பிறப்பித்தால் போதாது; அதைச் செயல்படுத்தும் பணியினை பிரதிநிதித்துவ உறுப்புக்களில் மக்களது ''பிரதிநிதிகளிடம்'' ஒப்படைத்தால் போதாது. மேலிருந்து ''மேற்பார்வை'' இல்லாமல், அதிகாரவர்க்கம் இல்லாமல், நேரே வெகுஜனங்களுடைய முன்முயற்சி மூலம், அரசுச் செயற்பாட்டின் எல்லாத் துறைகளிலும் பயனுள்ள முறையில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதன் மூலம், உடனடியாக, அடியிலிருந்து ஜனநாயகம் கட்டியமைக்கப்பட்டாக வேண்டும்.

போலீசையும் அதிகாரவர்க்கத்தையும் நிரந்தரச் சேனையையும் அகற்றி, அவற்றினிடத்தில் ஒருவர் பாக்கியில்லாமல் அனைத்து மக்களையும் ஆயுதம் தரித்தோராக்கும் ஏற்பாட்டையும் பெண்டிரும் அடங்கலாய் அனைத்து மக்களாலுமாகிய காவல் துறையையும் நிறுவுதல் உடனடியாய்ச் செய்யப்படக்கூடிய, செய்யப்பட வேண்டிய நடைமுறைப் பணியாகும். இதற்காக வெகுஜனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு முன்முயற்சியும் பல்வேறுவகைப்பட்ட தன்மையும் துணிவும்

ஆக்கத்திறனும் காட்டுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. நமது பிரேரணைகளை நாம் நடைமுறை உதாரணங்களைச் செய்து காட்டியும், எதார்த்த வாழ்க்கையிலிருந்து பாடங்கள் அளித்தும், தெளிவாகவும் எளிமையாகவும் புரியும்படியாகவும் விளக்கினோமானால் கிராமப் பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகள் மட்டுமின்றி விவசாயிகளில் பத்தில் ஒன்பது விகிதத்தினர் நம்மைப் பின்பற்றுவார்கள். நமது பிரேரணைகளாவன:

—போலீஸ் திரும்பவும் நிறுவப்படுவதற்கு அனுமதிக்காதிருத்தல்;

—நடைமுறையில் விலக்கப்பட முடியாதோராயும் நிலப்பிரபுக்கள் அல்லது முதலாளிகளது வர்க்கத்தைச் சேர்ந்தோருமான அதிகாரிகளது வரம்பற்ற அதிகாரங்கள் திரும்பவும் தோற்றுவிக்கப்படுவதற்கு அனுமதிக்காதிருத்தல்;

—மக்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்ட நிரந்தரச் சேனை திரும்பவும் நிறுவப்படுவதற்கு அனுமதிக்காதிருத்தல், ஏனெனில் சுதந்திரத்தை நசுக்கி முடியாட்சியை மீண்டும் நாட்டுவதற்கான எல்லா வகையான முயற்சிகளும் செய்யப்படும் என்பதற்கு இத்தகைய ஒரு சேனை நிச்சயமான உத்தரவாதமாய் அமைந்துவிடும்;

—வெகுஜனங்களுடைய அனுபவத்தை எங்கும் உடனே பயன்படுத்தத் தொடங்குவதன் மூலம் அரசாங்க நிர்வாகக் கலையை, தத்துவத்தில் மட்டுமின்றி நடைமுறையிலும், மக்களுக்கு, அவர்களது அடித் தட்டு வரையிலாய், போதித்தல்.

அடியிலிருந்து எழும் ஜனநாயகம், அதிகாரவர்க்க அமைப்பு இல்லாத, போலீஸ் இல்லாத, நிரந்தரச் சேனை இல்லாத ஜனநாயகம்; அனைவரும் ஆயுதம் தரித்தோரான மக்களிடமிருந்து அமைக்கப்பட்ட காவல் துறையினர் மனமுவந்து ஆற்றும் சமூகக் கடமை—எந்த ஜார் அரசர்களாலும் எந்த முரட்டு ஜெனரல்களாலும் எந்த முதலாளிகளாலும் பறித்திட முடியாத சுதந்திரத்துக்கு உத்தரவாதம் இதுவே.

பிராவ்தா, இதழ் 34,
1917 ஏப்ரல் 16

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 270-73

# இத்தாலிய, பிரெஞ்சு, ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கு வாழ்த்துக்கள்
என்பதிலிருந்து

காவுத்ஸ்கிவாத (அல்லது சுயேச்சை) கட்சி[55] மடிந்து கொண்டிருக்கிறது. அதன் பெருமளவுக்குப் புரட்சிகரமான உறுப்பினர்களுக்கும் அதன் எதிர்ப்புரட்சித் ''தலைவர்களுக்கும்'' இடையிலுள்ள வேறுபாடுகளின் விளைவாய் விரைவில் கட்டாயம் மடிந்து சிதைந்து போகவே செய்யும்.

போல்ஷிவிசத்தால் அனுபவிக்க நேர்ந்த அதே (சாராம்சத்தில் அதே) வேறுபாடுகளை அனுபவித்துவரும் கம்யூனிஸ்டுக் கட்சியானது வலிமையுடையதாய் வளர்ந்து உருக்கு போல் உறுதி மிக்கதாகிவிடும்.

நான் மதிப்பிட முடிந்த வரை, ஜெர்மன் கம்யூனிஸ்டுகளிடையே இருந்து வரும் வேறுபாடுகள், (1910-13ஆம் ஆண்டுகளில் போல்ஷிவிக்குகள் கூறி வந்தது போல) ''சட்டபூர்வமான சாத்தியப்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும்'' பிரச்சினை பற்றிய, முதலாளித்துவப் பாராளுமன்றம், பிற்போக்குத் தொழிற் சங்கங்கள், ''கவுன்சில்களைப் பற்றிய சட்டம்'' (Betriebsratgesetz) — இந்தக் கவுன்சில்கள் ஷெய்டமன்களாலும் காவுத்ஸ்கிகளாலும் முடமாக்கப்பட்டிருக்கின்றன — ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் பிரச்சினை பற்றிய வேறுபாடுகளாய்க் குறுகிவிடுகின்றன. இத்தகைய அமைப்புகளில் பங்கெடுத்துக் கொள்வதா அல்லது இவற்றைப் பகிஷ்காரம் செய்வதா என்பது பிரச்சினையாய் இருந்து வருகிறது.

ருஷ்ய போல்ஷிவிக்குகளாகிய நாங்கள் 1906லும் 1910-12ஆம் ஆண்டுகளிலும் இவற்றையொத்த வேறுபாடுகளை அனுபவித்திருக்கிறோம். ஆகவே எங்களுக்கு இளம் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளில் பலரது விவகாரத்திலும் புரட்சிகர அனுபவம் இல்லாததே காரணம் என்பது தெளிவாய்த் தெரிகிறது. அவர்கள் இரண்டு முதலாளித்துவப் புரட்சிகளை (1905லும் 1917லும்) அனுபவிக்க நேர்ந்திருந்தால், இப்படி நிபந்தனையின்றி பகிஷ்காரத்தை ஆதரித்து வாதாட மாட்டார்கள், சிண்டிகலிசத்தின் தவறுகளில் அவ்வப்பொழுது சரிந்து விழவும் மாட்டார்கள்.

வளர்ச்சியால் ஏற்படும் கோளாறு இது. இயக்கம் சிறப்பாய் வளர்ந்து வருகிறது, மேலும் அது வளருகையில் இந்தக் கோளாறு மறைந்துவிடும். வெளிப்படையாகவே தெரியும் இந்தத் தவறுகளைப் பகிரங்கமாய் எதிர்த்துப் போராடியாக வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான, சோவியத் ஆட்சியதிகாரத்துக்கான போராட்டம் வருங்காலத்தில் கூடிய சீக்கிரத்தில் இந்த வேறுபாடுகளில் பெரும் பகுதியை அகற்றிவிடும் என்பது எல்லோருக்கும் தெளிவாய்த் தெரிந்திருக்க வேண்டுமாதலால் இவற்றை மிகைப்படுத்தக் கூடாது.

முதலாளித்துவப் பாராளுமன்றத்திலும், பிற்போக்கு (லேகின், கோம்பர்ஸ் ஆகியோரது) தொழிற் சங்கத்திலும், ஷெய்டமன்களாலும் இன்ன பிறராலும் முடமாக்கப்பட்டுள்ள பழுத்த பிற்போக்குவாதத் தொழிலாளர் ''கவுன்சிலிலும்'' பங்கெடுத்துக் கொள்ள மறுப்பதை நான் மார்க்சியத் தத்துவத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் மற்றும் மூன்று புரட்சிகளின் (1905, 1917 பிப்ரவரி, 1917 அக்டோபர்) அனுபவத்திலிருந்தும் சந்தேகத்துக்கு இடமின்றி தவறானதாகும் என்று கருதுகிறேன்.

சில நேரங்களில், தனிப்பட்ட சில சந்தர்ப்பங்களில், தனிப்பட்ட சில நாடுகளில் பகிஷ்காரம் சரியானதாய் இருக்கலாம்—உதாரணமாய் 1905ல் ஜாரிஸ்டு டூமாவை போல்ஷிவிக்குகள் பகிஷ்காரம் செய்தது[56] சரியானதாய் இருந்தது போல. ஆனால் இதே போல்ஷிவிக்குகள் இன்னும் அதிகமாய்ப் பிற்போக்கானதும் அப்பட்டமாகவே எதிர்ப்புரட்சித் தன்மையதுமான 1907ஆம் ஆண்டு டூமாவில் பங்கெடுத்துக்

கொண்டனர். 1917ல் முதலாளித்துவ அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களில் போல்ஷிவிக்குகள் போட்டியிட்டனர் பிறகு அற்பவாத ஜனநாயகவாதிகளும் காவுத்ஸ்கிகளும் சோஷலிசத்தை விட்டோடிய இத்தகைய ஏனைய ஓடுகாலிகளும் அதிர்ச்சியுறும்படி 1918ல் நாங்கள் இந்த அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்டோம். பழுத்த பிற்போக்குவாத, முற்றிலும் மென்ஷிவிக்குகளுடையவையான தொழிற் சங்கங்களில்—ஜெர்மனியில் மிகமிகக் கேடுகெட்ட மிகமிகப் பிற்போக்கான தொழிற் சங்கங்களான லேகின் சங்கங்களுக்கு எவ்வகையிலும் இவை (எதிர்ப்புரட்சித் தன்மையில்) சளைத்தவை அல்ல—நாங்கள் வேலை செய்து வந்தோம். அரசு அதிகாரம் வென்று கொண்டபின் இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்ட இன்றுங்கூட மென்ஷிவிக் (அதாவது, ஷெய்டமன், காவுத்ஸ்கி, கோம்பர்ஸ் முதலானோரது) தொழிற் சங்கங்களின் மீதமிச்சங்களுக்கு எதிரான போராட்டம் எங்களுக்கு இன்னும் முடிவடைந்தபாடில்லை—இந்த நிகழ்ச்சிப்போக்கு அவ்வளவு நீண்ட நெடியது! சில இடங்களிலும் சில தொழில்களிலும் குட்டிபூர்ஷுவாக் கருத்துக்களின் செல்வாக்கு அத்தனை பலமுடைத்ததாய் இருக்கிறது!

சோவியத்துகளிலும் தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுகளிலும் நாங்கள் ஒரு காலத்தில் சிறுபான்மையோராய் இருந்தோம். விடாப்பிடியான முயற்சி மூலமும் நீண்ட போராட்டத்தின் மூலமும்—அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதற்கு முன்பும் பிற்பாடும்—முதலில் எல்லாத் தொழிலாளர் நிறுவனங்களிலும், பிறகு தொழிலாளரல்லாதோரின் நிறுவனங்களிலும், முடிவில் சிறு விவசாயிகளது நிறுவனங்களிலுங்கூட பெரும்பான்மை நிலை பெற்றோம்.

**முதலாளித்துவ வர்க்கத்தின் ஒடுக்குமுறையின்கீழ், கூலியடிமை முறையின் ஒடுக்குமுறையின்கீழ்** நடத்தப்படும் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் முதலில் பெரும்பான்மை நிலை பெற வேண்டும், அதன் பிறகுதான் ஆட்சியதிகாரம் வென்று கொள்ள வேண்டும் என்று கயவர்கள் அல்லது எமாளிகளால்தான் நினைக்க முடியும். இது அசட்டுத்தனம் அல்லது வஞ்சக ஏமாற்றின் உச்சி முடியாகும்; பழைய அமைப்பில், பழைய ஆட்சியதிகாரத்தின் கீழ் நடைபெறும் தேர்தல்களை

வர்க்கப் போராட்டத்துக்கும் புரட்சிக்கும் பதிலாய்க் கொண்டுவிடுவதாகும்.

வேலை நிறுத்தப் போராட்டத்தின் முழுநிறை வெற்றிக்கு உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தை (ஆகவே பொது மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தை) பெற்றிருப்பது அவசியம் என்றபோதிலும், பாட்டாளி வர்க்கம் அதன் வர்க்கப் போராட்டத்தை நடத்தியே செல்கிறது, வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கத் தேர்தல்களுக்காகக் காத்திருப்பதில்லை. எந்தப் பூர்வாங்கத் தேர்தல்களுக்காகவும் (முதலாளித்துவ வர்க்கத்தின் மேற்பார்வையிலும் அதன் ஒடுக்குமுறையின் கீழும் நடத்தப்படுகிறவை) காத்திராமல் பாட்டாளி வர்க்கம் அதன் வர்க்கப் போராட்டத்தை நடத்தி, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துகிறது. ஆயினும் தனது புரட்சியின் வெற்றிக்கு, முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றிகரமாய் வீழ்த்துவதற்கு, உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தை (ஆகவே பொது மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தை) பெற்றிருப்பது இன்றியமையாததாகும் என்பது பாட்டாளி வர்க்கம் நன்கு உணர்ந்ததுதான்.

பாராளுமன்ற அசடுகளும் இக்காலத்திய லூயீ பிளாங்களும் உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரது அனுதாபம் தமக்கு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள தேர்தல்கள் முற்றிலும் அவசியமென்று ''வற்புறுத்துகின்றனர்'' —நிச்சயமாய் இவை முதலாளித்துவ வர்க்கத்தாரின் மேற்பார்வையில் நடைபெறும் தேர்தல்களே ஆகும். ஆனால் இது பகட்டுப் புலமையாளர்கள், நடைப் பிணங்கள் அல்லது தந்திரக்கார எத்தர்களுக்குரிய ஒரு போக்கு.

''உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரது அனுதாபத்தைப்'' பல சந்தர்ப்பங்களில் எந்தத் தேர்தல்களாலும் (சுரண்டுவோரின் மேற்பார்வையில் நடைபெறுவதும், சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் ஆகிய இரு சாராரின் ''சமத்துவத்துடன்'' கூடியதுமாகிய தேர்தல்கள் குறித்துக் கூறவே வேண்டாம்!) நிரூபித்துக் காட்ட முடியாது என்பதை எதார்த்த வாழ்வும் மெய்யான புரட்சிகளின் வரலாறும் தெளிவுபடுத்துகின்றன. பல சந்தர்ப்பங்களிலும் ''உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரது அனுதாபம் நிரூ

பித்துக் காட்டப்படுவது தேர்தல்களால் அல்லவே அல்ல; கட்சிகளில் ஒன்றின் வளர்ச்சியாலோ, சோவியத்துகளில் பெறப்படும் கூடுதலான பிரதிநிதித்துவத்தாலோ, ஏதோ ஒரு காரணத்தால் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெற்றுவிடும ஒரு வேலைநிறுத்தத்தின் வெற்றியாலோ, உள்நாட்டு யுத்தத்தில் கிடைக்கும் வெற்றியாலோ, இன்ன பிறவற்றாலோதான் இது நிரூபித்துக் காட்டப்படுகிறது.

யூரலையும் சைபீரியாவையும் சேர்ந்த எல்லையற்றப் பெரும் பரப்புகளில் உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோருக்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திடம் இருந்த அனுதாபம் நிரூபித்துக் காட்டப்பட்டது தேர்தல்கள் மூலமாய் அல்ல; இப்பகுதிகளில் ஜாரிஸ்டு ஜெனரல் கல்ச்சாக்கின் ஓராண்டுக் கால ஆட்சியின் அனுபவத்தால்தான் நிரூபித்துக் காட்டப்பட்டது என்பதை எங்களுடைய புரட்சியின் வரலாறு தெளிவுபடுத்தியிருக்கிறது. இடையில் இதையும் குறிப்பிடலாம்: கல்ச்சாக்கின் ஆட்சியுங்கூட ஷெய்டமன், காவுத்ஸ்கி கும்பலின் (ருஷ்யனில் இவர்கள் அரசியல் நிர்ணய சபையின் ஆதரவாளர்களாகிய மென்ஷிவிக்குகள் என்பதாகவும் ''சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியனர்'' என்பதாகவும் அழைக்கப்பட்டனர்) ''கூட்டணி''யுடன்தான் ஆரம்பமாயிற்று—எப்படி ஜெர்மனியில் இத்தருணத்தில் ஹாஸெக்களும் ஷெய்டமன்களும் தமது ''கூட்டணியின்'' மூலம் வான் கோல்ட்ஸ் அல்லது லியூதென்தொர்ப் ஆட்சிக்கு வருவதற்குப் பாதையைச் செப்பனிட்டு, இந்த ஆட்சியை மூடி மறைத்து, அதைக் கண்ணியமானதாய்த் தோன்றும்படிச் செய்கிறார்களோ அதுபோல. இடைக் குறிப்பாய் இதைச் சொல்லியாக வேண்டும்: அரசாங்கத்தில் ஹாஸெ-ஷெய்டமன் கூட்டணி முடிவுற்றுவிட்டது, ஆனால் சோஷலிசத்தின் இந்தத் துரோகிகளது அரசியல் கூட்டணி தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்கு நிரூபணம்: காவுதஸ்கியின் புத்தகங்கள், "Vorwärts"இல் ஷ்தம்ப்ஃபெரின் கட்டுரைகள், காவுத்ஸ்கிகளும் ஷெய்டமன்களும் தமது ''ஒன்றிணைப்பு'' குறித்து எழுதும் கட்டுரைகள் முதலானவை.

உழைப்பாளி மக்களில் மிகப் பெரும்பான்மையோர் அவர்களது முன்னணிப் படையான பாட்டாளி வர்க்கத்துக்கு அனுதாபமும் ஆதரவும் அளிக்காமல் பாட்டாளி

வர்க்கப் புரட்சி சாத்தியமன்று. ஆனால் இந்த அனுதாபமும் ஆதரவும் உடனடியாய்க் கிட்டிவிடுகிறவை அல்ல, தேர்தல்களால் தீர்மானிக்கப்படுகிறவை அல்ல, பிரயாசை மிக்க, கடினமான, நீடித்த வர்க்கப் போராட்டத்தின் வாயிலாய் இவை வென்று கொள்ளப்படுகிறவை. உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்தால் அரசியல் அதிகாரம் வென்று கொள்ளப்பட்டதுடன் முடிவடைந்து விடுவதில்லை. அரசியல் அதிகாரம் வென்று கொள்ளப்பட்ட பிறகும் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, ஆனால் பிற வடிவங்களில் நடைபெறுகிறது. ருஷ்யப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்துக்கு (சர்வாதிகாரத்துக்கான அதன் போராட்டத்தில்) சூழ்நிலைமைகள் விதிவிலக்கான அளவுக்குச் சாதகமாய் இருந்தன. ஏனெனில் மக்கள் எல்லோரும் ஆயுதம் தரித்திருந்த ஒரு நேரத்தில், ஒட்டுமொத்தமாய் விவசாயிகள் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருமான சமூக-துரோகிகளது ''காவுத்ஸ்கிவாதக்'' கொள்கையின்பால் வெறுப்படைந்து நிலப்பிரபுக்களுடைய ஆட்சியைக் கவிழ்க்க விரும்பிய ஒரு நேரத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்தேறியது.

ஆனால் ருஷ்யாவிலுங்கூட, பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்ற தருணத்தில் நிலைமைகள் விதிவிலக்கான அளவுக்கு சாதகமாயிருந்த, அனைத்துப் பாட்டாளி வர்க்கம், அனைத்துச் சேனை, அனைத்து விவசாயிகள் ஆகிய இவர்களது மிகவும் குறிப்பிடத்தக்க ஒற்றுமை உடனடியாகவே ஏற்பட்டுவிட்ட ருஷ்யாவிலுங்கூட, சர்வாதிகாரத்தைச் செலுத்திய பாட்டாளி வர்க்கமானது உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையோரின் அனுதாபத்தையும் ஆதரவையும் வென்று கொள்ளப் பல மாதங்களும் ஆண்டுகளுமாய்ப் போராட வேண்டியிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிற்பாடு இந்தப் போராட்டம் முழுமையாய் அல்ல, அனேகமாய் பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமாய் முடிவுற்றது. யூரலும் சைபீரியாவும் அடங்கலாய் மாருஷ்யாவின் தொழிலாளர்களிலும் உழைக்கும் விவசாயிகளிலும் மிகப் பெரும்பான்மையோரது முழு அனுதாபத்தையும் ஆதரவையும் இரண்டு ஆண்டுகளில்

நாம் வென்று கொண்டு விட்டோம். ஆனல் இன்னமும் நாம் உக்ரேனில் (சுரண்டும் விவசாயிகளிலிருந்து வேறுபடுத்தி) உழைக்கும் விவசாயிகளில் பெரும்பான்மையோரது முழு அனுதாபத்தையும் ஆதரவையும் வென்று கொண்டாக வில்லை. ஆன்டான்டின்[57] இராணுவ வன்மையால் நசுக்கப் பட முடியும் (ஆனல் நசுக்கப்பட மாட்டோம்). ஆனல் ருஷ்யா வினுள், நமது அரசு உலகம் எக்காலத்தும் கண்டிருக்கக் கூடி யவற்றுள் மிகவும் ஜனநாயக அரசாய் இருக்கும் அளவுக்கு, அத்தனை உறுதியானதும் உழைப்பாளி மக்களில் அத்தனை பிரம்மாண்டமான பெரும்பான்மையோர் இடத்திருந்துமான அனுதாபம் இப்பொழுது நமக்கு இருந்து வருகிறது.

ஆட்சியதிகாரத்துக்கான பாட்டாளி வர்க்கப் போராட் டத்தின்—வடிவங்களது அபார வகை வளத்திலும், திடீர் மாற்றங்கள், திருப்பங்கள், போராட்டத்தின் ஒரு வடிவத்தி லிருந்து மற்ருென்றுக்கான பெயர்ச்சிகள் இவற்றின் அதி விசேஷ அபரிமித அளவிலும் செழுமையான இப்போராட்டத் தின்—இந்தச் சிக்கலான, கடினமான, நீண்ட வரலாறு குறித்து சிறிது சிந்தனை செய்தாலே போதும், முதலாளித் துவப் பாராளுமன்றங்கள், பிற்போக்குத் தொழிற்சங்கங்கள், ஜாரிஸ்டு அல்லது ஷெய்டமன் தலைமைத்தொழிலாளர் கமிட்டி கள், ஆலைக் கவுன்சில்கள், இன்ன பிறவற்றில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதென்று ''தடைவிதிக்க'' விரும்புவோர் புரியும் தவறு தெளிவாய்ப் புலனகிவிடும். மிக நேர்மையான திட முடிவுகொண்ட வீரமிக்கத் தொழிலாளி வர்க்கப் புரட்சி யாளர்களிடையே புரட்சி அனுபவம் இல்லாததே இந்தத் தவறுக்குக் காரணம். ஆகவே 1919 ஜனவரியில் கார்ல் லீப்க்னெஹ்ட்டும் ரோஸ லுக்சம்பர்க்கும் இந்தத் தவறினை உணர்ந்து, இதைச் சுட்டிக்காட்டிய[58] போதிலும், சோஷலிசத் துக்குத் துரோகமிழைத்த ஷெய்டமன்கள், காவுத்ஸ்கிகளின் பக்கத்துக்குப் போகாமல், பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் களின் பக்கமே—சிறு பிரச்சினை ஒன்றில் இவர்கள் பிழை புரிந்தவர்களாயினும் இவர்கள் பக்கமே—தொடர்ந்து இருப்ப தென முடிவு செய்தது முற்றிலும் சரியானதே ஆகும். ஷெய்டமன்களும் காவுத்ஸ்கிகளும் முதலாளித்துவப் பாராளு மன்றங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் பிரச்சினையில் தவறு செய்யாத போதிலும், சோஷலிஸ்டுகளாய் இல்லா

தொழிந்து அற்பவாத ஜனநாயகவாதிகளாகவும் முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டாளிகளாகவும் மாறிவிட்டவர்கள்.

எனினும் தவறு தவறுகவே இருந்து வருகிறது. அதைக் குற்றவிமர்சனம் செய்வதும் அதை திருத்துவதற்காகப் போராடுவதும் அவசியமாகும்.

சோஷலிசத்தின் துரோகிகளாகிய ஷெய்டமன்களையும் காவுத்ஸ்கிகளையும் எதிர்த்து ஈவிரக்கமின்றிப் போராட்டம் நடத்தியாக வேண்டும். ஆனால் இந்தப் போராட்டம் நடைபெற வேண்டியது, முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலும் பிற்போக்குத் தொழிற் சங்கங்களிலும் இன்ன பிறவற்றிலும் பங்கெடுத்துக் கொள்வதா இல்லையா என்ற பிரச்சினை குறித்து அல்ல. அப்படிச் செய்வது தெட்டத் தெளிவான பிழையே ஆகும். மார்க்சியத்தின் கருத்துக்களிடமிருந்தும் மார்க்சியத்தின் நடைமுறைக் கொள்கை வழியிலிருந்தும் (பலமுடைத்த, மத்தியத்துவம் வாய்ந்த அரசியல் கட்சியிலிருந்து) பின்வாங்கிச் சென்று சிண்டிகலிசத்தின் கருத்துக்களுக்கும் நடைமுறைக்கும் சரிந்துவிடுவது இதனிலும் பெரிய பிழையாகும். முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலும் பிற்போக்குத் தொழிற் சங்கங்களிலும் ஷெய்டமன் பாணியில் வெட்டிக் குலைக்கப்பட்டதையும் ஆற்றல் ஒழிக்கப்பட்டவையுமான ''ஆலைக் கவுன்சில்களிலும்'' கட்சி பங்கெடுத்துக் கொள்வதற்காகவும், எங்கெல்லாம் தொழிலாளர்களைக் காண முடியுமோ, எங்கெல்லாம் தொழிலாளர்களுடன் பேசவும் தொழிலாளி வெகுஜனங்களை வயப்படுத்தவும் முடியுமோ அங்கெல்லாம் கட்சி இருப்பதற்காகவும் பாடுபடுவது அவசியமாகும். எப்பாடு பட்டாயினும் சட்டபூர்வமான வேலைகளும் சட்டவிரோத வேலைகளும் ஒருசேர இணைக்கப்பட்டாக வேண்டும். சட்டவிரோதக் கட்சி, அதன் தொழிலாளர் நிறுவனங்கள், சட்டபூர்வமான செயற்பாட்டின்மீது முறையாகவும் இடையருதும் கண்டிப்பாகவும் கண்காணிப்பு செலுத்தியாக வேண்டும். இது எளிய பணியல்ல, ஆனால் பொதுவாய்ப் பேசுமிடத்து ''எளிய'' பணிகள் அல்லது ''எளிய'' போராட்ட வழிகள் என்பதாய்ப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது.

எப்பாடுபட்டாயினும் இந்தக் கடினப் பணியைச் செய்து முடித்தே ஆக வேண்டும். ஷெய்டமன், காவுத்ஸ்கி கும்பலுக்

கும் நமக்குமுள்ள வேறுபாடு, அவர்கள் ஆயுதமேந்திய எழுச்சியை அங்கீகரிக்கவில்லை, நாம் அங்கீகரிக்கிறோம் என்பதில் மட்டுமல்ல (பிரதானமாய்க்கூட இதில் மட்டுமல்ல), எல்லா வேலைத் துறைகளிலும் (முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலும் தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுகளிலும் பத்திரிகைப் பணியிலும் இன்ன பிறவற்றிலும்) அவர்கள் முரணை, சந்தர்ப்பவாதக் கொள்கையை, அப்பட்டமாய்க் காட்டிக் கொடுத்துத் துரோகம் புரியும் கொள்கையையுங்கூட பின்பற்றுகிறார்கள் என்பதில்தான் பிரதானமான, தீவிரமான வேறுபாடு அடங்கியிருக்கிறது.

சமூக-துரோகிகளையும் சீர்திருத்தவாதத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராடுதல்—இந்தக் கொள்கை வழியை நமது போராட்டத்தின் எல்லாத் துறைகளிலும் விதிவிலக்கின்றி பின்பற்ற முடியும், பின்பற்றவும் வேண்டும். அப்பொழுது நாம் உழைப்பாளி வெகுஜனங்களை நம் பக்கத்துக்கு வென்று கொண்டுவிடுவோம். பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான மார்க்சிய மத்தியத்துவம் வாய்ந்த அரசியல் கட்சி தொழிலாளி வெகுஜனங்களுடன் சேர்ந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெற்றிக்குரிய, முதலாளித்துவ ஜனநாயகத்துக்குப் பதிலாய்ப் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்குரிய, சோவியத் குடியரசுக்குரிய, சோஷலிச அமைப்புக்குரிய மெய்யான பாதையில் மக்களை அழைத்துச் செல்லும்.

ஒருசில மாதங்களுக்குள் மூன்றாவது அகிலம் புகழ்மிக்க, முன்பின் கண்டிராத பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. இதன் வளர்ச்சியின் வேகம் வியக்கத்தக்கது. குறிப்பிட்ட சில தவறுகளாலும் வளர்ச்சியின் கோளாறுகளாலும் பீதியுறத் தேவையில்லை. அவற்றை நேரடியாகவும் பகிரங்கமாகவும் விமர்சனம் செய்வதன் மூலம், நாகரிக வளர்ச்சியுள்ள எல்லா நாடுகளிலும் மார்க்சிய மனப்பான்மையில் போதம் பெற்ற தொழிலாளி வெகுஜனங்கள், சோஷலிசத்துக்குத் துரோகம் புரிவோரை, எல்லாத் தேசங்களிலுமுள்ள ஷெய்டமன்களையும் காவுத்ஸ்கிகளையும் (இந்தத் துரோகிகள் எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றனர்) தம்மிடையிலிருந்து தொலைத்தொழித்துக் கொள்ளும்படி நாம் உறுதி செய்து கொண்டுவிடுவோம்.

கம்யூனிசத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது. கம்யூனிசம் வெற்றிவாகை சூடும்.

*1919 அக்டோபர் 10*

| | |
|---|---|
| கமுனிஸ்தீச்செஸ்கி இன்தெர்னத்ஸியனல், *இதழ் 6ல், 1919 அக்டோபரில் வெளி வந்தது* | நூல் திரட்டு, *தொகுதி 39, பக்கங்கள் 217-23* |

ஒப்பம்: நி. லெனின்

# "இடதுசாரி" கம்யூனிசம்— இளம் பருவக் கோளாறு

### என்னும் நூலிலிருந்து

## 6

## புரட்சியாளர்கள் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யலாமா?

ஜெர்மன் ''இடதுசாரிகள்'' தம்மைப் பொறுத்தவரை நிபந்தனையற்ற எதிர்மறையே இக்கேள்விக்குரிய பதிலாகுமெனக் கருதுகிறார்கள். கீழ்த்தரமான, சமூக-தேசியவெறி கொண்ட, சமரசவாத, லேகின் ரகத்தைச் சேர்ந்த புரட்சி-எதிர்ப்புத் தொழிற் சங்கங்களில் புரட்சியாளர்களும் கம்யூனிஸ்டுகளும் வேலை செய்யத் தேவையில்லை என்பதுடன், அவ்வாறு வேலை செய்வது மன்னிக்க முடியாததாகும் என்பதற்கு, ''புரட்சி-எதிர்ப்பு'', ''பிற்போக்குத்'' தொழிற் சங்கங்களுக்கு எதிரான கண்டன முழக்கங்களும் ஆத்திரக் கூப்பாடுகளுமே (இவற்றுள் குறிப்பிடத்தக்க ''ஆதாரத்தோடும்'', குறிப்பிடத்தக்க அசட்டு முறையிலும் அமைந்தவை கா. ஹோர்னர் எழுப்பியவை) போதுமான ''நிரூபணமாகும்'' என்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய போர்த்தந்திரத்தின் புரட்சித் தன்மை குறித்து ஜெர்மன் ''இடதுசாரிகள்'' எவ்வளவுதான் திடநம்பிக்கை கொண்டிருந்த போதிலும், உண்மையில் இது அடிப்படையிலேயே தவறானது, வெற்றுச் சொல்லடுக்குகளைத் தவிர வேறு எதுவும் இல்லாதது.

இதனைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, எங்களுடைய சொந்த அனுபவத்தை முதலில் எடுத்துரைக்கிறேன். போல்ஷிவிசத்தின் வரலாற்றிலும் அதன் இன்றைய போர்த்தந்திரத்திலும் அனைத்துலகுக்கும் எதெல்லாம் பொருத்த

முடையதோ, எதெல்லாம் முக்கியத்துவமுடையதோ, எதெல் லாம் இன்றியமையாததோ அதனை மேற்கு ஐரோப்பா வுக்குப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பிரசுரத்தின் பொதுத் திட்டத்துக்கேற்ப, முதலில் எங்கள் அனுபவத்தை எடுத்துரைக்கிறேன்.

இன்று ருஷ்யாவில் தலைவர்களுக்கும் கட்சிக்கும் வர்க்கத் துக்கும் வெகுஜனங்களுக்கும் இடையிலுள்ள சம்பந்தமும், மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் அதன் கட்சி யும் தொழிற் சங்கங்கள் பால் கொண்டுள்ள போக்கும் ஸ்தூலமாய்ப் பின்வருமாறு உள்ளன: சோவியத்துகளின் மூலம் ஒழுங்கமைந்து பாட்டாளி வர்க்கம் சர்வாதிகாரத் தைச் செலுத்துகிறது; இந்தப் பாட்டாளி வர்க்கம் போல்ஷி விக்குகளது கம்யூனிஸ்டுக் கட்சியால் வழிகாட்டப்படுகிறது. கடந்த கட்சிக் காங்கிரசின் (1920 ஏப்ரல்) புள்ளிகளின்படி, இக்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 6,11,000. உறுப்பி னர் எண்ணிக்கை அக்டோபர் புரட்சிக்கு முன்பும் அதற்குப் பிற்பாடும் பெரிதும் மாறுபட்டு வந்தது. 1918லும் 1919 லும்கூட இதைவிடவும் மிகக் குறைவாகவே இருந்தது.[59] கட்சி அளவுமீறி பெருகிவிடுவதை நாங்கள் அச்சத்துக்குரிய தாகவே கருதுகிறோம். ஏனெனில் சுட்டுத் தண்டிக்கப்பட வேண்டிய பதவி வேட்டையாளர்களும் எத்தர்களும் ஆளும் கட்சியின் அணிகளுக்குள் நுழைந்து கொண்டுவிடத் தவிர்க்க முடியாத வகையில் எல்லா வழிகளிலும் முயலுகிறார்கள். கடந்த முறை நாங்கள் கட்சியின் கதவுகளை விரியத் திறந்து விட்டது—தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு மட்டுமேதான் —யுதேனிச் பெத்ரொகிராதுக்கு ஒரு சில கிலோமீட்டர் தொலைவிலும், தெனீக்கின் அரியோலுக்கும் (மாஸ்கோவி லிருந்து சுமார் 350 கிலோமீட்டர் தொலைவில்) வந்துவிட்ட போது (1919ஆம் ஆண்டுக் குளிர்காலத்தில்), அதாவது சோவியத் குடியரசு கொடிய அபாயத்துக்கு உள்ளாகியிருந்த போது, துணிகர சுயநலக்காரர்களும் பதவிவேட்டையாளர் களும் எத்தர்களும் நம்பத்தகாத ஆட்களும் கம்யூனிஸ்டு களுடன் சேர்ந்து கொள்வதன் மூலம் லாபகரமான பதவி பெறலாமெனச் சிறிதும் எதிர்பார்க்க முடியாதபோது (தூக்கு மேடையையும் சித்திரவதையையுமே அதிகம் எதிர்பார்க்க வேண்டியிருந்தபோது), இது நடைபெற்றது. கட்சியானது

வருடாந்திரக் காங்கிரஸ்களைக் கூட்டுகிறது (கடந்த காங்கிரஸ், 1,000 உறுப்பினர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் நடைபெற்றது); காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தொன்பது உறுப்பினர்கள் அடங்கிய மத்தியக் கமிட்டி கட்சியை நடத்திச் செல்கிறது. மாஸ்கோவிலிருந்து நடப்பு வேலைகளைக் கவனித்துக் கொள்பவை இன்னும் சிறிய குழுக்களாகும். ஒழுங்கமைப்புக் குழு, அரசியல் குழு எனப்படும் இவை மத்தியக் கமிட்டியின் முழுக்கூட்டங்களில் ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் என்கிற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இது முழுக்க முழுக்க ''சிலராட்சியாகத்'' தோன்றக்கூடும். கட்சி மத்தியக் கமிட்டியின் வழிகாட்டுதல் இல்லாமல் எங்களது குடியரசில் எந்த முக்கிய அரசியல் அல்லது நிறுவனப் பிரச்சினை குறித்தும் எந்த அரசாங்க நிலையத்தாலும் முடிவு எடுக்கப்படுவதில்லை.

கட்சி அதன் வேலைகளில் நேரடியாகத் தொழிற் சங்கங்களையே ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது. தொழிற் சங்கங்கள், கடந்த காங்கிரசின் (1920 ஏப்ரல்) புள்ளிகளின் படி, நாற்பது லட்சத்துக்கும் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன. இவை உருவில் கட்சிசார்பற்ற நிறுவனங்கள். ஆனல் நடைமுறையில் மிகப் பெரும்பாலான தொழிற் சங்கங்களின் தலைமை அமைப்புகள் யாவும், முதன்மையாக அனைத்து-ருஷ்யத் தொழிற் சங்கப் பொது மையம் அல்லது குழு (தொழிற் சங்கங்களின் அனைத்து-ருஷ்ய மத்தியக் கவுன்சில்) கம்யூனிஸ்டுகளால் ஆனவைதான்; கட்சியின் எல்லாத் தாக்கீதுகளையும் இவை நிறைவேற்றுகின்றன. இவ்வாருக, மொத்தத்தில் நாங்கள் உருவில் கம்யூனிஸ்டல்லாத, நெகிழ்வுள்ள, ஒப்பளவில் மிகவும் விரிவான, சக்தி மிக்கப் பாட்டாளி வர்க்க நிறுவன ஏற்பாட்டைப் பெற்றிருக்கிருேம். இதன் மூலம் கட்சியானது வர்க்கத்துடனும் வெகுஜனங்களுடனும் நெருங்கிய முறையில் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம்தான் கட்சியினுடைய தலைமையில், வர்க்கச் சர்வாதிகாரம் செலுத்தப்படுகிறது. தொழிற் சங்கங்களுடன் நேருங்கிய தொடர்புகளின்றி, பொருளாதார விவகாரங்களில் மட்டுமின்றி இராணுவ விவகாரங்களிலுங்கூட அவற்றின் சக்தி வாய்ந்த ஆதரவும் பற்றுறுதி கொண்ட

முயற்சிகளுமின்றி, இரண்டரை ஆண்டுகள் இருக்கட்டும், இரண்டரை மாதங்களுக்குக்கூட நாட்டை அரசாள்வதும் சர்வாதிகாரத்தைச் செலுத்துவதும் முடியாமற் போயிருந்திருக்கும். நடைமுறையில் இந்த மிக நெருங்கிய தொடர்புகளுக்கு இயல்பாகவே, பிரசாரத்தின் வடிவிலும் கிளர்ச்சியின் வடிவிலும் தலைமையான தொழிற் சங்க ஊழியர்களுடன் மட்டுமின்றி, பொதுவாகச் செல்வாக்கு படைத்த தொழிற் சங்க ஊழியர்களுடனும் தக்க காலத்திலும் அடிக்கடியும் நடைபெறும் மாநாடுகளின் வடிவிலும் மிகவும் சிக்கலான, பல்வகைப்பட்ட பணிகளும் இன்றியமையாதனவாகிவிடுகின்றன. மென்ஷிவிக்குகளை எதிர்த்து வைராக்கியமாய்ப் போராடுவதும் இவற்றுக்கு அவசியமாகும். மென்ஷிவிக்குகளைப் பின்பற்றுவோர் சொற்பமேயாயினும், குறிப்பிட்ட சில பகுதியோர் இன்னமும் அவர்கள் பின்னால் செல்லத்தான் செய்கிறார்கள். இவர்களுக்கு மென்ஷிவிக்குகள் **(முதலாளித்துவ)** ஜனநாயகத்தைச் சித்தாந்த வழியில் ஆதரிப்பது முதலாய், தொழிற் சங்கங்கள் ''சுயேச்சையாய்'' இருக்க வேண்டும் (பாட்டாளி வர்க்க அரசாங்க அதிகாரத்திலிருந்து!) என்று போதிப்பது முதலாய், பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டுக்குக் குழிபறிப்பது வரையிலான எல்லா வகைப்பட்ட எதிர்ப்புரட்சிச் சூழ்ச்சிகளையும் கற்றுத் தருகின்றனர்.

''வெகுஜனங்களுடன்'' தொழிற் சங்கங்கள் மூலமாக மட்டும் தொடர்புகள் கொண்டால் போதாதென நாங்கள் கருதுகிறோம். எங்களது புரட்சியின் போது நடைமுறையானது **கட்சிசார்பற்ற தொழிலாளர்கள், விவசாயிகளது மாநாடுகள்** போன்ற ஏற்பாடுகளைத் தோற்றுவித்தன. வெகுஜனங்களுடைய மனநிலையைக் கண்டறிந்து கொள்வது, அவர்களை மேலும் நெருங்கிச் செல்வது, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வது, அவர்களில் மிகச் சிறந்தோரை அரசாங்கப் பதவிகளுக்கு உயர்த்துவது முதலான பலவும் செய்யும் பொருட்டு, இந்த ஏற்பாடுகளை ஆதரிக்கவும் வளர்த்துச் செல்லவும் விரிவுபடுத்தவும் நாங்கள் எல்லா வழிகளிலும் முயலுகிறோம். அரசாங்கக் கண்காணிப்பு மக்கள் கமிசாரகத்தைத் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையாக மாற்றுவது குறித்து அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி, இது போன்ற கட்சிசார்பற்ற மாநாடு

களுக்குப் பல்வேறு வகையான தணிக்கைகளையும் பிற வற்றையும் நடத்தும் அரசாங்கக் கண்காணிப்பின் உறுப் பினர்களைத் தேர்வு செய்ய அதிகாரமளிக்கப்பட்டது.

தவிரவும், கட்சியின் பணிகள் எல்லாம் உழைப்பாளி வெகுஜனங்களை அவர்களது வேலைத் துறை எதுவாயினும் தம்முட் கொண்ட சோவியத்துகளின் மூலமாகவே நடந்தேறு கின்றன என்பதைக் கூறத் தேவையில்லை. சோவியத்துகளின் வட்டாரக் காங்கிரஸ்கள் ஜனநாயக நிறுவன ஏற்பாடுகளா கும். முதலாளித்துவ உலகின் மிகச் சிறந்த ஜனநாயகக் குடி யரசுகளுங்கூட இவையொத்த ஜனநாயக நிறுவன ஏற்பாடு களை முன்பின் கண்டதில்லை. இந்தக் காங்கிரஸ்களின் மூல மும் (இவற்றின் நடவடிக்கைகளைக் கட்சி மிக உன்னிப்பாகக் கவனித்துச் செயல்பட முனைகிறது), மற்றும் கிராமங்களில் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களைத் தொடர்ச்சி யாகப் பல்வேறு பதவிகளில் அமர்த்துவதன் மூலமும் பாட் டாளி வர்க்கம் விவசாயிகளது தலைவனுகத் தான் ஆற்ற வேண்டிய பாத்திரத்தை நிறைவேற்றுகிறது; நகரப் பாட் டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைச் செயல்படச் செய் தல், விவசாயிகளில் சுரண்டலிலும் கொள்ளை லாபமடிப்ப திலும் ஈடுபடும் பணக்கார, முதலாளித்துவப் பகுதியோ ருக்கு எதிராய் இடையருது போராடுதல் முதலான பணி களை நிறைவேற்றுகிறது.

இதுவே பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தை ''மேலி ருந்து'' நோக்குகையில், சர்வாதிகாரத்தை நடைமுறையில் செயல்படுத்துவதன் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கையில், தெரியவரும் பொது அமைப்பு முறையாகும். இந்த அமைப்பு முறை இருபத்தைந்து ஆண்டுகளாய் எப்படி சிறிய, சட்ட விரோத, தலைமறைவுக் குழுக்களிலிருந்து வளர்ந்து உருவா யிற்று என்பதைக் கண்டுள்ள ருஷ்ய போல்ஷிவிக்குகள், ''மேலிருந்தா'' அல்லது ''கீழிருந்தா'' என்பதாகவும், தலை வர்களின் சர்வாதிகாரமா அல்லது வெகுஜனங்களின் சர்வாதிகாரமா என்பதாகவும், இன்னும் பலவாருகவும் பேசப்படுகிற இந்தப் பேச்சை எல்லாம் நகைக்கத்தக்க, சிறுபிள்ளைத்தனமான அபத்தமாகவும், ஒருவருக்கு அதிக மாய்ப் பயன்படுவது அவரது இடது காலா அல்லது வலது கரமா என்று விவாதிக்க முற்படுவதை ஒத்ததாகவுமே கருத

வேண்டியிருக்கிறதென்பதை வாசகர் புரிந்து கொள்வாரென நினைக்கிறோம்.

இதேபோல, கம்யூனிஸ்டுகள் பிற்போக்குத் தொழிற் சங்கங்களில் வேலை செய்ய முடியாது, வேலை செய்யக் கூடாதென்றும், இது போன்ற வேலையைக் கைவிட்டுவிடலாமென்றும், தொழிற் சங்கங்களை விட்டு வெளியேறி மிகவும் இதமான (பெருமளவுக்கு மிக இளம் பருவத்தினராகவே இருக்கக்கூடிய) கம்யூனிஸ்டுகளால் கண்டுபிடிக்கப்பட்ட புத்தம் புதிய வகைப்பட்ட அப்பழுக்கற்ற ''தொழிலாளர் சங்கத்தை'' உருவாக்குவது அவசியமென்றும், மற்றும் பலவாறாகவும் கூறும் ஜெர்மன் இடதுசாரிகளின் ஆடம்பரமான, மெத்தப் படித்த மேதாவித்தனமான, பயங்கரப் புரட்சிகரமான பல பேச்சுக்களையும் நாங்கள் நகைக்கத்தக்க, சிறுபிள்ளைத்தனமான அபத்தமாகவே கருத வேண்டியிருக்கிறது.

முதலாளித்துவமானது தவிர்க்க முடியாதபடி சோஷலிசத்துக்கு மரபுரிமையாக, ஒரு புறத்தில் தொழிலாளர்களிடையிலான பழைய தொழில் பிரிவு, கைவினைத் துறை பாகுபாடுகளையும், பல நூற்றாண்டுகளின் போக்கில் வளர்ந்து உருவான இப்பாகுபாடுகளையும், மறு புறத்தில் தொழிற் சங்கங்களையும் விட்டுச் செல்கிறது. தொழிற் சங்கங்கள் மிக மெதுவாகவே, மிகப் பல ஆண்டுகளின் போக்கிலேதான், கைவினைச் சங்கத்தன்மை குறைந்து, (அந்தந்தத் தொழில் பிரிவுகளையும் கைவினைத் துறைகளையும் வேலைத் துறைகளையும் மட்டுமின்றி, முழுமுழுத் தொழில்கள் பூராவையுமே தம்முட் கொண்ட) விரிவான தொழில் துறைச் சங்கங்களாக வளர முடிகிறது; அவ்வாறே அவை வளரவும் செய்யும். இதன் பின் அவை இந்தத் தொழில் துறைச் சங்கங்கள் மூலமாய், மக்களிடையே உழைப்புப் பிரிவினையை நீக்கவும், மக்களுக்குப் போதமளித்து, கல்வியறிவூட்டி வளர்த்திடவும், யாவற்றையும் செய்யும் திறன் பெறும்படி அவர்களுக்கு முழுநிறைவான வளர்ச்சியும் முழுநிறைவான பயிற்சியும் அளித்திடவும் முற்படும். கம்யூனிசம் இந்தக் குறிக்கோளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது, முன்னேறவும் வேண்டும், கட்டாயம் அதனை வந்தடையவும் செய்யும். ஆனால் இதற்கு மிகப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கும். முழு வளர்ச்சி பெற்று, நிலைபேறுடையதாய் நிறுவப்பெற்று, முழு வீச்சுடைய முதிர்ச்சி

பெற்ற கம்யூனிசமான இந்த வருங்கால விளைவை முன்கூட்டி இன்றே நடைமுறையில் காண முயலுவதானது, நான்கு வயதேயான குழந்தைக்கு உயர் கணிதம் கற்றுத் தரும் முயற்சிக்கு ஒப்பானதே ஆகும்.

சோஷலிசத்தை நாம் கட்டியமைத்திட முடியும், அமைத்திடவும் வேண்டும்—கருத்தியல்பான மானுடத்தைக் கொண்டோ, இதற்கென நாம் தயார் செய்யும் மானுடத்தைக் கொண்டோ அல்ல, முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ள மானுடத்தைக் கொண்டே இதனை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. இது எளிதல்ல என்பது உண்மையே. ஆனால் இப்பணியை வேறு எவ்வகையில் அணுகினாலும், அது விவாதிக்கப்படுவதற்கு ஏற்ற அளவுகூட தகுதி இல்லாததாகவே அமைந்துவிடும்.

தொழிற் சங்கங்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்ப நாட்களில் தொழிலாளி வர்க்கத்துக்கு மகத்தானதொரு முன்னேற்றப் படியைக் குறித்தன. எப்படியெனில் தொழிலாளர்கள் சிதறிய நிலையில் திக்கற்றவர்களாக இருந்ததிலிருந்து மாறி வர்க்க ஒற்றுமையின் குருத்துக்களைப் பெற்றதை அவை குறித்தன. பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் மிக உயர்ந்த வடிவமான பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி உருவாகத் தொடங்கியதும் (கட்சியானது தலைவர்களை வர்க்கத்திடமிருந்தும் வெகுஜனங்களிடமிருந்தும் பிரிக்க முடியாதபடி அவற்றுடன் ஒன்றிவிடச் செய்யத் தெரிந்து கொள்ளாத வரை அது கட்சி என்னும் பெயருக்கே ஏற்றதாகாது), தொழிற் சங்கங்கள் தவிர்க்க முடியாதபடி சிற்சில பிற்போக்கு இயல்புகளை, தொழில் பிரிவுக்குரிய குறுகிய மனப்பான்மையையும் அரசியலில் அக்கறையின்மையையும், ஒரு வகை மந்த நிலையையும், இன்ன பிறவற்றையும் வெளிப்படுத்தலாயின. ஆயினும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி உலகில் எங்கணுமே தொழிற் சங்கங்களல்லாத பிற வழிகளில், தொழிற் சங்கங்களுக்கும் தொழிலாளி வர்க்கக் கட்சிக்கும் இடையிலான பரஸ்பரச் செயற்பாட்டின் மூலமல்லாத பிற வழிகளில் நடைபெற்றதில்லை, நடைபெறவும் முடியாது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்றதானது பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் பிரம்மாண்டமானதொரு முன்னேற்றப் படியாகும். கட்சியானது

இப்பொழுது பழைய வழியில் மட்டுமின்றி ஒரு புதிய வழியிலுங்கூட தொழிற் சங்கங்களுக்குப் போதமளித்து வழிகாட்டியாக வேண்டும். அதேபோதில் அவை அத்தியாவசியமான ''கம்யூனிசப் பயிற்சிப் பள்ளியாகவும்'', பாட்டாளி வர்க்கத்தினர் சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்கு அவர்களுக்குப் பயிற்சி தரும் தயாரிப்புப் பள்ளியாகவும், நாட்டின் பொருளாதாரம் முழுவதுக்குமான நிர்வாகம் படிப்படியாகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் (தனித்தனித் தொழில் பிரிவுகளுக்கல்ல), பிற்பாடு உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் மாற்றப்படுவதற்கு அத்தியாவசியமான தொழிலாளர் ஒற்றுமைக்கான வடிவமாகவும் இருக்கின்றன, நெடுங்காலத்துக்கு அவ்வாறு இருக்கவும் செய்யும் என்பதையும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பொருளில், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் தொழிற் சங்கங்கள் ஒருவகை ''பிற்போக்குத்தன்மை'' கொண்டவையாய் இருப்பது தவிர்க்க முடியாததாகும். இதைப் புரிந்து கொள்ளத் தவறுவது, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான இடைக்காலத்துக்குரிய அடிப்படை நிலைமைகளைப் புரிந்து கொள்ளத் தவறுவதே ஆகும். இந்தப் ''பிற்போக்குத் தன்மையைக்'' கண்டு அஞ்சுவதோ, அதனைத் தட்டிக்கழிக்க அல்லது தாவிச் செல்ல முயலுவதோ படுமோசமான மடமையே ஆகும். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தின், விவசாயிகளின் மிகவும் பிற்பட்ட பகுதிகளையும் வெகுஜனப் பகுதிகளையும் பயிற்றுவித்து, போதமளித்து, அறிவொளிபெறச் செய்து, புது வாழ்வினுள் ஈர்த்திடுவதென்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்குரிய அந்தப் பணியைக் கண்டு அஞ்சுவதாகவே இதற்கு அர்த்தம். ஆனால் குறுகிய தொழில் பிரிவுக்குரிய கண்ணோட்டமோ, தொழில் பிரிவுக்கும் தொழிற் சங்கவாதத்துக்குமான தப்பெண்ணங்களோ கொண்ட எந்தவொரு தொழிலாளியும் இல்லாத ஒரு காலம் வரும்வரை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைச் சாதிக்காமல் ஒத்திப்போடுவதானது இன்னும் கடுமையான தவறாகி விடும். பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை வெற்றிகரமாய் ஆட்சியதிகாரம் ஏற்கவும், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும்போதும் பிற்பாடும் தொழிலாளி வர்க்கத்திலிருந்தும்

பாட்டாளி வர்க்கமல்லாத பிற உழைப்பாளி வெகுஜனங்களிடமிருந்தும் போதுமான அளவுக்கு விரிவான பகுதிகளின் தக்க ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும், அதன் பின் உழைப்பாளி மக்களது மேலும் மேலும் விரிவான பகுதிகளுக்குப் போதமளித்தும் பயிற்றுவித்தும் அவற்றை ஈர்த்துக் கொண்டும் தனது மேலாதிக்கத்தை அது பாதுகாக்கவும் உறுதியாக்கவும் விரிவுபடுத்தவும் முடியும்படியான நிலைமைகளையும் தருணத்தையும் பிழையின்றி எடைபோட்டு மதிப்பிடுவதில்தான் அரசியலின் கலையும் (கம்யூனிஸ்டு தனக்குள்ள கடமைகளைச் சரிவர புரிந்து கொள்வதும்) அடங்கியுள்ளது.

அது மட்டுமல்ல. ருஷ்யாவைக் காட்டிலும் அதிக அளவு முன்னேறிய நாடுகளில், தொழிற் சங்கங்களில் ஒருவகைப் பிற்போக்குத்தனம் எங்களுடைய நாட்டைவிட மிகவும் கூடுதலான அளவில் வெளிப்பட்டிருக்கிறது, வெளிப்பட்டே ஆக வேண்டியிருந்தது. தொழிற் சங்கங்களின் குறுகிய தொழில் பிரிவு மனப்பான்மை, தொழில்பிரிவு தன்னலம், சந்தர்ப்பவாதம் ஆகியவை காரணமாய், எங்களது மென்ஷிவிக்குகள் தொழிற் சங்கங்களில் ஆதரவு பெற்றனர் (சொற்பமானவற்றில் இன்னுங்கூட ஆதரவு பெற்று வருகிறார்கள்). மேலைய நாடுகளின் மென்ஷிவிக்குகள் தொழிற் சங்கங்களில் மேலும் உறுதியான அடிப்படையைப் பெற்றுக் கொண்டுவிட்டனர். எங்கள் நாட்டைக் காட்டிலும் அங்கு **தொழில் பிரிவுக்குரியதான, குறுகலான மனப்பான்மையும் தன்னலமுமிக்க, தடிப்பேறிய, பேராசைபிடித்த, ஏகாதிபத்திய மனப்போக்கு கொண்டதும் ஏகாதிபத்தியத்தால் லஞ்சங் கொடுத்துக் கெடுக்கப்பட்டதுமான குட்டிபூர்ஷுவா "தொழிலாளர் பிரபுக்குலமானது"** மிகவும் வலுவுள்ள பிரிவாக வளர்ச்சி பெற்றுவிட்டது. இது மறுக்க முடியாததாகும். மேற்கு ஐரோப்பாவில் கோம்பர்ஸ்களுக்கும், ழுவோக்கள், ஹெண்டர்சன்கள், மெர்ஹெயிம்கள், லேகின்கள் முதலானோருக்கும் எதிரான போராட்டம், **முற்றிலும் ஒருபடித்தான** சமூக, அரசியல் ரகத்தவரான எங்களது மென்ஷிவிக்குகளுக்கு எதிரான போராட்டத்தைவிட மிகக் கடுமையானதாகும். இந்தப் போராட்டம் தயவு தாட்சண்யமின்றி நடத்தப்பட்டாக வேண்டும். நாங்கள் எடுத்துச் சென்றது போலவே, சந்தர்ப்பவாதத்தின், சமூக-தேசியவெறியின் கடைந்தெடுத்த தலைவர்கள் பூரண

மாக முகமூடி கிழிக்கப்பட்டு தொழிற் சங்கங்களிலிருந்து விரட்டப்படும் நிலைக்கு இந்தப் போராட்டம் தயக்கமின்றி எடுத்துச் செல்லப்பட்டாக வேண்டும். போராட்டம் குறிப்பிட்ட கட்டத்தை வந்தடைவதற்கு முன்னால் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது (கைப்பற்றுவதற்கான முயற்சியும் செய்யப்படலாகாது). இந்தக் ''குறிப்பிட்ட கட்டம்'' வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு நிலைமைகளிலும் வெவ்வேறானதாய் இருக்கும். அந்தந்த நாட்டிலுமுள்ள சிந்தனை மிகுந்த, அனுபவம் வாய்ந்த, அறிவு சார்ந்த பாட்டாளி வர்க்கத் தலைவர்களால் மட்டுமே இதனைச் சரியாக எடைபோட்டு மதிப்பிட முடியும். (ருஷ்யாவில் 1917 அக்டோபர் 25 பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குச் சில நாட்களுக்குப் பிற்பாடு 1917 நவம்பரில் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தல்கள் இந்தப் போராட்டம் கண்ட வெற்றிக்கு ஓர் உறைகல்லாக அமைந்தன. இத்தேர்தல்களில் மென்ஷிவிக்குகள் அடியோடு தோற்கடிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கிடைத்தது 7,00,000 வாக்குகள்தான் —டிரான்ஸ் காக்கேஷியாவின் வாக்குகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டால் 14,00,000 வாக்குகள்தான்; ஆனால் போல்ஷிவிக்குகளுக்குக் கிடைத்ததோ 90,00,000 வாக்குகள். **கம்யூனிஸ்டு அகிலம்**, இதழ் 7-8ல் ''அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும்'' என்னும் எனது கட்டுரையைப் பார்க்கவும்.)

தொழிலாளர் வெகுஜனப் பகுதிகளின் பெயரில்தான், அவற்றை நம் பக்கத்துக்கு வென்று கொள்ளும் பொருட்டுதான், நாம் ''தொழிலாளர் பிரபுக்குலத்தை'' எதிர்த்துப் போராடுகிறோம். தொழிலாளி வர்க்கத்தை நம் பக்கத்துக்கு வென்று கொள்ளும் பொருட்டு நாம் சந்தர்ப்பவாத, சமூக-தேசியவெறித் தலைவர்களை எதிர்த்துப் போராட்டத்தை நடத்துகிறோம். மிகவும் சர்வசாதாரணமான, கண்கூடான இந்த உண்மையை மறப்பது மடமையே ஆகும். ஆயினும், தொழிற் சங்க உச்சத் தலைவர்கள் பிற்போக்கு, எதிர்ப்புரட்சித் தன்மை கொண்டோராய் இருப்பதைக் காரணமாகக் காட்டி, தொழிற் சங்கங்களைத் துறந்துவிட்டு நாம் வெளியே வந்துவிட வேண்டும், அவற்றில் வேலை செய்ய மறுக்க வேண்டும், தொழிலாளர்களுடைய நிறுவன ஒழுங்கமைப்புக்

கான செயற்கையான புதிய வடிவங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வருகையில் ஜெர்மன் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் இதே மடமையைத்தான் வெளிப்படுத்துகிருர்கள்! கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஆற்றக்கூடிய மிகப் பெருஞ் சேவையாகிவிடும் அளவுக்கு இது மன்னிக்க முடியாத மடமையாகும். சந்தர்ப்பவாத, சமூக-தேசியவெறி கொண்ட, காவுத்ஸ்கிவாதத் தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லோரையும் போலவே, எங்களது மென்ஷிவிக்குகளும் ''தொழிலாளி வர்க்க இயக்கத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கக் கைக்கூலிகளே'' அன்றி வேறல்லர் (மென்ஷிவிக்குகளைப் பற்றி எப்பொழுதுமே நாங்கள் இவ்வாறுதான் கூறி வந்திருக்கிறோம்), அல்லது அமெரிக்காவில் டேனியல் தெ லியோனைப் பின்பற்றுவோரின் அற்புதமான, நூற்றுக்கு நூறு உண்மையான தொடரில் சொல்வதெனில் ''முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளர் துறைச் சேவகர்களே'' (labor lieutenants of the capitalist class) அன்றி வேறல்லர். பிற்போக்குத் தொழிற் சங்கங்களில் வேலை செய்ய மறுப்பதானது, தொழிலாளர்களில் போதிய அளவுக்கு வளர்ச்சி பெருத அல்லது பிற்பட்ட பகுதியோரைப் பிற்போக்குத் தலைவர்கள் அல்லது முதலாளித்துவ வர்க்கக் கைக்கூலிகள் அல்லது தொழிலாளர் பிரபுக்குலத்தோர் அல்லது ''முற்றிலும் முதலாளித்துவமயமாகிவிட்ட தொழிலாளர்கள்'' (பிரிட்டிஷ் தொழிலாளர்கள் குறித்து 1858ல் மார்க்சுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும்) செல்வாக்கிலே விட்டு வைப்பதையே குறிக்கிறது.

கம்யூனிஸ்டுகள் பிற்போக்குத் தொழிற் சங்கங்களில் வேலை செய்யக் கூடாதென்னும் இந்த நகைக்கத்தக்கத் ''தத்துவம்'', ''வெகுஜனங்களை'' வயப்படுத்தும் பிரச்சினையை ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் எவ்வளவு துச்சமாய் மதிக்கிருர்கள் என்பதையும், ''வெகுஜனங்களைப்'' பற்றிய கூப்பாட்டை எப்படி துஷ்பிரயோகம் செய்கிருர்கள் என்பதையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ''வெகுஜனங்களுக்கு'' உதவி செய்வதற்கும், ''வெகுஜனங்களின்'' நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்கும் தெரிந்து கொள்ள விரும்புவீர்களாஞல், நீங்கள் இன்னல்களையும் இந்தத் ''தலைவர்களால்'' ஏற்படும் தொல்லைகளையும் புரட்டு

களையும் இழுக்குகளையும் அடக்குமுறையையும் கண்டு அஞ் சாமல் (சந்தர்ப்பவாதிகளும் சமூக-தேசியவெறியர்களுமான இவர்கள் மிகப் பெருவாரியான சந்தர்ப்பங்களில் நேரடியாக வோ, மறைமுகமாகவோ முதலாளித்துவ வர்க்கத்துடனும் போலீசுடனும் இணைப்பு கொண்டவர்களாவர்), நிச்சயம் **வெகுஜனங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் வேலை செய் தாக வேண்டும்.** பாட்டாளி வர்க்க அல்லது அரைவாசிப் பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் காணப்படும் நிலையங் களிலும் கழகங்களிலும் சங்கங்களிலும்—மிகவும் பிற்போக் கானவற்றிலுங்கூட—கிளர்ச்சியும் பிரசாரமும் முறையாக வும் விடாமுயற்சியோடும் இடையறாமலும் பொறுமையோ டும் செய்யும் பொருட்டு, நீங்கள் எந்தத் தியாகம் புரியவும், மிகப் பெரிய இடையூறுகளைச் சமாளிக்கவும் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். தொழிற் சங்கங்களும் தொழிலாளர் கூட்டுறவுகளும்தான் (பின்னவை சிற்சில சந்தர்ப்பங்களிலே னும்) வெகுஜனங்கள் இருக்கக்கூடிய நிறுவனங்கள். ஸ்வீ டிஷ் பத்திரிகை *Folkets Dagblad Politiken**இல் (1920 மார்ச் 10 இதழில்) எடுத்துரைக்கப்பட்டிருக்கும் புள்ளிகளின் படி, கிரேட் பிரிட்டனில் தொழிற் சங்க உறுப்பினர் தொகை 1917 இறுதிக்கும் 1918 இறுதிக்கும் இடையில் 55,00,000 லிருந்து 66,00,000 ஆக அதிகரித்தது; 19 சதவீதமான பெருக்கமாகும் இது. 1919 முடிவின் வாக்கில் உறுப்பினர் தொகை 75,00,000 ஆக மதிப்பிடப்பட்டது. பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமான புள்ளிகள் என்னிடம் இல்லை என்றாலும், சிறிதும் மறுக்க முடியாத பொதுவாகத் தெரிந்த உண்மை கள், இந்நாடுகளிலும் தொழிற் சங்க உறுப்பினர் தொகை மிக வேகமாய் உயர்ந்திருப்பதை நிரூபிக்கின்றன.

இவ்வுண்மைகள், ஆயிரக் கணக்கான வேறு பல அறி குறிகளால் ஊர்ஜிதம் செய்யப்படும் ஒன்றை—அதாவது பாட்டாளி வர்க்க வெகுஜனங்களிடையே, ''அடித்தட்டுப்'' பகுதியோரிடையே, பிற்பட்ட பகுதியோரிடையே வர்க்க உணர்வும் நிறுவன ஒழுங்கமைப்பு வேண்டுமென்ற அவாவும் பெருகி வருகின்றன என்பதை—தெட்டத் தெளிவாக்குகின் றன. கிரேட் பிரிட்டனிலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும்

* மக்கள் அரசியல் தினசரி—**பதிப்பாசிரியர்.**

லட்சோப லட்சத் தொழிலாளர்கள் முதன்முதலாய் நிறுவன ஒழுங்கமைப்பு அறவே இல்லாத ஒரு நிலையிலிருந்து ஆரம்பப் படியான, அடிநிலையான, மிக எளிய, (இன்னமும் முதலாளித் துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களில் மூழ்கியுள்ளோர்) மிகச் சுலபமாய் அடையக் கூடிய நிறுவன வடிவத்துக்கு, அதாவது தொழிற் சங்கங்களுக்கு வளர்ச்சியடைந்து வருகின்றனர். இந்நிலையிலும் புரட்சிகரமான, ஆனால் யோசனை இல்லாத இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தொழிற் சங்கங்களில் **வேலை செய்ய மறுத்துவிட்டு** விலகி நின்று ''வெகுஜனங்கள்'', ''வெகுஜனங்கள்!'' என்று கத்துகிறார்கள்; தொழிற் சங்கங்கள் ''பிற்போக்கானவை'' என்பதாக இதற்கு அவர்கள் காரணம் கூறுகின்றனர்; முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களால் மாசுபடுத்தப்படாத, தொழில் பிரிவு அல்லது குறுகிய மனப்பாங்கு கொண்ட தொழிற் பிரிவினருக்குரிய குற்றங் குறைகளால் களங்கப்படுத்தப் படாத, புத்தம் புதிய, அப்பழுக்கற்ற ''தொழிலாளர் சங்கத்தைக்'' கற்பனை செய்து கண்டுபிடிக்கிறார்கள்—இந்தச் சங்கம் பரந்துவிரிந்த ஒரு நிறுவனமாக இருக்கும் (!) என்று சாதிக்கிறார்கள். ''சோவியத் அமைப்பையும் சர்வாதிகாரத்தையும் ஏற்றுக் கொள்வதுதான்'' உறுப்பினராவதற்குரிய ஒரேயொரு (!) நிபந்தனையாக இருக்கும். (மேலே கொடுக்கப் பட்ட மேற்கோளைப் பார்க்கவும்.)

இதைவிட முட்டாள்தனமான ஒன்றை, ''இடதுசாரிப்'' புரட்சியாளர்களால் புரட்சிக்கு ஏற்படும் கேட்டைவிட பெரிய ஒன்றைக் கற்பனை செய்வதுகூட கடினம்! ஏன், ருஷ்யாவின், ஆன்டான்டின் முதலாளித்துவ வர்க்கத்தின்மீது முன்பின் கண்டிராத வெற்றிகளை இரண்டரை ஆண்டுகளாய்ப் பெற்ற பின்னரும் இன்று, ருஷ்யாவில் நாங்கள் ''சர்வாதிகாரத்தை ஏற்பதை'' தொழிற் சங்க உறுப்பினராவதற்குரிய ஒரு நிபந்தனையாக்குவோமாயின், முழு முட்டாளுக்குரிய செயல் புரிவோரே ஆவோம்; வெகுஜனங்களிடையே எங்களுக்குள்ள செல்வாக்குக்குத் தீங்கிழைத்து மென்ஷிவிக்குகளுக்கு உதவி புரிவோரே ஆவோம். கம்யூனிஸ்டுகள் முன்னுள்ள பணி பிற்பட்ட பகுதியோரின் **நம்பிக்கையைப்** பெறுவதும், **அவர்களுக்கிடையே** வேலை செய்வதுமேயன்றி, செயற்கைத் தன்மை வாய்ந்த சிறுபிள்ளைத்தனமான ''இடது

சாரிக்'' கோஷங்களைக் கொண்டு அவர்களிடமிருந்து தம்மைப் பிரித்து விலக்கி வேலி அமைத்துக் கொள்வதல்ல.

''கோட்பாடு வழிப்பட்ட'' ஜெர்மன் எதிர்த்தரப்பினரைப் போல (இத்தகைய ''கோட்பாடு வழிப்பாட்டிலிருந்து'' கடவுள் நம்மைக் காப்பாற்றுவாராக!), அல்லது அமெரிக்க ''உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனத்தின்''[60] புரட்சியாளர்கள் சிலரைப் போல, பிற்போக்குத் தொழிற் சங்கங்களை விட்டு வெளியேற வேண்டுமென்று வாதாடி இவற்றில் வேலை செய்ய மறுக்கும் அந்த ''இடதுசாரிப்'' புரட்சியாளர்களுக்கு கோம்பர்ஸ்களும் ஹெண்டர்சன்களும் ழுவோக்களும் லேகின்களும் மிகுந்த நன்றி செலுத்துகிறார்கள் என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. சந்தர்ப்பவாதத்தின் ''தலைவர்களான'' இந்த ஆட்கள், கம்யூனிஸ்டுகளைத் தொழிற் சங்கங்களில் நுழைய விடாமல் தடுப்பதற்கும், எல்லா வழிகளிலும் இவற்றிலிருந்து அவர்களை விலக்கி வெளியே தள்ளுவதற்கும், தொழிற் சங்கங்களில் அவர்களுடைய பணியை எவ்வளவு சங்கடமாக்க முடியுமோ அவ்வளவும் செய்வதற்கும், அவர்களை அவமானப்படுத்துவதற்கும், வேட்டையாடுவதற்கும், அடக்குமுறைக்கு உள்ளாக்குவதற்கும், முதலாளித்துவ சூழ்ச்சிகளின் ஒவ்வொரு உபாயத்தையும் கையாளுவார்கள், முதலாளித்துவச் சர்க்கார்கள், பாதிரிமார்கள், போலீசார், நீதிமன்றத்தார் ஆகியோர் அனைவரின் உதவியையும் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவற்றுக்கு எல்லாம் சளைக்காமல் நாம் எதிர்த்து நிற்கும் திறனுடையோராய் இருக்க வேண்டும்; எந்தத் தியாகமும் புரிய சித்தமாயிருக்க வேண்டும்; தேவை ஏற்படின், பல்வேறு தந்திரங்களையும் உபாயங்களையும் சட்டவிரோத முறைகளையும் கையாளுவதற்குங்கூட, உண்மையைச் சொல்லாமலும் மறைத்தும் சமாளிப்பதற்குங்கூடத் தயாராயிருக்க வேண்டும்—எப்பாடுபட்டாகிலும் தொழிற் சங்கங்களில் புகுந்து, தொடர்ந்து அவற்றில் இருந்து, கம்யூனிஸ்டுப் பணியை அவற்றுக்குள்ளிருந்து நடத்திச் சென்றாக வேண்டும். ஜாரிசத்தில் 1905 வரையில் எங்களுக்குச் ''சட்டபூர்வமான சந்தர்ப்பங்கள்'' எவையும் இருக்கவில்லை. ஆயினும் இரகசியப் போலீஸின் அதிகாரியான ஸுபாத்தவ் புரட்சியாளர்களைக் கண்ணிவைத்துப் பிடிக்கும் பொருட்டும், அவர்களை எதிர்த்துச் செயல்படும் பொருட்டும் கறுப்பு

நூற்றுவர் தொழிலாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தபோதும், கழங்களை நிறுவியபோதும் கட்சி உறுப்பினர்களை நாங்கள் இந்தக் கூட்டங்களுக்கும், இந்தக் கழகங்களினுள்ளும் அனுப்பினோம் (இவர்களில் ஒருவரான செயின்ட் பிட்டர்ஸ்பர்கின் சிறந்த ஆலைத்தொழிலாளர் தோழர் பாபுஷ்கின் என் நினைவில் இருக்கிறார்; ஜாரின் ஜெனரல்களது உத்தரவின் பேரில் இவர் 1906ல் சுட்டுக் கொல்லப்பட்டார்). இவர்கள் வெகுஜனங்களுடன் தொடர்புகள் நிறுவிக் கொண்டனர்; இவர்களால் தமது கிளர்ச்சியை நடத்திச் செல்ல முடிந்தது; ஸுபாத்தவ் ஆட்களது* செல்வாக்கிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதில் இவர்கள் வெற்றி பெற்றனர். ஆனால் ஆழமாக வேர்விட்ட சட்டவாத, அரசியல் அமைப்புச் சட்டவாத, முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களில் மூழ்கிக் கிடக்கும் மேற்கு ஐரோப்பாவில் இதனைச் சாதிப்பது மிகவும் கடினமென்பது உண்மையே. ஆயினும் இதனைச் செய்ய முடியும், செய்தே ஆகவும் வேண்டும்—அதுவும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் செய்தாக வேண்டும்.

என்னுடைய கருத்துப்படி மூன்றாவது அகிலத்தின் செயற்குழு, பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்ய மறுப்பதானது எப்படி விவேகமற்றதாகும் என்பதையும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இலட்சியத்துக்கு இதனால் ஏற்படும் பெருங் கேட்டையும் விவரமாக விளக்கிக் கூறிப் பொதுவாக இக்கொள்கையையும், குறிப்பாக, இந்தத் தவறான கொள்கையை ஆதரித்துள்ள—நேரடியாகவா அல்லது மறைமுகமாகவா, பகிரங்கமாகவா அல்லது இரகசியமாகவா, முழுமையாகவா அல்லது பகுதியாகவா என்பது குறித்துக் கருதத் தேவையில்லை—ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலரது செயல்முறையையும் திட்டவட்டமாகக் கண்டனம் செய்வதுடன், கம்யூனிஸ்டு அகிலத்

* கோம்பர்ஸ்களும் ஹெண்டர்சன்களும் ழுவோக்களும் லேகின்களும் ஸுபாத்தவ்களேயன்றி வேறல்லர்; அவர்களுடைய ஐரோப்பிய ஜோடனையிலும், மெருகிலும், அவர்களது கேடுகெட்ட கொள்கையைச் செயல்படுத்துவதில் அவர்கள் அனுசரிக்கும் நாகரிகமான, பண்பட்ட, ஜனநாயகப் பாணியில் அமைந்த சாமர்த்திய முறையிலும்தான் எங்களது ஸுபாத்தவிடமிருந்து வித்தியாசப்படுகிறார்கள்.

தின் அடுத்த காங்கிரசையும் இவற்றைக் கண்டனம் செய்யுமாறு அறைகூவ வேண்டும். மூன்ருவது அகிலம் இரண்டாம் அகிலத்தின் போர்த்தந்திரத்திலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டுவிட வேண்டும். சங்கடமான விவகாரங்களை அது தட்டிக்கழிக்கவோ, குறைத்துக் கூறி மெழுகவோ கூடாது; அதற்குப் பதில் அவற்றை நேர்முகமான முறையில் எடுத்துரைத்தாக வேண்டும். ''சுயேச்சையாளர்களை'' (ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி) பொறுத்தவரை சுற்றி வளைக்காமல் முழு உண்மையும் நேருக்குநேர் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது; இதே போல ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் குறித்தும் சுற்றி வளைக்காமல் முழு உண்மையும் நேருக்குநேர் எடுத்துரைக்கப்பட்டாக வேண்டும்.

## 7

## முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளலாமா?

மகா அலட்சியமாய்—கிஞ்சிற்றும் பொறுப்புணர்வின்றி—ஜெர்மன் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் இக்கேள்விக்கு எதிர்மறையில் பதிலளிக்கிருர்கள். அவர்களுடைய வாதங்கள் யாவை? மேலே எடுத்துரைக்கப்பட்ட மேற்கோளில் நாம் படிப்பதாவது:

> ''... வரலாற்று வழியிலும் அரசியல் வழியிலும் காலாவதியாகிவிட்ட பாராளுமன்றப் போராட்ட வடிவங்களுக்குச் சரிந்து செல்லும் எவ்வகையான பின்னடைவையும்... தீர்மானமாய் நிராகரித்தே ஆக வேண்டும்....''

நகைக்கத்தக்க ஆடம்பரத்துடன் இது கூறப்படுகிறது. கண்கூடாகவே தவருனது இது. பாராளுமன்ற முறைக்குச் ''சரியும் பின்னடைவு'' என்கிருர்கள்! ஜெர்மனியில் ஏற்கனவே சோவியத் குடியரசு ஒன்று உதித்துவிட்டதா, என்ன? அப்படி ஒன்றும் தெரியவில்லையே! ''சரியும் பின்னடைவு'' என்பதாகப் பேசுகிருர்களே, எப்படி அது? பொருளற்றச் சொல்லடுக்கேயன்றி வேறு என்ன?

பாராளுமன்ற முறை ''வரலாற்று வழியில் காலாவதியாகிவிட்ட'' ஒன்றுதான். பிரசார அர்த்தத்தில் இது மெய்தான். ஆனல் நடைமுறையில் அதனை வெற்றி கொள்ளும் நிலையை வந்தடைய இன்னும் நெடுந் தொலைவுள்ளதென்

பது யாவரும் அறிந்ததே. முதலாளித்துவத்தையும் ''வர லாற்று வழியில் காலாவதியாகிவிட்ட'' ஒன்றுக மிகப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே—முழு நியாயத்துடன்—அறிவித் திருக்கலாம். ஆயினும் அது, முதலாளித்துவத்தின் அடிப் படையில் மிக நீண்ட, மிகவும் விடாப்பிடியான ஒரு போராட் டத்துக்கான அவசியத்தை நீக்கிவிடவில்லையே. பாராளுமன்ற முறை உலக வரலாற்றின் கண்ணேட்டத்தில் ''வரலாற்று வழி யில் காலாவதியானதுதான்''; அதாவது, முதலாளித்துவப் பாராளுமன்ற முறையின் சகாப்தம் முடிவுற்றுவிட்டதும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தம் தொடங்கி விட்டதும் மெய்தான். இது மறுக்க முடியாததே. ஆனல் உலக வரலாறு பல பத்தாண்டுக் கணக்கில் அளக்கப்படும் ஒன்று. உலக வரலாற்றின் அளவுகோலைக் கொண்டு அளக் கையில், பத்து அல்லது இருபது ஆண்டுகள் முன்னதாகவோ பின்னதாகவோ கொள்வதால் மாறுபாடு ஏற்பட்டுவிடுவ தில்லை. உலக வரலாற்றின் கண்ணேட்டத்தில் இது உத்தேச மாகக்கூட மதிப்பிட முடியாத ஓர் அற்ப விவகாரம். ஆனல் உலக வரலாற்றின் இந்த அளவுகோலை அன்றாட நடைமுறை அரசியலில் பிரயோகிப்பது அப்பட்டமான தத்துவார்த்தப் பிழையாகிவிடுமே.

பாராளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியாகி விட்டதா''? இது முற்றிலும் வேறொரு விவகாரம். இது உண்மையானல், ''இடதுசாரிகளின்'' நிலை வலுமிக்கதுதான். ஆனல் துருவிப் பரிசீலிக்கும் பகுத்தாய்வினல் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்று இது. ''இடதுசாரிகளுக்கு'' இந்த விவகா ரத்தை எப்படி அணுகுவது என்பதுகூடத் தெரியவில்லை. **கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆம்ஸ்டர்டாமிலுள்ள இடைக்காலக் குழு வின் செய்தி வெளியீடு** *(Bulletin of the Provisional Bureau in Amsterdam of the Communist International*, February 1920), இதழ் 1ல், வெளிவந்த ''பாராளுமன்ற முறை பற்றிய விரிவு ரை''யில் காணப்படும் பகுத்தாய்வும் (இது டச்சு-இடது சாரி, அல்லது இடதுசாரி-டச்சு முயற்சிகளை வெளியிடுகிறது என்பது தெளிவு), அடியில் நாம் காணப் போவது போல, படு மட்டமாகவே இருக்கிறது.

முதலாவதாக, ரோஸா லுக்சம்பர்க், கார்ல் லீப்க்னெஹ்ட் போன்ற சிறந்த அரசியல் தலைவர்களின் கருத்துக்கு விரோத

மாய் ஜெர்மன் ''இடதுசாரிகள்'', பாராளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டது'' என்று 1919 ஜனவரியிலேயே கருதியது நமக்குத் தெரிந்ததே. ''இடதுசாரிகளின்'' இந்தக் கருத்து தவறானது என்பதும் நாம் அறிந்ததே. பாராளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டது'' என்னும் நிர்ணயிப்பை ஒரே அடியில் அடியோடு ஒழித்திட இந்த ஒரு உண்மையே போதும். அக்காலத்தில் சர்ச்சைக்கு இடமில்லாததாய் இருந்த அவர்களது தவறு, இனி தவறல்ல என்றாகியது எப்படி என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்த ''இடதுசாரிகளுடையது'' ஆகும். இதை நிரூபிக்க அவர்கள் துளிக்கூட சான்று அளிக்கவில்லை, அளிக்கவும் முடியாது. ஓர் அரசியல் கட்சி தன்னுடைய தவறுகள் குறித்து அனுசரிக்கும் போக்கு, அக்கட்சி எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சி கொண்டுள்ளது என்பதையும், அதன் வர்க்கத்துக்கும் உழைப்பாளி வெகுஜனங்களுக்கும் அதற்குள்ள கடமைகளை நடைமுறையில் எந்த அளவுக்கு அது நிறைவேற்றுகிறது என்பதையும் மதிப்பிட்டு முடிவு செய்வதற்கான மிக முக்கியமான, நம்பகமான வழிகளில் ஒன்றாகும். தவறை ஒளிவுமறைவின்றி ஒப்புக்கொள்ளுதல், அத்தவறுக்குரிய காரணங்களை நிச்சயித்துக் கொள்ளுதல், அதனை நோக்கி இட்டுச் சென்ற நிலைமைகளைப் பகுத்தாய்தல், அதைச் சரிசெய்வதற்குரிய வழிகளை ஆராய்ந்தறிந்து வகுத்துக்கொள்ளுதல்—இவையே பொறுப்புணர்ச்சி கொண்ட ஒரு கட்சிக்குரிய அடையாளம்; இவ்வாறுதான் அது தனது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்; இவ்வாறுதான் அது தனது வர்க்கத்துக்கும் பிறகு வெகுஜனங்களுக்கும் போதமளித்துப் பயிற்றுவிக்க வேண்டும். ஜெர்மனியிலும் (ஹாலந்திலும்) உள்ள ''இடதுசாரிகள்'' இந்தக் கடமையை நிறைவேற்றவும், கண்கூடான தமது பிழையை ஆராய்வதில் முக்கிய கருத்தும் கவனமும் செலுத்தவும் தவறியதன் மூலம், தாம் ஒரு சிறு குழுவே அன்றி ஒரு வர்க்கத்தின் கட்சி அல்ல என்பதையும், அறிவுத்துறையினரையும் அறிவுத்துறைவாதத்தின் மோசமான இயல்புகளைக் காப்பியடிக்கும் ஒருசில தொழிலாளர்களையும் கொண்ட சிறு குழுவேயன்றி வெகுஜனங்களது கட்சியல்ல என்பதையும் நிரூபித்துக் கொண்டுவிட்டனர்.

இரண்டாவதாக, ஏற்கனவே நாம் விவரமாய் மேற்கோள் கூறிய பிராங்க்ஃபர்ட் "இடதுசாரிக்" குழுவின் அதே பிரசுரத்தில் நாம் படிப்பதாவது:

> "...இன்னும் மையத்தை [கத்தோலிக்க 'மையக்' கட்சி] பின்பற்றும் லட்சக் கணக்கான தொழிலாளர்கள் எதிர்ப்புரட்சித்தன்மை வாய்ந்தோரே ஆவர். கிராமப் பாட்டாளி வர்க்கத்தினர் எண்ணற்ற எதிர்ப்புரட்சித் துருப்புகளாகிவிடுகின்றனர்." (மேலே கூறிய பிரசுரத்தின் 3ஆம் பக்கம்.)

இந்த முடிவு வரையறையற்றதாகவும் மிகைபடக் கூறுவதாகவும் உள்ளதென்பதை யாவும் புலப்படுத்துகின்றன. ஆனால் இங்கு எடுத்துரைக்கப்படும் அடிப்படை உண்மை மறுக்க முடியாததாகும். இதனை "இடதுசாரிகள்" ஏற்றுக் கொள்வதானது அவர்களுடைய தவறுக்குரிய தெளிவான சான்றாகிவிடுகிறது. பாட்டாளி வர்க்கத்தினரில் "லட்சக் கணக்கானோரும்" "எண்ணற்றோரும்" இன்னமும் பொதுவாகப் பாராளுமன்ற முறையை ஆதரிப்பதோடன்றி, அப்பட்டமான "எதிர்ப்புரட்சித்தன்மை வாய்ந்தோராகவும்" இருக்கையில், "பாராளுமன்ற முறை அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டதென்று" கூறுவது எப்படி!? ஜெர்மனியில் பாராளுமன்ற முறை இன்னமும் அரசியல் வழியில் காலாவதி ஆகிவிடவில்லை என்பது தெளிவு. ஜெர்மனியிலுள்ள "இடதுசாரிகள்" தமது விருப்பத்தை, தமது அரசியல்-சித்தாந்தப் போக்கை எதார்த்த உண்மையாகத் தவறாய் நினைத்துக் கொண்டுவிட்டனர் என்பது விளங்குகிறது. புரட்சியாளர்கள் செய்யக் கூடிய மிகவும் அபாயகரமான தவறாகும் இது. ருஷ்யாவில் மிகவும் நீண்ட நெடுங்காலத்துக்கு மிகப் பல்வேறு வடிவங்களில் ஜாரிசத்தின் மிகக் கொடிய காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறையானது பல்வேறு வகைப்பட்ட புரட்சியாளர்களையும் தோற்றுவித்தது; இப்புரட்சியாளர்கள் வியத்தகு பற்றுறுதியும் ஆர்வமும் வீரமும் நெஞ்சுறுதியும் வெளிப்படுத்தினர். ருஷ்யாவில் நாங்கள் புரட்சியாளர்களுடைய இந்தத் தவறை மிகவும் அருகாமையிலிருந்து கவனித்திருக்கிறோம். மிக உன்னிப்பாய் இதனை நாங்கள் ஆராய்ந்து, இதைப்பற்றி நேரடியாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். எனவேதான் ஏனையோரிடத்தும் இது

எழும்போது எங்களால் மிகத் தெளிவாய் இதனைப் பார்க்க முடிகிறது. ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியானதுதான்''; ஆனால்—இதுவே இங்குள்ள முக்கிய விஷயம் — நமக்குக் காலாவதியாகிவிட்டதால் அது **வர்க்கத்துக்கும்,** **வெகுஜனங்களுக்கும்** காலாவதியாகிவிட்டதாகுமெனக் கருதக் கூடாது. ''இடதுசாரிகளுக்கு'' ஒரு **வர்க்கத்தின்** கட்சியாக, **வெகுஜனங்களின்** கட்சியாகச் சிந்தனை செய்யத் தெரியவில்லை, அவ்வாறு செயல்படத் தெரியவில்லை என்பதையே திரும்பவும் இங்கு காண்கிறோம். வெகுஜனங்களுடைய நிலைக்கு, வர்க்கத்தின் பிற்பட்ட பகுதியின் நிலைக்கு நீங்கள் சரிந்துவிடக் கூடாது. அதில் சர்ச்சைக்கு இடமில்லை. அவர்களுக்குக் கசப்பான உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். அவர்களுடைய முதலாளித்துவ-ஜனநாயக, பாராளுமன்றவாதத் தப்பெண்ணங்களைத் தப்பெண்ணங்கள் என்பதாகச் சொல்ல வேண்டியதுதான் உங்களுடைய கடமை. ஆனால் அதேபோதில் (வர்க்கத்தின் கம்யூனிஸ்டு முன்னணிப் படை மட்டுமின்றி) வர்க்கம் அனைத்தின், (உழைப்பாளி மக்களின் முன்னேறிய பகுதியோர் மட்டுமின்றி) **உழைப்பாளி மக்கள்** அனைவரின் வர்க்க உணர்வு, தயார் நிலை இவற்றின் **எதார்த்த** நிலவரத்தை நீங்கள் **நிதானமாய்க்** கவனித்து மதிப்பிட்டாக வேண்டும்.

ஆலைத் தொழிலாளர்களில் ''லட்சக் கணக்கானோரும்'', ''எண்ணற்றோரும்'' வேண்டாம், ஓரளவு பெரிதான சிறுபான்மையினர் மட்டும்தான் கத்தோலிக்கப் பாதிரிமார்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றாலுங்கூட—கிராமாந்தரத் தொழிலாளர்களிலும் இதேபோன்ற சிறுபான்மையினர் மட்டும்தான் நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும் (Grossbauern) பின்பற்றுகிறார்கள் என்றாலுங்கூட—ஜெர்மனியில் பாராளுமன்ற முறை அரசியல் வழியில் இன்னமும் காலாவதியாகிவிடவில்லை என்பதையே, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி **அதன்** சொந்த **வர்க்கத்தின்** பிற்பட்ட பகுதியோரைப் போதம் பெறச் செய்யும் பொருட்டும், அடக்கியொடுக்கப்படும், வளர்ச்சியில்லாத, அறியாமையில் ஆழ்ந்த கிராமாந்தர **வெகுஜனங்களைத்** தட்டியெழுப்பி போதம் பெறச் செய்யும் பொருட்டும், பாராளுமன்றத் தேர்தல்களிலும் பாராளுமன்ற அரங்கில் நடைபெறும்

போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்வது இக்கட்சியின் கடமையாகும் என்பதையே, இது சந்தேகத்துக்கு இடமின்றி குறிப்பிடுகிறது. முதலாளித்துவப் பாராளுமன்றங்களேயும் இதர வகையான பிற்போக்கு நிறுவனங்கள் அனைத்தையும் அகற்றிடும் பலம் உங்களிடம் இல்லாத வரை, அவற்றில் நீங்கள் வேலே செய்தே ஆகவேண்டும்; ஏனெனில் பாதிரிமார்களால் ஏமாற்றப்பட்டும், கிராம வாழ்க்கை முறையின் பிற்பட்ட நிலைமைகளால் முடக்கப்பட்டும் வரும் தொழிலாளர்களை இவற்றில்தான் இன்னமும் நீங்கள் காண்பீர்கள். இவ்வாறு வேலை செய்யாவிடில், நீங்கள் வாய்வீச்சடிப்பதைத் தவிர வேறு எதற்கும் உதவாதோராய் மாறிவிடும் அபாயம் ஏற்படும்.

மூன்ருவதாக, ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் போல்ஷிவிக்குகளாகிய எங்களைப் புகழ்ந்து மிகுதியாகப் பலவும் கூறுகிருர்கள். எங்களைப் புகழ்வதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, போல்ஷிவிக்குகளுடைய போர்த்தந்திரத்தை மேலும் நன்கு தெரிந்து கொள்ள முயலுங்கள் என்பதாக அவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சில நேரங்களில் தோன்றுகிறது. ருஷ்ய முதலாளித்துவப் பாராளுமன்றமான அரசியல் நிர்ணய சபையின் தேர்தல்களில் 1917 செப்டம்பர்— நவம்பரில் நாங்கள் பங்கெடுத்துக் கொண்டோம். எங்களுடைய போர்த்தந்திரம் சரியா, தவரு? சரியல்ல என்ருல், இதனைத் தெளிவாக எடுத்துரைத்து நிரூபிக்க வேண்டும்; சர்வதேசக் கம்யூனிசத்தின் பிழையற்ற போர்த்தந்திரத்தை வகுத்து உருவாக்குவதற்கு இது அவசியமாகும். அது சரியானதே என்ருல், இதிலிருந்து சில முடிவுகளைக் கிரகித்துக் கொண்டாக வேண்டும். ருஷ்யாவின் நிலைமைகளும் மேற்கு ஐரோப்பாவின் நிலைமைகளும் ஒன்றெனக் கொள்ளலாகாது என்பது உண்மையே. ஆனுல் ''பாராளுமன்ற முறை அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டது'' என்ற நிர்ணயிப்பின் பொருள் பற்றிய இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரை, எங்களுடைய அனுபவத்தைத் தக்கபடி கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். ஏனெனில் ஸ்தூலமான அனுபவம் கணக்கில் எடுக்கப்பட்டாலொழிய இது போன்ற நிர்ணயிப்புகள் பொருளற்ற வெற்றுச் சொல்லடுக்குகளாக எளிதில் மாறிவிடும். 1917 செப்டம்பர்—நவம்

பரில், பாராளுமன்ற முறை ருஷ்யாவில் அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டதாகக் கருத ருஷ்ய போல்ஷிவிக்கு களான எங்களுக்கு மேலேயக் கம்யூனிஸ்டுகள் யாரையும்விட அதிக அளவு நியாயம் இருக்கவில்லையா? இருந்ததென்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இங்கு எழும் கேள்வி முதலாளித் துவப் பாராளுமன்றங்கள் அதிக காலம் இருந்துள்ளனவா அல்லது சிறிது காலமாய்த்தான் உள்ளனவா என்பதல்ல; பெருந் திரளான உழைப்பாளி மக்கள் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், முதலாளித்துவ-ஜனநாயகப் பாராளு மன்றத்தைக் கலேக்கவும் (அல்லது அது கலேக்கப்பட அனு மதிக்கவும்) எந்த அளவுக்கு (சித்தாந்த வழியிலும் அரசியல் வழியிலும் நடைமுறையிலும்) தயாராய் இருக்கிறார்கள் என்பதே இங்கு எழும் கேள்வி. 1917 செப்டம்பர்—நவம் பரில் ருஷ்யாவில் நகரத் தொழிலாளி வர்க்கமும் படைவீரர் களும் விவசாயிகளும், விசேஷ நிலேமைகள் பலவும் காரண மாய், சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும் முதலா ளித்துவப் பாராளுமன்றங்களிலே மிகவும் ஜனநாயகமான தைக் கலேத்திடவும் மிகவும் சிறப்பான அளவுக்குத் தயார் நிலேயில் இருந்தனர் என்பது கிஞ்சிற்றும் மறுக்க முடியாத, நூற்றுக்கு நூறு நிலேநாட்டப்பெற்ற வரலாற்று உண்மை யாகும். இருந்தபோதிலும் போல்ஷிவிக்குகள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்காரம் செய்யவில்லே; அதற்குப் பதில் பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வெல் வதற்கு முன்பும் பிற்பாடும் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டனர். ருஷ்யாவில் அரசியல் நிர்ணய சபையின் தேர்தல் முடிவுகளே விவரமாகப் பகுத்தாயும் மேற்கூறிய கட்டுரையில், இந்தத் தேர்தல்கள் மதிப்பிடற்கரிய (பாட் டாளி வர்க்கத்துக்கு மிகமிகப் பயனுள்ள) அரசியல் பலன் களே அளித்தன என்பது என்னுல் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென நான் திடமாக நம்புகிறேன்.

இதிலிருந்து பெறப்படும் முடிவு சிறிதளவும் மறுக்க முடி யாததாகும்: சோவியத் குடியரசின் வெற்றிக்குச் சில வாரங் களே முன்னதாகவும், இந்த வெற்றிக்குப் பிற்பாடுங்கூட, முதலாளித்துவ-ஜனநாயகப் பாராளுமன்றம் ஒன்றில் பங் கெடுத்துக் கொள்வதானது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் துக்குத் தீங்கிழைப்பதற்குப் பதிலாய், இது போன்ற பாராளு

மன்றங்கள் கலைக்கப்பட வேண்டியது எப்படி அவசியமென்பதைப் பிற்பட்ட நிலையிலுள்ள வெகுஜனப் பகுதியோருக்கு நிரூபிப்பதற்கு நடைமுறையில் உதவுகிறது என்பதும், இப்பாராளுமன்றங்கள் வெற்றிகரமாய்க் கலைக்கப்படுவதற்கு வகை செய்கிறது என்பதும், முதலாளித்துவப் பாராளுமன்ற முறையை ''அரசியல் வழியில் காலாவதியாக்குவதற்குத்'' துணை புரிகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அனுபவத்தை உதாசீனம் செய்துவிட்டு, அதே நேரத்தில் கம்யூனிஸ்டு அகிலத்துடன்—தனது போர்த்தந்திரத்தைச் சர்வதேசரீதியில் (குறுகலான, அல்லது தனிப்பட்டதான எந்தவொரு தேசத்துக்குமான போர்த்தந்திரமாயிராது, சர்வதேசியப் போர்த்தந்திரமாய்) வகுத்துக் கொள்ள வேண்டிய கம்யூனிஸ்டு அகிலத்துடன்—இணைப்புரிமை கொண்டாடுவதானது மிகக் கொடுந் தவறிழைப்பதாகவும், சர்வதேசியத்தைச் சொல்லளவில் ஏற்றுக் கொண்டு செயலில் கைவிடுவதாகவுமே அமைகிறது.

பாராளுமன்றங்களில் பங்கு கொள்ளாதிருப்பதற்கு ஆதரவான ''டச்சு-இடதுசாரி'' வாதங்களை இனி பரிசீலனை செய்வோம். மேற்கூறிய ''டச்சு'' விரிவுரைகளில் மிகவும் முக்கியமானதான 4ஆவது விரிவுரையின் வாசகம் வருமாறு:

> ''முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்பு முறிந்துபோய், சமுதாயம் புரட்சிக்குரிய நிலையில் இருக்கையில், பாராளுமன்றச் செயலானது வெகுஜனங்களது நேரடியான செயலுடன் ஒப்பிடும்போது படிப்படியாக முக்கியத்துவம் இழந்துவிடுகிறது. இந்நிலைமைகளில் பாராளுமன்றம் எதிர்ப்புரட்சியின் மையமாகவும் செயலுறுப்பாகவும் ஆகிவிடும்போது, மறுபுறத்தில் தொழிலாளி வர்க்கம் சோவியத்துகளைத் தனது ஆட்சியதிகாரத்துக்கான கருவிகளாக உருவாக்கிக் கொள்ளும்போது, பாராளுமன்றச் செயலில் பங்கு கொள்வதை முற்றுகவும் முழுவதாகவும் கைவிடுவது அவசியமாகவும்கூட ஆகிவிடலாம்.''

முதலாவது வாக்கியம் தவறென்பது தெளிவாக விளங்குகிறது. ஏனெனில் வெகுஜனங்களது செயல்—உதாரணமாய் ஒரு பெரிய வேலைநிறுத்தம்—புரட்சியின்போதோ, புரட்சிகர நிலையிலோ மட்டுமின்றி, எல்லாக் காலங்களிலுமே பாராளுமன்றச் செயற்பாட்டைவிட மிகவும் முக்கியமானதாகும்.

வரலாற்று வழியிலும் அரசியல் வழியிலும் தவருன, ஏற்கப் பட முடியாத அபத்தமான இந்த வாதம், சட்டபூர்வமான போராட்டத்தையும் சட்டவிரோதமான போராட்டத்தையும் இணைத்திடுவதன் முக்கியத்துவம் குறித்த பொதுவான ஐரோப்பிய அனுபவத்தையும் (1848, 1870ஆம் ஆண்டுப் புரட்சிகளுக்கு முந்திய பிரெஞ்சு அனுபவம், 1878-90ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் அனுபவம் முதலியவை) ருஷ்ய அனுபவத்தையும் (மேலே பார்க்கவும்) இவ்வாசிரியர்கள் அறவே உதாசீனம் செய்கிருர்கள் என்பதைத்தான் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இப்பிரச்சினை பொதுவாகவும் குறிப்பாகவும் அளவுகடந்த முக்கியத்துவமுடையதாகும். ஏனெனில் நாகரிக வளர்ச்சியுடைய முன்னேறிய நாடுகள் யாவற்றிலும் இது போல இணைத்திடுதல் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்கு மேலும் மேலும் கடமையாகிவிடும் காலம்-ஏற்கனவே ஓரளவுக்கு இது கடமையாகிவிட்டதென்றும் கூறலாம்—விரைவாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் உள்நாட்டுப் போர் முதிர்ச்சியடைந்து நிகழ்ச்சி நிரலுக்குரியதாகி வருவதாலும் பொதுவாகச் சட்ட முறையைத் துச்சமாக மதித்து எல்லா வழிகளிலும் அதனை மீறிடும் குடியரசு சர்க்கார்களும் முதலாளித்துவ சர்க்கார்களும் கம்யூனிஸ்டுகள்மீது வெறித்தனமான அடக்குமுறையை ஏவிவிடுவதாலும் (அமெரிக்காவின் உதாரணம் இதனைத் துலாம்பரமாக்கிறது) இன்ன பிறவற்ருலும் இந்நிலைமை ஏற்பட்டு வருகிறது. மிகவும் முக்கியமான இந்தப் பிரச்சினையை டச்சு-இடதுசாரிகளும், பொதுவாக எல்லா இடதுசாரிகளும் உணர முற்றிலும் தவறிவிட்டனர்.

இரண்டாவது வாக்கியம், முதலாவதாக, வரலாற்று வழியில் தவருனது. போல்ஷிவிக்குகளான நாங்கள் படுமோசமான எதிர்ப்புரட்சிப் பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொண்டோம். இவ்வாறு பங்குகொண்டதானது, ருஷ்யாவில் முதலாவது முதலாளித்துவப் புரட்சிக்கு (1905) பிறகு, இரண்டாவது முதலாளித்துவப் புரட்சிக்கும் (பிப்ரவரி 1917) பிற்பாடு சோஷலிசப் புரட்சிக்கும் (அக்டோபர் 1917) பாதையைச் செப்பனிடுவதற்குப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குப் பயனுள்ளதாக இருந்ததுடன்

கூட, அத்தியாவசியமாகவும் இருந்ததென்பதை அனுபவம் தெளிவுபடுத்தியிருக்கிறது. இரண்டாவதாக, இவ்வாக்கியம் வியக்கத்தக்கவாறு முன்னுக்குப்பின் முரணுயிருக்கிறது. பாராளு மன்றம் எதிர்ப்புரட்சியின் செயலுறுப்பாகவும் ''மைய மாகவும்'' ஆகிவிடுமானுல் (உண்மையில் அது ''மையமாக'' இருந்ததே இல்லே, எந்நாளும் இருக்கவும் முடியாது—ஆனுல் இது வேறு விவகாரம்), அதேபோதில் தொழிலாளர்கள் தமது ஆட்சியதிகாரத்தின் கருவிகளே சோவியத்துகளின் வடிவில் உருவாக்கிக் கொள்வார்களானுல், பிறகு பாராளு மன்றத்துக்கு எதிரான சோவியத்துகளின் போராட்டத்துக்கு, சோவியத்துகளால் பாராளுமன்றம் கலேக்கப்படுவதற்குத் தொழிலாளர்கள் சித்தாந்த வழியிலும் அரசியல் வழியிலும் செயல்நுட்ப வழியிலும் தயார் செய்ய வேண்டுமென்பதே இதிலிருந்து பெறப்படும் முடிவு. ஆனுல் எதிர்ப்புரட்சிப் பாராளுமன்றத்தின் உள்ளே சோவியத் எதிர்த்தரப்பு ஒன்று இருப்பதானது இந்தக் கலேப்புக்கு இடையூருகிவிடுமென்ருே, அனுசரணேயாக இருக்காதென்ருே இதிலிருந்து எவ்வகை யிலும் பெறப்படவில்லே. தெனீக்கினுக்கும் கல்ச்சாக்குக்கும் எதிரான எங்களது வெற்றிகரமான போராட்டத்தின்போது, அவர்களுடைய முகாமில் இருந்த சோவியத், பாட்டாளி வர்க்க எதிர்த்தரப்பு எங்களது வெற்றிகளுக்குப் பயனற்றதா யிருக்க நாங்கள் காணவில்லேயே. கலேக்கப்படும் தருவாயி லிருந்த எதிர்ப்புரட்சி அரசியல் நிர்ணய சபையினுள் முர ணற்ற போல்ஷிவிக் சோவியத் எதிர்த்தரப்பும் மற்றும் முர ணுடைய இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் சோவியத் எதிர்த்தரப்பு ஒன்றும் இருந்ததானது 1918 ஜன வரி 5ல் இந்த அரசியல் நிர்ணய சபை கலேக்கப்படுவதற்குத் தடங்கலாகிவிடவில்லே, அதற்குப் பதில் அனுகூலமாகவே இருந்தது என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த விரி வுரைகளின் ஆசிரியர்கள் சிந்தனேயைக் குழப்படி செய்வதில் ஈடுபட்டிருக்கிருர்கள். எல்லாப் புரட்சிகளின் அனுபவத்தை இல்லாவிட்டாலும், மிகப் பல புரட்சிகளின் அனுபவத்தை இவர்கள் மறந்துவிட்டனர். புரட்சியின்போது, பிற்போக்குப் பாராளுமன்றத்துக்கு வெளியே நடைபெறும் வெகுஜன நடவடிக்கைகள், பாராளுமன்றத்தினுள் செயல்படும் புரட்சி அனுதாபங்கொண்ட (நேரடியாகப் புரட்சியை ஆதரிப்

பதாய் இருப்பின் இன்னும் நல்லதே) ஓர் எதிர்த்தரப்புடன் இணைக்கப்படுவதானது பெரும் பயன் தரத் தக்கதென்பதே இப்புரட்சிகளின் அனுபவமாகும். டச்சு ''இடதுசாரிகளும்'' பொதுவாகவே எல்லா ''இடதுசாரிகளும்'' மெய்யான புரட்சி ஒன்றில் ஒருபோதும் பங்குகொள்ளாத, அல்லது புரட்சிகளின் வரலாறு குறித்து சிந்தனையே செய்திராத, அல்லது பிற்போக்கு அமைப்பு ஒன்றின் அகநிலை ''நிராகரிப்பைப்'' பல புறநிலைக் காரணக் கூறுகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் நடைமுறையில் ஒழிக்கப்படுவதற்குச் சமமானதாகச் சிறுபிள்ளைத்தனமாய்த் தவறாக நினைத்துக் கொள்ளும் புரட்சியின் வறட்டுச் சூத்திரவாதிகளைப் போல் இவ்விவகாரத்தில் வாதாடுகிறார்கள். ஒரு புதிய அரசியல் கருத்தை (அரசியல் கருத்தல்லாத பிற கருத்துக்களுக்கும் இது பொருந்தக் கூடியதே) இழிவுபடுத்துவதற்கும் கெடுப்பதற்குமான நிச்சயமான வழி என்னவெனில், அதை ஆதரித்து வாதாடுவதாகக் கூறிக் கொண்டு அதனை அபத்தமாகும்படிச் சிறுமைப்படுத்துவதுதான். எந்த உண்மையும் (திட்ஸ்கென் சீனியர் குறிப்பிட்டது போல) ''அளவுமீறி விரிக்கப்பட்டால்'' மிகைப்படுத்தப்பட்டால், அல்லது அதன் மெய்யான பயன்பாட்டுக்குரிய வரம்புகளுக்கு அப்பால் எடுத்துச் செல்லப்பட்டால் அபத்தமாய்ச் சிறுமையுற நேரும்; இந்நிலைமைகளில் அது கட்டாயம் அபத்தமாகியே தீருமென்றுகூடச் சொல்லலாம். ஆட்சியதிகாரத்தின் சோவியத் வடிவம் முதலாளித்துவ-ஜனநாயகப் பாராளுமன்றங்களைக் காட்டிலும் மேலானதென்ற புதிய உண்மைக்கு டச்சு, ஜெர்மன் இடதுசாரிகள் இவ்வாறேதான் தீங்கிழைக்கின்றனர். முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் பங்கு கொள்வதை எந்நிலைமையிலும் எல்லா நிலைமைகளிலும் நிராகரிக்கலாகாது என்ற காலத்துக்கு ஒவ்வாத கருத்தை யாராவது உரைத்தால், அல்லது இவ்வாறு நிராகரிப்பதைப் பொதுவாகவே அனுமதிக்கலாகாதென யாராவது கருதினால், அது தவறே ஆகுமென்பதில் சந்தேகமில்லை. பகிஷ்காரம் பயனுள்ளதாயிருக்கும் நிலைமைகளை வரையறுக்க இங்கு நான் முயற்சிப்பதற்கில்லை. ஏனெனில் இந்தக் கட்டுரையின் நோக்கம் அவ்வளவு விரிவானதல்ல; அதாவது, சர்வதேசியக் கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரம் பற்றிய குறிப்பிட்ட இந்நாளையப் பிரச்சினைகள் சிலவற்

றில் ருஷ்ய அனுபவத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ருஷ்ய அனுபவமானது போல்ஷிவிக்குகள் பகிஷ் காரத்தைப் பயன்படுத்தியதில் வெற்றிகரமான பிழையற்ற ஓர் உதாரணத்தையும் (1905), தவருன மற்ருேர் உதாரணத் தையும் (1906) நமக்கு அளித்திருக்கிறது.[61] முதலாவது உதாரணத்தைப் பகுத்தாராய்வோமாயின், பாராளுமன்றத் துக்கு வெளியே நடைபெற்ற புரட்சிகர வெகுஜன நடவடிக் கைகள்(குறிப்பாக வேலைநிறுத்தங்கள்)மிக வேகமாய் வளர்ச்சி யுற்று வந்த ஒரு நிலைமையில், பாட்டாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் சேர்ந்த எந்தவொரு பகுதியும் பிற் போக்கு ஆட்சி முறைக்கு எவ்வழியிலும் ஆதரவளிக்க முடி யாத நிலைமையில், வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலமாக வும் விவசாயி இயக்கத்தின் மூலமாகவும் புரட்சிகரப் பாட் டாளி வர்க்கம் பிற்பட்ட வெகுஜனங்கள்மீது செல்வாக்கு பெற்று வந்த நிலைமையில், பிற்போக்குச் சர்க்கார் பிற்போக் குப் பாராளுமன்றம் ஒன்றைக் கூட்டுவதைத் தடுப்பதில் நாங்கள் வெற்றி பெற்ருேம் என்பதைக் காண்கிருேம். இன்றைய ஐரோப்பிய நிலைமைகளில் இந்த அனுபவம் அனு சரிக்கப்படத்தக்கதல்ல என்பது தெளிவாக விளங்குகிறது. இதே போல, டச்சு ''இடதுசாரிகளும்'' பிற ''இடதுசாரி களும்'' பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்ள மறுப் பதை ஆதரித்து வாதாடுவதானது—சில நிபந்தனைகளுடன் தான் என்ருலுங்கூட—அடிப்படையான முறையில் தவருகும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்குக் குந்தகமானதாகும் என்பதும் தெளிவாக விளங்குகிறது.

மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படைக்குப் பாராளு மன்றம் மிகவும் வெறுக்கத்தக்கதாகிவிட்டது. இதனை மறுக்க முடியாது. இது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனெனில் யுத்தத்தின்போதும் யுத்தத்துக்குப் பிற்பாடும் மிகப் பெரும்பாலான சோஷலிஸ்டு, சமூக-ஜனநாயகப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் நடத்தையைக் காட்டிலும் அருவருக்கத்தக்கதையோ, இழிவானதையோ, துரோகமான தையோ கற்பனை செய்வதே கடினமாகும். ஆயினும் பொது வாக ஏற்றுக் கொள்ளப்படும் இந்தத் தீங்கினை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பதைத் தீர்மானிக்கையில், இந்த

மனப்பான்மைக்கு அடிபணிவது நியாயமல்ல என்பதுடன், உண்மையில் ஒரு பெருங் குற்றமுமாகும். மேற்கு ஐரோப் பாவில் பல நாடுகளில் தற்பொழுது புரட்சிகர மனப்பான்மை யானது ''காணுத புதுமை'' அல்லது ''அரிதினும் அரிது'' என்பதாகவே கூற வேண்டியிருக்கிறது. மிக நீண்ட கால மாய் அடங்காத ஆவலோடு, ஆனுல் பயனின்றி இது எதிர் பார்க்கப்பட்டு வந்துள்ளது. இதனுல்தான் போலும் பலரும் எளிதில் இந்த மனப்பான்மைக்கு அடிபணிந்துவிடுகிருர்கள். வெகுஜனங்களிடையே புரட்சிகர மனப்பான்மை இல்லாமல், இந்த மனப்பான்மை வளர்வதற்கு அனுசரணையான நிலை மைகள் இல்லாமல், புரட்சிகரப் போர்த்தந்திரம் ஒருநாளும் செயல் நிலைக்கு வளர்ச்சியுற முடியாது என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனுல் ருஷ்யாவில் நீண்டநெடிய கொடிய அனுபவமானது, புரட்சிகரப் போர்த்தந்திரத்தைப் புரட்சி கர மனப்பான்மையின் அடிப்படையில் மட்டும் உருவாக்கி விட முடியாதென்ற உண்மையை எங்களுக்குப் போதித்துள் ளது. குறிப்பிட்ட அரசிலும் (அதனைச் சுற்றிலுமுள்ள அரசு களிலும் மற்றும் உலகெங்குமுள்ள அரசுகளிலும்) இருக்கும் வர்க்க சக்திகள் யாவற்றையும், மற்றும் புரட்சி இயக்கங் களது அனுபவத்தையும் பற்றிய நிதானமான முற்றிலும் புறநிலை நோக்குடன்கூடிய மதிப்பீட்டையே போர்த்தந் திரம் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பாராளு மன்ற சந்தர்ப்பவாதத்தைத் தூற்றுவதால் மட்டுமோ, பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதை நிராகரிப் பதால் மட்டுமோ ஒருவர் தமது''புரட்சிகர'' மனுேபாவத்தை வெளிப்படுத்திக் கொண்டுவிடுவது மிகமிகச் சுலபம். ஆனுல் இந்தச் சுலபத்தின் காரணமாய், இது கடினமான, மிகமிகக் கடினமான ஒரு பிரச்சினைக்குரிய தீர்வாகிவிடுவ தில்லை. ஐரோப்பியப் பாராளுமன்றம் ஒன்றில் மெய்யாகவே புரட்சிகரமான பாராளுமன்றக் குழுவினைத் தோற்றுவிப்பது ருஷ்யாவில் இருந்ததைக் காட்டிலும் மிகமிகக் கடினமாகும். இது புரிந்து கொள்ளக் கூடியதே. இருந்தபோதிலும் இது, 1917ல் நிலவிய பிரத்தியேகமானதும் வரலாற்று வழியில் மிகவும் விசேஷமானதுமான நிலைமையில் சோஷலிசப் புரட் சியைத் தொடங்குவது ருஷ்யாவுக்குச் சுலபமாயிருந்ததென்ற பொதுவான உண்மையின் குறிப்பிட்டதொரு வெளியீடே

ஆகும். ஆனால் இந்தப் புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வதும், அதனை நிறைவுறச் செய்வதும் ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ருஷ்யாவுக்கு மிகவும் கடினமானதாகும். 1918ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே இதனை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எங்களுடைய கடந்த இரு ஆண்டு அனுபவம் இக்கருத்து முற்றிலும் சரியே என்பதை பூரணமாக மெய்ப்பித்திருக்கிறது. குறிப்பிட்ட சில பிரத்தியேக நிலைமைகள், அதாவது (1) சோவியத் புரட்சியை, தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சொல்லொணு அளவுக்குக் கசக்கிப் பிழிந்து வருத்திய ஏகாதிபத்திய யுத்தத்துக்கு இப்புரட்சியின் விளைவாய் முடிவு கட்டுவதுடன் இணைத்திடுவதற்கிருந்த சாத்தியப்பாடு; (2) தமது சோவியத் பகைவனை எதிர்த்து ஒன்றுபட முடியாதிருந்த ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களாலான உலகின் மிகவும் சக்தி வாய்ந்த இரு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட ஜீவமரண மோதலைத் தற்காலிகமாய்ப் பயன்படுத்தி அனுகூலமடைவதற்கிருந்த சாத்தியப்பாடு; (3) ஒப்பளவில் மிக நீண்ட உள்நாட்டு யுத்தத்தை ஓரளவு நாட்டின் பிரம்மாண்டப் பரப்பு காரணமாகவும் போக்குவரத்துச் சாதனங்கள் மோசமாயிருந்ததன் காரணமாகவும் சகித்துக் கொள்வதற்கிருந்த சாத்தியப்பாடு; (4) விவசாயிகளிடையே மிகவும் தீர்க்கமான முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி இயக்கம் அலைமோதிய காரணத்தால், பாட்டாளி வர்க்கத்தின் கட்சி விவசாயிகளின் கட்சியினுடைய (அதாவது பெரும்பாலான உறுப்பினர்கள் போல்ஷிவிசத்தின்பால் முற்றிலும் பகைமை கொண்டிருந்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினுடைய) புரட்சிகரக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதும், பாட்டாளிவர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தை வென்று கொண்டதன் விளைவாய் இக்கோரிக்கைகளை உடனே பூர்த்தி செய்வதும் சாத்தியமாகிவிட்ட ஒரு நிலைமை[62] —ஆகிய இந்தப் பிரத்தியேக நிலைமைகள் யாவும் தற்போது மேற்கு ஐரோப்பாவில் இருக்கவில்லை; இந்த, அல்லது இவற்றையொத்த நிலைமைகள் அவ்வளவு சுலபமாய் ஏற்பட்டுவிடப் போவதுமில்லை. இதனால்தான்—இதர பல காரணங்களுடனும்கூட—சோஷலிசப் புரட்சியைத் துவக்குவது எங்களைக் காட்டிலும் மேற்கு ஐரோப்பாவுக்கு அதிகக் கடினமாயிருக்கிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம்.

பிற்போக்குப் பாராளுமன்றங்களைப் புரட்சிகர நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் கடுமையான பணியைத் ''தட்டிக்கழிப்பதன்'' மூலம் இந்தக் கடின நிலைமையைச் சமாளிக்க முயலுவதானது முற்றிலும் சிறுபிள்ளைத்தனமானதே ஆகும். நீங்கள் ஒரு புதிய சமுதாயம் சமைக்க விரும்புகிறீர்கள், ஆயினும் திடநம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட வீரமிக்க கம்யூனிஸ்டுகளாலான சிறந்த பாராளுமன்றக் குழு ஒன்றினைப் பிற்போக்குப் பாராளுமன்றத்தில் நிறுவிக் கொள்வதிலுள்ள சிரமங்களைப் கண்டு அஞ்சுகிறீர்கள்! இது சிறுபிள்ளைத்தனமானதல்லவா? ஜெர்மனியில் கார்ல் லீப்க்னெஹ்டும் ஸ்வீடனில் ஹோக்லண்டும் அடியிலிருந்து வெகுஜன ஆதரவு இல்லாமலேயே, பிற்போக்குப் பாராளுமன்றத்தை மெய்யாகவே புரட்சிகரமாய்ப் பயன்படுத்திக் கொள்வதில் முன்னுதாரணமாய்த் திகழ முடிந்ததெனில், விரைவாக வளர்ந்து வரும் புரட்சிகர வெகுஜனக் கட்சி ஒன்று யுத்தப் பிற்காலத்தில் வெகுஜனங்களிடையே பிரமைகள் நீங்கிக் கசப்புணர்ச்சி மேலோங்கியிருக்கும் நிலைமையில் படுமோசமான பாராளுமன்றங்களாயினும் அவற்றிலும் கம்யூனிஸ்டுக் குழு ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியாமற் போவானேன்?! தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதிகளும் இன்னும் அதிகமாய்ச் சிறு விவசாயிகளின் பகுதிகளும் ருஷ்யாவில் இருந்ததைவிட மேற்கு ஐரோப்பாவில் மேலும் கூடுதலாய் முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களிலும் பாராளுமன்றவாதத் தப்பெண்ணங்களிலும் ஊறியிருக்கிறார்கள் என்பதே இதற்குக் காரணம். இதனால் முதலாளித்துவப் பாராளுமன்றங்களைப் போன்ற அமைப்புகளினுள்தான் கம்யூனிஸ்டுகள் எவ்விதமான இடையூறுகளாலும் கலக்கமடையாது இந்தத் தப்பெண்ணங்களை அம்பலம் செய்யவும் களையவும் முறியடிக்கவும், எந்த இடையூறு ஏற்படினும் உறுதி குலையாது இடைவிடாது நீண்ட போராட்டம் நடத்த முடியும், நடத்தவும் வேண்டும்.

ஜெர்மன் ''இடதுசாரிகள்'' தமது கட்சியில் மோசமான ''தலைவர்கள்'' இருப்பது குறித்து புகார் கூறுகிறார்கள்; அவநம்பிக்கைக்கும் சோர்வுக்கும் இடந் தருகிறார்கள்; ''தலைவர்களை'' ''நிலைமறுக்கும்'' நகைக்கத்தக்க நிலையினையுங்கூட வந்தடைகின்றனர். ஆனால் ''தலைவர்களைத்'' தலைமறைவாக

ஒளித்து வைத்துக் கொள்வது அடிக்கடி அவசியமாகிவிடும் நிலைமைகளில் சிறந்த ''தலைவர்களை'', சோதித்து எடுக்கப் பட்ட நம்பகமான, செல்வாக்குடைய ''தலைவர்களை'' உரு வாக்குவது மிகவும் கடினமானதாகிவிடுகிறது. சட்டபூர்வ மான வேலைகளையும் சட்டவிரோதமான வேலைகளையும் ஒன்றிணைத்துக் கொள்ளாமல், வேறு பல வழிகளோடு பாராளு மன்றங்களிலும் ''தலைவர்களைச்'' சோதித்துப் பார்க்காமல் இதிலுள்ள கஷ்டங்களை வெற்றிகரமாய்ச் சமாளிக்க முடி யாது. குற்றவிமர்சனம்—மிகவும் கடுமையான, தாட்சண்ய மற்ற, சமரசத்துக்கு இடமில்லாத குற்றவிமர்சனம்—பாராளு மன்ற முறை அல்லது பாராளுமன்றச் செயற்பாடுகளுக்கு எதிராய் அல்லாமல், பாராளுமன்றத் தேர்தல்களையும் பாராளு மன்ற அரங்கையும் புரட்சிகரமான, கம்யூனிஸ்டு முறை யில் பயன்படுத்திக் கொள்ள முடியாத தலைவர்களுக்கு எதி ராய்—இன்னும் அதிகமாய் இவற்றை இவ்வாறு பயன்படுத்திக் கொள்ள விரும்பாதவர்களுக்கு எதிராய்—திருப்பிவிடப்பட வேண்டும். இத்தகைய குற்றவிமர்சனம்தான்—இதோடுகூட தகுதியற்ற தலைவர்களை நீக்கித் தகுதியுடையோரை அவர்க ளிடத்தில் அமர்த்த வேண்டுமென்பதைக் கூறத் தேவையில்லை— ''தலைவர்களுக்குத்'' தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப் பாளி மக்கள் அனைவருக்கும் லாயக்கானவர்களாக இருக்கும் படிப் போதமளித்துப் பயிற்றுவித்து, அதேபோதில் வெகு ஜனங்களுக்கும் அரசியல் நிலைமையையும் அந்நிலைமையிலிருந்து எழுதும் பல சந்தர்ப்பங்களில் மிகவும் குளறுபடியான, சிக்கலான பணிகளையும் சரிவரப் புரிந்து கொள்ளும்படிப் போதமளித்துப் பயிற்றுவிக்கக் கூடியதான பயனுள்ள செழுமை வாய்ந்த புரட்சிகரச் செயற்பாட்டாய் அமைய முடியும்.*

*1920 ஏப்ரல்-மே மாதங்களில்*
*எழுதப்பட்டது*
*1920 ஜூனில்*
*பிரசுரமாய் வெளிவந்தது*

நூல் திரட்டு,
*தொகுதி 41,*
*பக்கங்கள் 29-49*

---

* இத்தாலியில் இருந்துவரும் ''இடதுசாரி'' கம்யூனி சத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள எனக்குச் சொற்ப அளவு வாய்ப்பே கிடைத்துள்ளது. தோழர் போர்டி

காவும் அவரது ''பகிஷ்காரக் கம்யூனிஸ்டு'' (Comunista astensionista) கோஷ்டியினரும் பாராளுமன்றத்தில் பங்கு கொள்ளலாகாதெனக் கூறி வருவது சரியல்லதான். ஆனால் அவருடைய பத்திரிகையான சோவியத்தின் (*Il Soviet*, 1920, ஜனவரி 18, பிப்ரவரி 1 தேதிகளிட்ட இதழ்கள் 3லும் 4லும்) இரு இதழ்களிலிருந்தும், தோழர் செராட்டியின் சிறந்த வெளியீடான கம்யூனிசத்தின் (*Comunismo*, 1919 அக்டோபர் 1 முதல் நவம்பர் 30 வரையிலான 1 முதல் 4 வரையிலுள்ள இதழ்கள்) நான்கு இதழ்களிலிருந்தும், மற்றும் நான் பார்த்துள்ள இத்தாலிய முதலாளித்துவப் பத்திரிகைகளின் தனித்தனி இதழ்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிந்த வரை, ஒரு விஷயத்தில் தோழர் பொர்டீகாவின் நிலை சரியான தாகவே எனக்குத் தோன்றுகிறது. தோழர் பொர்டீகாவும் அவர் கோஷ்டியினரும் துராட்டியையும் அவர் ஆதரவாளர் களையும் தாக்குவது சரியே. துராட்டியும் அவரைச் சேர்ந் தோரும் சோவியத் ஆட்சியதிகாரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சி யில் இருந்து கொண்டு, அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப் பினர்கள் என்ற முறையில் தமது கேடுகெட்ட பழைய சந் தர்ப்பவாதக் கொள்கையையே தொடர்ந்து பின்பற்றுகிறார் கள். இதற்கு இடம் தருவதன் மூலம் தோழர் செராட்டியும் இத்தாலிய சோஷலிசக் கட்சி அனைத்துமே தவறிழைக்கின்ற னர். இத்தவறால் ஹங்கேரியில் நேர்ந்த அதே அளவு கேடும், அங்கு எழுந்த அதே அபாயங்களும் இத்தாலியிலும் ஏற் படுமென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஹங்கேரிய துராட்டி கள் அங்கு கட்சிக்கும் சோவியத் ஆட்சிக்கும் உள்ளிருந்தே குழி பறித்துவிட்டனர்.[63] சந்தர்ப்பவாதப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாய் அனுசரிக்கப்படும் இத்தகைய தவறான, முரண்பட்ட அல்லது உறுதியற்ற போக்கானது, ஒரு புறத்தில் ''இடது சாரி'' கம்யூனிசத்தைத் தோற்று வித்து, மறுபுறத்தில் அதன் இருப்பை ஓரளவு நியாயமாக்கி விடுகிறது. பாராளுமன்றப் பிரதிநிதி துராட்டி ''முன்பின் முரண்பாடாக நடந்து கொள்வதாகத்'' தோழர் செராட்டி குற்றம் சாட்டுவது (*Comunismo*, இதழ் 3) தவறானதென்பதில் ஐயமில்லை. ஏனெனில் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியே தான் டுராட்டியையும் அவர் ஆட்களையும் போன்ற சந்தர்ப்ப வாதப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் தருவதன் மூலம் முன்பின் முரண்பாடாக நடந்து கொள்கிறது.

# கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசினுடைய அடிப்படைப் பணிகள் குறித்த ஆய்வுரைகள்

1. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தினுடைய வளர்ச்சியின் தற்போதைய கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாய் இருப்பது என்னவெனில், எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த பிரதிநிதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை—அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சோவியத் ஆட்சியதிகாரத்தையும்—பூரணமாய்ப் புரிந்து கொண்டு அளவிலா ஆர்வத்துடன் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு ஆதரவாய் அணிதிரண்டுள்ளனர். இதனிலும் பெரிய, இதனிலும் முக்கியமான முன்னேற்றம் என்னவெனில், எங்கும் மிகவும் விரிவான வெகுஜனங்களிடத்தே, நகரப்புறப் பாட்டாளி வர்க்கத்தாரிடையே மட்டுமின்றி கிராமப்புறத் தொழிலாளர்களது முன்னேறிய பிரிவினரிடையிலும், இந்த அடிப்படைக் கோட்பாடுகளின்பால் திட்டவட்டமான ஆதரவு உருவாகியுள்ளது.

அதிவேகமாய் வளர்ந்து வரும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் மறுபுறத்தில் இரு தவறுகள் அல்லது குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று மிகவும் கடுமையானது, பாட்டாளி வர்க்க விடுதலை இலட்சியத்தின் வெற்றிக்குப் பிரம்மாண்டமான, உடனடியான அபாயம் விளைவிப்பது. இது என்னவெனில் இரண்டாவது அகிலத்தின் பழைய தலைவர்களிலும் பழைய கட்சிகளிலும் ஒரு பகுதியோர்—சிலர் தம்மையும் அறியாமல் வெகுஜனங்களுடைய விருப்பங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் அடிபணிந்தும், வேறு சிலர் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் முதலாளித்துவ வர்க்கத்தாரின்

கையாட்களாகவும் உதவியாளர்களாகவும் தாம் ஆற்றும் பணியைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு வேண்டுமென்றே மனமறிந்து வெகுஜனங்களை ஏமாற்றியும்—மூன்றாவது அகிலத்துடன் நிபந்தனையின் பேரில், ஏன் நிபந்தனை இல்லாமலே சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்துவிட்டு, அதேபோதில் தமது நடைமுறைக் கட்சிப் பணி, அரசியல் பணி அனைத்திலும் உண்மையில் இரண்டாவது அகிலத்தின் நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகின்றனர். இத்தகைய ஒரு நிலைமை இம்மியும் சகிக்க முடியாதது. ஏனெனில் இது வெகுஜனங்களை அப்பட்டமாய்ச் சீர்கேடுறச் செய்கிறது, மூன்றாவது அகிலத்தின் பெயரைக் கெடுக்கிறது, அவசரமாய்த் தம்மைக் கம்யூனிஸ்டுகள் என்பதாய் நாமகரணம் செய்து கொண்ட ஹங்கேரிய சமூக-ஜனநாயகவாதிகள் இழைத்த அதே துரோகச் செயல்கள் திரும்பவும் இழைக்கப்படும்படியான அபாயத்தை உண்டாக்குகிறது. மற்றொரு தவறு என்னவெனில்—இது மிகவும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும், இயக்கத்தின் வளர்ச்சி காரணமாய் எழும் கோளாற்றின் தன்மையதாகும்—''இடதுசாரிவாதத்தை'' நோக்கிச் செல்லும் போக்காகும். இதன் விளைவாய், வர்க்கம் குறித்தும் வெகுஜனங்கள் குறித்தும் கட்சி ஆற்ற வேண்டிய பாத்திரத்தையும் பணிகளையும் மதிப்பிடுவதில் தவறிழைக்கப்படுகிறது, முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலும் பிற்போக்குத் தொழிற் சங்கங்களிலும் வேலை செய்யப் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளுக்குள்ள கடமை குறித்து தவறான போக்கு அனுசரிக்கப்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் தமது இயக்கத்திலுள்ள குறைபாடுகளை மூடிமெழுகாமல், மேலும் விரைவாகவும் அடிப்படையான முறையிலும் சரிசெய்யும் பொருட்டு அவற்றைப் பகிரங்கமாய் விமர்சனம் செய்யக் கடமைப்பட்டவர்கள். இதன் பொருட்டு முதலாவதாக, ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்'', ''சோவியத் ஆட்சியதிகாரம்'' ஆகிய கருத்துக்களின் உள்ளடக்கத்தை முக்கியமாய் ஏற்கனவே கிடைத்திருக்கும் நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில் கூடுமான அளவுக்கு ஸ்தூலமாய் வரையறைப்பது அவசியமாகும்; இரண்டாவதாக, இந்தக் கோஷங்களைச் செயல்படுத்துவதற்காக எல்லா நாடுகளிலும் நடைபெற வேண்டிய உடனடியான, முறை

யான தயாரிப்பு வேலைகளின் துல்லியமான உள்ளடக்கத்தைத் தெளிவாய்க் குறிப்பிடுவது அவசியமாகும்; மூன்றாவதாக, நமது இயக்கத்திலுள்ள தவறுகளைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளைத் தெளிவாய் எடுத்துரைப்பது அவசியமாகும்.

1

## பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், சோவியத் ஆட்சியதிகாரம் இவற்றின் சாராம்சம்

2. முதலாளித்துவத்தின் மீது சோஷலிசம் (கம்யூனிசத்தின் முதற் கட்டமாய்) வெற்றி பெறுவதற்கு, மெய்யாகவே புரட்சிகரமான ஒரேயொரு வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் பின்வரும் மூன்று கடமைகளை நிறைவேற்றுவது அவசியமாகும். முதலாவதாக — சுரண்டலாளர்களை, முக்கியமாகவும் முதலாவதாகவும் அவர்களது பிரதான பொருளாதார, அரசியல் பிரதிநிதியாகிய முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திடல்; அவர்களை அடியோடு முறியடித்தல்; அவர்களுடைய எதிர்ப்பை நசுக்குதல்; மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் கூலியடிமை முறையையும் திரும்பவும் நிலைநாட்டுவதற்கான அவர்களது எந்த முயற்சிக்கும் இடமில்லாதவாறு செய்தல். இரண்டாவதாக —பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் அல்லது அதில் மிகப் பெரும்பான்மையை மட்டுமின்றி, உழைப்போரும் மூலதனத்தால் சுரண்டப்படுவோருமானவர்கள் எல்லோரையும் வென்று ஈர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படையான கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின்கீழ் கொண்டுவருதல்; சுரண்டலாளர்களுக்கு எதிரான அரும் பெரும் துணிவும் தயவு தாட்சண்யமற்ற உறுதியும் கொண்ட போராட்டத்தின் மெய் நடைமுறையின் மூலம் அவர்களுக்கு அறிவூட்டி, ஒழுங்கமையச் செய்து, பயிற்சியும் கட்டுப்பாடும் பெறச் செய்தல்; முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் மக்கள் தொகையின் இந்த மிகப் பெரும்பான்மையை முதலாளித்துவ வர்க்கத்தைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து பிய்த்துக்கொண்டுவரச் செய்தல்; அதற்கு அதன் சொந்த நடைமுறை அனுபவத்தின் வாயிலாய்ப் பாட்டாளி வர்க்கத்தின்,

இவ்வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படையின் தலைமைப் பாத்திரத்தில் நம்பிக்கை ஏற்படச் செய்தல். மூன்றுவதாக —விவசாயத்திலும் தொழில் துறையிலும் வர்த்தகத்திலும் இருக்கும் சிறு உடைமையாளர்களது வர்க்கத்திலும்—மக்கள் தொகையில் சிறுபான்மையே என்ற போதிலும் முன்னேறிய நாடுகளில் அனேகமாய் யாவற்றிலும் இன்னமும் எண்ணிக் கையில் ஓரளவு அதிகமாகவே இருந்து வரும் ஒரு வர்க்கம் இது—மற்றும் இந்த வர்க்கத்துடன் இயைந்து உடன் படும் அறிவுத்துறையினர், அலுவலக ஊழியர்கள் ஆகியோ ராலான பகுதியிலும் காணக்கூடிய தவிர்க்க முடியாத ஊச லாட்டத்தை, முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலும், முதலாளித்துவ ஜனநாயகத் துக்கும் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் இடையிலும் அலைவுறும் இந்த ஊசலாட்டத்தை நடுநிலைப்படுத்துதல் அல்லது தீங்கற்றதாக்குதல்.

முதலாவது, இரண்டாவது கடமைகள் ஒன்றையொன்று சாராதவை, முறையே சுரண்டலாளர்கள் குறித்தும் சுரண்டப் படுவோர் குறித்தும் அவையவற்றுக்கும் தனிவகைச் செயல் முறைகள் தேவைப்படுகிறவை. மூன்றுவது கடமை முதல் இரண்டிலுமிருந்தும் பெறப்படுவது. இதற்குத் தேவைப்படு வதெல்லாம் செயல் முறைகளை ஊசலாட்டத்தின் தனிப்பட்ட ஒவ்வொரு உதாரணத்துக்குமுரிய பிரத்தியேக நிலைமை களுக்கு ஏற்ப முதலாவது, இரண்டாவது செயல் முறைகளை நெகிழ்வாகவும் திறம்படவும் தக்க தருணத்திலும் இணைத் திடுவதுதான்.

3. இராணுவவாதத்தாலும், ஏகாதிபத்தியத்தாலும், காலனிகள், பலவீன நாடுகள்மீதான ஒடுக்குமுறையாலும், உலகு தழுவிய ஏகாதிபத்தியக் கொலைத் தாண்டவத்தாலும், வெர்சேய் ''சமாதானத்தாலும்'',[64] அனைத்து உலகிலும் யாவற்றுக்கும் முதலாய் மிக முன்னேறிய, சக்திமிக்க, அறி வொளி படைத்த, சுதந்திர முதலாளித்துவ நாடுகளிலும் ஏற்படுத்தியிருக்கும் ஸ்தூல நிலைமைகளின் சூழலில், முதலாளி கள் சுரண்டப்படுவோரில் பெரும்பான்மையோரது சித்தத் துக்கு சமாதானமாய்க் கீழ்ப்பட்டுவிடுவார்கள், சமாதான வழியில் சீர்திருத்தவாத முறையில் சோஷலிசத்துக்கு மாறிச் சென்றுவிடலாம் என்பதாய் நினைப்பது அப்பட்ட



11—1061

அற்பவாத மடமை மட்டுமின்றி, தொழிலாளர்களைக் கேவலமாய் ஏமாற்றுவதுமாகும்: முதலாளித்துவக் கூலியடிமை முறையைப் பகட்டாய்ச் சிங்காரித்து உண்மையை மூடி மறைப்பதுமாகும். இந்த உண்மை என்னவெனில் முதலாளித்துவ வர்க்கம், மிகவும் அறிவு வளர்ச்சி பெற்றதும் ஜனநாயகமானதுங்கூட, உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமையைப் பாதுகாக்கும் பொருட்டு எந்த மோசடியில் இறங்கவும் எந்தக் கொலைபாதகச் செயல் புரியவும் தங்குவதில்லை, லட்சக் கணக்கில் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் படுகொலை புரியவுங்கூடத் தயங்குவதில்லை. முதலாளித்துவ வர்க்கத்தைப் பலவந்தமாய் வீழ்த்தி, அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, முதலாளித்துவ அரசு இயந்திரம் அனைத்தையும்—பாராளுமன்ற, நீதி பரிபாலன, இராணுவ, அதிகார வர்க்க, நிர்வாக, ஊராட்சி, இன்ன பலவாறான இந்த இயந்திரம் அனைத்தையும்—அடி மட்டத்திலிருந்து உச்சி முடி வரையில் அழித்தொழிப்பதன் மூலம் மட்டுமே—மிகவும் அபாயகரமான விடாப்பிடியான சுரண்டலாளர்கள் எல்லோரையும் வெளிக்கடத்துவது அல்லது காவலில் வைப்பது, எதிர்த்துப் போராடவும் முதலாளித்துவ அடிமை முறையைத் திரும்பவும் நிலைநாட்டவும் அவர்கள் மேற்கொள்ளும் தவிர்க்க முடியாத முயற்சிகளைத் தடுக்கும் பொருட்டு அவர்கள்மீது கண்டிப்பான கண்காணிப்பு நிறுவுவது வரையிலான இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மட்டுமே—சுரண்டலாளர்களது வர்க்கம் பூராவையும் மெய்யாகவே பணிந்துவிடும்படி உறுதி செய்ய முடியும்.

மறுபுறத்தில், உழைப்போரும் சுரண்டப்படுவோருமானோரில் பெரும்பான்மையோர் முதலாளித்துவ அடிமை நிலையிலேயே, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்திலேயே (குறிப்பிட்ட முதலாளித்துவ நாட்டின் கலாசார வளர்ச்சி நிலை எவ்வளவுக்கு எவ்வளவு உயர்வாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்த ஆதிக்கமும் மேலும் மேலும் நுட்பநயமுடையதான, அதே போதில் மேலும் மேலும் கொடூரமான, ஈவிரக்கமற்ற, எண்ணிலடங்காத வகையிலான வடிவங்களை ஏற்கிறது) சோஷலிச உணர்வில் முழுத் தெளிவும், திடமான சோஷலிசக் கருத்துறுதியும், உயர் பண்பும் கொண்டோராக முடியும் என்கிற கருத்து—இரண்டாவது அகிலத்தைச்

சேர்ந்த பழைய கட்சிகளிலும் பழைய தலைவர்களிடையிலும் மலிந்துள்ள இந்தக் கருத்து — முதலாளித்துவத்தையும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் அதிசிரேஷ்டமானதாய்க் கொள்ளும் கற்பனையாவதோடு, தொழிலாளர்களை ஏய்ப்பதும் ஆகும். உண்மை என்னவெனில், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை புரட்சிகரமான ஒரேயொரு வர்க்கமான இவ்வர்க்கம் அனைத்தின் அல்லது இதன் பெருபான்மையின் ஆதரவோடு சுரண்டலாளர்களை வீழ்த்தி, அவர்களை அடக்கி, சுரண்டப்படுவோரை அடிமை நிலையிலிருந்து விடுவித்து அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை உடைமை நீக்கம் செய்யப்பட்ட முதலாளிகளுடைய செலவில் உடனடியாக மேம்படச் செய்த பிற்பாடும், கடுமையான வர்க்கப் போராட்டத்தின் மெய் நடப்பின் போதும்தான், உழைப்பாளரும் சுரண்டப் படுவோருமான பெருந் திரள் மக்களைக் கல்வி போதமும் பயிற்சியும் பெற வைத்துப் பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றிலும் ஒன்றுதிரளும்படி ஒழுங்கமைத்திட முடியும்; பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கிலும் வழிகாட்டலிலும் அவர்கள் தனியார் சொத்துடைமையால் ஊக்குவித்து வளர்க்கப்பட்ட சுயநல மனப்பான்மையையும் ஒற்றுமையின்மையையும் கேடுகளையும் பலவீனங்களையும் விட்டொழிக்க முடியும்; அதன் பிறகே அவர்கள் சுதந்திரத் தொழிலாளர்களது சுதந்திர ஐக்கியமாய் மாற முடியும்.

4. முதலாளித்துவத்தின்மீது வெற்றி பெறுவதற்கு, தலைமை தாங்கும் (கம்யூனிஸ்டுக்) கட்சிக்கும் புரட்சிகர வர்க்கத்துக்கும் (பாட்டாளி வர்க்கம்) வெகுஜனங்களுக்கும், அதாவது உழைப்போரும் சுரண்டப்படுவோருமானோரின் முழுத் தொகுதிக்கும் இடையே ஒழுங்கான உறவுகள் இருப்பது அவசியமாகும். கம்யூனிஸ்டுக் கட்சி மட்டும்தான், மெய்யாகவே அது புரட்சிகர வர்க்கத்தின் முன்னணிப் படையாய் இருக்குமாயின், அந்த வர்க்கத்தின் தலைசிறந்த பிரதிநிதிகள் அனைவரையும் மெய்யாகவே அது தன்னுள் கொண்டிருக்குமாயின், விடாப்பிடியான புரட்சிப் போராட்டத்தின் அனுபவத்தால் போதமூட்டப் பெற்று உருக்கு உறுதி கொண்டிருக்கும் முழு உணர்வுடைய வைராக்கியமிக்க கம்யூனிஸ்டுகளாலான கட்சியாய் அது இருக்குமாயின், தன் வர்க்கத்தினுடைய வாழ்க்கை அனைத்துடனும் இந்த வர்க்கத்தின்

மூலம் பெருந்திரளான சுரண்டப்படுவோர் அனைவருடனும் பிரிக்க முடியாதவாறு தன்னை இணைத்துக் கொள்வதிலும் இந்த வர்க்கத்தின் நம்பிக்கைக்கும் இந்தப் பெருந்திரளின் நம்பிக்கைக்கும் பாத்திரமாவதிலும் அது வெற்றி பெறுமாயின்—இத்தகைய கட்சி மட்டும்தான் முதலாளித்துவத்தின் எல்லா சக்திகளுக்கும் எதிரான ஈவிரக்கமில்லாத் தீர்மானகரமான இறுதிப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வல்லது. மறுபுறத்தில், இத்தகைய ஒரு கட்சியின் தலைமையின் கீழ்தான் பாட்டாளி வர்க்கம் தனது புரட்சித் தாக்குதலின் முழு வலிமையையும் வெளிப்படுத்திக் காட்ட முடியும்; முதலாளித்துவத்தால் ஒழுக்கம் கெடுக்கப்பட்ட மிகச் சிறுபான்மையான தொழிலாளர் பிரபுக்குலத்தோர், பழைய தொழிற் சங்க, கூட்டுறவுத் தலைவர்கள் இன்ன பிறரது தவிர்க்க முடியாத அக்கறையின்மையையும் இடையிடையிலான எதிர்ப்பையும் சமாளித்துச் செயல்பட முடியும். அப்பொழுதுதான் அது தனது முழு வலிமையையும் வெளிப்படுத்திக் காட்டும் திறனுடையதாகிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் காரணத்தால், பாட்டாளி வர்க்கத்தின் வலிமை மக்கள் தொகையில் இவ்வர்க்கத்துக்குள்ள வீதாசாரத்தைக் காட்டிலும் அனந்தம் மடங்கு கூடுதலாகிவிடுகிறது. இறுதியாக, வெகுஜனங்கள், அதாவது உழைப்போரும் சுரண்டப்படுவோருமான முழுத் திரளினர் முதலாளித்துவ வர்க்கத்தாரின், முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் ஆதிக்கத்திலிருந்து மெய்யாகவே விடுவிக்கப்பட்ட பிறகுதான், தமது சோவியத்துகளில் மெய்யாகவே சுதந்திரமான (சுரண்டலாளர்களிடமிருந்து சுதந்திரமான) முறையில் ஒழுங்கமைவதற்கு வாய்ப்பு பெற்ற பிறகுதான், அவர்களால் இதுகாறும் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு வந்த கோடானு கோடியானோரின் முழு முன்முயற்சியையும் ஆற்றலையும் வரலாற்றிலே முதன்முதலாய் வெளிப்படுத்த முடிகிறது. சோவியத்துகள் ஏக அரசு இயந்திரமாகிவிடும் போது மட்டும்தான் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினர் அனைவரும் நிர்வாகப் பணியில் பங்கு பெறும்படி மெய்யாகவே உறுதி செய்ய முடிகிறது. அறிவு வளர்ச்சி பெற்ற மிகச் சுதந்திரமான முதலாளித்துவ ஜனநாயகத்திலுங்கூட இம்

மக்கள் திரளினரில்[99] சதவீதத்தவர் எப்பொழுதும் நிர்வாகப் பணியிலிருந்து நடைமுறையில் ஒதுக்கப்பட்டு வந்தவர்களாவர். சுரண்டப்படும் வெகுஜனங்கள் சோவியத்துகளில் மட்டும்தான் சோஷலிச நிர்மாணப் பணியையும் புதிய சமுதாயக் கட்டுப்பாட்டையும் சுதந்திரத் தொழிலாளர்களது சுதந்திர ஐக்கியத்தையும் படைப்பிக்கவும் மெய்யாகவே கற்றுக் கொள்ள—புத்தகங்களிலிருந்து அல்ல, தமது சொந்த நடைமுறை அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ள—தலைப்படுகிறார்கள்.

## 2

## பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய உடனடியான சர்வவியாபகமான தயாரிப்பு என்னவாய் இருக்க வேண்டும்

5. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தினுடைய வளர்ச்சியின் தற்போதைய கட்டத்தில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் மிகப் பெருவாரியான முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கம் தனது சர்வாதிகாரத்தைச் சாதிப்பதற்கான தயாரிப்புகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன் பல சந்தர்ப்பங்களில் முறையாய்த் துவக்கப்படக்கூடவில்லை. ஆனால் இதிலிருந்து பெறப்படும் முடிவு உடனடியான வருங்காலத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சாத்தியமன்று என்பதல்ல. இது முற்றிலும் சாத்தியமே. ஏனெனில் பொருளாதார, அரசியல் சூழ்நிலை அனைத்தும் தீ பிடித்து எரிகிற நிலையிலேதான், திடீரெனக் கிளர்ந்தெழுவதற்கான காரணங்கள் நிரம்பியதாகவே இருக்கிறது; பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலையை அன்னியில் புரட்சிக்குரிய மற்றொரு நிபந்தனையும், அதாவது, எல்லா ஆளும் கட்சிகளிலும் எல்லா முதலாளித்துவக் கட்சிகளிலும் பொதுவான நெருக்கடி நிலை இருக்க வேண்டுமென்னும் நிபந்தனையும் இருந்து வருகிறது. ஆயினும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய நடப்பு வேலை பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலையை மும்முரமாக்குவதே அன்றி புரட்சியைத் துரிதப்படுத்துவது அல்ல என்பதாய் இதிலிருந்து பெறப்பட்டுவிடவில்லை. மாறாக, பல சோஷலிஸ்டுக் கட்சிகளின் வரலாற்றிலிருந்து மேலே தரப்பட்ட உண்மைகள், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய ''அங்கீ

காரம்'' வெறும் சொல்லளவில் நின்றுவிடாதபடிப் பார்த்துக் கொள்வது நமது கடமையாகும் என்பதை வற்புறுத்து கின்றன.

ஆகவே, சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் கண்ணோட்டத்தில் தற்போதைய தருணத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய தலையாயப் பணி, அரசியல் ஆட்சியதிகாரம் —அதுவும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் வடிவி லான அரசியல் ஆட்சியதிகாரம்—வெல்வதற்காகப் பாட் டாளி வர்க்கத்தைத் தயார் செய்யும் வேலையைப் பத்து மடங்காய் மும்முரமாக்கும் பொருட்டு, சிதறுண்டு கிடக்கும் கம்யூனிஸ்டு சக்திகளை ஒன்றுபடுத்தி ஒவ்வொரு நாட்டிலும் ஒரேயொரு கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்திடுவதுதான் (அல்லது, ஏற்கனவே இருக்கும் கட்சியைப் புதுபலம் அல்லது புத்தாக்கம் பெறச் செய்வதுதான்). பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அங்கீகரிக்கும் கோஷ்டிகளும் கட்சிகளும் செய்து வரும் சாதாரண சோஷலிஸ்டுப் பணி, கம்யூனிஸ்டுப் பணியாகவும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தறுவாயில் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்குப் போது மானதாகவும் கருதப்படுவதற்கு அவசியமான அந்த அடிப் படையான திருத்தத்தை, அந்த அடிப்படையான புத்தாக் கத்தை எவ்வகையிலும் பெற்றுகவில்லை.

6. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வெல் வதால் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான அதன் வர்க்கப் போராட்டம் நின்று விடுவதில்லை. மாறாக, இதனால் அந்தப் போராட்டம் மிகவும் பரவலாகவும் கடுமையாகவும் ஈவிரக்க மற்றதாயும் ஆகிறது. போராட்டம் மிதமிஞ்சிக் கடுமை யாகிவிடுவதால் சீர்திருத்தவாதத்தின், ''மையத்தின்''[65], இன்ன பிறவற்றின் நிலையை முழுமையாகவோ பகுதியள வுக்கோ ஏற்றுக்கொண்ட தொழிலாளிவர்க்க இயக்கத்திலுள்ள கோஷ்டிகள், கட்சிகள் அனைத்தும், தலைவர்கள் எல்லோரும் தவிர்க்க முடியாதவாறு முதலாளித்துவ வர்க்கத்தாரின் பக்கம் சென்றுவிடுகிறார்கள், அல்லது ஊசலாட்டக்காரர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள், அல்லது (யாவற்றிலும் இதுவே மிகவும் அபாயகரமானது) வெற்றிகரப் பாட்டாளி வர்க்கத் தின் நம்பத்தகாத நண்பர்களது அணிவரிசைக்குப் போய் விடுகிறார்கள். ஆதலால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்

துக்கான தயாரிப்பு சீர்திருத்தவாத, ''மையவாதப்'' போக்கு களுக்கு எதிரான போராட்டம் கடுமையாக்கப்பட வேண்டு மெனக் கோருவது மட்டுமின்றி, அந்தப் போராட்டத்தின் தன்மையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்றும் கோருகிறது. இந்தப் போக்குகள் தவறானவை என்பதை விளக்குவதோடு இப்போராட்டம் நின்றுவிடக் கூடாது, இத்தகைய போக்கு களைக் கொண்டிருப்பதாய்த் தெரியும் எந்தத் தொழிலாளி வர்க்க இயக்கத் தலைவரையும் இது சிறிதும் பிறழாதும் ஈவிரக்கமின்றியும் அம்பலம் செய்தாக வேண்டும். இல்லையேல் பாட்டாளி வர்க்கத்தால் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதி ரான தீர்மானகரமான போராட்டத்தினுள் தான் யாருடன் சேர்ந்து நடைபோட வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. இந்தப் போராட்டம் எந்தத் தருணத்திலும் விமர்சனம் என்னும் ஆயுதத்துக்குப் பதிலாய் ஆயுதத்தின் வாயிலான விமர்சனத்தைக் கைக் கொண்டுவிடும்படியான போராட்டமாகிவிடலாம் — அனுபவம் காட்டியிருப்பது போல உண்மையில் அப்படிப்பட்ட போராட்டமாகியும் விடுகிறது. தம்மைச் சீர்திருத்தவாதிகளாகவோ, ''மைய வாதிகளாகவோ'' காட்டிக் கொள்வோரை அம்பலம் செய் வதில் காட்டப்படும் எந்த முரண்பாடும் அல்லது எந்த பல வீனமும் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரம் முதலா ளித்துவ வர்க்கத்தால் கவிழ்க்கப்பட்டுவிடும் அபாயத்தை நேரடியாய் அதிகரிக்கவே செய்கிறது. கிட்டப் பார்வை கொண்டவர்கள் இன்று வெறும் ''தத்துவார்த்த வேறு பாடாய்'' மட்டும் கருதுவதை முதலாளித்துவ வர்க்கம் நாளைக்கு எதிர்ப்புரட்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டுவிடும்.

7. குறிப்பாய் நாம் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலா ளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான எல்லா ஒத்துழைப் பையும், எல்லா ''ஒத்துழைப்புவாதத்தையும்'' கோட்பாட்டு அளவில் வழக்கமான முறையில் நிராகரிப்பதுடன் நின்று விடக் கூடாது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தால் ஒரே அடியில் தனியார் சொத்துடைமையை அறவே ஒழித்துவிட ஒருபோதும் முடியாது. ஆகவே பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரத்தில் உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை ஒழிக்கப்படாது இருக்கையில் ''சுதந்திரத்தின்'', ''சமத்துவத் தின்'' வெறும் பாதுகாப்பு முதலாளித்துவ வர்க்கத்துடனான

''ஒத்துழைப்பாய்'' மாறித் தொழிலாளி வர்க்க ஆட்சிக்குக் குழிபறித்துவிடும். சுரண்டலாளர்கள் அவர்களுடைய ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் தொடர்ந்து நடத்திச் செல்ல ''சுதந்திரமில்லாதிருத்தலையும்'', சொத்தின் உடைமையாளருக்கும் (அதாவது, சமூக உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட குறிப்பிட்ட உற்பத்திச் சாதனங்களை அபகரித்துத் தனதாக்கிக் கொண்டவருக்கும்) உடைமையில்லாதவருக்கும் இடையே ''சமத்துவமின்மையையும்'' நிலைநாட்டி நீடிக்கச் செய்வதற்காக அரசு தனது ஆட்சியதிகாரப் பொறியமைவு அனைத்தையும் உபயோகிக்கிறது என்பதுதான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் அர்த்தம். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு முன்பு ''ஜனநாயகம்'' என்னும் பிரச்சினை பற்றிய தத்துவார்த்த வேறுபாடாய் மட்டுமே தோன்றிய ஒன்று, இந்த வெற்றிக்கு மறு தினமே தவிர்க்க முடியாதவாறு ஆயுத பலத்தைக் கொண்டு முடிவு கட்டப்படும் ஒரு பிரச்சினையாகிவிடுகிறது. எனவே ''மையவாதிகளுக்கும்'' ''ஜனநாயக ஆதரவாளர்களுக்கும்'' எதிரான போராட்டத்தின் தன்மை அனைத்திலும் தீவிர மாற்றமின்றி பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைச் சாதிப்பதற்கு வெகுஜனங்களைத் தயார் செய்வதற்குரிய பூர்வாங்க வேலையுங்கூட சாத்தியமல்ல.

8. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டத்தின் மிகவும் வைராக்கியமான, மிகவும் புரட்சிகரமான வடிவமாகும். பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் புரட்சிகரமான முன்னணிப் படை பாட்டாளி வர்க்கத்தின் மிகப் பெருவாரியானோருக்கு வழிகாட்டி அழைத்துச் சென்றால்தான் இந்தப் போராட்டம் வெற்றி பெற முடியும். ஆகவே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கான தயாரிப்பு கோருவது, உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை ஒழியாதிருக்கும் வரையில் எல்லாச் சீர்திருத்தவாதமும், ஜனநாயகத்தின் எல்லாப் பாதுகாப்பும் முதலாளித்துவ தன்மையனவாகவே இருக்குமென்று விளங்கச் செய்வது மட்டுமல்ல; உண்மையில் தொழிலாளர் இயக்கத்தினுள் முதலாளித்துவ வர்க்கத்தைப் பாதுகாத்து நிற்பதாகிவிடும் இத்தகைய போக்குகளை அம்பலப்படுத்துவது மட்டுமல்ல;

பாட்டாளி வர்க்க நிறுவனங்களில் ஒன்று பாக்கியின்றி எல்லா வகையானவற்றிலும்—அரசியல் நிறுவனங்கள் மட்டுமின்றி தொழிற் சங்க, கூட்டுறவு, கல்வி முதலான எல்லா வகையான வற்றிலும்—பழைய தலைவர்களுக்குப் பதில் கம்யூனிஸ்டு கள் தலைவர்களாக வேண்டுமென்றும் இது கோருகிறது. குறிப்பிட்ட ஒரு நாட்டில் முதலாளித்துவ ஜனநாயகம் எவ் வளவுக்கு எவ்வளவு முழுநிறைவாகவும் நீண்ட காலமாகவும் உறுதியாகவும் நிலைநாட்டப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் முதலாளித்துவ வர்க்கமானது தன்னால் உருவாக்கப்பட்டு தனது கருத்தோட்டங்களிலும் தப்பெண் ணங்களிலும் ஊறிப் போன மனமுடையோரை, நேரடியாக வோ மறைமுகமாகவோ தன்னால் விலைக்கு வாங்கப்பட்டோரை இந்த தலைமையான பதவிகளில் நியமிப்பதில் வெற்றி பெற்றிருக்கும். தொழிலாளர் பிரபுக் குலத்தோரின், முதலா ளித்துவ வர்க்கமயமாக்கப்பட்ட தொழிலாளர்களின் இந்தப் பிரதிநிதிகள் இதுகாறும் செய்யப்பட்டதைக் காட்டிலும் நூறு மடங்கு துப்புறவாய் அவர்களுடைய எல்லாப் பதவிகளி லிருந்தும் நீக்கப்பட்டு அவர்களிடத்தில் தொழிலாளர்கள் அமர்த்தப்பட வேண்டும்—சுரண்டப்படும் வெகுஜனங்க ளுடன் இணைப்பு கொண்டு சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களுடைய நம்பிக்கைக்கு உரியவர் களாயிருக்கும் பட்சத்தில் முற்றிலும் அனுபவமில்லாதவர் களாய் இருந்தாலுங்கூட பரவாயில்லை. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு அரசின் மிகவும் பொறுப்பான பதவிகளில் அனுபவமில்லாத இத்தகைய தொழிலாளர்கள் நியமிக்கப் படுவது அவசியமாகும், இல்லையேல் தொழிலாளர்களின் அரசாங்கம் சக்தியற்றதாகிவிடும், வெகுஜனங்களுடைய ஆதரவைப் பெறாததாகிவிடும்.

9. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பதற்கு, உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் அனை வரும், முதலாளித்துவ வர்க்கத்தால் பிளவுபடுத்தப்பட்டும் ஏமாற்றப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் காலடியில் மிதிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வந்த இவர்கள் எல்லோரும், முதலாளித்துவத்தின் வரலாறு அனைத்தாலும் தலைமைப் பதவிக்காகப் பயிற்சி செய்யப்பட்ட ஒரேயொரு வர்க்கத்தின் முழுத் தலைமையின்கீழ் வருவதென்று அர்த்தம்.

எனவேதான் எங்கும் உடனடியாகவே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குத் தயாரிப்புகள் துவக்கப்படுவதற்குரிய முறைகளில் ஒன்று பின்வருவதாகும்:

விதிவிலக்கின்றி எல்லா நிறுவனங்களிலும் சங்கங்களிலும் கழகங்களிலும், முதலாவதாகவும் முக்கியமானதுமாய்ப் பாட்டாளி வர்க்க நிறுவனங்களிலும், மற்றும் பாட்டாளி வர்க்கத்தவரல்லாதோராகிய உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான வெகுஜனங்களது நிறுவனங்களிலும் (அரசியல், தொழிற் சங்க, இராணுவ, கூட்டுறவு, கல்வி, விளையாட்டுப் போட்டி, இன்ன பிற நிறுவனங்களிலும்) கம்யூனிஸ்டுகளது கோஷ்டிகள் அல்லது குழுக்கள் நிறுவப்பட வேண்டும் —பகிரங்கக் கோஷ்டிகளாய் இருப்பது சிலாக்கியமானது; ஆனால் தலைமறைவானவையும் வேண்டும்தான், எப்படியெனில் முதலாளித்துவ வர்க்கத்தாரால் அவை நசுக்கப்படுமென்றோ அவற்றின் உறுப்பினர்கள் கைது செய்யப்படுவார்கள் அல்லது தடைவிதிக்கப்பட்டுக் கடத்தப்படுவார்கள் என்றோ எதிர்பார்க்கக் காரணம் இருக்கும்போது பின்னவை அவசியமாகிவிடும். ஒன்றோடொன்றும் கட்சி மையத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டிய இந்தக் குழுக்கள் தமது அனுபவத்தை ஒன்றுகூட்டியும் கிளர்ச்சி, பிரசாரம், நிறுவன ஒழுங்கமைப்பு ஆகிய வேலைகளைச் செய்தும் ஒன்று பாக்கியில்லாமல் பொது வாழ்வின் ஒவ்வொரு துறைக்கும் உழைப்பாளி வெகுஜனங்களது ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு பிரிவுக்கும் தம்மைத் தகவமைத்தும் தம்மையும் கட்சியையும் வர்க்கத்தையும் இத்தகைய பல்வேறு வகைப்பட்ட வேலைகளின் மூலம் முறையாய் அறிவு போதம் பெறச் செய்தாக வேண்டும்.

இது சம்பந்தமாய், வேலை முறைகளுக்கிடையே அவசியமான பாகுபாடுகளை நடைமுறையில் உருவாக்கிக் கொள்வது தலைமையான முக்கியத்துவமுடையதாகும். ஒருபுறத்தில் அடிக்கடி குட்டிபூர்ஷுவா, ஏகாதிபத்தியத் தப்பெண்ணங்களால் படுமோசமாய்ப் பீடிக்கப்பட்டுவிடும் ''தலைவர்கள்'' அல்லது ''பொறுப்பான பிரதிநிதிகள்'' குறித்தும்— இத்தகைய ''தலைவர்கள்'' ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தப்பட்டுத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்—மறுபுறத்தில் வெகுஜனங்கள்

குறித்தும்—முக்கியமாய் ஏகாதிபத்தியக் கொலைத்தாண்டவத்துக்குப் பிறகு, முதலாளித்துவ அடிமை நிலையிலிருந்து தப்புவதற்கான ஒரே வழியாய் பாட்டாளி வர்க்க வழிகாட்டல் அவசியமென்ற கோட்பாட்டுக்குச் செவி சாய்க்கவும் அதை ஏற்கவும் பெருமளவுக்குச் சித்தமாயிருக்கிறார்கள்—இப்பாகுபாடுகளை உருவாக்கிக் கொள்வது தலைமையான முக்கியத்துவமுடையதாகும். வெகுஜனங்களது ஒவ்வொரு அடுக்கினர், தொழிலினர், இன்ன பிற பகுதியோரது மனோபாவத்தின் வெவ்வேறான இயல்புகளையும் புரிந்து கொள்ள முடியும்படி விசேஷப் பொறுமையோடும் எச்சரிக்கையோடும் இந்த வெகுஜனங்களை அணுக நாம் கற்றுக் கொண்டாக வேண்டும்.

10. குறிப்பாய், கட்சியிடமிருந்து தனி விசேஷமான கருத்தும் கவனமும் தேவைப்படும் கம்யூனிஸ்டுகளது கோஷ்டி அல்லது குழு ஒன்று இருக்கிறது, அதாவது கட்சி உறுப்பினர்களாகிய பாராளுமன்றக் கோஷ்டி ஒன்று இருக்கிறது. இக்கோஷ்டியினர் முதலாளித்துவப் பிரதிநிதித்துவ உறுப்புக்களில் (முக்கியமாய் தேசிய, மற்றும் ஸ்தல, நகர, இன்ன பிற பிரதிநிதித்துவ உறுப்புக்களில்) உறுப்பினர்களாய் இருப்பவர்கள். ஒருபுறத்தில் இந்தப் பிரதிநிதித்துவ மன்றத்துக்கு, பிற்பட்டோராகவோ குட்டிபூர்ஷ்வாத் தப்பெண்ணங்களில் ஊறியோராகவோ இருக்கும் உழைப்பாளி வெகுஜனங்களின் பெரும் பிரிவுகள் விசேஷ மதிப்பு அளிக்கின்றனர்; ஆகவே கம்யூனிஸ்டுகள் பிரசாரமும் கிளர்ச்சியும் நிறுவன ஒழுங்கமைப்பும் செய்வதற்காகவும் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை சோவியத்துகளின் தேசியக் காங்கிரசைக் கொண்டு கலைத்திடுவது ருஷ்யாவில் எவ்வளவு நியாயமானது (தக்க நேரத்தில் எந்த நாட்டிலும் எவ்வளவு நியாயமானது) என்பதை வெகுஜனங்களுக்கு விளக்குவதற்காகவும் இந்தப் பிரதிநிதித்துவ மன்றத்தைப் பயன்படுத்துவது கம்யூனிஸ்டுகளுக்கு இன்றியமையாத் தேவையாகிவிடுகிறது. மறுபுறத்தில், முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரலாறு அனைத்துமே, முக்கியமாய் முன்னேறிய நாடுகளில், பாராளுமன்றத்தை முன்பின் கண்டறியா மோசடிக்கும் நிதித் துறையிலும் அரசியல் துறையிலும் மக்களை ஏய்ப்பதற்கும் பதவி வேட்டைக்கும் வஞ்சகத்துக்கும் தொழிலாளி மக்களை ஒடுக்குவதற்குமான ஆகப் பெரியதல்லவெனில் ஆகப் பெரியவற்றுள்

ஒன்றுன அரங்கமாய் மாற்றிவிட்டது. எனவே புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தவரின் சிறந்த பிரதிநிதிகள் பாராளு மன்றங்கள்மீது கொண்டுள்ள கடுமையான வெறுப்பு முற்றி லும் நியாயமானதே. ஆகவே கம்யூனிஸ்டுக் கட்சிகளும் மூன்றுவது அகிலத்தில் இணைந்திருக்கும் எல்லாக் கட்சிகளும்— முக்கியமாய்ப் பழைய கட்சிகளிலிருந்து பிளந்து கொண்டு பிரிந்து வந்து அவற்றை எதிர்த்து விடாப்பிடியாய் நின்று நீண்ட போராட்டம் நடத்தி உருவாகாமல், பழைய கட்சிகள் புதிய நிலையை ஏற்றுக் கொள்வதன் (பல சந்தர்ப்பங்களில் பெயரளவுக்கு ஏற்றுக் கொள்வதன்) மூலமாய் உருவாகியவை —தமது பாராளுமன்றக் கோஷ்டிகள் குறித்து மிகவும் கண்டிப்பான போக்கை அனுசரித்தாக வேண்டும். இக்கோஷ்டி கள் இக்கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளுடைய முழுக் கண்காணிப்புக்கும் மேற்பார்வைக்கும் உட்படுத்தப்படுதல்; இவை பிரதானமாய்ப் புரட்சிகரத் தொழிலாளர்களால் ஆன தாய் இருத்தல்; பாராளுமன்ற உறுப்பினர்களுடைய சொற் பொழிவுகள் கண்டிப்பான கம்யூனிஸ்டுக் கண்ணேட்டத் திலிருந்து கட்சிப் பத்திரிகைகளிலும் கட்சிக் கூட்டங்களிலும் கவனமாய்ப் பகுத்தாராயப்படுதல்; பாராளுமன்ற உறுப் பினர்கள் வெகுஜனங்களிடையே கிளர்ச்சிப் பணி புரிவதற் காக அனுப்பப்படுதல்; இரண்டாவது அகிலத்தின் மனப்பான் மையை வெளியிடுவோர் பாராளுமன்றக் குழுக்களிலிருந்து வெளியேற்றப்படுதல் முதலான பலவும் செய்யப்படுதல் வேண்டும்.

11. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் புரட்சி கரத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு இடைஞ்சல் ஏற்பட பிரதான காரணங்களில் ஒன்று என்னவெனில், காலனி உடை மைகளின் காரணமாகவும், நிதி மூலதனத்தாலும் கிடைக்கும் கொள்ளை லாபங்களின் காரணமாகவும் பிற காரணங்களாக வும் இந்நாடுகளின் முதலாளிகள் ஒப்பளவில் பெரியதும் நிலையானதுமான தொழிலாளர் பிரபுக்குலத்தைத் தோற்று விக்க முடிந்திருக்கிறது. இப்பிரிவு தொழிலாளி வர்க்கத்தில் சிறியதொரு சிறுபான்மையே ஆகும். இந்தத் தொழிலாளர் பிரபுக்குலத்தினர் ஏனையோரைக் காட்டிலும் மேம்பாடான வேலை வசதிகளை அனுபவிக்கின்றனர்; மிக அதிக அளவுக்கு இவர்க்ள் குறுகிய தொழில் பிரிவுக்குரிய மனப்பான்மையும்

அற்பவாதக் குட்டிபூர்ஷுவா, ஏகாதிபத்தியத் தப்பெண்ணங்களும் கொண்டோராய் இருக்கின்றனர். இந்தத் தொழிலாளர் பிரபுக்குலத்தோர்தான் இரண்டாவது அகிலத்துக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் மையவாதிகளுக்குமான மெய்யான சமூகத் "தூணாய்" அமைந்திருக்கின்றனர். தற்போது இவர்களை முதலாளித்துவ வர்க்கத்தினுடைய பிரதான சமூக ஆதாரமாகவும்கூட குறிப்பிடலாம். இந்த அடுக்கினை எதிர்த்து உடனடியான, முறையான, விரிவான, பகிரங்கப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காக எந்தத் தயாரிப்பும், பூர்வாங்கத் தயாரிப்புங்கூட, செய்வது சாத்தியமன்று. அனுபவமானது ஏற்கனவே பூரணமாய்க் காட்டியிருப்பது போல, பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குப் பிற்பாடு இந்த அடுக்கு முதலாளித்துவ வெள்ளைப் படைகளுக்குப் பல புதிய படையாட்களைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. மூன்றாவது அகிலத்துடன் இணைப்பு பெற்றிருக்கும் எல்லாக் கட்சிகளும் எப்பாடு பட்டாயினும் "வெகுஜன நெரிசலுக்குள் இன்னும் ஆழமாய் ஊடுருவிச் செல்வோம்", "வெகுஜனங்களுடன் மேலும் நெருங்கிய தொடர்புகள் கொள்வோம்" என்னும் கோஷங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தாக வேண்டும். வெகுஜனங்கள் என்னும்போது உழைப்போரும் மூலதனத்தால் சுரண்டப்படுவோருமாகிய அனைவரையும், முக்கியமாய் மிகக் குறைந்த ஒழுங்கமைப்பும் மிகக் குறைந்த அறிவுபோதமும் பெற்றோரும் மிக அதிகமாய் ஒடுக்கப்பட்டு மிகக் குறைவாய் ஒழுங்கமைப்புக்கு ஏற்றவர்களாயிருப்போருமானோரையும் குறிப்பிடுகிறோம்.

தொழில் பிரிவுக்குரிய நலன்களாகிய குறுகலான கட்டுக் கோப்புக்குள் தன்னை இருத்துக் கொண்டுவிடாது இருக்கும் அளவுக்குத்தான் பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமானதாகிறது. பொது வாழ்வின் எல்லா விவகாரங்களிலும் துறைகளிலும் அது உழைப்போரும் சுரண்டப்படுவோருமாகிய வெகுஜனங்கள் அனைவருக்கும் தலைவனாய்ச் செயல்படும் போதுதான் புரட்சிகரமானதாகிறது. முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெற்றி பெறுவதற்காக மிகப்பெரிய தியாகங்கள் புரிய தயாராகவும் புரியக் கூடியதாகவும் இருந்தால் ஒழிய அது தனது சர்வாதிகாரத்தைச் சாதித்துக் கொள்ள

முடியாது. இத்துறையில் ருஷ்யாவின் அனுபவம் கோட்பாட்டிலும் மற்றும் நடைமுறையிலும் முக்கியத்துவம் மிக்கதாகும். பாட்டாளி வர்க்கம் மிக அதிக அளவில் தியாகங்கள் புரிந்திராவிடில், அல்லது கடுந்தாக்குதல், யுத்தம், உலக முதலாளித்துவ வர்க்கம் நடத்திய முற்றுகை ஆகிவற்றின் மிகவும் கடினமான தருணங்களில் உழைப்பாளி வெகுஜனங்களின் வேறு எந்தப் பிரிவைக் காட்டிலும் அதிகமாய்ப் பட்டினி கிடந்திராவிடில், அதனுல் தனது சர்வாதிகாரத்தைச் சாதித்துக் கொண்டிருக்கவோ, இந்த வெகுஜனங்கள் அனைவரது மதிப்பையும் நம்பிக்கையையும் சகலராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் விதத்தில் பெற்றுக் கொள்ளவோ முடிந்திருக்காது.

குறிப்பாய், கம்யூனிஸ்டுக் கட்சியும் முன்னேறிய பாட்டாளி வர்க்கத்தவர் அனைவரும் முக்கியமாய்த் தன்முனைப்போடு எழும் வெகுஜன வேலைநிறுத்த இயக்கத்துக்குத் தயக்கம் சிறிதுமின்றி சர்வாம்ச உதவி அளித்திட வேண்டும். மூலதனத்தின் ஒடுக்குமுறையில் இத்தகைய வேலைநிறுத்த இயக்கத்தால் மட்டும்தான் வெகுஜனங்களை மெய்யாகவே தட்டியெழுப்பவும் அறிவுபோதம் பெறும்படியும் ஒழுங்கமையும்படியும் செய்ய முடியும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தில் அவர்கள் மனத்தில் முழுநிறை நம்பிக்கையை வேரூன்றச் செய்ய முடியும். இத்தகைய தயாரிப்பு இல்லாமல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எதுவும் சாத்தியமன்று. ஜெர்மனியில் காவுத்ஸ்கியையும் இத்தாலியில் துராத்தியையும் போல வேலைநிறுத்தங்களைப் பகிரங்கமாய் எதிர்க்கக் கூடியவர்கள் மூன்ருவது அகிலத்துடன் இணைவு பெற்ற கட்சிகளின் அணிகளில் இருப்பதைச் சகித்துக் கொள்வது முடியவே முடியாததாகும். வேலைநிறுத்தங்களின் அனுபவத்தைத் தொழிலாளர்களுக்குப் புரட்சியைப் போதிப்பதற்கு அல்லாமல் சீர்திருத்தவாதத்தைப் போதிப்பதற்காகப் பயன்படுத்தி (அண்மை ஆண்டுகளில் உதாரணமாய் பிரிட்டனிலும் பிரான்சிலும் நடைபெற்றுள்ளது போல) தொழிலாளர்களுக்கு அடிக்கடி துரோகம் இழைக்கும்படியான தொழிற் சங்க, பாராளுமன்றத் தலைவர்களுக்கு இது இன்னுங்கூட அதிகமாய்ப் பொருந்தும் என்பதைக் கூறத் தேவையில்லை.

12. எல்லா நாடுகளிலும், மிகமிகச் சுதந்திரமான, மிக மிகச் ''சட்டமுறையிலான'', வர்க்கப் போராட்டம் அங்கே மிகக் குறைந்த அளவுக்கே கடுமையாகியிருக்கிறது என்ற அர்த்தத்தில் மிகமிக ''அமைதியான'' நாடுகளிலுங்கூட, ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் சட்டபூர்வமான வேலைகளையும் சட்டவிரோதமான வேலைகளையும், சட்டபூர்வமான நிறுவனங்களையும் சட்டவிரோதமான நிறுவனங்களையும் முறையாய் ஒன்றிணைத்துக் கொள்வது இப்பொழுது முழுக்க முழுக்க அத்தியாவசியமானதாகும். முதலாளித்துவ-ஜனநாயக அமைப்பு மிகவும் ''நிலை பெற்றிருக்கும்'' மிகமிக அறிவொளி பெற்ற, மிகமிகச் சுதந்திரமான நாடுகளிலுங்கூட அரசாங்கங்கள் அவற்றின் வஞ்சகமான பொய்ப் பிரகடனங்கள் எப்படியிருப்பினும், ஏற்கனவே முறையாகவும் இரகசியமாகவும் கம்யூனிஸ்டுகளது கறுப்புப் பட்டியல்கள் தயாரித்து வருகின்றன; எல்லா நாடுகளிலும் வெள்ளைப்படையினருக்கும் கம்யூனிஸ்டுகள் கொலை செய்யப்படுவதற்கும் இரகசியமாகவும் ஓரளவு இரகசியமாகவும் தூண்டுதல் அளிக்கும் பொருட்டு இடையறாது தமது அரசியல் சட்டங்களையும் மீறிச் சென்று செயல்பட்டு வருகின்றன; கம்யூனிஸ்டுகளைக் கைது செய்வதற்காக இரகசியத் தயாரிப்புகள் செய்தல், கம்யூனிஸ்டுகளிடையே போலீஸ் கையாட்களை ஊடுருவ வைத்தல் முதலான பலவும் செய்து வருகின்றன. என்னதான் நேர்த்தியான ''ஜனநாயக'', சாத்வீகவாதப் பதப்பிரயோகங்களைக் கையாளுகிறவராயினும் மிகவும் பிற்போக்கான குட்டி பூர்ஷுவா அற்பவாதியே ஆகிய ஒருவரால்தான் இதிலிருந்து தவிர்க்கவொண்ணாத முறையில் பெறப்படும் உண்மையை அல்லது முடிவினை—அதாவது சட்டபூர்வமான எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் சட்டவிரோத வேலைகளை முறையாய் நடத்திச் செல்வதற்காகவும் முதலாளித்துவ வர்க்கத்தார் அடக்குமுறையில் இறங்கும் அத்தருணத்துக்கு வேண்டிய தயாரிப்புகளை முழுநிறைவாய்ச் செய்வதற்காகவும் உடனடியாய்ச் சட்டவிரோத நிறுவனங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவினை—மறுக்க முடியும். சேனையிலும் கடற்படையிலும் போலீசிலும் சட்டவிரோத வேலைகள் மிகமிக அவசியம், ஏகாதிபத்தியக் கொலைத்தாண்டவத்தைத் தொடர்ந்து உலகெங்கும் அரசாங்கங்கள் தொழிலாளர்

களும் விவசாயிகளும் சேர்ந்து கொண்டுவிடும்படியான மக்கள் சேனைகள் குறித்து குலைநடுக்கம் கொள்ள முற்பட்டு, தனியே முதலாளித்துவ வர்க்கத்தாரிடமிருந்து திரட்டப்பட்டவையும் மிக நவீன ஆயுதங்களைக் கொண்டவையுமான இராணுவப் படையமைப்புகளை நிறுவ எல்லா வகையான வழிமுறைகளிலும் இரகசியமாய் ஈடுபட்டு வருகின்றன.

மறுபுறத்தில், விதிவிலக்கின்றி எல்லா சந்தர்ப்பங்களிலும் கட்சிகள் தம்மை சட்டவிரோத வேலைகளிலே மட்டும் இருத்திக் கொண்டுவிடாமல், சட்டபூர்வமான வேலைகளையும் செய்து வருவதும் அதே அளவுக்கு அவசியமாகும். எல்லா தடைமதில்களையும் தாண்டிச் சென்று அவை பல்வேறுபட்ட மிகப் பல பெயர்களிலும் சட்டபூர்வமான வெளியீடுகளையும் நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்—தேவைப்படும்போது இந்தப் பெயர்கள் அடிக்கடி மாற்றப்பட வேண்டும். பின்லாந்திலும் ஹங்கேரியிலும் ஓரளவுக்கு ஜெர்மனி, போலந்து, லாத்வியா முதலான நாடுகளிலும் சட்டவிரோதக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த நடைமுறையை அனுசரித்து வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனமும் (I.W.W.), தற்போது சட்டபூர்வமாய் இருந்து வரும் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும், கம்யூனிஸ்டு அகிலக் காங்கிரஸ்களால் ஏற்கப்படும் தீர்மானங்கள் போன்ற காரணங்களுக்காக அவற்றுக்கு எதிராய் அரசாங்க பிராசிக்கியூட்டர்கள் நடவடிக்கை எடுக்க முற்படும் பட்சத்தில், இதே நடைமுறையை அனுசரித்தாக வேண்டும்.

சட்டவிரோத வேலைகளையும் சட்டபூர்வ வேலைகளையும் ஒன்றிணைத்துக் கொள்ளுதல் முழுமுதலான அத்தியாவசியக் கோட்பாடாகும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தறுவாயிலான தற்போதைய காலகட்டத்தின் எல்லா இயல்புகளாலும் மட்டுமின்றி, கம்யூனிஸ்டுகளால் வெற்றி கொள்ள இயலாத செயல் துறை எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியத்தாலும் இக்கோட்பாடு இன்றியமையாததாகி விடுகிறது. யாவற்றுக்கும் முதலாய், முதலாளித்துவ-ஜனநாயகச் சட்டமுறைமையில் தொடர்ந்து நம்பிக்கை கொண்டுள்ளோரும் இந்த ஏய்ப்பிலிருந்து தவறு

மல் நாம் விடுவித்து வெளிக் கொண்டுவர வேண்டியோருமாகிய விரிவான பாட்டாளி வர்க்கப் பகுதியோரும் இன்னுங்கூட அதிக விரிவான பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளர் களும் சுரண்டப்படுவோருமான வெகுஜனப் பகுதியோரும் இன்னமும் எங்கும் இருந்து வரும் உண்மையாலும் இக்கோட் பாடு இன்றியமையாததாகி விடுகிறது.

13. குறிப்பாய், மிகவும் முன்னேறிய முதலாளித்துவ நாடு களில் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளது நிலைமைகள் முதலாளித்துவ ஜனநாயகத்தில் சுதந்திரமும் சமத்துவமும் எப்படி அப்பட்டமான ஏமாற்றாகி விடுகின்றன என்பதை யும், மற்றும் சட்டபூர்வமான வேலைகளை சட்டவிரோத வேலை களையும் முறையாய் ஒன்றிணைப்பது எவ்வளவு அவசியம் என்பதையும் எடுப்பான முறையில் புலப்படுத்திக் காட்டு கின்றன. தோல்வியுற்ற ஜெர்மனியிலும் வெற்றி பெற்ற அமெரிக்காவிலும் தொழிலாளர்களை அவர்களுடைய பத் திரிகைகளை இழக்கும்படிச் செய்வதற்காக முதலாளித்துவ வர்க்கத்தாரது அரசின் பொறியமைவின் முழு பலமும் நிதித் துறை பகாசுர முதலாளிகளின் எல்லாத் தந்திர முறைகளும் கையாளப்படுகின்றன. வழக்குகள் தொடருதல், பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்தல் (அல்லது கூலிக்குக் கொலை காரர்களை அமர்த்திக் கொல்லச் செய்தல்), தபால் சலுகை கள் இல்லாதபடி மறுத்தல், காகிதம் வழங்குதலைக் குறைத்துச் செல்லுதல், இத்தியாதி முறைகள் எல்லாம் இவற்றில் அடங்கும். தவிரவும், தினசரிச் செய்தியேடுகளுக்கு அவசிய மான செய்தி அளிப்பு வசதிகள் முதலாளித்துவத் தந்திச் செய்தி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன; எந்த ஒரு பெரிய செய்தியேடும் தன் செலவுகளுக்கு வகை செய்து கொள்வதற்கு இன்றியமையாத விளம்பரங்கள் கிடைப்பது முதலாளிகளுடைய ''நல்ல எண்ணத்தையைப்'' பொறுத் துள்ளது. சுருக்கமாய்த் தொகுத்துக் கூறுவதெனில், மூல தனம், முதலாளித்துவ அரசு இவற்றின் சூழ்ச்சிகளாலும் நிர்ப்பந்தத்தாலும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் தனது பத்திரிகைகளை இழக்க வேண்டியதாகிறது.

இதை எதிர்த்துப் போராடும் பொருட்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளர்களிடையே வெகுஜன அளவில் வினி யோகமாவதற்கான புதிய வகையான பத்திரிகைகளைத்



12—1061

தோற்றுவித்துக் கொண்டாக வேண்டும். முதலாவதாக, சட்ட பூர்வமான வெளியீடுகள், இவை தம்மைக் கம்யூனிஸ்டு வெளியீடுகளாய் அழைத்துக் கொள்ளாமலும், கட்சியுடன் தமக்குள்ள இணைப்புகளை வெளியிட்டுக் கொள்ளாமலும், ஜாராட்சியில் 1905க்குப் பிற்பாடு போல்ஷிவிக்குகள் செய்தது போல, சட்டபூர்வமான எந்த வாய்ப்பையும் (அது எவ்வளவுதான் சொற்பமாயிருப்பினும்) பயன்படுத்தக் கற்றுக் கொண்டாக வேண்டும். இரண்டாவதாக, சட்டவிரோத ஏடுகள், மிகமிகச் சிறியதாயிருப்பினும் காலக் கிரமமின்றி வெளியிடப்படுகிறவையாயினும், தொழிலாளர்களால் எண்ணற்ற அச்சகங்களில் அச்சிடப்பட்டு (இரகசியமாகவோ, இயக்கம் போதிய வலுவடைந்துவிடுமாயின் புரட்சிகரமான முறையில் அச்சகங்களைக் கைப்பற்றிக் கொண்டோ அச்சிடலாம்), ஒளிவுமறைவின்றி புரட்சிகரத் தகவல்களையும் புரட்சிகரக் கோஷங்களையும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு அளித்திட வேண்டும்.

கம்யூனிஸ்டுப் பத்திரிகைகளின் சுதந்திரத்துக்காக வெகுஜனங்கள் கவர்ந்திழுக்கப்படும் புரட்சிகரப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குத் தயாரிப்புகளைச் செய்வது சாத்தியமன்று.

## 3

## கம்யூனிஸ்டு அகிலத்துடன் இணைவு பெற்ற அல்லது இணைவு பெற விரும்பும் கட்சிகளுடைய அரசியல் கொள்கை வழியை— ஓரளவுக்கு அவற்றின் இயையையும்—சரி செய்தல்

14. இரண்டாவது அகிலத்தின் மிகவும் செல்வாக்கு படைத்த கட்சிகள், அதாவது பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியும் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயக் கட்சியும் கிரேட் பிரிட்டனின் சுயேச்சைத் தொழிற் கட்சியும் அமெரிக்காவின் சோஷலிஸ்டுக் கட்சியும் இந்த மஞ்சள் அகிலத்திலிருந்து வெளியேறி விட்டதிலிருந்தும், மூன்றுவது அகிலத்துடன் இணைவு பெறுவதென்று—முதல் மூன்றும் நிபந்தனையின் பேரிலும், கடைசியானது எந்த நிபந்தனையும் இல்லாமலேயும் இணைவு பெறுவதென்று—தீர்மானித்திருப்பதிலிருந்தும், உலகப் பொருளாதாரத்தின் கண்ணோட்டத்திலும் உலக

அரசியலின் கண்ணேட்டத்திலும் மிகவும் முக்கியமான நாடு களில் பாட்டாளி வர்க்கமானது தனது சர்வாதிகாரத்தை அமைத்துக் கொள்ள எந்த அளவுக்குத் தயாராயிருக்கிறது என்பதை மிகவும் கண்கூடாகவும் துல்லியமாகவும் கண்டு கொள்ளலாம். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன் னணிப் படை மட்டுமின்றி அதன் பெருவாரியுங்கூட நிகழ்ச்சி களது போக்கு அனைத்தாலும் சந்தேகத்துக்கு இடமில்லாத வாறு அறிவுறுத்தப்பட்டு நமது பக்கத்துக்கு வரத் தலைப் பட்டுவிட்டதென்பதை இது நிரூபிக்கிறது. ஊசலாட்டம் கிஞ்சித்துமின்றி வழி நெடுகிலும் முன்னேறிச் செல்லும் பொருட்டு இந்த நடப்பினை நிறைவு பெறச் செய்வதற்கும், இதுகாறும் சாதிக்கப்பட்டவற்றை நிறுவன ஒழுங்கமைப்புத் துறையில் உறுதியாய் நிலை பெறச் செய்வதற்குமான ஆற்றலை பெறுவதுதான் இனி பிரதான விவகாரமாகும்.

15. மேற்கூறிய கட்சிகள் (இவற்றுடன் ஸ்விட்ஜர்லாந் தின் சோஷலிஸ்டுக் கட்சியையும் சேர்த்துக் கொள்ள வேண் டும், மூன்ருவது அகிலத்தில் சேர்வதென அது தீர்மானித் திருப்பதாய்க் கூறும் தந்திச் செய்திகள் உண்மையாஞல்) இன்னமும் தமது எல்லாச் செயற்பாடுகளிலும் கம்யூனிஸ்டுத் தன்மை பெற்றுவிடவில்லை என்றும் பல சந்தர்ப்பங்களிலும் இச்செயற்பாடுகள் மூன்ருவது அகிலத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு, அதாவது முதலாளித்துவ ஜனநாயகத் துக்குப் பதிலாய்ப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் சோவியத் ஆட்சி அமைப்பையும் அங்கீகரித்து நடப்பதற்கு நேர்முரணுயுள்ளன என்றும் இக்கட்சிகளின் எல்லாச் செயற் பாடுகளும் காட்டுகின்றன, இக்கட்சிகளின் எந்தப் பத்திரி கையும் தெளிவாய் இதனை ஊர்ஜிதம் செய்யும்.

ஆகவே கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங் கிரஸ், இந்தக் கட்சிகள் இணைவு பெறுவதை உடனடியாய் ஏற்க முடியாதென்றும், மூன்ருவது அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி ஜெர்மன் ''சுயேச்சையாளர்களுக்கு'' அளித்த பதிலை உறுதி செய்வதென்றும், இரண்டாவது அகிலத்திலிருந்து வெளியேறி மூன்ருவது அகிலத்துடன் நெருங்கிய உறவுகள் கொள்ள விரும்பும் எந்தக் கட்சியுடனும் பேச்சுவார்த்தை கள் நடத்தத் தயார் என்பதை ஊர்ஜிதம் செய்வதென்றும், இத்தகைய கட்சிகளின் பிரதிநிதிகளை விவாத உரிமை

யுடன் தனது எல்லாக் காங்கிரஸ்களிலும் மாநாடுகளிலும் கலந்து கொள்ள அனுமதிப்பதென்றும், இந்தக் கட்சிகளும் (இவற்றையொத்த பிறவும்) கம்யூனிஸ்டு அகிலத்துடன் முழு அளவில் ஒன்றுசேர்வதற்குப் பின்வரும் நிபந்தனைகளை இடுவதென்றும் தீர்மானிக்க வேண்டும்:

1) கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாக் காங்கிரஸ்களும், அதன் நிர்வாகக் கமிட்டி ஏற்கும் எல்லாத் தீர்மானங்களும் சம்பந்தப்பட்ட கட்சிகளுடைய எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுதல்;

2) இந்தத் தீர்மானங்கள் இக்கட்சிகளின் எல்லாப் பிரிவுகளின், அல்லது ஸ்தல நிறுவனங்களின் சிறப்புக் கூட்டங்களில் விவாதிக்கப்படுதல்;

3) இத்தகைய விவாதத்துக்குப் பிற்பாடு இக்கட்சிகளின் சிறப்புக் காங்கிரஸ்கள் கூட்டப்பட்டு விவாதத்தின் முடிவுகள் தொகுத்துரைக்கப்படுதலும், மற்றும்—

4) இரண்டாவது அகிலத்தின் மனப்பான்மையிலேயே தொடர்ந்து செயல்படுவோரை வெளியேற்றிக் கட்சிகளைச் சுத்தம் செய்தலும்;

5) இக்கட்சிகளின் எல்லாப் பத்திரிகைகளும் முற்றிலும் கம்யூனிஸ்டுகளாலான ஆசிரியர் குழாங்களின் பொறுப்பில் விடப்படுதல்.

இந்த நிபந்தனைகள் யாவும் மெய்யாகவே நிறைவேற்றப் பட்டதையும் இக்கட்சிகளின் செயற்பாடுகள் கம்யூனிஸ்டுத் தன்மையனவாகி விட்டதையும் தெரிந்து கொண்டபின், இக்கட்சிகளையும் இவற்றையொத்த பிற கட்சிகளையும் மூன்றாவது அகிலத்தில் அதிகாரபூர்வமாய் ஏற்றுக் கொள்வதற்கு மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் தனது நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரமளிக்க வேண்டும்.

16. இந்தக் கட்சிகளிலும் இவற்றையொத்த பிற கட்சிகளிலும் பொறுப்பான பதவிகளில் தற்போது சிறுபான்மையான சிலவற்றில் மட்டுமே இருந்து வரும் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை, இக்கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்களிடையே கம்யூனிசத்திற்கு மெய்யான ஆதரவு வளர்ந்திருப்பது வெளிப்படையாய்த் தெரிந்தால், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் சோவியத் ஆட்சி அமைப்பும் அங்கீகரிக்கப்படுவதற்காக இவர்கள் இக்கட்சிகளினுள் வேலை

செய்ய முடியும் வரையிலும், இன்னமும் இக்கட்சிகளில் இருந்து வரும் சந்தர்ப்பவாதிகளையும் மையவாதிகளையும் குற்ற விமர்சனம் செய்வது சாத்தியமாய் இருக்கும் வரையிலும், இக்கம்யூனிஸ்டுகள் இக்கட்சிகளிலிருந்து ராஜீனுமா செய்வது விரும்பத்தக்கதல்ல என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டும்.

அதேபோதில், கம்யூனிஸ்டுக் கோஷ்டிகளும் நிறுவனங்களும், அல்லது கம்யூனிசத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் கோஷ்டிகளும் நிறுவனங்களும் கிரேட் பிரிட்டனில் தொழிற் கட்சியில் (Labour Party)—இக்கட்சி இரண்டாவது அகிலத்தின் உறுப்பினராய் இருந்த போதிலும்—சேர்ந்து கொள்வதை மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் ஆதரிப்பதாய்க் கூற வேண்டும். இந்தக் கட்சி தன்னுடன் இணைவு பெற்ற நிறுவனங்களுக்குத் தற்போது இருந்து வரும் விமர்சனச் சுதந்திரத்தையும் பாட்டாளி வர்க்கத்துக்கும் சோவியத் ஆட்சி அமைப்புக்கும் ஆதரவாய்ப் பிரசாரமும் கிளர்ச்சியும் நிறுவன ஒழுங்கமைப்பும் செய்வதற்குரிய சுதந்திரத்தையும் உறுதி செய்யும் வரையில், மற்றும் தொழிலாளி வர்க்கத்தினுடைய எல்லாத் தொழிற் சங்க நிறுவனங்களது கூட்டமைப்பாய் இருக்கும் தனது தன்மையை இக்கட்சி இழக்காதிருக்கும் வரையில், கம்யூனிஸ்டுகள் மிகவும் விரிவான தொழிலாளி வெகுஜனங்களிடையே தமது செல்வாக்கைச் செலுத்த வல்லோராய் இருக்கும் பொருட்டும், இந்த வெகுஜனங்களது சந்தர்ப்பவாதத் தலைவர்களை மேலும் விரிவான ஓர் அமைப்பில், அதாவது வெகுஜனங்களுக்கு மேலும் நன்றாய்த் தெரியும்படி அம்பலப்படுத்த வல்லோராய் இருக்கும் பொருட்டும், அரசியல் அதிகாரமானது முதலாளித்துவ வர்க்கத்தாரது நேரடிப் பிரதிநிதிகளிடமிருந்து ''முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளர் துறைக் கையாட்களுக்கு'' மாற்றப்படுவதைத் துரிதப்படுத்தி இவ்விதம் வெகுஜனங்களை இத்துறையில் அவர்களுக்கு எஞ்சியிருக்கும் இறுதிப் பிரமைகளிலிருந்து மேலும் விரைவாய் விடுவிக்க வல்லோராய் இருக்கும் பொருட்டும் யாவும் செய்வதும் சிற்சில சமரசங்களைச் செய்து கொள்வதும் கம்யூனிஸ்டுகளுடைய கடமையாகும்.

17. இத்தாலியின் சோஷலிஸ்டுக் கட்சி குறித்து, 1920 மே 8ஆம் தேதிய **புதிய அமைப்பில்** *(L'Ordine Nuovo)* கூறப்

பட்டிருப்பதன்படி, இக்கட்சியின் துரீன் பிரிவினது[66] பெயரில் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் தேசியக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் விமர்சனமும் நடைமுறைப் பிரேரணைகளும் பிரதானமாய்ச் சரியானவையே என்றும், மூன்றாவது அகிலத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் இசைந்தவையே என்றும் மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கருதுகிறது.

ஆகவே, இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி தனது கொள்கை வழியைச் சரிசெய்து கொள்ளும் பொருட்டும் தன்னிடமிருந்து, குறிப்பாய்த் தனது பாராளுமன்றக் குழுவிடமிருந்து கம்யூனிஸ்டல்லாதோரைக் கழித்துக் கட்டும் பொருட்டும் ஒரு சிறப்புக் காங்கிரசைக் கூட்டி இந்தப் பிரேரணைகளையும் மற்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டு காங்கிரஸ்களின் தீர்மானங்கள் யாவற்றையும் விவாதிக்கும்படி மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் இக்கட்சியைக் கேட்டுக் கொள்கிறது.

18. வர்க்கத்துடனும் வெகுஜனங்களுடனும் கட்சியின் உறவு பற்றிய கருத்துக்களும், முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலும் பிற்போக்குத் தொழிற் சங்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்வது கம்யூனிஸ்டுகளுக்குரிய கடமை அல்ல என்கிற கருத்தும் தவறானவை என்று மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கருதுகிறது. தற்போதைய காங்கிரசின் விசேஷத் தீர்மானங்களில் இக்கருத்துக்களுக்கு விவரமாய் மறுப்பு கூறப்பட்டிருக்கிறது. இக்கருத்துக்கள் மிகவும் முழு அளவில் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்கள் கட்சியாலும், பகுதி அளவுக்கு ஸ்விட்ஜர்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியாலும், வியென்னாவில் கம்யூனிஸ்டு அகிலத்தின் கிழக்கு ஐரோப்பியச் செயற் குழுவின் பத்திரிகையான கம்யூனிசத்தாலும் (Kommunismus), தற்போது கலைக்கப்பட்டுவிட்ட ஆம்ஸ்டர்டாம் செயற் குழுவாலும், சில டச்சுத் தோழர்களாலும், கிரேட் பிரட்டனில் உதாரணமாய்த் தொழிலாளர் சோஷலிஸ்டு சம்மேளனத்தையும் பிறவற்றையும் போன்ற சில கம்யூனிஸ்டு நிறுவனங்களாலும், மற்றும் அமெரிக்காவில் உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனத்தாலும், கிரேட் பிரிட்டனில் தலைமைத் தொழிலாளர் கமிட்டியாலும் (Shop Stewards Committee),[67] இன்ன பிறவற்றாலும் ஆதரிக்கப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் மேற்கூறிய நிறுவனங்களில் இன்னமும் அதிகாரபூர்வமாய்க் கம்யூனிஸ்டு அகிலத்துடன் இணைவு பெருதவை உடனடியாய் இணைவு பெறுவது சாத்தியமென்றும் விரும்பத்தக்கதென்றும் மூன்ருவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கருதுகிறது. ஏனெனில் இந்த உதாரணங்களில், குறிப்பாய் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஆஸ்திரேலியாவிலும் உலக ஆலைத் தொழிலாளர் நிறுவன விவகாரத்திலும், மற்றும் கிரேட் பிரிட்டனில் தலைமைத் தொழிலாளர் கமிட்டியின் விவகாரத்திலும் நாம் எதிர்நோக்குவது சாராம்சங்கள் யாவற்றிலும் உண்மையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஆதரித்து நிற்கும் ஆழமான பாட்டாளி வர்க்க, வெகுஜன இயக்கமாகும். முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வது குறித்து இந்த நிறுவனங்கள் தவருன கருத்துக்கள் கொண்டிருக்கின்றனவென்ருல், சாராம்சத்தில் குட்டிபூர்ஷுவாக் கருத்துக்களாகிய — அடிக்கடி அராஜகவாதிகள் வெளியிடுவதைப் போன்றவையாகிய — தமது கருத்துக்களை இவ்வியக்கத்தினுள் கொண்டுவரும் முதலாளித்துவ வர்க்க நபர்களுடைய செல்வாக்கு அல்ல அவ்வளவாக அதற்குக் காரணம்; முற்றிலும் புரட்சியாளர்களும் வெகுஜனங்களுடன் தொடர்பு கொண்டோருமாகிய பாட்டாளி வர்க்கத்தவர்களது அரசியல் அனுபவமின்மையே அதற்குக் காரணம்.

ஆகவே, மூன்ருவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் ஆங்கிலோ-சாக்சன் நாடுகளிலுள்ள எல்லாக் கம்யூனிஸ்டு நிறுவனங்களையும் கோஷ்டிகளையும் கேட்டுக் கோள்கிறது: உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனமும் தலைமைத் தொழிலாளர் கமிட்டியும் உடனடியாய் மூன்ருவது அகிலத்துடன் இணைவு பெருவிட்டாலுங்கூட, இந்த நிறுவனங்களிடம் மிகுந்த நட்புடன் கூடிய கொள்கையை அனுசரிக்கும்படியும், அவற்றுடனும் அவற்றை ஆதரிக்கும் வெகுஜனங்களுடனும் நெருங்கிய தொடர்புகள் நிறுவிக் கொள்ளும்படியும், அவற்றின் மேற்கூறிய கருத்துக்கள் தவருனவை என்பதை—எல்லாப் புரட்சிகளுடைய, குறிப்பாய் இருபதாம் நூற்ருண்டின் மூன்று ருஷ்யப் புரட்சிகளுடைய அனுபவத்தின் அடிப்படையில்—நேச மனப்பான்மையுடன் அவற்றுக்கு விளக்கிக் கூறும்படியும், இந்த நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து ஒரே

கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவிக் கொள்வதற்கான முயற்சிகளை மேலும் தொடர்ந்து மேற்கொள்வதிலிருந்து ஒதுங்காதிருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

19. இச்சந்தர்ப்பத்தில், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் குறித்தும் சோவியத் ஆட்சி அமைப்பு குறித்தும் அனுசரிக்க வேண்டிய போக்கு சம்பந்தமாய் உலகெங்கிலும் அராஜகவாதிகளிடையே யுத்தத்துக்குப் பிற்பாடு ஆழ்ந்த சித்தாந்தப் பிளவு ஏற்பட்டு வந்துள்ளதை இக்காங்கிரஸ் எல்லாத் தோழர்களின் கவனத்துக்கும், குறிப்பாய் லத்தீனிய நாடுகளிலும் ஆங்கிலோ-சாக்சன் நாடுகளிலுமுள்ள தோழர்களின் கவனத்துக்கும் கொண்டுவருகிறது. தவிரவும், குறிப்பாய்ப் பாட்டாளி வர்க்கத்தவர்களிடையே—இரண்டாவது அகிலத்தின் கட்சிகளுடைய சந்தர்ப்பவாதத்தின் பாலும் சீர்திருத்தவாதத்தின்பாலும் ஏற்பட்ட நியாயமான வெறுப்பினால் அடிக்கடி உந்தப்பட்டு அராஜகவாதத்தை நோக்கி தள்ளிவிடப்பட்ட இவர்களிடையே—இக்கோட்பாடுகளைப் பற்றிய சரியான உணர்வு ஏற்பட்டு வருவதைக் காண முடிகிறது. ருஷ்யா, பின்லாந்து, ஹங்கேரி, லாத்வியா, போலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் அனுபவத்தை இவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு நன்றாய்த் தெரிந்து கொள்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு பரவலாய் அந்த உணர்வு இவர்களிடையே வளர்ந்து வருகிறது.

எனவே எல்லாப் பாட்டாளி வர்க்க வெகுஜன நபர்களும் அராஜகவாதத்தை விட்டொழித்து மூன்றாவது அகிலத்தின் பக்கத்துக்கு மாறி வருவதற்குத் துணை புரிவதற்காக யாவற்றையும் செய்வது எல்லாக் கம்யூனிஸ்டுகளுக்குமுரிய கடமையாகும் என்று இந்தக் காங்கிரஸ் கருதுகிறது. அறிவுத்துறையினரையும் குட்டிபூர்ஷுவாக்களையும் சேர்ந்தோரைக் காட்டிலும் வெகுஜனப் பாட்டாளி வர்க்கத்தவர்களை அராஜகவாதத்திலிருந்து விலகி வரும்படி கவர்ந்திழுப்பதில் மெய்யான கம்யூனிஸ்டுக் கட்சிகள் காணும் வெற்றிதான் இக்கட்சிகளது வெற்றிக்கான அளவுகோலாகும் என்று இக்காங்கிரஸ் குறிப்பிடுகிறது.

1920 ஜூலை 4
1920 ஜூலையில் வெளியானது

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 183-201

## கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம் குறித்து கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1920 ஜூலை 23

தோழர்களே, நான் தோழர்கள் டான்னெரும் மாக்லேனும் நிகழ்த்திய சொற்பொழிவுகள் குறித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆதரித்து நிற்பதாய் டான்னெர் கூறுகிருர். ஆனுல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அவர் முற்றிலும் நாம் புரிந்து கொள்ளும் வழியில் புரிந்து கொள்ளவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதன் மூலம் உண்மையில் நாம் பாட்டாளி வர்க்கத்தில் நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற வர்க்க உணர்வு படைத்த ஒரு சிறுபான்மையின் சர்வாதிகாரத்தையே குறிக்கின்ரேம் என்று சொல்கிருர்.

மெய்தான், முதலாளித்துவச் சகாப்தத்தில் தொழிலாளிப் பெருந் திரளினர் ஓயாத சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டு தமது மனித ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முடியாதோராய் இருக்கும்போது, தொழிலாளி வர்க்க அரசியல் கட்சிகள் தமது வர்க்கத்தில் ஒரு சிறுபான்மையை மட்டுமே தம்முடன் ஈடுபடுத்திக் கொள்ள முடிகிறது என்பது இக்கட்சிகளுக்குரிய முக்கிய குணதிசயமாய் இருந்துவருகிறது. எப்படி எந்த முதலாளித்துவ சமுதாயத்திலும் எல்லாத் தொழிலாளர்களிலும் சிறுபான்மையினரே மெய்யாகவே வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் ஆக முடிகிறதோ, அதே போல ஒரு வர்க்கத்தின் சிறுபான்மை மட்டுமே ஒரு அரசியல் கட்சியாய் அமைய முடிகிறது. ஆகவே வர்க்க உணர்வு படைத்த இந்தச் சிறுபான்மையால்தான் தொழிலாளர்களின் விரிவான வெகுஜனப் பகுதிகளுக்குத் தலைமை தாங்கி அவற்றை

வழி நடத்திச் செல்ல முடியும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். தோழர் டான்னெர் தாம் கட்சியை எதிர்ப்பதாகவும், ஆனால் அதேபோதில் சிறந்த நிறுவன ஒழுங்கமைப்புடைய மிகவும் புரட்சிகரமான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு சிறுபான்மை பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் வழி காட்டுவதை ஆதரிப்பதாகவும் கூறுகிறார் என்றால், உண்மையில் நம்மிடையே வேறுபாடு இல்லை என்றுதான் நான் சொல்வேன். நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற இந்தச் சிறுபான்மை என்பது என்ன? இந்தச் சிறுபான்மை மெய்யாகவே வர்க்க உணர்வு படைத்ததாய் இருக்குமாயின், வெகுஜனங்களுக்கு அதனால் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல முடிந்தால், அன்றாடம் எழும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் அது பதிலளிக்கக் கூடியதாய் இருந்தால், பிறகு அது எதார்த்தத்தில் ஒரு கட்சியே ஆகும். டான்னெரைப் போன்ற தோழர்கள் வெகுஜன இயக்கத்தின் பிரதிநிதிகளாய் இருப்பதால்—பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகள் குறித்து ஓரளவு மிகைப்பாடின்றி இவ்வாறு கூறுவதற்கில்லை—இவர்களிடம் நாம் தனிக் கவனம் செலுத்துகிறோம். இந்தத் தோழர்கள் ஒரு சிறுபான்மை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக வைராக்கியமாய்ப் போராடுவதையும், பெருந்திரளான தொழிலாளர்களுக்கு இவ்வழிகளில் போதமளிப்பதையும் ஆதரிக்கிறார்கள் என்றால், பிறகு இந்தச் சிறுபான்மை எதார்த்தத்தில் ஒரு கட்சியே அன்றி வேறல்ல. இந்தச் சிறுபான்மை தொழிலாளர் வெகுஜனங்களை ஒழுங்கமைப்புடையதாக்கி, அவர்களுக்கு தலைமை தாங்க வேண்டும் என்று தோழர் டான்னெர் கூறுகிறார். தோழர் டான்னெரும் Shop Stewards கமிட்டியையும் உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனத்தையும் (Industrial Workers of the World) சேர்ந்த ஏனைய தோழர்களும் இதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால்—இவர்களுடன் தினசரி நாங்கள் நடத்தியிருக்கும் பேச்சுக்களிலிருந்து இதை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது தெரிகிறது—தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வு படைத்த கம்யூனிஸ்டுச் சிறுபான்மை பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கும் கருத்தினை இவர்கள் ஆமோதிக்கிறார்கள் என்றால், பிறகு இவர்கள் நமது தீர்மானங்கள் யாவற்றின் அர்த்தமும் இதுவேதான்

என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். அப்படியானல், பிரிட்டிஷ் தோழர்களிடையே அரசியல் கட்சியின்பால் ஒரு வித அவநம்பிக்கை இருந்து வரும் காரணத்தால் ''கட்சி'' என்னும் சொல்லை இவர்கள் தவிர்த்துக் கொள்வதுதான் நம் மிடையே நிலவும் ஒரேயொரு வேறுபாடு. கோம்பர்சின், ஹெண்டர்சனின் கட்சிகளைப் போன்றதான, கெட்டிக்காரப் பாராளுமன்ற எத்தர்களும் தொழிலாளி வர்க்கத்தின் துரோகி களுமாஞேரின் கட்சிகளைப் போன்றதான அரசியல் கட்சி களையே இவர்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இன்று பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இருப்பவற்றையே இவர்கள் பாராளுமன்ற முறை என்பதாய்க் குறிப்பிடுகிருர் கள் என்ருல், நாங்களும் இத்தகைய பாராளுமன்ற முறை யையும் இத்தகைய அரசியல் கட்சிகளையும் எதிர்ப்பவர்கள் தான். நாங்கள் விரும்புவது புதுவகையான, வேறுவிதமான கட்சிகள். வெகுஜனங்களுடன் இடையருதும் மெய்யாகவும் தொடர்பு கொண்டு, அந்த வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்லக் கூடியவையான கட்சிகளையே நாங்கள் விரும்புகிரேம்.

நான் பேச விரும்பும் மூன்ருவது பிரச்சினைக்கு இப்பொழுது வருகிறேன். இது தோழர் மாக்லேனின் சொற்பொழிவு சம்பந்தமானது. அவர் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி தொழிற் கட்சியுடன் இணைவதை ஆதரிக்கிருர். மூன்ருவது அகிலத்துடன் இணைவது பற்றிய எனது விரிவுரைகளில் இந்த விவகாரம் குறித்து எனது அபிப்பிராயத்தை ஏற்கனவே நான் எடுத்துரைத்திருக்கிறேன். என்னுடைய பிரசுரத்தில் இந்தப் பிரச்சினை குறித்து முடிவாய் ஏதும் கூருமல் விட்டிருந் தேன். ஆயினும், பல தோழர்களுடன் இந்த விவகாரத்தை விவாதித்தபின், தொழிற் கட்சியினுள்ளேயே இருப்பதென்ற தீர்மானம்தான் சரியான போர்த்தந்திரமாகும் என்ற முடி வுக்கு வந்திருக்கிறேன். ஆனல் இதோ தோழர் டான்னெர் ''வரட்டுச் சூத்திரவாத முறை வேண்டாம்'' என்று கூறுகிருர். அவர் கூறுவது இச்சந்தர்ப்பத்தில் சிறிதும் பொருத்தமற்ற தாகுமெனக் கருதுகிறேன். ''பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளாகிய நாங்களே இந்தப் பிரச்சினை குறித்து தீர்மானித்துக் கொள் ளும்படி விட்டுவிடுங்கள்'' என்று தோழர் ராம்சே சொல்கிருர். ஒவ்வொரு சிறு குழுவும் இங்கே வந்து ''எங்களில் சிலர்

இதை ஆதரிக்கிருர்கள், சிலர் எதிர்க்கிருர்கள்; இந்த விவ காரத்தை நாங்களே தீர்மானித்துக் கொள்ளும்படி விட்டு விடுங்கள்'' என்று சொல்லுமாயின், நமது அகிலம் எப்படிப் பட்டதாய் இருக்கும்? அப்படியாளுல் அகிலம் என்பதாய் ஒன்று வைத்துக் கொண்டிருப்பதாலும், காங்கிரசைக் கூட்டு வதாலும், இங்கு இப்படி விவாதிப்பதாலும் என்ன பயன்? தோழர் மாக்லேன் அரசியல் கட்சி ஒன்றின் பாத்திரத்தைப் பற்றி மட்டுமே பேசினர். ஆனல் தொழிற் சங்கங்களுக்கும் பாராளுமன்ற முறைக்கும் இது பொருந்தக் கூடியதே. சிறந்த புரட்சியாளர்களில் ஒரு பெரிய பிரிவினர் பாராளுமன்ற முறை ஒரு போராட்ட சாதனமாய்க் கொள்ளப்படுவதை எதிர்க்கிருர்கள் என்பதும் இதன் காரணமாய் தொழிற் கட்சி யுடன் இணைப்பு பெறுவதையும் எதிர்க்கிருர்கள் என்பதும் முற்றிலும் உண்மையே. இந்தப் பிரச்சினையை ஒரு கமிஷ னிடம் ஒப்படைபதே சிறந்ததாய் இருக்குமென நினைக்கிறேன். கமிஷனில் இது விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டபின் கம்யூ னிஸ்டு அகிலத்தின் இந்தக் காங்கிரசிலேயே இது பற்றி தீர் மானிக்க வேண்டும். இது பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம் என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுவில் எது சரியான போர்த் தந்திரம் என்பதை நாம் கூறியாக வேண்டும்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி பற்றிய பிரச்சினை குறித்து தோழர் மாக்-லேனுடைய வாதங்களில் சிலவற்றை இப் பொழுது பரிசீலிக்கிறேன். கம்யூனிஸ்டுகளுடைய கட்சி விமர் சனம் செய்வதற்குத் தனது முழுச் சுதந்திரத்தையும் பாது காத்துக் கொண்டு, தனது சொந்தக் கொள்கையைச் செயல் படுத்த முடியும்படி இருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் மட்டும்தான் தொழிற் கட்சியில் சேர முடியும் என் பதை நாம் ஒளிவுமறைவின்றி கூறியாக வேண்டும். இது தலைமையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது சம்பந் தமாய்த் தோழர் செராட்டி வர்க்க ஒத்துழைப்பு என்பதாய்ப் பேசுகிருர். இது வர்க்க ஒத்துழைப்பு ஆகாது என்று நான் தீர்மானமாய்க் கூறுகிறேன். இத்தாலியத் தோழர்கள் தமது கட்சியில் துராட்டியையும் அவரைச் சேர்ந்தோரையும் போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கு, அதாவது முதலாளித்துவக் கூறுகளுக்கு இடமளித்து வருவதுதான் சந்தேகத்துக்கு இட

மின்றி வர்க்க ஒத்துழைப்பாகும். ஆனால் பிரிட்டிஷ் தொழிற் கட்சி சம்பந்தமான இந்த உதாரணத்தில், ஒத்துழைப்பு பிரிட்டிஷ் தொழிலாளர்களில் முன்னேற்றகரமான சிறுபான்மைக்கும் அவர்களில் மிகப் பெரிய பெரும்பான்மைக்கும் இடையிலான ஒத்துழைப்பே ஆகும். தொழிற் கட்சியின் உறுப்பினர்கள் எல்லோரும் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள். இக்கட்சியின் அமைப்பு வேறு எந்த நாட்டிலும் காண முடியாத விசேஷ வகையானது. தொழிற் சங்கங்களில் ஒழுங்கமைந்த அறுபது அல்லது எழுபது லட்சம் தொழிலாளர்களில் நாற்பது லட்சம் பேரைத் தன்னகத்தே கொண்ட ஒரு நிறுவனம் இது. இவர்கள் தமது அரசியல் கருத்துக்கள் என்னவென்று கூறும்படிக் கேட்கப்படவில்லை. நமது விமர்சன உரிமையைப் பிரயோகிப்பதற்கு அங்கு யாரும் நம்மை தடுக்க முடியுமென தோழர் செராட்டி எனக்கு நிரூபித்துக் காட்டட்டும். அதை நிரூபித்துக் காட்டினால்தான் உங்களால் தோழர் மாக்லேனின் நிலை தவறானதென நிரூபிக்க முடியும். பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி தங்குதடையின்றி ஹெண்டர்சனை ஒரு துரோகி என்று அழைத்துக் கொண்டும் அதே போதில் தொழிற் கட்சியில் தொடர்ந்து இருந்து கொண்டும் இருக்க முடியும். இங்கே நாம் காண்பது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படைக்கும் பின்னிலையாளர்களாகிய பிற்பட்ட தொழிலாளர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பே ஆகும். இந்த ஒத்துழைப்பு அனைத்து இயக்கத்துக்கும் அவ்வளவு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதால் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் சிறுபான்மையாகிய கட்சிக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் இடையே ஓர் இணைப்பாய்ச் செயல்பட வேண்டுமென்று நாம் அறுதியிட்டுக் கூறுகிறோம். இந்தச் சிறுபான்மையினால் வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல முடியவில்லையானால், அவர்களுடன் நெருங்கிய தொடர்புகள் நிறுவிக் கொள்ள முடியவில்லையானால், அது தன்னைக் கட்சி என்றோ தேசியத் தலைமைத் தொழிலாளர் கமிட்டி என்றோ அழைத்துக் கொண்ட போதிலும் அது கட்சியல்ல, பொதுவில் உதவாக்கரையானதே ஆகும். எனக்குத் தெரிந்த வரை பிரிட்டனில் தலைமைத் தொழிலாளர் கமிட்டிகள் மத்திய அமைப்பாய் ஒரு தேசியக் கமிட்டியைப் பெற்றுள்ளன. கட்சி

ஒன்றை நிறுவிக் கொள்வதை நோக்கியமைந்த ஒரு செயலே ஆகும் இது. ஆகவே பிரிட்டிஷ் தொழிற் கட்சி பாட்டாளி களைக் கொண்டது என்பது மறுக்கப்பட்டாலொழிய, இந்த ஒத்துழைப்பு தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படைக் கும் பிற்பட்ட தொழிலாளர்களுக்கும் இடையிலான ஒத் துழைப்பே ஆகும். இந்த ஒத்துழைப்பை முறையாய் நடத்திச் செல்ல முடியவில்லையானால் அந்தக் கம்யூனிஸ்டுக் கட்சி உத வாக்கரையானதே ஆகும்; அப்பொழுது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை. நமது இத் தாலியத் தோழர்களால் மேலும் திடமான வாதங்களை அளிக்க முடியவில்லை என்றால், நாம் அறிந்தவற்றின் அடிப்படையில் பிற்பாடு இங்கே இந்தப் பிரச்சினை குறித்து திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்தே ஆக வேண்டும்—இணைப்புப் பெறுவது தான் சரியான போர்த்தந்திரம் என்கிற முடிவுக்கே நாம் வர வேண்டியிருக்கும்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளில் பெரும்பான்மையோர் இணைப்புப் பெறுவதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று தோழர்கள் டான்னெரும் ராம்சேயும் நம்மிடம் கூறுகின்ற னர். ஆனால் எப்பொழுதுமே பெரும்பான்மையோருடன் ஒத்துத்தான் போக வேண்டுமா? இல்லவே இல்லை. எது சரியான போர்த்தந்திரம் என்பதை இன்னும் அவர்கள் புரிந்து கொள்ளாவிடில், காத்திருப்பது ஒருவேளை நல்ல தாய் இருக்கலாம். எந்தப் போர்த்தந்திரம் சரியானது என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல் இருப்பதைக் காட்டிலும் சிறிது காலத்துக்கு ஒருங்கே இரு கட்சிகள் இருப்பதே மேலானது எனலாம். காங்கிரஸ் பிரதிநிதிகள் எல்லோரது அனுபவத் தையும் இங்கு முன்வைக்கப்பட்ட வாதங்களையும் அடிப் படையாய்க் கொள்வோமாயின், ஒவ்வொரு நாட்டிலும் ஒரே யொரு கம்யூனிஸ்டுக் கட்சியினை உடனடியாகவே அமைத்துக் கொள்ளும்படி கோரும் ஒரு தீர்மானத்தை இங்கேயே இப்பொழுதே நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் வற் புறுத்த மாட்டீர்கள் என்பது தெளிவு. அது முடியாத காரியம். ஆனால் நாம் நமது அபிப்பிராயத்தை ஒளிவுமறைவின்றி எடுத் துரைக்கலாம், தாக்கீதுகள் அளிக்கலாம். பிரிட்டிஷ் பிரதி நிதிக் குழு எழுப்பியிருக்கும் பிரச்சினையை நாம் ஒரு தனிக் கமிஷனில் ஆராய வேண்டும். அதன்பின் தொழிற் கட்சி

யுடன் இணைவதே சரியான போர்த்தந்திரம் என்று நாம் கூற லாம். பெரும்பான்மை இதை எதிர்க்குமாயின், தனியே ஒரு சிறுபான்மையை நாம் நிறுவியாக வேண்டும். அது கல்வி போதம் அளிப்பதாயிருக்கும். பிரிட்டிஷ் தொழிலாளர் பெருந் திரளினர் அப்பொழுதும் தொடர்ந்து பழைய போர்த் தந்திரத்திலேயே நம்பிக்கை கொண்டிருப்பார்களாயின், நமது முடிவுகளை அடுத்த காங்கிரசில் சரிபார்த்துக் கொள் வோம். ஆனால் இந்தப் பிரச்சினை பிரிட்டனை மட்டும் பற்றியது என்று நாம் கூறிவிட முடியாது—அப்படிச் செய்வது இரண்டாவது அகிலத்தின் படுமோசமான பழக்கங்களை நாமும் ஏற்று நடப்பதாகிவிடும். ஒளிவுமறைவின்றி நாம் நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும். பிரிட்டிஷ் கம்யூ னிஸ்டுகள் உடன்பாட்டுக்கு வரவில்லையானால், வெகுஜனக் கட்சி அமைக்கப்படாவிடில், எப்படியும் பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.*

| | |
|---|---|
| **கம்யூனிஸ்டு அகிலத்தின்** | **நூல் திரட்டு,** |
| **இரண்டாவது காங்கிரசின்** | தொகுதி 41, |
| **செய்தியறிக்கை, இ**தழ் 5, | பக்கங்கள் 236-240 |
| 1920 ஆகஸ்டு 5 | |

---

* இந்தச் சொற்பொழிவின் இறுதி வாக்கியங்கள் **கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தியறிக்கை,** இதழ் 5ல் பின்வருமாறு உள்ளன:

''நமது அபிப்பிராயம் எதுவாயினும் அதை நாம் ஒளிவு மறைவின்றி தெரிவிக்க வேண்டும். வெகுஜன இயக்கத்தை ஒழுங்கமைப்பது பற்றிய பிரச்சினை குறித்து பிரிட்டிஷ் கம் யூனிஸ்டுகள் உடன்பாட்டுக்கு வரவில்லையானால், இப்பிரச்சினை குறித்து பிளவு ஏற்படுமானல், பிறகு வெகுஜன இயக்கத்தை ஒழுங்கமைக்கும் பணி நிராகரிக்கப்படுவதைக் காட்டிலும் பிளவே நல்லது. முந்திய குழப்படி நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருவதைக் காட்டிலும் திட்டவட்டமான, போதிய அளவுக்குத் தெளிவான போர்த்தந்திரத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உயர்வதுதான் நல்லது.''—**பதிப்பாசிரியர்.**

# தேசிய இன, காலனிப் பிரச்சினைகள் பற்றிய கமிஷனின் உரை, கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டது, 1920 ஜூலை 26

தோழர்களே, சுருக்கமாய் அறிமுகம் செய்து வைப்பதுடன் நிறுத்திக் கொள்கிறேன். எங்கள் கமிஷனின் செயலாளராய் இருந்துள்ள தோழர் மாரிங், விரிவுரைகளில் நாங்கள் செய்திருக்கும் திருத்தங்கள் குறித்து இதன்பின் உங்களுக்கு விவரமாய்க் கூறுவார். கூடுதல் விரிவுரைகளை வகுத்திடும் தோழர் ராய் அவருக்குப் பிற்பாடு பேசுவார். பூர்வாங்க விரிவுரைகளையும் (திருத்தப்பட்ட முறையில்) கூடுதல் விரிவுரைகளையும் எங்கள் கமிஷன் ஒருமனதாய் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு எல்லாப் பிரதான பிரச்சினைகளிலும் நாங்கள் முழு அளவுக்கு ஒருமனதான நிலையை எய்தியிருக்கிறோம். இப்பொழுது சுருக்கமாய் ஒரு சில கருத்துரைகள் கூறுகிறேன்.

முதலாவதாக, எங்களுடைய விரிவுரைகளுக்கு அடிநிலையாய் அமைந்த தலைமையான கருத்து என்ன? ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்கும் இடையிலான வேறுபாடுதான் தலைமையான கருத்து. இரண்டாவது அகிலத்தையும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் போலல்லாது நாம் இந்த வேறுபாட்டை வலியுறுத்திக் காட்டுகிறோம். இந்த ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் ஸ்தூலமான பொருளாதார உண்மைகளை நிலைநாட்டி எல்லாக் காலனி, தேசிய இனப் பிரச்சினைகளிலும் ஸ்தூலமான எதார்த்த நிலவரங்களிருந்து—கருத்தினமான முதற்கோள்களிலிருந்து அல்ல—தொடங்குவது பாட்டாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் குறிப்பான முக்கியத்துவமுடைத்தது.

அனைத்து உலகும்—இப்பொழுது நாம் கண்ணுறுவது போல—மிகப் பல ஒடுக்கப்பட்ட தேசங்களாகவும் மிகச் சொற்பமான ஒடுக்கும் தேசங்களாகவும் பிரிக்கப்பட்டு பின்னவை பிரம்மாண்ட செல்வங்களும் சக்தி மிகுந்த ஆயுதப் படைகளும் உடைத்திருப்பதில்தான் ஏகாதிபத்தியத்தின் தனி விசேஷமான இயல்பு அடங்கியுள்ளது. உலக மக்களில் மிகப் பெருவாரியானோர்—நூறு கோடிக்கு மேற்பட்டோர் —உலக மக்கள் தொகையை 175 கோடி என்று கொண்டால் 125 கோடிப் பேர் என்றுகூடச் சொல்லலாம்—அதாவது உலக மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதத்தினர் ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சேர்ந்தவர்கள். இந்த ஒடுக்கப்பட்ட தேசங்கள் நேரடியாய்க் காலனிகளாய்ச் சார்புநிலையிலோ, அல்லது பாரசீகத்தையும் துருக்கியையும் சீனாவையும் போல் அரைக் காலனிகளாகவோ, அல்லது ஏதேனும் ஒரு பெரிய ஏகாதிபத்திய அரசால் தோற்கடிக்கப்பட்டு சமாதான ஒப்பந்தங்களின் மூலமாய் அந்த அரசுக்கு வெகுவாய்க் கீழ்ப்பட்டு விட்டவையாகவோ இருந்து வருகின்றன. இப்படி வேறுபடுத்திக் கூறும், ஒடுக்குகிறவை, ஒடுக்கப்பட்டவை என்பதாய்த் தேசங்களைப் பிரித்துக் கூறும் இந்தக் கருத்து விரிவுரைகள் பூராவிலும்—முன்னதாக என்னுடைய கையெழுத்துடன் வெளியிடப்பட்ட முதலாவது விரிவுரைகளில் மட்டுமின்றி தோழர் ராய் சமர்ப்பித்தவற்றிலுங்கூட — இழையோடுவதைக் காணலாம். தோழர் ராயினுடையவை பிரதானமாய் இந்தியாவிலும் பிரிட்டனால் ஒடுக்கப்பட்டு வரும் ஏனைய பெரிய ஆசிய நாடுகளிலுமுள்ள நிலைமையின் கண்ணோட்டத்திலிருந்து வகுக்கப்பட்டவை. நமக்கு இவற்றின் பெரிய முக்கியத்துவம் இதில்தான் அடங்கியுள்ளது.

எங்களுடைய விரிவுரைகளின் இரண்டாவது அடிப்படைக் கருத்து என்னவெனில், ஏகாதிபத்திய யுத்தத்தைத் தொடர்ந்து நிலவும் தற்போதைய உலக நிலைமையில் பல்வேறு மக்களுக்கும் ஒட்டுமொத்தமாய் உலக அரசியல் அமைப்புக்குமுள்ள பரஸ்பர உறவுகள் ஏகாதிபத்திய தேசங்களாகிய ஒரு சிறு கோஷ்டி சோவியத் இயக்கத்தையும் சோவியத் ருஷ்யாவைத் தலைமையில் கொண்ட சோவியத் அரசுகளையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. இதை நாம் மனத்திற் கொண்டால் ஒழிய

எந்த ஒரு தேசிய இன அல்லது காலனிப் பிரச்சினையும், உலகின் தொலை தூர ஒதுக்குப்புறப் பகுதியைப் பற்றிய தாய் இருப்பதையுங்கூட, நம்மால் சரிவர எடுத்துரைத்து முன்வைக்க முடியாமற் போய்விடும். நாகரிக வளர்ச்சி கண்ட நாடுகளிலும் சரி, பிற்பட்ட நாடுகளிலும் சரி, கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த அடிப்படைக் கருத்தைத் தமது துவக்க நிலையாய்க் கொண்டால்தான் அவற்றால் அரசியல் பிரச்சினைகளைச் சரிவர முன்வைக்கவும் அவற்றுக்குத் தீர்வு காணவும் முடியும்.

மூன்றாவதாக, பிற்பட்ட நாடுகளில் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கத்தைப் பற்றிய பிரச்சினையைக் குறிப்பாய் வலியுறுத்த விரும்புகிறேன். ஓரளவு வேறுபாடுகளை உண்டாக்கிய ஒரு பிரச்சினை இது. பிற்பட்ட நாடுகளில் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கத்தைக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என்று கூறுவது கோட்பாட்டிலும் தத்துவத்திலும் சரியா தப்பா என்பது குறித்து நாங்கள் விவாதித்தோம். எங்களுடைய விவாதத்தின் விளைவாய், நாங்கள் ''முதலாளித்துவ-ஜனநாயக'' இயக்கம் என்பதை விட தேசியப்-புரட்சி இயக்கம் என்பதாகவே பேச வேண்டுமென்ற ஒருமனதான முடிவுக்கு வந்தோம். எந்தத் தேசிய இயக்கமும் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கமாகவேதான் இருக்க முடியுமென்பதில் ஐயமில்லை. ஏனெனில் பிற்பட்ட நாடுகளில் மிகப் பெருவாரியான மக்கள் பூர்ஷுவா-முதலாளித்துவ உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயிகளாவர். இந்தப் பிற்பட்ட நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகள்—அவை இந்நாடுகளில் உதித்தெழ முடியுமாயின்—விவசாயி இயக்கத்துடன் திட்டவட்டமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமலும், அதற்குப் பயனுள்ள முறையில் ஆதரவு அளிக்காமலும், கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரத்தையும் கம்யூனிஸ்டுக் கொள்கையையும் பின்பற்ற முடியுமென நினைப்பது கற்பனாவாதமே ஆகும். ஆயினும் நாம் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கம் என்பதாய்ப் பேசுவோமாயின் சீர்திருத்தவாத இயக்கத்துக்கும் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கும் இடையிலான எல்லாப் பாகுபாடுகளையும் விட்டொழிக்க வேண்டியதாகிவிடுமே என்று ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன. பிற்பட்ட நாடுகளிலும் காலனி நாடுகளிலும் இந்தப் பாகுபாடுகள் அண்மையில் மிகத் தெளிவாகவே வெளிப்

பட்டு வருகின்றன. ஏனெனில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கப்பட்ட தேசங்களிலுங்கூட சீர்திருத்தவாத இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்காக தன் சக்திக்கு இயன்றது அனைத்தையும் செய்து வருகிறது. சுரண்டும் நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கத்துக்கும் காலனிகளிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே ஒரு வித இணக்கம் ஏற்பட்டுள்ளதன் பயனாய், அடிக்கடி—மிகப் பல சந்தர்ப்பங்களிலும் என்றுகூடச் சொல்லலாம் — ஒடுக்கப்பட்ட நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கம் தேசிய இயக்கத்துக்கு நிச்சயமாய் ஆதரவாய் இருக்கும் அதே நேரத்தில் புரட்சிகரமான எல்லா இயக்கங்களுக்கும் புரட்சிகர வர்க்கங்களுக்கும் எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் முழு இசைவுடையதாகிவிடுகிறது, அதாவது அதனுடன் சேர்ந்து கொண்டுவிடுகிறது. மறுக்க முடியாதவாறு இது கமிஷனில் நிரூபிக்கப்பட்டது. இந்த பாகுபாட்டைக் கணக்கில் எடுத்து, அனேகமாய் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ''முதலாளித்துவ-ஜனநாயக'' என்ற தொடருக்குப் பதிலாய் ''தேசியப்-புரட்சிகர'' என்னும் தொடரைக் கையாளுவதுதான் சரியான ஒரே வழியாகும் என்று தீர்மானித்தோம். இந்த மாற்றத்தின் தனி முக்கியத்துவம் என்னவெனில், கம்யூனிஸ்டுகளாகிய நாம் காலனிகளில் முதலாளித்துவ-விடுதலை இயக்கங்கள் மெய்யாகவே புரட்சிகரமானவையாகவும், விவசாயிகளையும் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களையும் புரட்சிகர மனப்பாங்குடையோர் ஆகும்படிப் போதமளிப்பதற்கும் ஒழுங்கமையச் செய்வதற்குமான நமது பணிக்கு இவ்வியக்கத்தினர் இடையூராய் இல்லாமலும் இருக்கும்போது மட்டுமே அவற்றை ஆதரிக்க வேண்டும், ஆதரிக்கவும் செய்வர். இந்த நிலைமைகள் இல்லையேல், இந் நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் இந்தச் சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. காலனி நாடுகளில் சீர்திருத்தவாதக் கட்சிகள் ஏற்கனவே இருந்து வருகின்றன. இவற்றின் பிரதிநிதிகள் சில சமயம் தம்மை சமூக-ஜனநாயகவாதிகள் என்றும் சோஷலிஸ்டுகள் என்றும் அழைத்துக் கொள்கிறார்கள். நான் குறிப்பிட்டுள்ள இந்தப் பாகுபாடு எல்லா

விரிவுரைகளிலும் செய்யப்பட்டிருக்கிறது. இதன் விளைவாய் நமது கருத்தோட்டம் மேலும் துல்லியமாய் வரையறுக்கப் பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளின் சோவியத்துகள் குறித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பழைய ஜாரிஸ்டுக் காலனி களாகிய துர்க்கெஸ்தான் முதலான பிற்பட்ட நாடுகளில் ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறைச் செயற்பாடுகள், முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகளில் கம்யூ னிஸ்டுப் போர்த்தந்திரத்தையும் கொள்கையையும் எப்படிச் செயல்படுத்துவது என்னும் கேள்வியை எங்கள் முன்னே எழுப்பின. இந்நாடுகளில் முதலாளித்துவத்துக்கு முற்பட்ட தான நிலைமைகள் மலிந்திருப்பதே இன்னமும் பிரதான நிர் ணயக் கூறாய் விளங்குகிறது. ஆகவே இவற்றில் முற்றிலும் பாட்டாளி வர்க்கத் தன்மையதான இயக்கம் குறித்துப் பேசு வதற்கில்லை. இந்நாடுகளில் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கம் அனேகமாய்க் கிடையாது. இருந்த போதிலும் இங் கும்கூட நாம் தலைமைப் பாத்திரம் ஏற்றுள்ளோம், ஏற்கத் தான் வேண்டும். இந்நாடுகளில் பிரம்மாண்ட இன்னல்களைச் சமாளித்தாக வேண்டுமென்பதை அனுபவம் தெளிவுபடுத்தி யிருக்கிறது. இருப்பினும் இந்த இன்னல்களையும் மீறி, சுயேச்சையான அரசியல் சிந்தனையிலும் சுயேச்சையான அர சியல் செயலிலும் ஈடுபடுவதற்கான ஊக்கத்தை—பாட்டாளி வர்க்கம் அனேகமாய் இல்லாத இடங்களிலுங்கூட—நம்மால் வெகுஜனங்களுக்கு உண்டாக்க முடிகிறது என்பதை எங் களுடைய பணியின் நடைமுறை விளைவுகள் புலப்படுத்தி யுள்ளன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தோழர்களுக்கு இருக்கக் கூடியதைக் காட்டிலும் இந்தப் பணி எங்களுக்குக் கடினமாய் இருந்துள்ளது. ஏனெனில் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் அரசாங்க நிர்வாக வேலைகளில் மூழ்கியிருக்கிறது. அரைப் பிரபுத்துவச் சார்பு நிலைமைகளில் வாழ்ந்து வரும் விவசாயிகள் சோவியத்துகள் மூலமான ஒழுங்கமைப்பு என் னும் கருத்தினை எளிதில் கிரகித்துச் செயல்படுத்த முடியு மென்பது உடனே புரிந்து கொள்ளக் கூடியதே. ஒடுக்கப் பட்ட வெகுஜனங்கள், வர்த்தக மூலதனத்தால் மட்டுமின்றி பிரபுத்துவவாதிகளாலும் மற்றும் பிரபுத்துவத்தை அடிப் படையாய்க் கொண்ட அரசாலும் சுரண்டப்படுவோர், இந்த

ஆயுதத்தை, இவ்வகையான ஒழுங்கமைப்பினைத் தமது நிலைமைகளிலும்கூட கையாள முடியும் என்பதும் தெளிவாய் விளங்குகிறது. சோவியத்துகள் மூலமான ஒழுங்கமைப்பு என்னும் கருத்து எளிமையான ஒன்று. பாட்டாளி வர்க்க உறவுகளில் மட்டுமின்றி விவசாயியின் பிரபுத்துவ, அரைப் பிரபுத்துவ உறவுகளிலும் செயல்படுத்தப்படக் கூடியதே. இத்துறையில் எங்கள் அனுபவம் இன்னமும் கணிசமானதாய் இல்லை. ஆனல் கமிஷனில் நடைபெற்ற விவாதத்தில் காலனி நாடுகளைச் சேர்ந்த பல பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். விவசாயிகளின் சோவியத்துகள், சுரண்டப் படுவோரின் சோவியத்துகள் முதலாளித்துவ நாடுகளில் மட்டுமல்லாது முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான உறவுகளைக் கொண்ட நாடுகளிலும் கையாளப்படக் கூடிய ஆயுதமே என்பதையும், பிற்பட்டவையான காலனி நாடுகளும் அடங்கலாய் எங்கும் விவசாயிகளின் சோவியத்துகளுக்கு அல்லது உழைப்பாளி மக்களின் சோவியத்துகளுக்கு ஆதரவாய்ப் பிரசாரம் நடத்துவது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகளை நிறுவத் தயாராயுள்ள கூறுகளுக்கும் உரித்தான முழு முதற் கடமையாகும் என்பதையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் விரிவுரைகள் குறிப்பிட வேண்டுமென்பதை இந்த விவாதம் ஐயமறத் தெளிவுபடுத்திற்று. எங்கெல்லாம் நிலைமைகள் அனுமதிக்கின்றனவோ அங்கெல்லாம் அவை உழைப்பாளி மக்கள் சோவியத்துகளை நிறுவ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நமது நடைமுறை வேலைகளுக்கு இது மிகவும் சுவையான, மிகவும் முக்கியமான ஒரு துறையைத் திறந்து விடுகிறது. இந்த விவகாரத்தில் இதுகாறும் நமது கூட்டு அனுபவம் விரிவானதாய் இல்லை. ஆனல் மேலும் மேலும் அதிகமான உண்மை விவரங்கள் சிறிது சிறிதாய்ச் சேமிக்கப்படும். முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் பிற்பட்ட நாடுகளின் உழைப்பாளி வெகுஜனங்களுக்கு உதவ முடியும், உதவவும் வேண்டும் என்பதும், சோவியத் குடியரசுகளின் வெற்றிகரப் பாட்டாளி வர்க்கம் இந்த வெகுஜனங்களுக்கு கை கொடுத்து உதவி அவர்களுக்கு ஆதரவளிக்கும் படியான ஒரு நிலையை வந்தடையும் போது பிற்பட்ட நாடுகள் வளர்ச்சில் தமது தற்போதைய கட்டத்திலிருந்து வெளிப்பட்டு முன்னேற முடியும் என்பதும் மறுக்க முடியாதவை.

கமிஷனில் இந்தப் பிரச்சினை குறித்து, நான் கையெழுத்திட்ட விரிவுரைகள் சம்பந்தமாய் மட்டுமின்றி, இன்னும் அதிகமாய் தோழர் ராயின் விரிவுரைகள் சம்பந்தமாகவும் விறுவிறுப்பான விவாதம் நடைபெற்றது. தோழர் ராய் தமது விரிவுரைகளை இங்கு சமர்ப்பித்துப் பேசுவார். அவருடைய விரிவுரைகளுக்குச் சில திருத்தங்கள் ஒருமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிரச்சினை பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டது: தற்போது விடுதலைப் பாதையில் அடிபோடுவனவும், யுத்தத்துக்குப் பிற்பாடு முன்னேற்றத்தை நோக்கி ஓரளவு வளர்ச்சி காணப்படுவனவும் ஆகிய பிற்பட்ட தேசங்களுக்கு முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் தவிர்க்க முடியாததா? நாங்கள் எதிர்மறையில் பதிலளித்தோம். வெற்றி பெற்ற புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் அவர்களிடையே இடையறாது பிரசாரம் நடத்துமாயின், சோவியத் அரசாங்கங்கள் தம் கையிலுள்ள எல்லாச் சாதனங்களையும் கொண்டு அவர்களுக்கு உதவி புரியுமாயின்—பிற்பட்ட நிலையிலுள்ள தேசங்கள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்துள் தவிர்க்கமுடியாதபடி போயாக வேண்டுமெனக் கொள்வது அப்பொழுது தவறாகிவிடும். காலனிகளிலும் பிற்பட்ட நாடுகளிலும் நாம் போராட்ட வீரர்களது சுயேச்சையான படைப்பிரிவுகளையும் கட்சி நிறுவனங்களையும் தோற்றுவிக்க வேண்டும் என்பது அன்னியில், விவசாயிகளது சோவியத்துகளை நிறுவி அவற்றை முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகளுக்குத் தகவமைக்க முயலுவதற்கான பிரசாரத்தை உடனடியாய்த் துவக்க வேண்டும் என்பது அன்னியில், முன்னேறிய நாடுகளது பாட்டாளி வர்க்கத்தின் உதவியுடன் பிற்பட்ட நாடுகள், குறிப்பிட்ட சில வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி—முதலாளித்துவ கட்டத்தினுள் செல்ல வேண்டிய அவசியமில்லாமலே—சோவியத் அமைப்புக்கும், கம்யூனிசத்துக்கும் மாறிச் செல்ல முடியும் என்ற நிர்ணயிப்பையும் கம்யூனிஸ்டு அகிலம் தக்க தத்துவார்த்த அடிநிலையுடன் முன்வைத்திட வேண்டும்.

இப்படி மாறிச் செல்வதற்குத் தேவையான வழிவகைகளை முன்கூட்டியே சுட்டிக் காட்டுவது சாத்தியமல்ல. நடைமுறை அனுபவம் இவற்றைப் புலப்படுத்தும். ஆனால் மிகவும் தொலைதூரத் தேசங்களிலுங்கூட உழைப்பாளி வெகுஜன மக்

களுக்கு சோவியத்துகள் என்னும் கருத்து உயிரனையதாகி விட்டது என்பதும், முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான சமுதாய அமைப்புக்குரிய நிலைமைகளுக்கு சோவியத்துகளைத் தகவமைத்திட வேண்டும் என்பதும், உலகின் எல்லாப் பகுதிகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இத்திசையில் உடனே வேலை தொடங்க வேண்டும் என்பதும் திட்டவட்டமாய் நிலைநாட்டப் பட்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தமது நாடுகளில் மட்டுமின்றி காலனி நாடுகளிலும், மற்றும் முக்கியமாய், சுரண்டும் நாடுகள் காலனி மக்களை அடிமைப்படுத்தி வைப்பதற்காகப் பயன் படுத்திக் கொள்ளும் துருப்புகளிடையிலும் புரட்சிகரப் பணி புரிவதன் முக்கியத்துவத்தையும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் குவெல்ச் எங்கள் கமிஷனில் இதைப்பற்றி பேசினார். அடிமைப் படுத்தப்பட்ட தேசங்களில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கிளம்பும் எழுச்சிகளுக்கு உதவுவது தேசத் துரோகச் செயலாகுமென சாதாரண பிரிட்டிஷ் தொழிலாளி கருதுவதாய் அவர் கூறினார். மெய்தான், பிரிட்டனையும் அமெரிக்காவையும் சேர்ந்த வெறிபிடித்த தேசியவாதப் பித்து கொண்ட தொழிலாளர் பிரபுக்குலத்தோர் சோஷலிசத்துக்கு மிகவும் அபாயகரமானவர்கள்தான். இவர்கள் இரண்டாம் அகிலத்தின் தூண்களாவர். இந்த முதலாளித்துவ அகிலத்தைச் சேர்ந்த தலைவர்களும் தொழிலாளர்களும் புரியும் மிகப் பெரிய துரோகத்தை இங்கே நாம் எதிர்நோக்குகிறோம். இரண்டாவது அகிலத்திலும் காலனிப் பிரச்சினை விவாதிக்கப் பட்டிருக்கிறது. பாஸெல் அறிக்கை[68] இது குறித்து தெட்டத் தெளிவானதாகவே இருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் கட்சிகள் புரட்சிகரச் செயலை மேற்கொள்வோமென சூளுரைத்திருக்கின்றன. ஆனால் மெய்யான புரட்சிகரப் பணி புரிவதாகவோ, சுரண்டப்பட்டும் சார்பு நிலையில் இருத்தப்பட்டுமுள்ள தேசங்கள் ஒடுக்கும் தேசங்களை எதிர்த்து புரியும் கலகத்துக்கு உதவுவதாகவோ இந்தக் கட்சிகளில் எந்த அறிகுறியையும் காணோம். இரண்டாவது அகிலத்திலிருந்து வெளியேறியவையும் மூன்றாவது அகிலத்தில் சேர விரும்புகிறவையுமான கட்சிகளில் மிகப் பலவற்றுக்கும்

கூட இது பொருந்துமென நினைக்கிறேன். எல்லோர் காதிலும் விழும்படி இதை நாம் பகிரங்கமாய்ப் பறையறைந்தாக வேண்டும். இது மறுக்க முடியாத உண்மை. இதை மறுக்க எந்த முயற்சியும் செய்யப் படுகிறதா என்று பார்ப்போம்.

இந்த எல்லா நோக்கங்களும்தான் நமது தீர்மானங்களுக்கு அடிப்படையாய் அமையலாயின. இத்தீர்மானங்கள் மிகவும் நீளமானவை என்பது மெய்தான். ஆனால் இவை பயனுடைத்தவை என்பதிலும் தேசிய இன, காலனிப் பிரச்சினைகள் சம்பந்தமான மெய்யாகவே புரட்சிகரமான பணி ஓங்கவும் ஒழுங்கமையவும் துணை புரியுமென்பதிலும் ஐயமில்லை. இதுவே நமது தலையாய பணி.

கம்யூனிஸ்டு அகிலத்தின்
இரண்டாம் காங்கிரசின்
செய்தியறிக்கை, இதழ் 6
*1920 ஆகஸ்டு 7*

நூல் திரட்டு,
*தொகுதி 41,*
*பக்கங்கள் 241-47*

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

# ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சி முதலாளித்துவ-ஜன நாயகப் பாராளுமன்றத்திற்கு நடக்கும் தேர்தல்களைப் பகிஷ் கரிப்பதென்று முடிவு செய்துள்ளது. சமீபத்தில் முடிவுற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முதலா ளித்துவப் பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும் இந்தப் பாராளுமன்றங்களின் வேலையிலும் பங்கெடுத்துக் கொள்வது பிழையற்ற போர்த்தந்திரம் என்று அங்கீ கரித்தது.

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகளுடைய உரைகளைக் கொண்டு பார்க்கையில் அது கம்யூனிஸ்டு அகி லத்தின் முடிவைக் கட்சிகளில் ஒன்றின் முடிவுக்கு மேலாக வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.[69] முதலா ளித்துவ வர்க்கத்தின் பக்கம் ஓடிவிட்டவர்களாகிய, சோஷ லிசத்தின் துரோகிகளாகிய ஆஸ்திரிய சமூக-ஜனநாயக வாதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் முடிவுபற்றி—அது ஆஸ் திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பகிஷ்கார முடிவுக்கு முரணா யுள்ளது—மகிழ்ச்சி அடைவார்கள் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது. என்றபோதிலும், ஷெய்டமன்கள், நோஸ் கெகள், அல்பேர் தொமாக்கள், கோம்பர்சுகள் ஆகியோரின் கூட்டாளிகளான ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளைப் போன்ற பேர்வழிகளின் வஞ்சகமான மகிழ்ச்சியில் அரசியல் உணர்வுள்ள தொழிலாளர்கள் கவனம் செலுத்த மாட்டார் கள் என்பது நிச்சயம். ரேன்னர்கள் முதலாளித்துவ வர்க்கத் தினிடம் அடிமையாகிக் கிடப்பது போதிய அளவுக்கு வெளிப்

படையாகியுள்ளது; எல்லா நாடுகளிலும் இரண்டாவது அல்லது மஞ்சள் அகிலத்தின் வீரர்களை எதிர்த்து ஆத்திரம் வளர்ந்து பரவி வருகிறது.

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் முதலாளித்துவப் பாராளுமன்றத்திலும், அதே போல தங்கள் சொந்த பத்திரிகைகளும் அடங்கலாய்த் தமது ''வேலைகளின்'' எல்லாத் துறைகளிலும், எதார்த்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தையே முழுக்க முழுக்கச் சார்ந்திருக்கும் வகையில் முதுகெலும்பற்ற ஊசலாட்டத்திலே மட்டுமே திறனுள்ள குட்டி பூர்ஷுவா ஜனநாயகவாதிகள் போல் நடந்து கொள்கிறார்கள். தொழிலாளர்களையும் உழைப்பாளி மக்களையும் வஞ்சிக்கும் ஊழல் மலிந்த இந்த முதலாளித்துவ ஏற்பாட்டின் வஞ்சகத்தை அதன் மேடையிலிருந்து அம்பலப்படுத்துவதற்காகவே கம்யூனிஸ்டுகளாகிய நாம் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் நுழைகிறோம்.

முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் பங்கெடுப்பதை எதிர்த்து ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் வாதங்களில் ஒன்று இன்னும் கொஞ்சம் அதிகக் கவனமாய்ப் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். அந்த வாதம் பின்வருமாறு:

> ''கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்றம் ஒரு கிளர்ச்சி மேடையாக மட்டுமே முக்கியத்துவமுடையது. ஆஸ்திரியாவிலுள்ள எங்களுக்குத் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் ஒரு கிளர்ச்சி மேடையாக இருக்கிறது. எனவே, முதலாளித்துவப் பாராளுமன்றத்தின் தேர்தல்களில் நாங்கள் பங்கெடுக்க மறுக்கிறோம். ஜெர்மனியில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் என்று மெய்யாகவே கருதத்தக்கது ஒன்றுமில்லை. அதனாலேதான் ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் மாறான போர்த்தந்திரத்தைப் பின்பற்றுகிறார்கள்''.

இந்த வாதம் தவறாகுமெனக் கருதுகிறேன். முதலாளித்துவப் பாராளுமன்றத்தை நம்மால் கலைக்க முடியாத வரை நாம் அதை எதிர்த்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வேலை செய்ய வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளிகள் பயன்படுத்துகிற முதலாளித்துவ ஜனநாயகக் கருவிகளை உழைக்கும் மக்களில் (பாட்டாளிகள் மட்டுமின்றி, அரைப் பாட்டாளிகளும் சிறு விவசாயிகளும்)

கணிசமான தொகையினர் நம்புகிறவரை, தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதியினர்—குறிப்பாகப் பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்கள்—அதிமுக்கியமானதாகவும் செல்வாக்கு உள்ளதாகவும் கருதுகிற அதே மேடையிலிருந்து இந்த வஞ்சகத்தை நாம் விளக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றித் தேர்தல்கள்—முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்த் தங்களுடைய சோவியத்துகளுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் தேர்தல்கள்—நடத்த முடியாதிருக்கிறவரை, முதலாளித்துவ வர்க்கம் அரசு அதிகாரத்தை வகித்து மக்களின் பல்வேறு வர்க்கங்களைத் தேர்தல்களில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறவரை, அந்தத் தேர்தல்களில், பாட்டாளி வர்க்கம் மட்டுமின்றி எல்லா உழைப்பாளி மக்களிடையேயும் கிளர்ச்சி செய்யும் பொருட்டு, நாம் பங்கெடுப்பது நமது கடமையாகும். முதலாளித்துவப் பாராளுமன்றம், நிதி மோசடிகளையும் எல்லா விதமான லஞ்சங்களையும் மூடிமறைப்பதற்கு (பூர்ஷ்வாப் பாராளுமன்றத்தில் நடப்பதுபோல் வேறெங்கும் எழுத்தாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், மற்றவர்களின் விஷயத்தில் இவ்வளவு பெரிய அளவில் மிக ''நயமான'' வகைப்பட்ட லஞ்சம் கையாளப்படுவதில்லை) ''ஜனநாயகத்தைப்'' பற்றிய வாய்ச்சொற்களைப் பயன்படுத்தி, தொழிலாளிகளை வஞ்சிப்பதற்குரிய ஒரு சாதனமாக இருந்துவருகிற வரை, இதே நிறுவனத்தில் — அது மக்களின் சித்தத்தை வெளியிடுவதாகக் கருதப்படுகிறது; ஆனால் பணக்காரர்கள் மக்களை ஏய்ப்பதை மூடிமறைப்பதே உண்மையில் அது ஆற்றும் பணியாகும்—கம்யூனிஸ்டுகளாகிய நாம் இருந்து வஞ்சனையை முரணின்றி அம்பலப்படுத்துவதும் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகள் பக்கம் ஓடிப்போகிற ரேன்னர்களின் கும்பல் புரியும் ஒவ்வொரு காரியத்தையும் அம்பலப்படுத்துவதும் நமது கடமையாகும். பாராளுமன்றத்திலே முதலாளித்துவக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் இடையே உள்ள உறவுகள் மிக அடிக்கடி தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன; முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களிடையேயும் நிலவும் உறவுகளை அவை பிரதிபலிக்கின்றன. எனவேதான், முதலாளித்துவப்

பாராளுமன்றத்திலே, அதனுள் இருந்தே கம்யூனிஸ்டு களாகிய நாம் கட்சிகள்பால் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் போக்கு, பண்ணைத் தொழிலாளிகள்பால் நிலப்பிரபுக்கள் கடைப் பிடிக்கும் போக்கு, ஏழை விவசாயிகள்பால் பணக்கார விவசாயிகள் கடைப்பிடிக்கும் போக்கு, அலுவலக ஊழியர்கள் பால், சிறு உடைமையாளர்கள்பால் பெரு முதலாளிகள் கடைப்பிடிக்கும் போக்கின், இப்படியே மற்றவற்றின் உண்மையை நாம் மக்களுக்கு விளக்க வேண்டும்.

முதலாளிகளின் கேடுகெட்ட, நாசூக்கான தந்திரங்கள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்ளவும், குட்டிபூர்ஷுவா வர்க்கத்தினர்மீதும் பாட்டாளி வர்க்கமல்லாத உழைக்கும் மக்கள் திரள்மீதும் செல்வாக்குச் செலுத்தக் கற்றுக் கொள்ளவும், பாட்டாளி வர்க்கம் இதையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். இந்தப் ''பள்ளிப் பயிற்சி'' இல்லாமல், பாட்டாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பொறுப்புக்களை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியாது. காரணம், அப்போதுங்கூட, முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய புதிய நிலையிலிருந்து கொண்டு (ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட ஒரு வர்க்கம் என்ற நிலையிலிருந்து) பல வடிவங்களிலே பல துறைகளிலே விவசாயிகளை ஏமாற்றியும் அலுவலகச் சிப்பந்திகளை லஞ்சம் கொடுத்தும் பயமுறுத்தியும் வரும், ''ஜனநாயகம்'' பற்றிய வாய்ச்சொற்களைக் கொண்டு தன்னுடைய அசிங்கமான, சுயலாப அபிலாஷைகளை மூடிமறைக்கும் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றும்.

இல்லை, ரேன்னர்களின், அவர்களை ஒத்த முதலாளித்துவ வர்க்கத்தின் இதர ஏவலாட்களின் எக்களிப்பைக் கண்டு ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் பயப்பட மாட்டார்கள். ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய பகிரங்கமான, நேரடியான, சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டின் அங்கீகாரத்தைப் பிரகடனம் செய்ய அஞ்சமாட்டார்கள். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களுடைய அறிவு, சித்தம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படுவதால் தொழிலாளர்களுடைய விடுதலைப் போராட்

டத்தின் மகத்தான பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்பதிலே நாம் பெருமைப்படுகிறோம்; அவ்வழியே, செயல்பூர்வமாக (ரேன்னர்களும், ஃபிரிட்ஸ் ஆட்லர்களும், ஒட்டோ பௌவர்களும் செய்வதுபோல் சொல்லளவில் அல்ல) உலகெங்கும் கம்யூனிசத்துக்காக நடைபெறும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமையைச் செயல்படுத்துகிறோம்.

*1920, ஆகஸ்டு 15*

**நி. லெனின்**

*1920, ஆகஸ்டு 31,*
*Die Rote Fahne* (Wien),
இதழ் 396ல் ஜெர்மன் மொழியில்
வெளியிடப்பட்டது

1925ல், ''லெனின் மஞ்சரி IV''ல்
ருஷ்ய மொழியில் முதன்முதலில்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 41
பக்கங்கள் 268-73

# 1921, ஜூலை 1ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங்கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு

தோழர்களே, தற்காப்புக்கு அப்பால் செல்லாது நிறுத்திக் கொள்ள வேண்டியிருப்பது பற்றி மிகவும் வருத்தப் படுகிறேன் (சிரிப்பு). ஏன் மிகவும் வருத்தப்படுகிறேன் என்று சொல்கிறேன் என்றால், தோழர் தெரச்சீனியின் சொற்பொழிவையும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் கொண்டு வந்துள்ள திருத்தங்களையும் நான் தெரிந்து கொண்ட பிறகு தாக்குதலில் இறங்கவே வெகுவாக விரும்புகிறேன். ஏனெனில், முறையாகப் பார்த்தால், தெரச்சீனியும் இந்த மூன்று பிரதிநிதிக் குழுக்களும் ஆதரித்து வாதாடும் கருத்துக்களை எதிர்த்துத் தாக்குதல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இப்படிப்பட்ட தவறுகளை எதிர்த்து, இப்படிப்பட்ட ''இடதுசாரி'' அசட்டு வாதங்களை எதிர்த்து, காங்கிரஸ் முழு மூச்சுடன் தாக்குதல் நடத்தாவிட்டால் இயக்கம் முழுவதும் பாழாகி விடும். இது என் ஆழ்ந்த நம்பிக்கை. ஆனால் நாம் நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட கட்டுப்பாடுள்ள மார்க்சியவாதிகள். தனிப்பட்ட தோழர்களை எதிர்த்துப் பேசுவதோடு நாம் திருப்திப்பட முடியாது. ருஷ்யர்களாகிய நாங்கள் இந்த இடதுசாரி வாய்ச்சொற்களைக் கேட்டுக் கேட்டு ஏற்கனவே சலிப்புற்றவர்கள். நாம் நிறுவன ஒழுங்கமைப்பு கொண்டவர்கள். நமது திட்டங்களை வகுக்கும்போது, நாம் ஒழுங்கமைந்த முறையில் சென்று சரியான கொள்கை வழியைக் கண்டுபிடிக்க முயல வேண்டும். நமது ஆய்வுரைகள் ஒரு சமரசமே என்பது தெரிந்ததுதான். சமரசம்தான், அதனால் என்ன? ஏற்கனவே தமது மூன்றாவது காங்கிரசைக் கூட்டி,

திட்டவட்டமான அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்திருக்கிற கம்யூனிஸ்டுகளிடையே சில சந்தர்ப்பங்களில் சமரசங்கள் அவசியம்தான். ருஷ்யப் பிரதிநிதிகள் முன்வைத்த நமது ஆய்வுரைகள் மிகமிக கவனமான முறையிலே ஆராய்ந்து தயாரிக்கப்பட்டவை, அவை நீண்ட விவாதங்களின் விளைவாகவும் பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுடன் கலந்து ஆலோசித்ததன் விளைவாகவும் ஏற்கப்பட்டவை. அவற்றின் குறிக்கோள் கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படைக் கொள்கை வழியை நிலைநாட்டுவதாகும். மெய்யான மையவாதிகளைச் சம்பிரதாய பூர்வமாகக் கண்டித்ததோடல்லாமல் கட்சியிலிருந்து வெளியேற்றிய பிறகு இன்று அவை முக்கியமாய்த் தேவைப்படுகின்றன. இவைதாம் உண்மைகள். இந்த ஆய்வுரைகளை ஆதரிப்பது என் கடமையாகும். இன்று தெரச்சீனி முன்வந்து மையவாதிகளை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் எப்படி அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் சொல்லும் போது, இந்தத் திருத்தங்கள் ஒரு திட்டவட்டமான போக்கைக் குறிப்பனவாயின் இந்தப் போக்கை எதிர்த்துச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் போராட்டம் நடத்த வேண்டும் என்று சொல்கிறேன்; ஏனெனில் அப்படிச் செய்யாவிட்டால், கம்யூனிசமும் இல்லை; கம்யூனிஸ்டு அகிலமும் இல்லை. இந்தத் திருத்தங்களுக்கு ஆதரவாய் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின்[70] கையொப்பம் இல்லாதிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. (சிரிப்பு.) தெரச்சீனி ஆதரிப்பதையும் இந்தத் திருத்தங்கள் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள். அவை இவ்வழியிலே தொடங்குகின்றன: ''பக்கம் 1, பத்தி 1, வரி 19ல் 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண்டும்''. பெரும்பான்மையா? அது மிகவும் அபாயமானதாயிற்றே! (சிரிப்பு.) பிறகு: ''அடிப்படையான கோட்பாடுகள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்று புகுத்துக. அடிப்படைக் கோட்பாடுகள் என்பவையும் இலட்சியங்கள் என்பவையும் வெவ்வேறானவை. அராஜகவாதிகள்கூடத்தான் இலட்சியங்களில் நம்மோடு உடன்பாடு கொண்டுவிடுவார்கள், ஏனெனில் அவர்களும் சுரண்டலையும் வர்க்கப் பாகுபாடுகளையும் ஒழிக்க நிற்கிறார்கள்.

என் வாழ்க்கையில் நான் மிகச் சில அராஜகவாதிகளை யே சந்தித்துப் பேசியிருக்கிறேன். இருந்தபோதிலும், நான் அவர்களைப் போதிய அளவுக்குத் தெரிந்து கொண்டுவிட்டேன். நான் சில சமயங்களில் அவர்களோடு இலட்சியங்களில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றேன்; ஆனால் கோட்பாடுகள் விஷயத்தில் என்றைக்கும் இல்லை. கோட்பாடுகள்—அவை இலட்சியம் அல்ல, வேலைத் திட்டம் அல்ல, போர்த்தந்திரங்களல்ல, தத்துவமல்ல. போர்த்தந்திரங்களும் தத்துவமும் கோட்பாடுகளல்ல. கோட்பாடுகளில் நமக்கும் அராஜகவாதிகளுக்கும் வேறுபாடு என்ன? கம்யூனிஸத்தின் கோட்பாடுகள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதும் மாற்றநிலைக் கட்டத்தில் அரசு பலவந்தத்தைப் பயன்படுத்துவதும் அவசியம் என்கின்றன. இவை கம்யூனிசத்தின் கோட்பாடுகளாகுமே அன்றி அதன் இலட்சியமாகா. ஆகவே இந்தப் பிரேரணையை முன் வைத்துள்ள தோழர்கள் தவறு இழைப்போர் ஆகின்றனர்.

இரண்டாவதாக, இங்கே சொல்லப்பட்டிருப்பதாவது: '' 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண்டும்''. அந்த வாசகம் பூராவையும் படியுங்கள்:

> ''பல நாடுகளில் புரட்சிகரமான அர்த்தத்தில் எதார்த்தச் சூழ்நிலை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தில், மிகப் பல வெகுஜனக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவப் பெற்றிருக்கையில், அவை தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மேல் உண்மையாகத் தலைமையை நடைமுறைப் புரட்சிகரப் போராட்டத்தில் எங்குமே தங்கள் கையில் எடுத்துக் கொள்ளாதிருக்கிற நிலைமைகளில், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைகளைப் பரிசீலிக்க முற்பட்டிருக்கிறது.''

ஆக, அவர்கள் ''பெரும்பான்மை'' என்கிற சொல் நீக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட எளிய விஷயங்களில் நாம் உடன்பட முடியாதென்றால், நாம் எப்படி ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்ய முடியும், பாட்டாளி வர்க்கத்தை வெற்றிக்குக் கொண்டு செல்ல முடியும் என்று எனக்குப் புரியவில்லை. நாம் கோட்பாடுகள் பற்றிய பிரச்சினையிலும் உடன்பாடு காண முடியாமற்போவதில் சிறிதும் வியப்

பில்லே. தொழிலாளி வர்க்கத்தினிடையே பெரும்பான்மையை ஏற்கனவே பெற்றிருக்கும் ஒரு கட்சியை எனக்குக் காட்டுங்கள். ஓர் உதாரணம் குறிப்பிட வேண்டும் என்று தெரச்சீனி நினைக்கக்கூட இல்லே. அப்படி ஓர் உதாரணம் எதுவும் இல்லேதான்.

ஆகவே, ''கோட்பாடுகள்'' என்கிறதற்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்கிற வார்த்தையைப் புகுத்த வேண்டும்; ''பெரும்பான்மை'' என்கிற சொல்லே நீக்கிவிட வேண்டும். நன்றி, அது முடியாத காரியம்! நாம் அப்படிச் செய்யப் போவதில்லே. ஜெர்மன் கட்சிகூட—மிகச் சிறந்த கட்சிகளில் ஒன்று அது—தன்னிடம் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லே. இதுதான் உண்மை. ஒரு மிகக் கடுமையான போராட்டத்தை எதிர்நோக்கும் நாம் இந்த உண்மையைச் சொல்லப் பயப்படவில்லே; ஆனுல் ஒரு பொய்யுடன் தொடங்க விரும்புகிற மூன்று பிரதிநிதிக் குழுக்கள் இங்கே உள்ளன; ஏனெனில், ''பெரும்பான்மை'' என்கிற சொல்லேக் காங்கிரஸ் நீக்கிஞல் அது பொய்யை விரும்புகிறது என்றுதான் அர்த்தம். அது மிகத் தெளிவு.

பிறகு அடியிற்கண்ட திருத்தம் வருகிறது: ''பக்கம் 4, பத்தி 1, வரி 10ல், 'பகிரங்கக் கடிதம்'[71] முதலிய சொற்கள் 'நீக்கப்பட வேண்டும்' ''. ஏற்கனவே இன்று நான் கேட்ட ஒரு சொற்பொழிவில் இதே கருத்து இருக்கக் கண்டேன். ஆனுல் அது இயல்பாயிருந்தது. அது தோழர் ஹெம்பெலின் சொற்பொழிவு; அவர் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர். அவர் சொன்னதாவது: '' 'பகிரங்கக் கடிதம்' ஒரு சந்தர்ப்பவாதச் செய்கையாகும்''. நான் இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏற்கனவே தனிப்பட்ட முறையில் பேசப்பட்டதைக் கேட்டுப் பெரிதும் வருத்தப்பட்டேன், வெட்கமடைந்தேன். ஆனுல் காங்கிரசிலே, இப்படிப்பட்ட நீடித்த விவாதத்திற்குப் பிறகு, ''பகிரங்கக் கடிதம்'' சந்தர்ப்பவாதமானது என்று அறிவிக்கப்பட்டால்—அது வெட்கக்கேடு; மானக்கேடுதான்! இப்போது தோழர் தெரச்சீனி மூன்று பிரதிநிதிக் குழுக்களின் சார்பாக முன்வந்து ''பகிரங்கக் கடிதம்'' என்கிற சொற்களே நீக்க விரும்புகிருர். அப்படியாஞல் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியோடு சண்டைபோடுவதில் என்ன பயன்? ''பகிரங்கக் கடிதம்''

ஒரு முன்மாதிரியான அரசியல் நடவடிக்கை. நமது ஆய்வுரைகளில் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் நிச்சயமாக ஆதரித்து நிற்க வேண்டும். அது ஒரு முன்மாதிரி என்பதற்குக் காரணம், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் பக்கம் வென்று கொள்வதற்குரிய நடைமுறை வழிமுறையின் முதற் செயல் ஆகும். அநேகமாக எல்லாப் பாட்டாளிகளுமே ஒழுங்கமைந்துள்ள ஐரோப்பாவில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் தரப்புக்கு வரும்படி வென்று கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிற எவரும் கம்யூனிஸ்டு இயக்கத்தால் இழக்கப்பட்டுவிட்டவரே; மகத்தான புரட்சியின் மூன்றுண்டுக் காலத்தில் இதைக் கற்றுக் கொள்ளாத ஒருவர் எதையும் என்றைக்கும் கற்கப் போவதில்லை.

கட்சி சிறிதாக இருந்தபோதிலும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று தெரச்சீனி சொல்கிறார். ஆய்வுரைகளில் செகோஸ்லோவாக்கியாவைப் பற்றிச் சொல்லியிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. இங்கே 27 திருத்தங்கள் உள்ளன; அவற்றை நான் விமர்சிக்க எண்ணினுல் சில பேச்சாளர்களைப் போல மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் பேச வேண்டியிருக்கும்.... இதில் நாம், செகோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி 3 லட்சத்திலிருந்து 4 லட்சம் வரை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்றும், பெரும்பான்மையை நம் பக்கம் வரும்படிச் செய்து, வெல்லற்கரிய சக்தியைச் சிருஷ்டிப்பதும் தொழிலாளர்களில் புதிய வெகுஜனப் பகுதிகளைத் தொடர்ந்து அணி திரட்டுவதும் அவசியம் என்றும் இங்கே கூறப்பட்டதைக் கேட்டோம். தெரச்சீனி ஏற்கனவே தாக்கத் தயாராகிவிட்டார். அவர் சொல்கிறுர்: ஏற்கனவே 4 லட்சம் தொழிலாளர்கள் கட்சியில் இருக்கிறுர்கள் என்றுல் அதற்கு மேலாக நாம் ஏன் விரும்ப வேண்டும்? நீக்குங்கள்! (சிரிப்பு.) ''வெகுஜனங்கள்'' என்ற சொல்லைக் கண்டு அவர் பயப்படுகிறுர்; அதை அகற்றிவிட விரும்புகிறுர். தோழர் தெரச்சீனி ருஷ்யப் புரட்சியை மிகச் சொற்ப அளவே புரிந்து கொண்டிருக்கிறுர்.

ருஷ்யாவில் நாங்கள் ஒரு சிறு கட்சியாகத்தான் இருந்தோம்; ஆனுல் அதோடு கூடுதலாக எங்களுடன் நாடெங்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்து

களில் பெரும்பாலானவற்றையும் பெற்றிருந்தோம். (குரல்கள் : ''முற்றிலும் உண்மை!'') இத்தகையது உங்களிடம் எதுவும் இருக்கிறதா? இராணுவத்தில் அநேகமாகப் பாதி எங்கள் பக்கம் இருந்தது—அப்போது அது குறைந்தபட்சம் ஒரு கோடி பேரைக் கொண்டிருந்தது. நிஜமாகவே இராணுவத்தில் பெரும்பான்மை உங்களிடம் இருக்கிறதா? அப்படிப்பட்ட நாட்டை எனக்குக் காட்டுங்கள்! தோழர் தெரச்சீனியின் இந்தக் கருத்துக்களை மற்றும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் கொண்டிருக்கின்றன என்றால், அப்போது கம்யூனிஸ்டு அகிலத்தில் எதோ தவறு என்றுதான் அர்த்தம்! அப்படியென்றால் ''நிறுத்துங்கள்! தீர்மானகரமான போராட்டம் நடத்தியாக வேண்டும்! இல்லையேல் கம்யூனிஸ்டு அகிலம் நாசமாகிவிடும்'' என்று நாம் சொல்லியே ஆக வேண்டும். (ஹாலில் பரபரப்பு.)

நான் ஒரு தற்காப்பு நிலை எடுத்துக் கொண்டுள்ள போதிலும் (சிரிப்பு), என் அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்லியே ஆக வேண்டும், எனது பிரசங்கத்தின் இலட்சியமும் கோட்பாடும் எங்கள் பிரதிநிதிக் குழு முன்மொழிந்த தீர்மானத்தையும் ஆய்வுரைகளையும் ஆதரிப்பதுதான் என்று. நிஜந்தான், அவற்றில் ஒரு எழுத்தைக்கூட மாற்றக் கூடாது என்று சொல்வது வெறும் பகட்டே ஆகும். நான் பல தீர்மானங்களைப் படித்துப் பார்த்திருக்கிறேன்; அவற்றில் ஒவ்வொரு வரியிலும் நல்ல திருத்தங்கள் புகுத்த முடியும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது பகட்டுப் புலமையாகவே இருக்கும். இருந்தபோதிலும், அரசியல் அர்த்தத்தில் இப்போது நான் அதில் ஒரு எழுத்தைக்கூட திருத்தக்கூடாது என்று சொன்னால் அதற்குக் காரணம், நான் பார்க்கிறபடி திருத்தங்கள் திட்டவட்டமான ஓர் அரசியல் இயல்பு கொண்டவையாயுள்ளன; அவை கம்யூனிஸ்டு அகிலத்துக்குத் தீங்கும் அபாயமும் உண்டாக்கும் ஒரு பாதையிலே நம்மைக் கொண்டு செல்கின்றன. எனவே, நானும், நாமெல்லோரும், ருஷ்யப் பிரதிநிதிக் குழுவும், ஆய்வுரைகளில் ஒரு எழுத்தையும் மாற்றக் கூடாது என்று வற்புறுத்த வேண்டும். நாம் நமது வலதுசாரி நபர்களைக் கண்டித்ததோடு நிற்கவில்லை—அவர்களை வெளியேற்றியும் இருக்கிறோம். ஆனால், தெரச்சீனியைப் போல், வலதுசாரிகளை எதிர்க்கும் போராட்டத்தை ஒரு வகைப்

போட்டி விளையாட்டாக மாற்றினல் அப்பொழுது நாம் ''நிறுத்துங்கள்! இல்லையேல் அபாயம் மிகவும் தீவிரமாகி விடும்!'' என்று சொல்லியே ஆக வேண்டும்.

தாக்குதல் போராட்டத் தத்துவத்தை தெரச்சீனி ஆதரித் திருக்கிருர். இது சம்பந்தமாக, அந்த அபகீர்த்தி பெற்ற திருத்தங்கள் இரண்டு மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு சூத் திரத்தைப் பிரேரேபிக்கின்றன. அவற்றை நாம் வாசிக்கத் தேவையில்லை. அவை என்ன சொல்கின்றன என்பதை நாமறி வோம். பிரச்சினையை தெரச்சீனி மிகத் தெளிவாய்க் கூறி யிருக்கிருர். ''இயங்கியல் போக்குகளைச்'' சுட்டிக்காட்டியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்லுதலைச்'' சுட்டிக்காட்டியும் அவர் தாக்குதல் தத்துவத்தை ஆதரித்தார். ருஷ்யாவிலுள்ள நாங்கள் மைய வாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் போதிய அரசியல் அனுபவம் பெற்றிருக்கிறேம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே எங்களுடைய சந்தர்ப்பவாதிகளையும் மையவாதி களையும், மென்ஷிவிக்குகளையும்கூடத்தான், எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தோம்; மேலும் மென்ஷிவிக்குகள் மட்டுமின்றி அரை-அராஜகவாதிகள் மீதும் நாங்கள் வெற்றிபெற்றேம்.

இதை நாங்கள் செய்யாதிருந்தால், அதிகாரத்தில் மூன் றரை ஆண்டுகளுக்கு அல்ல, ஏன் மூன்றரை வாரங்களுக்கும் கூட இருந்திருக்க முடியாது; இங்கே கம்யூனிஸ்டுக் காங் கிரஸ்களையும் கூட்டியிருக்க முடியாது. ''இயங்கியல் போக்கு கள்'', ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்லுதல்''—இவையெல்லாம் எங்களுக்கு எதிராக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் பயன்படுத்திய வாய்ச்சொற்களே. அவர்கள் இப்போது சிறைகளில் இருக்கிருர்கள் — அங்கே ''கம்யூனிஸத்தின் இலட்சியங்களை'' ஆதரித்துக் கொண்டும், ''செயலற்ற நிலை யிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்வதைப்'' பற்றி சிந்தித்துக் கொண்டும் இருக்கிருர்கள். (சிரிப்பு.) பிரேரேபிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் வாதித்திருப்பது போல் வாதம் புரிவது அசாத்தியம், ஏனெனில் அவற்றில் மார்க்சியமோ, அரசியல் அனுபவமோ, நியாயமோ இல்லை. நமது ஆய்வுரைகளில் நாம் புரட்சிகரமான தாக்குதல் பற்றி

ஒரு பொதுவான தத்துவத்தை விவரித்து இருக்கிருேமா? ராதெக் அல்லது எங்களில் யாராவது அப்படிப்பட்ட முட்டாள்தனத்தைச் செய்திருக்கிருேமா? குறிப்பிட்ட ஒரு நாடு, குறிப்பிட்ட ஒரு காலப்பகுதி சம்பந்தமாகவே தாக்குதல் தத்துவத்தைப் பற்றிப் பேசியிருக்கிருேம்.

முதல் புரட்சிக்கு முன்பே புரட்சிகரக் கட்சி தாக்குதலில் இறங்க வேண்டுமா என்று சந்தேகப்பட்ட ஆட்கள் சிலர் இருந்தனர். நாங்கள் மென்ஷிவிக்குகளை எதிர்த்து நடத்திய போராட்டத்திலிருந்து இதற்கு உதாரணங்கள் காட்ட முடியும். இப்படிப்பட்ட சந்தேகங்கள் எந்த சமூக-ஜனநாயகவாதியிடமும் — அப்படித்தான் அந்தக் காலத்தில் நாங்களெல்லோரும் எங்களை அழைத்துக் கொண்டோம்— எழுமாயின் அவருக்கு எதிராகப் போராட்டம் தொடுத்து, அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்றும் மார்க்சியத்திலும் புரட்சிகரக் கட்சியின் இயக்கவியலிலும் எதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை என்றும் சொன்னேம். பொதுப்படையாய்ப் புரட்சிகரத் தாக்குதல் அனுமதிக்கத்தக்கதுதானு என்று ஒரு கட்சி சந்தேகிப்பது சாத்தியம்தானு? எங்கள் நாட்டில் அப்படிப்பட்ட உதாரணங்களைக் காணப் பதினைந்து ஆண்டுகள் பின்னேக்கிச் செல்ல வேண்டும். தாக்குதல் தத்துவத்தை மறுக்கிற மையவாதிகளோ மறைவான மையவாதிகளோ இருந்தால், அப்படிப்பட்டவர்களை உடனே வெளியே தள்ள வேண்டும். இந்தப் பிரச்சினை சர்ச்சைக்குரியது அல்ல. ஆனல் இன்றைக்கும்கூட, கம்யூனிஸ்டு அகிலத்தில் மூன்ருண்டுகளாக இருந்து வந்த பிறகும்கூட, நாம் ''இயங்கியல் போக்குகள்'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்வது'' பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிருேம் என்கிற உண்மை இருக்கிறதே—அது ஒரு வெட்கக்கேடு, மானக்கேடு.

எங்களோடு சேர்ந்து இந்த ஆய்வுரைகளை எழுதிய தோழர் ராதெக்கோடு எங்களுக்கு இவ்விஷயத்தில் சர்ச்சை எதுவும் கிடையாது. எதார்த்தத்தில் ஒரு தாக்குதல் தயாரிக்கப் படாமலிருக்கும்போது புரட்சிகரமான தாக்குதல் குறித்த தத்துவத்தைப் பற்றி ஜெர்மனியில் பேசத் தொடங்குவது முழுவதும் சரியானதாய் இல்லாமல் இருக்கலாம். என்ருலும் மார்ச்சு நடவடிக்கை ஒரு மகத்தான முன்னேற்றப் படிதான்

—அதன் தலைவர்களின் தவறுகள் இருந்தபோதிலும். ஆனால் இது பரவாயில்லை. லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீர தீரமாய்ப் போராடினார்கள். எவ்வளவு தைரியமாய் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போரிட்டிருந்த போதிலும், கேல்ட்ஸைப் பற்றி ஒரு ருஷ்யக் கட்டுரையில் ராதெக் சொன்னதையே நாம் திரும்பவும் சொல்லியாக வேண்டும். யாராவது, அராஜகவாதியாய் இருப்பினும்கூட, முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து வீரமாகப் போரிடுவது ஒரு பெரிய விஷயமே; ஆனால் லட்சக் கணக்கானோர் சமூக-துரோகிகளின் மோசமான ஆத்திரமூட்டலையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் எதிர்த்துப் போரிடுவது ஒரு மெய்யான முன்னேற்றப் படிதான்.

தன் தவறுகளை விமர்சனக் கண் கொண்டு பார்ப்பது மிக முக்கியமாகும். அதிலிருந்துதான் நாம் தொடங்கினோம். லட்சக் கணக்கான பேர் பங்கெடுத்த ஒரு போராட்டத்திற்குப் பிறகு யாராவது இந்தப் போராட்டத்தை எதிர்த்துப் பேசி லெவீ போல் நடந்து கொண்டால், அவரை வெளியேற்ற வேண்டும். அதைத்தான் செய்தோம். ஆனால் இதிலிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும். உண்மையிலே நாம் ஒரு தாக்குதலுக்குத் தயார் செய்திருந்தோமா? (ராதெக்: ''நாம் தற்காப்புக்குக்கூட தயார் செய்திருக்கவில்லை''.) பத்திரிகைக் கட்டுரைகள் மட்டுமே தாக்குதல் பற்றிப் பேசின. 1921 ஜெர்மனியின் மார்ச்சு நடவடிக்கைக்கு[72] அனுஷ்டிக்கப்பட்ட அளவில் இந்தத் தத்துவம் சரியல்ல—அதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்; ஆனால், பொதுப்படையாக, புரட்சிகரத் தாக்குதல் தத்துவம் சிறிதும் தவறானதல்ல.

ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றோம். அவ்வளவு சுலபமாக வெற்றி பெற்றதற்குக் காரணம் எங்கள் புரட்சிக்கு ஏகாதிபத்திய யுத்தத்தின் போது தயார் செய்திருந்தோம். அதுதான் முதல் நிபந்தனை. ருஷ்யாவில் ஒரு கோடி தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆயுதமேந்தியிருந்தனர்; எந்த விலை கொடுத்தேனும் உடனடியான சமாதானம் என்பதே எங்கள் கோஷமாய் இருந்தது. நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் விவசாயிகளில் மிகப் பெரும்

திரளானோர் பெரிய நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் புரட்சி செய்யும் மனோபாவத்தோடு இருந்தனர். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச்[73] சேர்ந்தோராய் இருந்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், 1917 நவம்பரில் ஒரு பெரிய விவசாயிக் கட்சியாயிருந்தனர். அவர்கள் புரட்சிகரமான வழிமுறைகளைக் கோரினர், ஆனால், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் வீரர்களைப் போலவே, புரட்சிகரமான வழியிலே செயல் புரியப் போதிய தைரியம் பெற்றிருக்கவில்லை. 1917 ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் நாங்கள் சொன்னோம்: ''தத்துவத் துறையிலே நாங்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரை முன்போல் எதிர்த்துப் போராடுகிறோம்; ஆனால் நடைமுறையில் அவர்களுடைய வேலைத்திட்டத்தை நாங்கள் ஏற்கத் தயார், ஏனெனில் அதை எங்களால் மட்டுமே செயலுக்குக் கொண்டுவர முடியும்'' என்று. நாங்கள் சொன்னபடியே செய்தோம். 1917 நவம்பரில் எங்கள் வெற்றிக்குப் பிறகு, எங்களிடம் நல்ல மனப்பான்மை கொண்டிராத விவசாயி மக்களை, அரசியல் நிர்ணய சபைக்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரைப் பெரும்பான்மையாக அனுப்பி வைத்த அவர்களை, ஒரு சில நாட்களிலே இல்லாவிட்டாலும் — நான் தவறாக எதிர்பார்த்துச் சொன்னதுபோல இல்லாவிட்டாலும் — ஒரு சில வாரங்களிலே எங்கள் பக்கம் கொண்டுவந்து விட்டோம். அதில் வித்தியாசம் பெரியதாயில்லை. ஒரு சில வாரங்களில் விவசாயி மக்களில் பெரும்பான்மையினரை உங்கள் பக்கம் கொண்டுவர முடிகிற நாட்டை ஐரோப்பாவில் எங்காவது காட்ட முடியுமா? ஒருவேளை இத்தாலியா? (சி ரி ப் பு.) ஒரு பெரிய கட்சி இல்லாமற்போயினும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றோமே என்று சொல்லப்படுகிறதென்றால், அப்படிச் சொல்கிறவர்கள் ருஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ளவில்லை; புரட்சிக்கு எப்படித் தயார் செய்வது என்பதைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்பதைத் தான் அது நிரூபிக்கிறது.

யாருடன் பேசுகிறோம், யாரை முழுக்க நம்ப முடியும் என்று அறியும்பொருட்டு ஒரு மெய்யான கம்யூனிஸ்டுக் கட்சியைப் படைப்பதே எங்களது முதற்படியாக இருந்தது. ''மையவாதிகள் வீழ்க!'' என்பதே முதலாவது, இரண்

டாவது காங்கிரஸ்களின் கோஷமாக இருந்தது. வழி நெடு கிலும் உலகம் முழுவதிலும் நாம் மையவாதிகளையும் அரை மையவாதிகளையும்—ருஷ்யாவில் இவர்களை மென்ஷிவிக்கு கள் என்று நாங்கள் அழைக்கிறோம்—ஒழித்துக் கட்டாவிட் டால் கம்யூனிசத்தின் அரிச்சுவடியைக்கூட நாம் கற்றுப் பாண் டித்தியம் பெற்றவர்களாக முடியாது. மெய்யான புரட்சிக் கட்சியைப் படைப்பதும், மென்ஷிவிக்குகளிடமிருந்து முறித்துக் கொள்வதும்தான் நமது முதல் கடமை. எனினும் அது ஒரு தயாரிப்புப் பள்ளியே ஆகும். நாம் ஏற்கனவே மூன்றுவது காங்கிரசைக் கூட்டியிருக்கிறோம்; தோழர் தெரச் சீனியோ முன்போலவே தயாரிப்புப் பள்ளியின் கடமை மையவாதிகளையும் அரைமையவாதிகளையும் தேடிச் சென்று, துரத்திப் பிடித்து அம்பலப்படுத்துவதே என்று சொல்கிறார். உங்களுக்கு மிக்க நன்றி! போதுமான அளவுக்கு அதை ஏற் கனவே நாம் செய்தாகிவிட்டது. இரண்டாவது காங்கிரசில் ஏற்கனவே மையவாதிகள் நமது பகைவர்கள் என்று நாம் சொல்லியாகிவிட்டது. உண்மையில் இன்று நாம் மேலே போக வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் ஒரு கட்சியாக அமைந்த பின்னர் புரட்சிக்குத் தயார் செய்வதைப் பயில்வதே இரண்டாம் கட்டமாகும். எப்படித் தலைமை கொள்வது என்பது பற்றி நாம் பல நாடுகளில் இன்னும் கற்கக்கூடக் கிடையாது. ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் தொழிலாளி வர்க்கத்திடையே சந்தேகத்திற்கு இடமற்ற பெரும்பான்மையினர் எங்கள் பக்கம் இருந்தார் கள் (1917 தேர்தல்களின்போது தொழிலாளிகளில் மிகப் பெரும்பான்மையினர் மென்ஷிவிக்குகளுக்கு எதிராக எங்கள் பக்கமே இருந்தார்கள்) என்பது மட்டுமல்ல, நாம் அதிகாரத் தைக் கைப்பற்றியதுமே இராணுவத்தில் பாதியும் சில வார காலத்தில் விவசாயிகளில் பத்தில் ஒன்பது விகிதத்தினரும் எங்கள் பக்கம் வந்துவிட்டனர் என்பதுமாகும்; நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் நாங்கள் நிலம் பற்றிய எங்களுடைய வேலைத்திட்டத்துக்குப் பதிலாய், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதை நடைமுறையாக்கினோம் என்பதுமாகும். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் வேலைத்திட்டத்தை நாங்கள் நிறைவேற்றியதிலேதான் எங்கள் வெற்றி இருந்தது;

எனவேதான் இந்த வெற்றி அவ்வளவு சுளுவாக இருந்தது. மேலைய நாடுகளைச் சேர்ந்த உங்களுக்கு இப்படிப்பட்ட பிரமைகள் இருப்பது சாத்தியமா? அது கேலிக்குரியது! தோழர் தெரச்சீனியும் பிரேரேபித்துள்ள திருத்தங்களில் கையெழுத்திட்டுள்ள எல்லாத் தோழர்களும் ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளை ஒப்புநோக்கிப் பார்க்கட்டும்! அத்தனை வேகமாகப் பெரும்பான்மையினர் எங்கள் பக்கம் வந்துவிட்டபோதிலும் எங்கள் வெற்றிக்குப் பிறகு எங்களை எதிர்கொண்ட கஷ்டங்கள் மிகப் பெரியவை. இருந்த போதிலும் நாங்கள் வெற்றி பெற்றோம்; காரணம், நாங்கள் எங்கள் இலட்சியங்களை மட்டுமின்றி எங்கள் கோட்பாடுகளை யும் நினைவில் வைத்திருந்தோம், கோட்பாடுகளைப் பற்றி மௌனம் சாதித்து இலட்சியங்களைப் பற்றியும் ''இயங்கியல் போக்குகளைப்'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்குப் மாற்றிச் செல்வது'' பற்றியும் பேசிக் கொண்டிருந்த பேர்வழிகளை நாங்கள் கட்சியில் இருக்க விடவில்லை. இப்படிப்பட்ட கனவான்களைச் சிறையில் வைத் திருப்பதே மேல் என நாங்கள் கருதுவதற்காக ஒருக்கால் நாங்கள் குறை கூறப்படலாம். ஆனால் வேறு எந்த வழியி லும் சர்வாதிகாரம் சாத்தியமில்லை. நாம் சர்வாதிகாரத் துக்குத் தயார் செய்தாக வேண்டும், இப்படிப்பட்ட வாய்ச் சொற்களையும் திருத்தங்களையும் எதிர்த்துப் போராடுவதிலே தான் இந்தத் தயாரிப்பு அடங்கியுள்ளது. (சிரிப்பு.) நமது ஆய்வுரைகள் நெடுகிலும் மக்கள் திரளைப் பற்றி பேசு கின்றன. ஆனால், தோழர்களே, மக்கள் திரள் என்பதின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்வது அவசியம். ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களே, இடதுபுறம் அமர்ந்துள்ள தோழர்களே, நீங்கள் இந்தச் சொல்லைத் தகாத முறையில் பயன்படுத்துகிறீர்கள். ஆனால் தோழர் தெரச்சீனியும் இந்தத் திருத்தங்களில் கையெழுத் திட்ட அனைவரும் ''மக்கள் திரள்'' என்கிற சொல் எதைக் குறிக்கிறது என்று அறியாமலிருக்கிறார்கள்.

ஏற்கனவே நான் வெகுநேரம் பேசிவிட்டேன்; எனவே ''மக்கள் திரள்'' என்கிற கருத்து பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். ''மக்கள் திரள்'' என்கிற கருத்து போராட்டத்தின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களுக்கு

ஏற்ப மாறுகிறது. போராட்டத்தின் துவக்கத்தில் மெய்யான புரட்சிகரத் தொழிலாளிகள் ஒரு சில ஆயிரம் பேர் இருந்தால் போதும், மக்கள் திரளைப் பற்றி பேச முடிந்தது. போராட்டத்தில் கட்சி தன்னுடைய உறுப்பினர்களை ஈடுபடுத்துவதில் வெற்றி பெறுவதோடு மட்டுமின்றி, கட்சிச் சார்பில்லாத மக்களையும் தட்டியெழுப்பிவிடுவதிலும் வெற்றி பெறுமேயானல், அதுவே மக்கள் திரளைத் தன் பக்கம் வென்று ஈர்ப்பதின் தொடக்கமாகும். எங்களுடைய புரட்சிகளின் போது சில ஆயிரம் தொழிலாளர்கள் மக்கள் திரளைக் குறித்த சந்தர்ப்பங்கள் இருந்தன. எங்கள் இயக்கத்தின் வரலாற்றில், மென்ஷிவிக்குகளை எதிர்த்து நடந்த எங்கள் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு நகரில் இயக்கத்துக்கு வெகுஜனத் தன்மை அளிப்பதற்குச் சில ஆயிரம் தொழிலாளர்கள் போதுமானதாக இருந்ததற்குப் பல உதாரணங்கள் காண்பீர்கள். வழக்கமாகவே கிணற்றுத் தவளை வாழ்க்கையையும் மோசமான பிழைப்பையும் நடத்திக் கொண்டு அரசியலைப்பற்றி என்றைக்கும் ஒன்றுமே கேள்விப்படாமலிருந்து வருகிற கட்சிச் சார்பற்ற சில ஆயிரம் தொழிலாளர்கள் புரட்சிகரமான முறையில் செயல் புரியத் தொடங்கிவிட்டால் அங்கே நீங்கள் மக்கள் திரளைப் பெற்றவர்கள் ஆகிறீர்கள். அந்த இயக்கம் பரவித் தீவிரமடைந்தால் படிப்படியாக அது ஒரு உண்மையான புரட்சியாக வளர்கிறது. 1905லும் 1917லும் மூன்று புரட்சிகளின்போது நாங்கள் இதைப் பார்த்தோம். நீங்களும் இவை யாவற்றையும் அனுபவிக்க வேண்டியிருக்கும். புரட்சி போதுமான அளவுக்குத் தயார் செய்யப்பட்டவுடன் ''மக்கள் திரள்'' என்கிற கருத்து வேருனதாகிவிடுகிறது: சில ஆயிரம் தொழிலாளர்கள் இப்போது மக்கள் திரளாக மாட்டார்கள். இந்தச் சொல் வேருென்றைக் குறிக்கத் தொடங்குகிறது. மக்கள் திரள் என்கிற கருத்து பெரும்பான்மையினரை—வெறுமே தொழிலாளர்களில் மட்டுமல்ல, எல்லா சுரண்டப்படும் மக்களிலும் பெரும்பான்மையினரை—குறிக்கிற அளவுக்கு மாற்றம் பெறுகிறது. புரட்சியாளருக்கு வேறெந்த வகையிலான விளக்கமும் சரியானதாக முடியாது; இந்தச் சொல்லுக்கு வேறெந்த அர்த்தமும் புரிந்து கொள்ள இயலாததாகிறது. ஒரு சிறிய கட்சி—எடுத்துக் காட்டாக, பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கக் கட்சி—அரசியல்

வளர்ச்சிப் போக்கைச் சரிவரப் பயின்று, கட்சிச் சார்பற்ற மக்கள் திரளின் வாழ்க்கையையும் பழக்கவழக்கங்களேயும் தெரிந்து கொண்ட பிறகு, ஒரு சாதகமான தருணத்தில் புரட்சி இயக்கத்தை எழச் செய்வது சாத்தியமே (சுரங்கத் தொழிலாளர்களின் வேலேநிறுத்தத்தை ஒரு நல்ல எடுத்துக் காட்டாகத் தோழர் ராதெக் குறிப்பிடுகிருர்). அப்படிப் பட்ட ஒரு கட்சி அந்த நேரத்தில் தன் கோஷங்களுடன் முன்வந்து கோடிக்கணக்கான தொழிலாளர்கள் தன்னேப் பின்பற்றுமாறு செய்வதில் வெற்றி பெற்ருல் ஒரு வெகுஜன இயக்கத்தை நீங்கள் பெற்றுவிடலாம். ஒரு சிறிய கட்சி புரட்சியைத் தொடங்க முடியும், வெற்றிகர முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்பதை நான் முற்ருய் மறுக்கவில்லே. ஆனல் மக்கள் திரளே நம் பக்கம் வரச் செய்வதற்குரிய வழிமுறைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதற்குப் புரட்சிக்குரிய பூரண தயாரிப்பு அவசியம். ஆனல் இங்கே தோழர்கள் ''பெரும்'' திரளான மக்கள் வேண்டும் என்கிற கோரிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று சாதிக்க முன்வருகிருர்கள். இப்படிப்பட்ட தோழர்களே எதிர்த்தாக வேண்டும். பூரண தயாரிப்பில்லாமல் எந்த நாட்டிலும் நீங்கள் வெற்றி பெறப் போவதில்லே. மக்கள் திரளே வழி நடத்திச் செல்ல ஒரு சிறு கட்சி இருந்தால் போதும். குறிப்பிட்ட சில சமயங்களில் பெரிய நிறுவனங்களுக்கு அவசியமில்லாமற் போய்விடுகின்றன.

ஆனல், வெற்றி பெறுவதற்கு மக்கள் திரளின் ஆதரவு நமக்கு இருந்து தீரவேண்டும். ஒரு முழுமையான பெரும்பான்மை எப்போதும் இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லே; ஆனல் வெற்றி பெறுவதற்கும் அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் மட்டுமின்றி—''தொழிலாளி வர்க்கம்'' என்கிற சொல்லே மேலேய ஐரோப்பியப் பொருளில், அதாவது இயந்திரத் தொழிலில் ஈடுபட்டு உள்ள பாட்டாளி வர்க்கம் என்கிற பொருளில், பயன்படுத்துகிறேன்—உழைக்கும் சுரண்டப்படும் கிராமப்புற மக்களில் பெரும்பான்மையினர் நம் பக்கம் இருப்பதும் அவசியமாகும். இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? அந்தச் சிந்தனேக்குரிய ஒரு ஜாடையேனும் தெரச்சீனியின் சொற்பொழிவில் கிடைக்கிறதா? ''இயங்

கியல் போக்கு'' பற்றியும்''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்வது'' பற்றியும் மட்டுமே அவர் பேசுகிறார். உணவுப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தையேனும் அவர் சொல்கிறாரா? தொழிலாளர்கள், ருஷ்யாவில் ஓரளவுக்கு நாம் பார்த்த மாதிரி, எவ்வளவோ சகித்துக் கொண்டு பட்டினி கிடக்க முடியும் என்றாலுங்கூட அவர்கள் அன்றாட உணவு கொடு என்று கோருகிறார்கள். எனவே, தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை மட்டுமின்றி, உழைக்கும் சுரண்டப்படும் கிராமப்புற மக்கள் தொகையின் பெரும்பான்மையையும் நம் பக்கம் கொண்டுவர வேண்டும். இதற்குத் தயார் செய்திருக்கிறீர்களா நீங்கள்? அநேகமாக எங்குமே காணோம்.

எனவே திரும்பச் சொல்கிறேன்: நமது ஆய்வுரைகளை நான் நிபந்தனையின்றி ஆதரித்து நின்றாக வேண்டும், அது என் கடமை என்று கருதுகிறேன். நாம் மையவாதிகளைக் கண்டித்த தோடல்லாமல், கட்சியிலிருந்து வெளியே தள்ளியிருக்கிறோம். மற்றொரு அம்சத்தையும் இப்பொழுது நாம் கவனிக்க வேண்டும். இந்த அம்சமும் ஆபத்தானது என்றே நாம் கருதுகிறோம். யாரும் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்க இடமில்லாத வகையில் மிகவும் நயப் பாங்கோடு தோழர்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் (நமது ஆய்வுரைகளில் இது மரியாதையுடனும் பரிவுடனும் சொல்லப்படுகிறது). மையவாதிகளைத் தாக்குவதைவிட அதிக முக்கியமுள்ள வேறு பிரச்சினைகளை நாம் இன்று எதிர்நோக்குகிறோம். இந்தப் பிரச்சினை நமக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. ஏற்கனவே ஓரளவுக்கு இது நமக்குச் சலிப்பூட்டுவதாயிருக்கிறது. அதற்குப் பதிலாக, மெய்யான புரட்சிப் போராட்டத்தை நடத்தத் தோழர்கள் பயில்வது அவசியம். ஜெர்மன் தொழிலாளர்கள் ஏற்கனவே இவ்வாறு செய்யத் தொடங்கிவிட்டார்கள். அந்த நாட்டில் லட்சக்கணக்கான பாட்டாளிகள் வீரமாகப் போராடியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தை எதிர்க்கும் எந்தப் பேர்வழியும் உடனடியாக வெளியே தள்ளப்பட வேண்டும். ஆனால் அதன் பிறகு நாம் வெற்றுச் சொற்பின்னல் வேலையில் ஈடுபடாமல், செய்த தவறுகளின் அடிப்படையில் படிப்பினை பெற, போராட்டத்தை மேலும் நல்ல முறையிலே ஒழுங்கமைப்பது எப்படி என்று உடனடி

யாகப் பயில முற்பட வேண்டும். எதிரியிடமிருந்து நமது தவறுகளை நாம் மறைக்கக் கூடாது. இது குறித்துப் பயப்படுகிறவர் புரட்சியாளர் அல்ல. அதற்கு மாறாக, தொழிலாளர்களிடம் ''ஆம், நாங்கள் தவறுகள் செய்தோம்'' என்று பகிரங்கமாய்ச் சொன்னால், அவற்றைத் திரும்பச் செய்ய மாட்டோம், தருணத்தைத் தேர்ந்தெடுப்பதில் முன்னைவிட திறமையுடையோராய் இருப்போம் என்று அதற்குப் பொருள். மேலும், போராட்டத்தின்போதே உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையினர்—தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் மட்டுமல்ல, எல்லாச் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களிலும் பெரும்பான்மையினர்—நம் பக்கம் வந்துவிட்டால் நாம் உண்மையிலே வெற்றி பெறுவோம். (நீடித்த கையொலி முழக்கம்.)

1921, ஜூலை 5ல்,
பிராவ்தா, இதழ் 144லும்
''அகில ருஷ்யாவின்
நிர்வாகக் குழுவின் செய்திகள்'',
இதழ் 144லும் செய்தியுரையாக
வெளிவந்தது

1921, ஜூலை 8ல்,
''கம்யூனிஸ்டு அகிலத்தின்
மூன்றும் காங்கிரசின்
செய்தி அறிக்கை'',
இதழ் 11ல் முழு வாசகமாய்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 23-33

## பதிப்பாளர் குறிப்புகள்

1 Credo (பற்றியொழுகும் கோட்பாடு, உலகக் கண்ணோட்டம்) —1899ல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின் தலைப்பு இது. "பொருளாதாரவாதத்தின்" பிரதான கோட்பாடுகளை இந்த அறிக்கை எடுத்துரைத்தது.

"பொருளாதாரவாதம்" — கடந்த நூற்றாண்டின் இறுதியில் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளில் ஒரு பிரிவினரிடையே தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்கு. "பொருளாதாரவாதிகள்" ஜாரிசத்துக்கு எதிரான போராட்டம் பிரதானமாய் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாராலேயே நடத்தப்பட வேண்டிய ஒன்று என்றும், தொழிலாளர்கள் வேலை நிலைமைகளின் மேம்பாட்டுக்கும் கூலி உயர்வுக்கும் இன்ன பிறவற்றுக்குமான பொருளாதாரப் போராட்டம் நடத்துவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினர். சுயேச்சையான தொழிலாளி வர்க்க அரசியல் கட்சி நிறுவப்படுவதைப் "பொருளாதார்வாதிகள்" எதிர்த்தனர். தொழிலாளர் இயக்கத்துக்குப் புரட்சிகரத் தத்துவம் முக்கியமானது என்பதை மறுத்தனர். "பொருளாதாரவாதிகளுடைய" கருத்துக்கள் சிறிதும் ஆதாரமற்றவை, பெருந் தீங்கிழைப்பவை என்பதை லெனின் 1902ல் வெளியான **செய்ய வேண்டியது என்ன?** என்ற தமது நூலிலும், மற்றும் பிற நூல்களிலும் நிரூபித்தார். பக்கம் 6

2 **ரபோச்சயா மீசில்** (தொழிலாளர் சிந்தனை) — "பொருளாதாரவாதிகளின்" செய்தியேடு. 1897 அக்டோபருக்கும் 1902 டிசம்பருக்கும் இடையில் வெளியிடப்பட்டது.
பக்கம் 6

3 **நரோத்னயா வோல்யா** (மக்கள் சித்தம்) — ஜாரிஸ்டு எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காக

1879ல் நரோத்னிக்குகள் நிறுவிய இரகசியப் புரட்சி நிறுவனம். வெகுஜனங்கள் செயலற்றவர்கள், சதிக் குழுவினராய்ச் செயல்படும் தனிப்பட்ட அறிவுத்துறையினர்தான் புரட்சிப் போராட்டத்தை நடத்திச் செல்ல வேண்டியவர்கள் என்கிற தவருன, தீய தத்துவத்தால் வழிகாட்டப் பெற்ற இவர்கள், எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதென்னும் தமது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அரசியல் கொலைதான் உகந்த வழியெனக் கருதினர். ஜார் அரசன் இரண்டாம் அலெக்சாந்தர் 1881 மார்ச் 1ல் (13) இந்நிறுவனத்தின் உறுப்பினர்களால் கொல்லப்பட்டபின் இது ஈவிரக்கமின்றி அரசாங்கத்தால் நசுக்கப்பட்டது.
பக்கம் 6

பெர்ன்ஷ்டைனியம்—ஜெர்மன், சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் எழுந்த மார்க்சிய-எதிர்ப்புப் போக்கு. இது பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஜெர்மனியில் உதித்தது. இதன் மூலவரான சந்தர்ப்பவாத ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி எடுவார்டு பெர்ன்ஷ்டைனின் பெயரைப் பெறலாயிற்று. சோஷலிசப் புரட்சியையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் பற்றிய புரட்சிகர மார்க்சிய அடிப்படைக் கோட்பாடுகளைத் திருத்த வேண்டுமெனப் பகிரங்கமாய்ப் பிரேரணை செய்தார். சாராம்சத்தில் இது, சமூக-ஜனநாயகவாதிகள் சோஷலிசத்துக்கான போராட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டும் என்றும், முதலாளித்துவச் சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்குட்பட்ட சில சீர்திருத்தங்களுக்காக மட்டுமே பாடுபட வேண்டும் என்றும் கோரியது.
பக்கம் 7

5 கார்ல் மார்க்ஸ் எழுதிய சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிகளிலிருந்து பிரதான கோட்பாட்டை லெனின் இங்கு மேற்கோளாய்த் தருகிருர்.
பக்கம் 8

6 சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் — 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் தோன்றிய குட்டி பூர்ஷுவா ஜனநாயகவாதிகளது கட்சியின் உறுப்பினர்கள். இவர்கள் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான தமது போராட்டத்தில் தனிநபர் பயங்கரவாதப் போர்த்தந்திரத்தைக் கையாண்டனர், புரட்சி இயக்கத்துக்கு இதனுல் பெரும் தீங்கு உண்டாயிற்று; வெகுஜனங்கள் புரட்சிகரப் போராட்டத்துக்காக ஒழுங்கமைக்கப்படுவதற்கு இப்போர்த்தந்திரம் இடையூறு புரிந்தது. 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோற்கடிக்கப்பட்டதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரில் பெரும்பாலோர் முதலாளித்துவ மித

வாதிகளின் பக்கம் ஓடிவிட்டனர். 1917 பிப்ரவரியில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்கள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உறுப்பினர்களாகி, விவசாயிகளின் இயக்கத்தை நசுக்கும் கொள்கையைப் பின்பற்றினர்; சோஷலிசப் புரட்சிக்காகத் தயார் செய்து வந்த தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடிய முதலாளித்துவ வர்க்கத்துக்கும் நிலப்பிரபுக்களுக்கும் முற்றிலும் ஆதரவாய்ச் செயல்பட்டனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிற்பாடு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் சோவியத் மக்களுக்கு எதிராய் முதலாளித்துவ வர்க்கமும் நிலப்பிரபுக்களும் நடத்திய எதிர்ப்புரட்சிப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். பக்கம் 15

7 **ரபோச்சியெ தியேலொவாதிகள்**—''பொருளாதாரவாதிகள்'' (குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

**ரபோச்சியெ தியேலொ** (தொழிலாளர் இலட்சியம்)—''பொருளாதாரவாதிகளின்'' சஞ்சிகை. 1899லிருந்து 1902வரை ஜெனீவாவில் வெளிவந்தது.

**புதிய-இஸ்க்ராவாதிகள்**—மென்ஷிவிக்குகள்.

**இஸ்க்ரா** (தீப்பொறி)—முதலாவது அனைத்து ருஷ்ய மார்க்சியப் பத்திரிகை. 1900ல் லெனினால் துவக்கப்பட்டது. 1903ல் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில், கட்சி புரட்சிகர (போல்ஷிவிக்) போக்கு, சந்தர்ப்பவாத (மென்ஷிவிக்) போக்கு ஆகிய இரு கூறுகளாய்ப் பிளவுபட்டபின், **இஸ்க்ராவை** மென்ஷிவிக்குகள் கைப்பற்றிக் கொண்டனர். லெனினுடைய ''பழைய'' **இஸ்க்ராவுக்கு** முரணாய்ப் ''புதிய'' **இஸ்க்ரா** என்னும் பெயரில் இதை வெளியிட்டனர். பக்கம் 18

8 ''ஸெம்ஸ்த்வொ (பார்க்கவும்: குறிப்பு 32) இயக்கத்துக்கு'' ஆதரவளிக்கும் மென்ஷிவிக் திட்டம் இங்கு குறிப்பிடப்படுகிறது. இவ்வியக்கம் 1904 ஆகஸ்டு முதல் 1905 ஜனவரி வரை நடைபெற்றது. ஸெம்ஸ்த்வொ அதிகாரிகள் காங்கிரஸ்களிலும் கூட்டங்களிலும் விருந்துகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி அரசியல் சட்ட வழியிலான மிதவாதக் கோரிக்கைகளை முன்வைத்துத் தீர்மானங்கள் ஏற்றனர். பக்கம் 19

9 **அஸ்வொபழ்தேனியெ** (விடுதலை)—ருஷ்ய மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரின் சஞ்சிகை, வெளிநாடுகளில்

*1902 ஜூலை முதல் 1905 அக்டோபர் வரை வெளிவந்தது. அதன் அடிப்படையில் சயூஸ் அஸ்வொபழ்தேனியெ (விடுதலைக் கழகம்) என்பது தோற்றுவிக்கப்பட்டது. இக் கழகம் காடேட்டுக் கட்சிக்குக் கருவாய் அமைந்தது.*
பக்கம் **21**

10 இங்கு குறிக்கப்படுவது வி. இ. லெனின் எழுதிய **செய்ய வேண்டியது என்ன? என்னும் நூல்.** பக்கம் **22**

11 **டிசம்பர் எழுச்சி**—*எதேச்சாதிகாரத்தை எதிர்த்து 1905 டிசம்பரில் மாஸ்கோ தொழிலாளர்களின் ஆயுதமேந்திய எழுச்சி. மாஸ்கோ சமூக-ஜனநாயகவாதிகளாகிய போல்ஷிவிக்குகளின் தலைமையில் தொழிலாளர்கள் ஜாரிஸ்டுப் படைகளை எதிர்த்து தெரு அரண்கள் அமைத்து வீரதீரமாய் ஒன்பது நாட்கள் வரை போராடினர். பிறகு செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து புதிய படைகள் வந்த பிறகே அரசாங்கத்தால் இவ்வெழுச்சியை நசுக்க முடிந்தது. தொழிலாளர் வசித்த வட்டாரங்கள் இரத்தப் பெருக்கில் மூழ்க்கடிக்கப்பட்டன. நகரிலும் சுற்றுப் பகுதிகளிலும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.*
பக்கம் **39**

12 **போர்க் குழுக்கள்**—*1905ஆம் ஆண்டுப் புரட்சியின் போது ஜாரிசத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ருஷ்யாவில் பெரிய நகரங்களிலும் தொழில் மையங்களிலும் நிறுவப் பட்ட தொழிலாளர்களுடைய ஆயுதமேந்திய குழுக்கள். மாஸ்கோ டிசம்பர் எழுச்சியிலும் பிற நகர்க்ளின் எழுச்சிகளிலும் இவை பங்கெடுத்துக் கொண்டன.*

**போர்க் குழுக்களின் மாஸ்கோ கூட்டுக் கவுன்சில்** *என்பது சமூக-ஜனநாயகவாதிகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் ஏனையோரும் அமைத்த போர்க் குழுக்களின் பிரதிநிதிகள் அடங்கியது.* பக்கம் **40**

13 *1905 அக்டோபரில் ருஷ்யாவின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் நாடு தழுவிய அரசியல் வேலைநிறுத்தம் செய்தது. ஆலைகளும் ரயில்வேக்களும் இயங்காது நின்று போயின. இந்தப் பொது வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பலத்துக்குச் சான்றாய்த் திகழ்ந்தது. அக்டோபர் 17ல் ஜார் மன்னர் அரசியல் சட்டத்தையும் பேச்சு, கூட்ட, பத்திரிகை சுதந்திரத்தையும் அளிப்பதாய் வாக்குறுதி கூறி ஓர் அறிக்கை வெளியிட வேண்டியதாயிற்று. ஜாருடைய இந்த வாக்குறுதிகள் வெறும் ஏமாற்று என்பது தெரியலாயிற்று. அவை நிறைவேற்றப்படவே இல்லை.*
பக்கம் **40**

14 கார்ல் மார்க்ஸ், பிரன்சில் வர்க்கப் போராட்டங்கள், 1848 லிருந்து 1850 வரையில். பக்கம் 40

15 செமியோனவ்ஸ்கி காவலர் படைப்பிரிவின் படையாட்கள் 1905 டிசம்பரில் தொழிலாளர் எழுச்சியை நசுக்குவதற்காக செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டனர். பக்கம் 41

16 கார்ல் மார்க்சின் பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள், 1848லிருந்து 1850 வரையில் என்னும் நூலுக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரையை இங்கு லெனின் குறிப்பிடுகிறார். 1895ல் இது வெளியிடப்படுவதற்காகத் தயார் செய்யப்பட்டபோது ஜெர்மன் சமூக-ஜனநாயக வாதிகள் இதைத் திரித்துப் புரட்டினர். பிறகு ஆயுதமேந்திய எழுச்சியையும் தெரு அரண்கள் அமைத்துப் போர் புரிவதையும் இந்த முன்னுரை நிராகரிக்கிறது என்பதாய் இதற்கு வியாக்கியம் செய்தனர். எங்கெல்சின் கையெழுத்துப் பிரதிக்கேற்ப இந்த முன்னுரையின் முழு வாசகமும் முதன் முதலாய் சோவியத் யூனியனில் வெளியிடப்பட்டது. (மார்க்ஸ், எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 1, பக்கங்கள் 91-110.) பக்கம் 48

17 1905 டிசம்பரில் எழுச்சி புரிந்த தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரைச் சேர்ந்த ஆயுதமேந்திய குழுக்கள் சில லாத்விய நகரங்களைப் பிடித்துக் கொண்டன. ஜார் துருப்புக்களுக்கு எதிராய் கொரில்லாப் போர் மூண்டது. ஜாரிஸ்டுத் தண்டப் படைகள் 1906 ஜனவரியில் இதை நசுக்கினர். பக்கம் 49

18 இங்கு குறிக்கப்படுவது 1904-05ஆம் ஆண்டுகளின் ருஷ்ய-ஜப்பானிய யுத்தம். பக்கம் 50

19 அரசாங்க டூமா—1905ஆம் ஆண்டின் புரட்சிகர நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜாரிஸ்டு சர்க்கார் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடி மக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகு

வாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர். 1905 டிசம்பர் 11ஆம் (24) தேதிச் சட்டத்தின்படி, ஒரு நிலப்பிரபுவின் வாக்கு மூன்று முதலாளிகளது வாக்குகளுக்கும் 15 விவசாயிகளது வாக்குகளுக்கும் 45 தொழிலாளர்களது வாக்குகளுக்கும் சமமாயிருந்தது.

முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜாரிஸ்டு சர்க்காரால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன் 3ல் ஜாரிஸ்டு சர்க்கார் இரண்டாவது டூமாவைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டிபூர்ஷுவாக்களின் வாக்குரிமையை மேலும் குறையச் செய்தது. நிலப்பிரபுக்கள், பெருமுதலாளிகளது கறுப்பு நூற்றுவர் கூட்டணி இதனால் மூன்றாவது டூமாவிலும் (1907-1912) நான்காவது டூமாவிலும் (1912-1917) ஆதிக்கம் வகிக்க முடிந்தது.

பக்கம் 50

20 இங்கு குறிக்கப்படுபவை 1906 ஜூலையில் ஸ்வெயபோர்க், கிரான்ஷ்டாத் கோட்டைகளில் நடைபெற்ற கலகங்கள்.

பக்கம் 50

21 இங்கு குறிக்கப்படுவது இரண்டாவது அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள்.

பக்கம் 52

22 கறுப்பு நூற்றுவர் — புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீஸ் நிறுவிய முடியாட்சிக் குண்டர் கும்பல்கள். இவர்கள் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர்.

பக்கம் 52

23 காடேட்டுகள் — அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள். ருஷ்யாவின் மிதவாத-முடியாட்சிவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையான கட்சியாக இருந்தது. இது 1905 அக்டோபரில் துவக்கப்பட்டதாகும். ருஷ்யாவில் அரசியல் சட்டமுறை முடியாட்சி வேண்டுமென்பதே காடேட்டுகள் கோரியது எல்லாம். 1905-07ஆம் ஆண்டுகளின் முதல் ருஷ்யப் புரட்சியின்போது காடேட்டுகள் தம்மை ''மக்கள் சுதந்திரக் கட்சி'' என்று அழைத்துக் கொண்டனர்; ஆனால் உண்மையில் அவர்கள் புரட்சியை நசுக்கும் பொருட்டு ஜாரிஸ்டு

அரசாங்கத்துடன் இரகசியமாய்ப் பேச்சுவார்த்தைகள் நடத்தி மக்கள் நலன்களுக்குத் துரோகமிழைத்தனர்.

1914-17ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்திய யுத்தத்தின் போது மிலுக்கோவும் அடங்கலாய்க் காடேட்டுத் தலைவர்கள் ருஷ்ய ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாரின் விஸ்தரிப்புக் கொள்கைக்குப் பிரதான சித்தாந்தவாதிகளாய்ச் செயல்பட்டனர். 1917 பிப்ரவரிப் புரட்சியைத் தொடர்ந்து காடேட்டுகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாகி, தொழிலாளர்கள், விவசாயிகளுடைய புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடினர்; பெரிய நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாய் இருந்தனர். ஏகாதிபத்திய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்லும்படி மக்களை அவர்கள் பலவந்தம் செய்ய முயன்றனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு காடேட்டுகள் சோவியத் ஆட்சியதிகாரத்தின் பரம வைரிகளாயினர். ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் யாவற்றிலும், தலையீட்டாளர்களது எல்லா இராணுவத் தாக்குதல்களிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

பக்கம் 53

24 **சமாதானப் புனரமைப்பாளர்கள்**—சமாதானப் புனரமைப்புக் கட்சியின் உறுப்பினர்கள். முதலாளித்துவ வர்க்கத்தார், நிலப்பிரபுக்களது எதிர்ப்புரட்சிக் கட்சியான இது 1906ல் நிறுவப்பட்டது. பக்கம் 54

25 **தவாரிஷ்**—முதலாளித்துவ நாளேடு. பெயரளவில் எந்தக் கட்சியையும் சேராதது, ஆனால் உண்மையில் இடதுசாரிக் காடேட்டுகளின் பத்திரிகையாய் இருந்தது.

**ஜனநாயகச் சீர்திருத்தக் கட்சி** — மிதவாத-முடியாட்சிவாத முதலாளித்துவக் கட்சி. முதலாவது அரசாங்க டூமாத் தேர்தல்களின்போது 1906ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், காடேட்டுகளின் வேலைத்திட்டம் அளவுமீறி இடதுசாரியாய் இருப்பதாய்க் கருதியோரால் இக்கட்சி அமைக்கப்பட்டது. 1907ஆம் ஆண்டின் இறுதியில் மறைந்து விட்டது. பக்கம் 55

26 **துருதொவிக்குகள், துருதொவிக் கோஷ்டி** — அரசாங்க டூமாவிலிருந்த கோஷ்டி. பிரதானமாய் விவசாயிகளும் ஏனைய குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளும் இதில் இருந்தனர். நிலப்பிரபுக்களுக்கும் அரசுக்கும் மடாலயங்களுக்கும் ஜார் குடும்பத்தாருக்கும் சொந்தமாயிருந்த நிலங்கள் விவசாயிகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், பிரபுத்துவ சமுதாயப் பிரிவினையும் தேசிய இனங்களிடையிலான

அசமத்துவமும் ஒழிக்கப்பட வேண்டுமென்றும், அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கோரினர். ஆனால் துருதொவிக்குகள் முரணற்ற ஜனநாயகத்தின் கோட்பாடுகளை அடிக்கடி கைவிட்டுவிட்டு மிதவாத முதலாளித்துவ வர்க்கத் தலைவர்களை ஆதரித்தனர்.

**மக்கள் சோஷலிஸ்டுகள்** — வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் 1906ல் அமைத்த கட்சி. காடேட்டுகளின் கருத்துக்கு மிகவும் நெருங்கிய கருத்துக்களை இக்கட்சி பிரசாரம் செய்து வந்தது.

**சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்**—குறிப்பு 6ஐப் பார்க்கவும்.
பக்கம் 57

27 லெனின் இங்கு குறிப்பிடுவது, டூமாவில் காடேட்டுகள் சமர்ப்பித்த நகல். நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் ஒரு பகுதி ''நியாய'' விலை கொடுத்துப் பலவந்தமாய் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தரப்பட வேண்டுமென்று இந்நகல் கூறியது. இந்த ''நியாய'' நஷ்ட ஈடு உண்மையில் நிலத்தின் பெறுமானத்தைக் காட்டிலும் அதிகமான தொகையை நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகள் கொடுக்க நேரும்படியாய் அமைந்திருந்தது.

1861ல் செய்யப்பட்ட சீர்திருத்தம் ருஷ்யாவில் பண்ணையடிமை முறையை ஒழித்தது. அதேபோது மிகச் சிறந்த நிலங்கள் விவசாயிகளுடைய நிலவுடைமைகளிலிருந்து பிரிக்கப்பட்டு நிலப்பிரபுக்களுக்கு மாற்றப்பட்டன. விவசாயிகள் தமக்குக் கிடைத்த நிலங்களுக்காக அவற்றின் உண்மைப் பெறுமானத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமான தொகைகளை நிலப்பிரபுக்களுக்குத் தர வேண்டியதாயிற்று.
பக்கம் 58

28 **சமாதானக் கொள்ளைக் கட்சி** — சமாதானப் புனரமைப்புக் கட்சியை (பார்க்கவும்: குறிப்பு 24) லெனின் சிலேடையாய் இப்படிக் குறிப்பிடுகிறார்.
பக்கம் 58

29 இங்கு குறிப்பிடப்படுவது கலைப்புவாதம்—1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோற்றபின் மென்ஷிவிக் சமூக-ஜனநாயகவாதிகளிடையே வெகுவாய்ப் பரவிய சந்தர்ப்பவாதப் போக்கு இது.

கலைப்புவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமறைவான புரட்சிகரக் கட்சி கலைக்கப்பட வேண்டுமென்றும், ஜாரிசத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்தைத் தொழிலாளர்கள் நிறுத்திவிட வேண்டுமென்றும் அறை

கூவினர். கட்சி சார்பில்லாத ''தொழிலாளர்களின் காங்கிரஸ்'' ஒன்றைக் கூட்டவும், புரட்சிகரக் கோஷங்களைத் துறந்து ஜாரிஸ்டு அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட சட்டபூர்வமான செயற்பாட்டில் மட்டுமே ஈடுபடும் சந்தர்ப்பவாத ''விரிவான தொழிலாளர் கட்சி'' என்பதாய் ஒன்றைத் துவக்கவும் திட்டமிட்டிருந்தனர். புரட்சி இலட்சியத்துக்குத் துரோகமிழைத்த இந்தக் கலைப்புவாதிகளை லெனினும் ஏனைய போல்ஷிவிக்குகளும் இடையறாது அம்பலம் செய்து வந்தனர். வெகுஜனங்களிடையே இந்தக் கலைப்புவாதிகள் செல்வாக்கு இழக்கலாயினர். 1912 ஜனவரியில் கூடிய ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பிராக் மாநாடு கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து விலக்கிவிட்டது. பக்கம் 61

30 இது 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சிக்குப் பிறகு நடைபெற்றது. பக்கம் 64

31 அமைச்சரவைத் தலைவராயிருந்த ஸ்தலீப்பின் 1906 நவம்பர் 9 (22)ல் நிலச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தார். விவசாயிகள் தமது கிராமச் சமுதாயத்தை விட்டு பிரிந்து சென்று தனியே பண்ணைகள் அமைத்துக் கொள்ள இச்சட்டம் அனுமதி அளித்தது. கிராம ஏழைகளை அறவே ஓட்டாண்டிகளாக்கி, குலாக்குகளுக்கே அனுகூலம் புரிந்த இச்சட்டம் கிராமப்புறத்தில் குலாக்குகளை ஜாரிசத்தின் தூண்களாக்கிவிடும் நோக்கத்துடன் பிறப்பிக்கப்பட்டதாகும். பக்கம் 65

32 ஸெம்ஸ்த்வொ—1864ஆம் ஆண்டில் ஜாரிஸ்டு ருஷ்யாவின் மத்திய மாகாணங்களில் ஸ்தல சுய-ஆட்சி என்ற பெயரில் பிரபுக் குலத்தோரின் தலைமையில் நிறுவப்பட்ட நிர்வாக அமைப்புக்கள். ஸ்தலப் பிரச்சினைகள் மட்டுமே (மருத்துவமனைகள் கட்டுதல், சாலைகள் போடுதல், புள்ளி விவரங்கள், இன்ஷூரன்ஸ்) இவற்றின் அதிகாரத்துக்கு விடப்பட்டிருந்தன. பக்கம் 66

33 1905 அக்டோபரில் நடைபெற்ற அனைத்து ருஷ்ய அரசியல் வேலைநிறுத்தத்துக்கு முற்பட்ட காலம் இங்கு குறிக்கப்படுகிறது. பக்கம் 67

34 அக்டோபரிஸ்டுகள் அல்லது அக்டோபர் 17ஆம் நாளது கழகம்—பெரு முதலாளிகளது முடியாட்சிவாதக் கட்சி. 1905 நவம்பரில் நிறுவப்பட்டது. ருஷ்யாவுக்கு அரசியல் சட்டவழியிலான சுதந்திரங்களை அளிப்பதாய் வாக்களித்து

1905 அக்டோபர் 17ல் ஜார் வெளியிட்ட அறிக்கையுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கும் முறையில் இக்கட்சி தனக்குப் பெயரிட்டுக் கொண்டது. ஜனவிரோத செயல்களில் ஈடுபட்டு இக்கட்சி பெரு முதலாளிகள், முதலாளித்துவ வழியில் தம் பண்ணைகளை நடத்திய நிலப்பிரபுக்கள் ஆகியோரது தன்னலக் குறிக்கோள்களுக்காகப் பாடுபட்டது. ஜாரின் பிற்போக்கான உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளுக்கு அக்டோபரிஸ்டுகள் முழு ஆதரவு அளித்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு அக்டோபரிஸ்டுகள் காடேட்டுகளுடன் சேர்ந்து அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் துணை கொண்டு சோவியத் மக்களுக்கு எதிராய் ஆயுதமேந்திய போராட்டம் நடைபெற ஏற்பாடு செய்தனர். பக்கம் 68

35 Chambre introuvable—(விசேஷ சபை)—1815-1816ஆம் ஆண்டுகளில் பிரெஞ்சு நாட்டில் கடைகோடியான பிற்போக்காளர்களைக் கொண்டு நிறுவப்பட்ட பிரதிநிதிச் சபை. பக்கம் 73

36 **வாபஸ்வாதிகள், வாபஸ்வாதம்** — 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோற்றபின் போல்ஷிவிக்குகளில் ஒரு சிறு பகுதியினரிடையே பரவிய சந்தர்ப்பவாதப் போக்கு. அரசாங்க டூமாவிலிருந்து சமூக-ஜனநாயக உறுப்பினர்களைத் திருப்பியழைத்துவிட வேண்டுமென்றும் சட்டபூர்வமான நிறுவனங்களில் வேலை செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்றும் இவர்கள் கோரினர். 1908ல் இவர்கள் தனிக் கோஷ்டியாய் அமைந்து லெனினை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். டூமா, தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சட்டபூர்வமானவையும் பகுதியளவுக்குச் சட்டபூர்வமானவையுமாகிய பலவகையான நிறுவனங்களிலும் வேலை செய்ய மறுத்து, சட்டவிரோத வேலைகளை மட்டுமே செய்வோமெனக் கூறி வந்தனர். ''புரட்சிகரப்'' பதப்பிரயோகத்தின் திரை மறைவில் வாபஸ்வாதிகள் பரவலான தொழிலாளர் பகுதிகளுடன் கட்சிக்குள்ள தொடர்புகளை விரிவாக்குவதற்கு இடையூறு புரிந்தனர், வெகுஜனங்களிடமிருந்து கட்சியை விலக்கி வைக்க முயன்றனர், இவ்விதம் கட்சியைப் பலவீனமாக்க முற்பட்டனர். லெனின் இவர்களைக் கடுமையாய்க் கண்டித்து விமர்சித்தார்; ''புதுவகைக் கலைப்புவாதிகள்'' என்றும், ''உட்புறம் வெளிப்புறமாய் மாற்றப்பட்ட மென்ஷிவிக்குகள்'' என்றும் இவர்களை அழைத்தார்.
பக்கம் 75

37 **கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா** (சமூக-ஜனநாயகவாதியின் குரல்) — மென்ஷிவிக் கலைப்புவாதிகளது பத்திரிகை.
பக்கம் 78

38 **ஸெம்ஸ்த்வொ இயக்கம்** — குறிப்புகள் 8ஐயும் 32ஐயும் பார்க்கவும்.
பக்கம் 78

39 **1905 ஜனவரி 9ல்** செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் தமது மனைவிமார்களும் குழந்தைகளும் உடன்வர ஜார் மன்னனிடம் மனு சமர்ப்பிப்பதற்காகக் குளிர்கால அரண்மனைக்குச் சென்றனர். தொழிலாளர்களுடைய சகிக்கவொண்ணாத நிலைமைகளையும் அவர்கள் உரிமையற்றோராய் வாழ வேண்டியிருந்ததையும் இந்த மனு எடுத்துரைத்தது. நிராயுதபாணிகளாய் வந்திருந்த இத்தொழிலாளர்களது அமைதியான இந்த ஆர்ப்பாட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி ஜார் தன் துருப்புக்களுக்கு உத்தரவிட்டார். இந்தக் கொடிய கொலைத் தாண்டவத்தைக் கண்டித்து அனைத்து ருஷ்யாவிலும் தொழிலாளர்கள் வெகுஜன அரசியல் வேலைநிறுத்தங்கள் செய்தனர், ''எதேச்சாதிகாரம் ஒழிக!'' என்று முழங்கி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஜனவரி 9ஆம் நாள் நிகழ்ச்சிகள் 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சித் தீயை மூளச் செய்த தீப்பொறிகள் ஆயின.
பக்கம் 78

40 இங்கு குறிக்கப்படுவது 1908 டிசம்பர் 21-27ல் (1909 ஜனவரி 3-9ல்) நடைபெற்ற ரு. ச. ஜ. தொ. கட்சியின் ஐந்தாவது அனைத்து ருஷ்ய மாநாடு.
பக்கம் 86

41 அதாவது 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சிக்குரிய காலம்.
பக்கம் 88

42 **சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம்**—ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் சோஷலிஸ்டு இயக்கத்தையும் எதிர்ப்பதற்காக பிஸ்மார்க் சர்க்கார் 1878ல் பிறப்பித்த சட்டம். இந்தச் சட்டத்தின்படி சமூக-ஜனநாயகக் கட்சியும் தொழிலாளர்களுடைய வெகுஜனநிறுவனங்கள் யாவும் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளும் சட்டவிரோதமாக்கப்பட்டன. ஆ. பெபெல், வி. லீப்க்னெஹ்ட் ஆகியோரைச் சுற்றி ஒன்றுதிரண்டு ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளில் சிறந்தோர் சட்டவிரோதமான நிலைமைகளில் வேலையைத் தொடங்கினர்; தொழிலாளர் வெகுஜனங்களுக்கிடையே அதன் காரண

மாய் கட்சியின் செல்வாக்கு குறையாமல் உயர்ந்தது. 1890ல் நடைபெற்ற ரைஹ்ஸ்டாக் தேர்தல்களில் சமூக-ஜனநாயகவாதிகள் சுமார் 15 லட்சம் வாக்குகளைப் பெற்றனர். அதே 1890ல் மக்களின் நிர்ப்பந்தம் காரண மாகவும் வளர்ந்து ஓங்கிவிட்ட தொழிலாளி வர்க்க இயக்கம் காரணமாகவும் சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியதாயிற்று. பக்கம் 93

43 நான்காவது அரசாங்க டூமாவுக்கான தேர்தல்களில் தொழிலாளர் தொகுதியில் போல்ஷிவிக்குகளின் வேட்பாளர்களுக்குத் தாம் மாற்று வேட்பாளர்களை நிறுத்துவோம் என்று மென்ஷிவிக்குகளான கலைப்புவாதிகள் பயமுறுத்தினர். பக்கம் 106

44 **லாத்வியர்கள்**—லாத்வியப் பிரதேசத்தைச் சேர்ந்த கலைப்புவாதிகளாகிய சமூக-ஜனநாயகவாதிகள். பக்கம் 106

45 **பூந்த்**—''லித்துவேனியாவையும் போலந்தையும் ருஷ்யாவையும் சேர்ந்த யூதர் தொழிலாளர்களின் பொது சங்கத்தைக்'' குறிக்கும் சுருக்குப் பெயர். 1897ல் இது அமைக்கப்பட்டது. ருஷ்யாவின் மேற்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த யூதக் கைத்தொழிலாளர்களையே பிரதானமாய் இது ஒன்றுபடுத்திற்று. பூந்த் நிறுவனம் சந்தர்ப்பவாத, மென்ஷிவிக் கொள்கையைப் பின்பற்றி வந்தது. 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் இது கலைப்புவாதிகளுடன் சேர்ந்து கொண்டுவிட்டது. பக்கம் 106

46 **ழிவோயெ தியேலொ** (உயிர் இலட்சியம்) — செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1912ல் வெளிவந்த கலைப்புவாதிகளது செய்தியேடு. பக்கம் 106

47 **பகிரங்கமான தொழிலாளர் இயக்கத்தின் சமூக-ஜனநாயக ஊழியர்களது துவக்கக் குழுக்கள்**—சட்டவிரோதக் கட்சி நிறுவனங்களை எதிர்த்துக் கலைப்புவாதிகள் சில நகர்களில் அமைத்த குழுக்கள். ஸ்தலீப்பின் ஆட்சிக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளக் கூடிய விரிவான ஒரு புதிய கட்சியின் குழுக்களாய்க் கலைப்புவாதிகள் இவற்றை நிறுவினர். எண்ணிக்கையில் மிகச் சொற்பமாயிருந்த இக்குழுக்களில் அறிவுத்துறையினரே இருந்தனர். தொழிலாளி வர்க்கத்துடன் இக்குழுக்களுக்குத் தொடர்புகள் இருக்கவில்லை. தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தப் போராட்டங்களையும் புரட்சிகர ஆர்ப்பாட்டங்களையும் இவை

எதிர்த்தன. நான்காவது டூமாவின் தேர்தல்களின்போது இவை போல்ஷிவிக்குகளை எதிர்த்து இயக்கம் நடத்தின.
பக்கம் 106

48 **நிறுவனக் கமிட்டி** — கலைப்புவாதிகளது மாநாட்டைக் கூட்டுவதற்காக 1912 ஜனவரியில் கலைப்புவாதிகளாகிய பூந்த் பிரதிநிதிகள், காக்கேசிய பிராந்தியக் கமிட்டியின் பிரதிநிதிகள், லாத்வியப் பிரதேச சமூக-ஜனநாயக வாதிகள் ஆகியோரது கூட்டத்தில் அமைக்கப்பட்ட கமிட்டி.
பக்கம் 106

49 **கலைப்புவாத-எதிர்ப்பாளர்கள்** — லெனினுடைய தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளான போல் ஷிவிக்குகள்.

**விபெரியோத்** (முன்செல்)—வாபஸ்வாதக் கோஷ்டியின் பெயர்.
பக்கம் 107

50 இங்கு குறிப்பிடப்படுவது 1908லிருந்து 1912 வரை வியென்னுவில் திரோத்ஸ்கி வெளியிட்டு வந்த மென்ஷிவிக் கலைப்புவாதிகளது செய்தியேடான **பிராவ்தா.**
பக்கம் 107

51 சட்டபூர்வமான போல்ஷிவிக் நாளேடான **பிராவ்தா** முதன்முதல் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1912 ஏப்ரல் 22ல் (மே 5ல்) வெளிவந்தது.
பக்கம் 108

52 **நாஷா ஸாரியா** (நமது அருணோதயம்) — கலைப்புவாதி களுடைய சஞ்சிகை.
பக்கம் 110

53 சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் இங்கு குறிப்பிடப் படுகின்றனர்.
பக்கம் 110

54 முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்ச ராகிய காடேட்டுக் கட்சியாளர் ஷிங்கரியோவ், விவசாயி கள் ''நிலப் பிரச்சினைக்குத் தாமே சுயேச்சையாய்த் தீர்வு காணக்'' கூடாதென தடைவிதித்துப் பிரதேசங்களுக்குத் தந்தி அனுப்பினுர். நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகளுக் கும் இடையிலான ''மனமுவந்த உடன்பாட்டின்'' மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று இத்தந்தியில் இவர் கூறினுர். நிலப்பிரபுக்களுடைய நிலங்கள் மக்களுக்கு மாற்றப்படுவதைத் தடுத்து நிலப்பிரபுக்களுக்குச் சேவை புரிவதே ஷிங்கரியோவின் கொள்கையினது நோக்கம்.
பக்கம் 112

55 **ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி** — சமூக-ஜன நாயகக் கட்சியிலிருந்து வெளியேறிய ஜெர்மன் மைய வாதிகள் (குறிப்பு 65ஐப் பார்க்கவும்) 1917 ஏப்ரலில் நிறுவிய கட்சி. 1920ல் இக்கட்சி பிளவுண்டது. கணிச அளவிலான ''சுயேச்சையாளர்கள்'' ஜெர்மன் கம்யூ னிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டனர். சுயேச்சைக் கட்சியின் வலதுசாரிகள் 1922ல் சமூக-ஜனநாயகக் கட்சிக்குத் திரும்பிச் சென்றனர். பக்கம் 116

56 புலீகின் டூமா என்றழைக்கப்பட்ட டூமாவை போல்ஷிவிக்கு கள் பகிஷ்கரித்தது இங்கு குறிப்பிடப்படுகிறது. உள் நாட்டு அமைச்சர் புலீகின் தலைமையிலிருந்த கமிஷன் வரைந்த நகல் சட்டத்தின்படி 1905 ஆகஸ்டில் ஜார் மன் னர் ஆலோசனை மன்றமாய் (சட்டம் இயற்றும் அதிகார மில்லாததாய்) அமைந்த அரசாங்க டூமா கூட்டப்படுவ தாய் அறிவித்தார். இதற்கு எதிராய் போல்ஷிவிக்குகள் இந்த டூமாவைப் பகிஷ்கரிக்கும்படி அறைகூவினர். தேர்தல் களில் கலந்து கொள்ள வேண்டாமென்றும் எதேச்சாதி காரத்தை எதிர்த்துப் போராடும்படியும் போல்ஷிவிக்கு கள் தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தனர். புலீகின் டூமா கூட்டப்படவே இல்லை—அது கூடு முன்பே தொழி லாளர்கள், விவசாயிகளது புரட்சி இயக்கம் அதைத் தகர்த்துவிட்டது. பக்கம் 117

57 **ஆன்டான்ட்**—இச்சொல் 1907ல் உருவான ஏகாதிபத்திய அரசுகளது (பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகியவை) கூட்டைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இக் கூட்டு மற்றொரு ஏகாதிபத்தியக் கூட்டான முக்கூட்டுக்கு (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) எதிராக அமைக்கப்பட்டது. முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன. அக்டோபர் சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து, இக்கூட் டின் பிரதான உறுப்பினர்களான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் சோவியத் குடியரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டின் மூலவர்களாகவும் சூத்திரதாரிகளாகவும் செயல்பட்டன. பக்கம் 122

58 1918 டிசம்பர் 30ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் முத லாவது காங்கிரஸ் தேசிய சபைத் தேர்தல்களில் கலந்து கொள்வதா என்பது குறித்து விவாதித்தது. கார்ல்

லீப்க்னெஹ்டும் ரோஸா லுக்சம்பர்கும் தேர்தல்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றனர். புரட்சிகரக் கோஷங் களை வெகுஜனங்களிடையே பரப்புவதற்குப் பாராளுமன்ற மேடையைப் பயன்படுத்திக் கொள்வது அவசியமென்று அவர்கள் வற்புறுத்தினர். ஆனால் காங்கிரசில் பெரும்பான் மையினர் தேசிய சபைத் தேர்தல்களில் கலந்து கொள்ள மறுத்து அதற்கேற்ப ஒரு தீர்மானத்தை ஏற்றனர்.

பக்கம் 122

59 1917 பிப்ரவரிப் புரட்சிக்கும் 1919க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்சியின் உறுப்பினர் தொகை பின்வருமாறு மாறிற்று: 1917 ஏப்ரலில் கூடிய ரு. ச. ஜ. தொ. கட்சியின் (போல்ஷிவிக்குகள்) ஏழாவது அனைத்து ருஷ்ய மாநாட் டின் போது கட்சியில் 80,000 உறுப்பினர்கள் இருந்த னர்; 1917 ஜூலை-ஆகஸ்டில் நடைபெற்ற இக்கட்சியின் ஆறுவது காங்கிரசின் போது—2,40,000; 1918 மார்ச் சில் கூடிய ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல் ஷிவிக்குகள்) ஏழாவது காங்கிரசின்போது—குறைந்தது 2,70,000; 1919 மார்ச்சில் கூடிய இக்கட்சியின் எட்டா வது காங்கிரசின்போது—3,13,766. பக்கம் 127

60 உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனம் (Industrial Workers of the World)—அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழிலாளர் நிறுவனம், 1905ல் நிறுவப்பட்டது. இதன் தலைவர்களிடம் அராஜக-சிண்டிக்கலிஸ்டுக் கருத்தோட்டங்கள் மலிந் திருந்தன. அரசியல் போராட்டத்தை நிராகரிப்பதுதான் இவற்றின் சாராம்சமாய் இருந்தது.

1914-18ல் இந்நிறுவனம் ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்தது, கொடிய அடக்குமுறைக்கு இலக்காயிற்று. அப்பொழுது இதன் உறுப்பினர் எண்ணிக்கை 1,00,000க்கு மேல் இருந்தது. ''மெய்யான பாட்டாளி வர்க்க வெகு ஜன இயக்கமாய்'' இது இருந்ததை லெனின் குறிப்பிட் டார். அதேபோதில் பிற்போக்குத் தொழிற் சங்கங்களில் வெகுஜனங்களிடம் வேலை செய்ய மறுத்தும் முதலாளித் துவப் பாராளுமன்றங்களில் பங்கு கொள்வதை எதிர்த் தும் வந்த இதன் இடதுசாரிக் குறுங்குழுவாதத் தலைவர் களது தவறான அரசியல் கொள்கை வழியை லெனின் கண்டித்து விமர்சனம் செய்தார்.

பிற்பாடு மெய்யாகவே புரட்சித் தன்மை கொண் டோர் இந்நிறுவனத்திலிருந்து வெளியேறிவிடவே, இது தொழிலாளி வெகுஜனங்களிடம் செல்வாக்கற்றதாகிச் சிறிய குறுங்குழுவாத நிறுவனமாகிவிட்டது.

பக்கம் 139

61 1905ல் போல்ஷிவிக்குகள் பகிஷ்காரத்தைக் கையாண்டது குறித்து குறிப்பு 56ஐப் பார்க்கவும்.

1906 ஏப்ரலில் கூட்டப்பெற்ற முதலாவது டூமா சம்பந்தமாகவும் போல்ஷிவிக்குகள் பகிஷ்காரத்தைக் கையாண்டனர். பிற்பாடு லெனின் 1906ல் அரசாங்க டூமாவைப் பகிஷ்கரித்திருக்கக் கூடாதென்று ஒத்துக் கொண்டார். ஏனெனில் நிலைமை 1905ல் இருந்ததிலிருந்து அப்பொழுது மாறுனதாய் இருந்தது, புரட்சி தணிந்து போய் வந்தது. ''1905ல் போல்ஷிவிக்குகள் 'பாராளுமன்றத்தைப்' பகிஷ்கரித்ததானது மதிப்பிடற்கரிய அரசியல் அனுபவத்தை அளித்துப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தைச் செழுமை செய்தது; சட்டபூர்வமானவையும் சட்டவிரோதமானவையும், பாராளுமன்றவழியிலானதும் பாராளுமன்ற வழியிலல்லாது பிறவழிகளிலானதும் ஆகிய போராட்ட வடிவங்கள் இணைக்கப்படும் போது பாராளுமன்ற வடிவங்களை நிராகரிப்பதும்கூட சில நேரங்களில் பயனுள்ளதும், ஏன் அவசியமானதும்கூட ஆகிவிடுகிறது'' என்று லெனின் எழுதினார். ''ஆனால் இந்த அனுபவத்தைக் கண்ணை மூடிக் கொண்டு காப்பியடிக்கும் முறையில், விமர்சன நோக்கு இல்லாமலே பிற நிலைமைகளிலும் பிற சூழல்களிலும் அனுஷ்டிப்பது மிகப்பெரும் தவறுகிவிடும். 1906ல் போல்ஷிவிக்குகள் 'டூமாவைப்' பகிஷ்காரம் செய்தது, சிறியதுதான் எளிதில் சரி செய்து கொள்ளக் கூடியதுதான் என்றாலும் தவறுனதுதான்.'' ஆனால் 1907லும் 1908லும் அதற்குப் பிற்கால ஆண்டுகளிலும் டூமாவைப் பகிஷ்கரித்திருந்தால் — பகிஷ்காரவாதிகளும் வாபஸ்வாதிகளும் (பார்க்கவும்: குறிப்பு 36) பகிஷ்கரிக்க வேண்டுமென்றனர், ஆனால் போல்ஷிவிக்குகள் இதனை நிராகரித்தனர்—அது மிகக் கடுமையான தவறுய், எளிதில் சரிசெய்வது கடினமானதாய்ப் போயிருந்திருக்கும்.'' பக்கம் 152

62 1917 அக்டோபர் 26ல் (நவம்பர் 8ல்) சோவியத்துகளின் அனைத்து ருஷ்யாவின் காங்கிரசில் நிலச் சட்டம் ஏற்கப்பட்டது. இச்சட்டம் நிலப்பிரபுக்களது நிலவுடைமையை ஒழித்துவிட்டு நிலத்தை விவசாயிகளிடம் கொடுத்தது. ''நிலங் குறித்து விவசாயிகளுடைய கோரிக்கைகள்'' இந்த நிலச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ருஷ்யாவின் 242 பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளது கோரிக்கைகளின் அடிப்படையில் இவை நிர்ணயிக்கப்பட்டன. ''உழுவோருக்குச் சம அளவில் நிலம்'' என்ற சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது கோஷமும் இதில் சேர்க்கப்பட்டிருந்தது. முன்பெல்லாம் இக்கோஷத்தை எதிர்த்து வந்த போல்ஷிவிக்குகள் இப்பொழுது இதை

ஏற்றுக் கொண்டதன் காரணத்தை லெனின் இவ்வாறு விளக்கினர்: ''இதை நாம் ஒத்துக் கொள்ளவில்லை என்ற போதிலும், ஜனநாயக சர்க்கார் என்ற முறையில் நாம் அடிநிலைப் பகுதியோரின் தீர்மானத்தை உதாசீனம் செய்ய முடியாது.... வாழ்க்கை என்னும் தீயில் சோதனை செய்து தத்தமது இடங்களிலே இதை நடைமுறையில் பயன் படுத்தி விவசாயிகள் உண்மையைத் தாமே உணர்ந்து கொள்வார்கள்.'' பக்கம் 154

63 ஹங்கேரியில் சோவியத் ஆட்சியதிகாரம் 1919 மார்ச் 21ல் நிறுவப்பட்டது. பக்கம் 157

64 முதலாவது உலக யுத்தத்துக்கு முடிவு கட்டிய வெர்சேய் சமாதான உடன்படிக்கை 1919 ஜூன் 28ல் கையொப்ப மிடப்பட்டது. பக்கம் 161

65 மையம், மையவாதம்—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு. இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளில் மையவாதிகள், வெளிப் படையான சந்தர்ப்பவாதிகளுக்கும் இடதுசாரிப் புரட்சி கர முகாமுக்கும் இடைப்பட்ட நிலையில் இருந்தனர். என வேதான் அவர்களுக்கு இந்தப் பெயர். கார்ல் காவுத்ஸ்கி யே மையவாதிகளது தத்துவவாதி. முதன்மையான எல் லாப் பிரச்சினைகளிலும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி களை ஆதரித்து நின்ற இந்த மையவாதிகள் இடதுசாரி வாய்ப்பேச்சினால் தமது இந்த ஆதரவைத் திரையிட்டு மறைத்துக் கொண்டனர். 1919-21ல் மேற்கு ஐரோப்பா வின் புரட்சிகர எழுச்சியின்போது பல நாடுகளிலும் மைய வாதிகள் சமூக-ஜனநாயகவாதிகளை விட்டுப் பிரிந்து சுயேச்சையான கட்சிகளை நிறுவிக்கொண்டனர். புரட்சிகர மனோபாவமுடைய தொழிலாளர்களிடையே தமது செல் வாக்கை இழந்துவிடாமல் 1919 மார்ச்சில் நிறுவப்பட்ட மூன்றாவது அகிலத்தில் (கம்யூனிஸ்டு அகிலத்தில்) சேர்ந்து கொள்ளத் தயாராய் இருப்பதாய்க் கூறினர். ஜெர்மனியி லும் இத்தாலியிலும் ஏனைய சில நாடுகளிலும் புரட்சிகர இயக்கம் தோற்கடிக்கப்பட்டு, முதலாளித்துவம் தற்காலிக மாய் நிலை பெற்றதும் மையவாதக் கட்சிகள் மீண்டும் சமூக-ஜனநாயகக் கட்சிகளில் சேர்ந்து கொண்டுவிட் டன. பக்கம் 166

66 இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சித் தலைமையை எதிர்த்து **துரீன் பிரிவு** செய்த குற்றச்சாட்டுகள் என்னவெனில்,

1919-20இன் புரட்சிகர எழுச்சி நிலைமைகளில், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வாய்ப்பு தோன்றியபோது, கட்சித் தலைமை நிகழ்ச்சிகள் குறித்து சரியான மதிப்பீடு செய்யவில்லை, புரட்சிகர வெகுஜனங்களுக்கு ஏற்றதாய் ஒரு கோஷத்தையும் முன்வைக்கவில்லை, சீர்திருத்தவாதிகளைத் தன்னிடமிருந்து வெளியேற்றவில்லை என்பவையே. துரீன் பிரிவு நடைமுறைப் பிரேரணைகள் பலவற்றையும் முன்வைத்தது: கட்சி அணிகளிலிருந்து சந்தர்ப்பவாதிகளை விலக்க வேண்டும், எல்லா ஆலைகளிலும் தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுகளிலும் படைக் கொட்டடிகளிலும் கம்யூனிஸ்டுக் குழுக்களை அமைக்க வேண்டும், தொழில் துறையிலும் விவசாயத்திலும் உற்பத்தியின்மீது கண்காணிப்பு செலுத்த ஆலைக் கமிட்டிகளை நிறுவ வேண்டும் என்றது. வெகுஜனங்கள் சோவியத்துகளை அமைத்துக் கொள்ள உடனே தயார் செய்ய வேண்டும் என்று துரீன் பிரிவு கோரியது. பக்கம் 182

67 **ஆலைத் தலைமைத் தொழிலாளர் கமிட்டிகள்** [Shop Stewards Committees]—முதல் உலக யுத்தத்தின்போது பிரிட்டனில் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்ட கமிட்டிகள். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிற்பாடு சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் அந்நிய இராணுவத் தலையீடு நடைபெற்ற போது தலைமைத் தொழிலாளர் கமிட்டிகள் தலையீட்டு யுத்தத்தை முன்னின்று எதிர்த்தன. தலைமைத் தொழிலாளர் கமிட்டிகளின் தீவிர ஊழியர்கள் பலர் கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களாவர். பக்கம் 182

68 **பாஸெல் அறிக்கை**—மூண்டுவிட்ட பால்கன் போரையும் அப்பொழுது த்யாரிப்பு செய்யப்பட்டு வந்த உலக ஏகாதிபத்தியப் போரையும் கண்டித்து 1912 நவம்பரில் கூட்டப்பட்ட இரண்டாவது அகிலத்தின் சிறப்புக் காங்கிரசால் ஏற்கப்பட்ட அறிக்கை. பக்கம் 199

69 1920 செப்டம்பரில் நடைபெற்ற ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாடு பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கெடுப்பதில்லை என்ற முந்தைய தீர்மானத்தை ரத்து செய்தது. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர ஒற்றுமை என்னும் கோஷத்தை முன்வைத்து இக்கட்சி தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டது. பக்கம் 201

70 **ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி** — ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து 1919ல் பிளந்து கொண்ட இடதுசாரிகள் சுயேச்சையான ஓர் அமைப்பாய் 1920ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியை நிறுவிக் கொண்டனர். அது அரை-அராஜகவாத நிலையை ஏற்றது. தொழிலாளி வர்க்கத்திடையே அதற்குச் செல்வாக்கு இருக்கவில்லை. கம்யூனிஸ்டுகளுக்குப் பகையான சிறு குழுவாய்க் குறுகிவிட்டது. பக்கம் 207

71 இங்கு குறிப்பிடப்படுவது ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி எல்லா ஜெர்மன் தொழிற் சங்கங்களுக்கும் தொழிலாளர் நிறுவனங்களுக்கும் விடுத்த ''பகிரங்கக் கடிதம்''. 1921 ஜனவரி 8ல் இக்கடிதம் Die Rote Fahne (செங்கொடி) செய்தியேட்டில் வெளிவந்தது. முதலாளித்துவ வர்க்கம் தொடுத்த தாக்குதலை எதிர்த்துக் கூட்டுப் போராட்டம் நடத்தும்படி இக்கடிதம் அறை கூவல் விடுத்தது. பக்கம் 209

72 **மார்ச் மாத நடவடிக்கை**—மத்திய ஜெர்மனியில் 1921 மார்ச் மாதத்தில் நடைபெற்ற தொழிலாளர்களது ஆயுத மேந்திய எழுச்சி. பிற தொழில் பிரதேசங்களின் தொழிலாளர்களுடைய ஆதரவு இதற்குக் கிடைக்கவில்லை. தொழிலாளர்கள் வீரதீரமாய்ப் போராடியுங்கூட விரைவில் இது நசுக்கப்பட்டுவிட்டது. பக்கம் 214

73 **இரண்டரையாவது அகிலம்** — புரட்சிகரத் தொழிலாளி வெகுஜனங்களது நிர்ப்பந்தத்தின் பேரில் இரண்டாவது அகிலத்தை விட்டு சிறிது காலத்துக்கு வெளியேறிய மையவாதக் கட்சிகளும் கோஷ்டிகளும் சேர்ந்து வியென்னாவில் நடத்திய காங்கிரசில் 1921ல் நிறுவப்பட்ட சர்வதேச நிறுவனம். 1923ல் இரண்டரையாவது அகிலம் மீண்டும் இரண்டாவது அகிலத்திலேயே இணைந்து கொண்டு விட்டது. பக்கம் 215

MADRAS

# பெயர்க் குறிப்பு அகராதி

**அக்செல்ரோத்,** பாவெல் பரீசவிச் *(1850-1928)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர்; 1905-07 ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதியானார்.—61, 62.

**அபலேன்ஸ்கி** இ. எம். *(1845-1910)*—முக்கிய ஜாரிஸ்டு அதிகாரி. 1902ல் தென் ருஷ்யாவில் நடைபெற்ற விவசாயிகளது எழுச்சிகளை மிகக் கொடூரமாய் நசுக்கியவர்.—14.

**அலெக்சேயெவ்,** பியோத்தர் அலெக்சேயெவிச் *(1849-1891)*—ருஷ்யத் தொழிலாளர், புரட்சியாளர். 1875ல் கைது செய்யப்பட்டு சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டார். லெனின் மேற்கோளாய்க் குறிப்பிடும் வருவது அறிந்து கூறும் தோலைநோக்குடைய இவ்வுரை நீதிமன்ற விசாரணையின் போது அலெக்சேயெவ் கூறியதாகும்.—13.

**அவ்க்சேன்தியெவ்,** நிக்கலாய் திமீத்ரியெவிச் *(1878-1943)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினது வலதுசாரிப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்; 1917ல் கேரென்ஸ்கியின் கூட்டுச் சர்க்கார் ஒன்றில் பதவி வகித்தார்.—110.

**அனீக்கின்** எஸ். வி. *(1868-1919)*—முதலாவது அரசாங்க டூமாவின் உறுப்பினர், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியாளர், துருதொவிக் குழுவின் தலைவர்களில் ஒருவர்.—58.

**அனேன்ஸ்கி** என். ஃபீ. *(1843-1912)*—கட்டுரையாளர், புள்ளியியலாளர்; மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் முக்கியப் பிரதிநிதிகளில் ஒருவர்.—58.

**ஆட்லர்** [Adler], ஃபிரீட்ரிஹ் *(1879-1960)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதி, சந்தர்ப்பவாதி.—205.

**இவனேவ்ஸ்கி பி. (ஷ்னெயர்சோன் இ. அ.)** *(1878-1942)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதியானார்.—61.

**எங்கெல்ஸ், ஃபிரீட்ரிஷ்** *(1820-1895)*—48, 68, 72, 136.

**எல் (லூஸின் இ.இ.)** *(மறைவு: சுமார் 1914)*—மென்ஷிவிக்-கலைப்புவாதி.—61.

**எஸ். வி., ஸ்தனீஸ்லவ் வோல்ஸ்கி (சக்கலோவ் அந்திரேய் விளதிமிரவிச்)** *(பிறப்பு: 1880)*—சமூக-ஜனநாயகவாதி, 1905-07 ஆம் ஆண்டுகளின் புரட்சிக்குப்பின் வாபஸ் வாதத்தின் (குறிப்பு 37ஐப் பார்க்கவும்) தலைவர்களில் ஒருவரானார்.—107.

**கல்ச்சாக், அலெக்சாந்தர் வசீலியெவிச்** *(1873-1920)*—ஜார் கடற் படையின் அட்மிரல். ஆன்டான்ட் ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் 1918ல் உரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் முதலாளிகள், நிலப்பிரபுக்களது இராணுவச் சர்வாதிகாரத்தை நிறுவினார். 1920 பிப்ரவரி தொடக்கத்தில் கல்ச்சாக்கின் துருப்புக்கள் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டன.—120,150.

**காவுத்ஸ்கி** [Kautsky], **கார்ல்** *(1854-1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் முக்கியத் தத்துவவாதிகளில் ஒருவர். முதலாவது ஏகாதிபத்திய உலக யுத்தம் தொடங்கியபின் (1914-18) காவுத்ஸ்கி மார்க்சியத்துக்குத் துரோகம் இழைத்து அதன் பகைவர்களின் அணிகளில் சேர்ந்து கொண்டார்.—48,116, 118, 120, 122, 123, 124, 174.

**குச்கோவ், அலெக்சாந்தர் இவானவிச்** *(1862-1936)*—ருஷ்யப் பெருமுதலாளி, முடியரசுவாதி; அக்டோபரிஸ்டுக் கட்சியின் தலைவர்.—90.

**குவெல்ச்** [Quelch], **டாம்** *(1886-1954)*—ஆங்கிலேய சோஷலிஸ்டு; 1920ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்துக் கொண்டார்; பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டபின் கம்யூனிஸ்டு ஆனார்.—199.

**குஸ்மீன்-கரவாயெவ் வி. தி.** *(1859-1927)*—மிதவாதி, காடேட்டுக் கட்சியின் வலதுசாரிப் பிரிவின் தலைவர். முதலாவது, இரண்டாவது அரசாங்க டூமாக்களின் உறுப்பினர்.—100,101.

கூத்லெர், நிக்கலாய் நிக்கலாயெவிச் *(1859-1924)* — *காடேட்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், அரசாங்க டூமாவில் உறுப்பினர்.—101.*

கேல்ட்ஸ் [Höltz], மாக்ஸ் *(1889-1933)—1919-20ஆம் ஆண்டுகளில் மத்திய ஜெர்மனியில் செயல்பட்ட தொழிலாளர் கொரில்லாக் குழுக்களின் தலைவர்; 1921 மார்ச்சில் நடைபெற்ற தொழிலாளர்களது எழுச்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்.—214.*

கோம்பர்ஸ் [Gompers], சாமுவெல் *(1850-1924)—அமெரிக்கத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர்; சோஷலிசத்தின் விரோதி, .தொழிலாளர்களது நலன் களுக்குத் துரோகம் செய்த பிற்போக்குவாதி.—117, 118, 134, 139, 187, 201.*

கோல்ட்ஸ் [Goltz], ரியூடிகெர் வான் *(1865-1930)—ஜெர்மன் ஜெனரல், முடியரசுவாதி, பிற்பாடு பாசிஸ்டு. 1918ல் பின்லாந்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றி, பின்லாந்து பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கொடூரமாய் நசுக்கினர். —120.*

சக்கலோவ் என். தி. *(1870-1928)—ருஷ்ய சமூக-ஜனநாயக வாதி. மூன்ருவது அரசாங்க டூமாவுக்கான துணைத் தேர்தல்களின்போது ரு.ச.ஜ.தொ. கட்சியின் வேட்பாளர்—101, 102.*

செராட்டி [Serrati], ஜியாச்சின்டொ மெனேட்டி *(1872-1926) —இத்தாலிய இடதுசாரி சோஷலிஸ்டுகளின் தலைவர் களில் ஒருவர். 1924ல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந் தார்.—157, 188, 189.*

செரெவானின் என். (லீப்கின் எஃப். அ.) *(1868-1938)— மென்ஷிவிக் கட்டுரையாளர். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்று பிற்போக்கு தாண்டவமாடிய போது கலைப்புவாதி ஆனுர்.—70,78.*

டான்னெர் [Tanner], ஜாக் *(பிறப்பு: 1889) — பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் முக்கியப் பிரமுகர். கம் யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தலைமைத் தொழிலாளர் கமிட்டிகளின் பிரதிநிதியாய்ப் பங்கெடுத்துக் கொண்டார். கிரேட் பிரிட்டனில் கம் யூனிஸ்டுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதும், கம்யூனிஸ்டு ஆனுர்.—185, 186, 187, 190.*

டிட்ஸ்கென் [Dietzgen], யோசிப் *(1828-1888) — ஜெர்மன் தொழிலாளர், சமூக-ஜனநாயகவாதி, பொருள்முதல் வாதத் தத்துவவியலாளர்.—151.*

திரோத்ஸ்கி (பிரன்ஷ்டைன், லெவ் தவீதவிச்) *(1879-1940)* *—லெனினியத்தின் கடும் பகைவர், லெனினுக்கும் போல் ஷிவிக்குகளுக்கும் எதிராய்ப் போராடினர். முதலாவது உலக யுத்தத்துக்குமுன் எந்தக் கோஷ்டியிலும் சேருவ தில்லை என்பதாய்ப்பேசிக்கலைப்புவாதிகளுக்கு ஆதரவளித் தார்; யுத்தத்தின்போது மையவாதியாய் இருந்தார். 1917ல் ரு.ச.ஜ.தொ. (போல்ஷிவிக்) கட்சியின் 6ஆவது காங்கிரசில் கட்சியில் சேர்க்கப்பட்டார், ஆனால் லெனி னியத்துக்கு எதிராய்த் தொடர்ந்துபோராடினர். கட்சியி னுள் குட்டிபூர்ஷுவாத் திரிபாய் இருந்து வந்த திரோத்ஸ் கியத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி அம்பலம் செய்து, சித்தாந்தத் துறையிலும் நிறுவனத் துறையிலும் அதை அடியோடு தோற்கடித்தது. திரோத்ஸ்கி கட்சியிலிருந்து விலக்கப்பட்டார், சோவியத் யூனியனிலிருந்து வெளி யேற்றப்பட்டார்; 1932ல் அவரது சோவியத் நாட்டுக் குடிமை உரிமை ரத்து செய்யப்பட்டது.—106, 107.*

துபாசவ், ஃபியோதர் வசீலியெவிச் *(1845-1912)—1905-06ல் மாஸ்கோவின் கவர்னர் ஜெனரல். 1905 டிசம்பரில் நடைபெற்ற ஆயுதமேந்திய மாஸ்கோ எழுச்சியை நசுக்குவதற்குத் தலைமை தாங்கினர்.—41, 44, 45.*

துராட்டி [Turati], ஃபிலீப்போ *(1857-1932)—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் கடைகோடியான வலதுசாரி, சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்.—157, 174, 188.*

தெரச்சீனி [Terracini], உம்பேர்த்தொ *(பிறப்பு: 1895)—இத் தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களிலும் தலை வர்களிலும் ஒருவர். 1921ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசில் பங்கெடுத்துக் கொண்டார்.— 206, 207, 209, 210, 211, 212, 216, 217, 220.*

தெ லியோன் [De Leon], டேனியல் *(1852-1914)—அமெ ரிக்கத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல பிரதிநிதி, சோ ஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் தலைவர், உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனத்தை நிறுவியோரில் ஒருவர். —136.*

தெனீக்கின், அன்தோன் இவானவிச் *(1872-1947)—ஜாரிஸ்டு ஜெனரல். 1919ல் தென் ருஷ்யாவிலும் உக்ரேனியா விலும் ஆன்டான்ட் உதவியோடு முதலாளித்துவ-நிலப் பிரபுத்துவ இராணுவச் சர்வாதிகாரத்தை நிறுவினர். 1920ஆம் ஆண்டின் தொடக்கத்தில் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டார்.—127, 150.*

தொமா [Thomas], அல்பேர் *(1878-1932)—பிரெஞ்சு சோஷ லிஸ்டுகளின் சந்தர்ப்பவாதப் பிரிவினருக்குத் தலைமை*

தாங்கியோரில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின் போது பிரான்சின் ஏகாதிபத்திய அரசாங்கத்தில் பதவி வகித்தார்.—201.

தொழிலாளி—''நமது நிறுவனங்களில் தொழிலாளர்களும் அறிவுத் துறையினர்களும்'' என்னும் பிரசுரத்தின் (ஜெனீவா, 1904) ஆசிரியர்.—21.

நோஸ்கெ [Noske], குஸ்தாவ் (1868-1946)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான வலதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1918 நவம்பர் புரட்சிக்குப்பின் ஜெர்மன் அரசாங்கத்தின் அமைச்சராய் இருந்தவர். தொழிலாளி வர்க்கத்தின் கொலைகாரராய்ச் செயல்பட்டார். ஜெர்மனியின் புரட்சிகரத் தொழிலாளர்களைக் கொடிய முறையில் நசுக்கியவர்.—201.

பாபுஷ்கின், இவான் வசீலியெவிச் (1873-1906)—தொழிலாளர், போல்ஷிவிக். ருஷ்யாவில் சமூக-ஜனநாயக நிறுவனங்களை முதன்முதலில் நிறுவியோரில் ஒருவர். 1905-07 ஆம் ஆண்டுகளின் புரட்சியில் ஊக்கத்துடன் பங்கெடுத்தார். ஜாரிஸ்டு அரசியல் போலீசாரால் சுடப்பட்டார். —140.

பிளாங் [Blanc], லுயீ (1811-82)—பிரெஞ்சுக் குட்டிபூர்ஷுவா சோஷலிஸ்டு, சரித்திராசிரியர். 1848ஆம் ஆண்டுப் புரட்சியின் தலைவர்களில் ஒருவர். முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற தமது கொள்கையின் மூலம் தொழிலாளர் நலன்களுக்குத் துரோகம் இழைத்தவர்.—119.

பிளெஹானவ், கியோர்கி வலென்தீனவிச் (1856-1918)—ருஷ்ய, சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தின் பெயர் பெற்ற பிரதிநிதி; மார்க்சியத்தின் தத்துவவாதி, பிரசாரகர். 1903ஆம் ஆண்டில் மென்ஷிவிக் ஆனார். ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் (1914-18) தொடக்கத்தில் சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டார்.—43, 110.

பிஹோவ்ஸ்கி என். யா.—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1917ல் விவசாயிகளது அனைத்து ருஷ்ய சோவியத்தின் தலைமைக் குழு உறுப்பினர்.—111.

புரிஷ்கேவிச், விளதீமிர் மித்ரஃபானவிச் (1870-1920) — ருஷ்ய நிலப்பிரபு, முடியரசுவாதி. கறுப்பு நூற்றுவர்களது கும்பல்களை நிறுவியவர்.—90.

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு (1850-1932)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின்

கடைகோடியான சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர். —7, 72.

பொர்டீகா [Bordiga], அமடேவொ (பிறப்பு: 1889) — இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் அதன் ''இடதுசாரி''-சந்தர்ப்பவாத, குறுங்குழுவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1930ல் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—156, 157.

பௌவர் [Bauer], ஒட்டொ (1882-1938)—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். தமது நூல்களில் மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டியவர், சந்தர்ப்பவாதச் சித்தாந்தத்துக்கு அடித்தளம் அமைக்க முயன்றவர்.—205.

மலாஹவ், நிக்கலாய் நிக்கலாயெவிச் (பிறப்பு: 1827)— 1905 டிசம்பரில் நடைபெற்ற மாஸ்கோ ஆயுதமேந்திய எழுச்சியின்போது மாஸ்கோப் பிராந்தியத் துருப்புக்களுக்குத் துணைத் தலைவராய் இருந்தார்.—46.

மாக்லேன் வி. [McLaine] (1891-1960)—பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியினது இடதுசாரிப் பிரிவின் முக்கியப் பிரதிநிதி. 1920ல் கம்யூனிஸ்டு ஆனார். 1920ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்துக் கொண்டார்.—185, 187, 188, 189.

மாரிங் [Maring], ஹென்ரிஹ் (1883-1942)—1920ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளின் பிரதிநிதியாய்ப் பங்கெடுத்துக் கொண்டார்.—192.

மார்க்ஸ், கார்ல் (1818-1883)—40, 47, 68, 136.

மிலுக்கோவ், பாவெல் நிக்கலாயெவிச் (1859-1943)—ருஷ்ய ஏகாதிபத்தியவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைவர், காடேட்டுக் கட்சிக்குத் தலைமை தாங்கினார்.—58.

மீரவ் வி. வி. (ஈக்கவ் வி. கே.) (பிறப்பு: 1882)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதியானார்.—61.

மெர்ஹெயிம் [Merrheim], அல்போன்ஸ் (1881-1925)— பிரெஞ்சுத் தொழிற் சங்க இயக்கத்தின் பிரதிநிதி.— 134.

யுதேனிச், நிக்கலாய் நிக்கலாயெவிச் (1862-1933)—ஜாரிஸ்டு ஜெனரல். அந்நிய இராணுவத் தலையீட்டின்போதும் உள்நாட்டுப் போரின்போதும் ருஷ்யாவின் வடமேற்குப் பிரதேசத்தில் இயங்கிய எதிர்ப்புரட்சி துருப்புக்

களுக்குத் தலைமை தாங்கினார். பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாள். யுதேனிச்சின் துருப்புக்கள் பெத்ரொகிராதை அச்சுறுத்தின. ஆனால் 1919 டிசம்பரில் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டன.—127.

ராதெக், கார்ல் பெர்ன்கார்தவிச் (1885-1939) — கலீஷிய, போலந்து, ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கெடுத்தவர், 1917ல் ரு.ச.ஜ.தொ. கட்சியில் (போல்ஷிவிக்குகள்) சேர்ந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் கம்யூனிஸ்டு அகிலத்துச் செயற்குழுவின் செயலாளராய் இருந்தார், கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினராய்ப் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். 1923ஆம் ஆண்டிலிருந்து திரோத்ஸ்கிய எதிர்த்தரப்பின் ஊக்கமிக்க உறுப்பினராய் இருந்து வந்தார், 1936ல் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—213, 214, 219.

ராம்சே [Ramsay], டேவிட் (1883-1948)—தலைமைத் தொழிலாளர் குழுக்களின் பிரதிநிதியாய்க் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்துக் கொண்டார்.—187, 190.

ராய், மனவீந்திர நாத் (1892-1948)—இந்தியப் பத்திரிகையாளர், அரசியல்வாதி. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இந்தியக் கம்யூனிஸ்டுக் குழுக்களின் பிரதிநிதியாய்ப் பங்கெடுத்துக் கொண்டார்.—192, 193, 198.

ரேன்னர் [Renner], கார்ல் (1870-1950)—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர்.—201, 203, 204, 205.

ரொலான் [Roland], மூான்ஞ (1754-1793) — மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர், ழிரொந்தாவிஸ்டு; இப்புரட்சி பற்றிய தமது நினைவுக்குறிப்புகளை வெளியிட்டார்.—32.

லாரின் யூ. (லுரியே, மிஹயீல் அலெக்சாந்திரவிச்) (1882-1932) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்; 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதியானார். 1917ஆம் ஆண்டுக்குப்பின்—கம்யூனிஸ்டு.—61, 62.

லியூதென்தொர்ப் [Ludendorff], ஏரிஹ் (1865-1937) — ஜெர்மன் ஜெனரல், முடியரசுவாதி. 1918 நவம்பர் புரட்சிக்குப்பின் நடைபெற்ற ஆட்சிக்கவிழ்ப்பு எதிர்ப்

புரட்சி சதிகளுக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர். —*120*.

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871-1919)*—ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியோரில் ஒருவர்.—*122, 143, 155*.

லுக்சம்பர்க் [Luxemburg], ரோஸா *(1871-1919)*—ஜெர்மன், போலந்து, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலை சிறந்த பிரதிநிதி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியோரில் ஒருவர்.—*122, 143*.

லெ. மா., மார்த்தவ் லெ. (ஸெதெர்பௌம் யூலி ஓசிப்பவிச்) *(1873-1923)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிசத்தின் தலைவர்.—*110*.

லெவீ [Levi], பாவுல் *(1883-1930)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. கம்யூனிஸ்டுக் கட்சி தோற்றுவிக்கப்பட்ட பின் கம்யூனிஸ்டு. 1921ல் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதும் மீண்டும் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார்.—*214*.

லேகின் [Legien], கார்ல் *(1861-1920)*—ஜெர்மன் தொழிற் சங்க இயக்கத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். முதலாவது, உலக யுத்தத்தின்போது கடைகோடியான சமூக-தேசியவெறியர்.—*117, 118, 126, 136, 139*.

வால், விக்தர் வில்கேல்மவிச் *(1840-1915)*—ஜாரிஸ்டு ஜெனரல், தொழிலாளர் இயக்கத்தை ஈவிரக்கமின்றி மிருகத்தனமாய் நசுக்கியவர். கைது செய்யப்பட்ட தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தினருக்குக் கசையடி தரும்படி 1902 மே 1ல் உத்தரவிட்டார். இக்கொடுஞ் செயலால் ஆத்திரமடைந்த புரட்சியாளர்கள் அவரைக் கொல்லத் தீர்மானித்தனர்.—*14*.

ஷீல்க்கின் இ. வி. *(1874-1958)*—பத்திரிகையாளர்; முதலாவது அரசாங்க டூமாவின் துருதொவிக் குழுவின் தலைவர்களில் ஒருவர்.—*58*.

ஜூவோ [Gouhaux], லியோன் *(1879-1954)*—பிரெஞ்சு, சர்வதேசத் தொழிற் சங்க இயக்கத்தினது சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்.—*134, 139*.

ஷிங்கரியோவ், அந்திரேய் இவானவிச் *(1869-1918)* —காடேட்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917ல்

முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரில் பதவி வகித்தார்.—*112.*

ஷெக்லோ வி. அ. (ஹேய்சிஞ எல். வி.) *(பிறப்பு: 1878)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். *1906ல்* கலேப்புவாதிகளோடு சேர்ந்து செயல்பட்டார்.—*61.*

ஷெய்டமன் [Scheidemann], ஃபிலிப் *(1865-1939)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைக்கோடியான வலதுசாரிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலேவர்களில் ஒருவர். *1919* பிப்ரவரி—ஜூன் மாதங்களில் ஜெர்மன் முதலாளித்துவச் சர்க்காரின் தலேவர்; தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதற்கான நடவடிக்கைகளுக்குத் தலேமை தாங்கியவர்.—*116, 117, 118, 120, 122, 123, 124, 201.*

ஷ்தம்ப்ஃபெர் [Stampfer], ஃபிரீட்ரிஹ் *(1874-1957)*—ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி. ஏகாதிபத்திய யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்; *1916*லிருந்து ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் பிரதான பத்திரிகையான Vorwärtsஇன் தலேமை ஆசிரியர்.—*120.*

ஸாவின் அன்ட். (ஷிமனேவ்ஸ்கி அ. பீ.) *(பிறப்பு: 1878)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். *1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் அக்கட்சியின் சட்டவிரோத நிறுவனங்களேக் கலேக்க வேண்டுமென்று கோரினர்.—*110.*

ஸுபாத்தவ், செர்கேய் வசீலியெவிச் *(1864-1917)*—அரசியல் போலீஸ் கர்னல். *20*ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் புரட்சிப் போராட்டத்திலிருந்து தொழிலாளர்களேத் திசை திருப்புவதற்காகப் ''போலீஸ் சோஷலிசம்'' எனப்படுவதைப் பரவச் செய்ய முயன்றூர். மாஸ்கோவிலும் இதர நகரங்களிலும் போலீசார் மேற்பார்வையில் போலி தொழிலாளர் நிறுவனங்களேத் தோற்றுவித்தார். அந்நிறுவனங்கள் தொழிலாளர்களேப் புரட்சியாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடவும், தொழிலாளர்களது பொருளாதார நிலே உயர ஜார் துணே புரிவார் என்று அவர்களே நம்பச் செய்யவும் முயன்று வந்தன. புரட்சி இயக்கத்தின் எழுச்சியால் அந்த நிறுவனங்கள் ஒழிக்கப்பட்டன. தொழிலாளர் இயக்கத்தை ஜாரிஸ்டு போலீசார் தமது பிடிக்குள் கொண்டு வருவதற்காகச் செய்த முயற்சி இவ்வாறு தோல்வியுற்றது.—*22, 139, 140.*

**ஸ்தலிப்பின், பியோத்தர் அர்க்காதியெவிச்** *(1862-1911)—1906-11ல் அமைச்சரவைத் தலைவர். திரள் திரளாய்ப் புரட்சிகரத் தொழிலாளர்களும் விவசாயிகளும் மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்படுவதற்கு ஏற்பாடு செய்தவர். 1906 நவம்பர் 9 (22) தேதிய நிலச் சட்டத்தைப் பிறப்பித்தவர்.—53, 70, 89, 92, 98, 101.*

**ஹாஸெ** [Haase], **ஹுகொ** *(1863-1919)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவர், மையவாதி.—120.*

**ஹெண்டர்சன்** [Henderson], **ஆர்தர்** *(1863-1935) — பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பலமுறை பதவிகள் வகித்தவர்.—134, 139, 187, 189.*

**ஹேம்பெல்** [Hempel]—*சந்தர்ப்பவாத ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.—209.*

**ஹோக்லண்ட் ஸேத்.** [Höglund] *(1884-1956) — ஸ்வீடன் இடதுசாரி சோஷலிஸ்டு. 1922-23ல் கம்யூனிஸ்டாய் இருந்தார், பிற்பாடு திரும்பவும் சமூக-ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து கொண்டார்.—155.*

**ஹோர்னர்** [Horner], **கார்ல் (பெனெகக் ஆண்டனி)** *(1873-1960)—ஹாலந்து இடதுசாரி சோஷலிஸ்டு. 1918ல் ஹாலந்து கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியோரில் ஒருவர். 1920ல் ''இடதுசாரிக்'' குறுங்குழுவாத நிலையிலிருந்து கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரத்தை விமர்சனம் செய்த ஒரு நூலை எழுதினர்.—126.*

MADRAS

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து,
"Progress Publishers, 17,
Zubovsky Boulevard, Moscow, USSR"
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-B, Sidco Industrial Estate, Ambattur Madras-600098

ஷோ-ரூம்

6/30, Mount Road, Madras-600002

கிளைகள்

80, West Tower St., Madurai-625001
87/89, Eppanakara St., Coimbatore-641001
Singarathope. Tiruchirappalli-620008
Cherry Road, Salem-636001



-5 MAR 1985
MADRAS